ஸ்ரீ:

இறுதியின் சுருதி

சரம ஶ்லோகத்தைப் பற்றிய
தமிழ் பாடல்களும்
விளக்கமும்

Version 2.3

அடியேன் ஸ்ரீராமானுஜ தாஸன்

ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்

பொருளடக்கம்

#	தலைப்பு	பக்கம்
A.	ஆசாரியர்கள் தனியன்	7
B.	அடியேன் செய்யும் விண்ணப்பமே	11
C.	இறுதியின் சுருதி பாடல்	15
0.	சரம ஶ்லோகம் அவதாரிகை	21
1.	ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய	63
2.	மாம்	99
3.	ஏகம்	121
4.	ஶரணம்	145
5.	வ்ரஜ	157
6.	அஹம்	179
7.	த்வா	191
8.	ஸர்வ பாபேப்யோ	201
9.	மோக்ஷயிஷ்யாமி	217
10.	மாசுச:	231

11. பலன் 245

தனியன்

யோநித்ய மச்யுத பத3ாம்புஜ யுக்ம ருக்ம-
வ்யாமோஹதஸ் ததி தராணி த்ருணாய மேநே ।
அஸ்மத்3 கு3ரோர் ப4க3வதோ ஶஸ்ய தயைகஸிந்தே4ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் பரபத்3யே ।।

ஶ்ரீமாந் வேங்கட நாத2ார்ய கவிதார்கிககேஸரீ !
வேத3ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 !!

ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குண ஸம்பதாம்
ஶரணம் பவபீதாநம் ஶடகோப முநீஶ்வரம்.

ஜ்ஞாநா நந்த3 மயம் தே3வம் நிர்மல ஸ்ப2டிகா க்ருதிம் ।
ஆத4ாரம் ஸர்வ வித்3யாநாம் ஹயக்3ரீவம் உபாஸ்மஹே ।।

கு3ரு4ப:4 தத்3 கு3ரு4ப:4 ச நமோவாகம் அதீ4 மஹே ।
வருணீமஹே ச தத்ர ஆத்3யௌ ள தா3ம்பதீ ஜகதாம் பதீ ।।

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள்
ஓர் ஒன்று தான் அமையாதோ தாரணியில்
வாழ்வார்க்கு வான் ஏறப் போமளவும் வாழ்வு

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
யான் அடைவே அவர் குருக்கள் நிறை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக் கொண்டார்
நாத முனி சடகோபன் சேனை நாதன்
இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

நின் அருளாம் கதியின்றி மற்று ஒன்று இலேன்
நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன்
உன் அருளுக்கு இனிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்
மன் இருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை
இன் அருளால் இனி எனக்கு ஓர் பரம் ஏற்றாமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே

ஶ்ரீ:

யஸ்யாப4வத் ப4க்3தி ஜநார்த்திஹரந்து:
பித்ருத்வமந்யேஷு அவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே4 அவதார ஶ்தமநந்யலப்4யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்3யே ।।

அஹோபி3லே க3ருட3ஶைலமத்4யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நித4ாநம் ।
லஷ்ம்யா ஸமாலிங்கி3த வாமப4ாக3ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரப்த்3யே ।।

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர த்ருஷ்டம்
லக்ஷ்மிந்ருஸிம்ம ஶடஜித் கருணைக பாத்ரம்
ஶ்ரீரங்க வீர ரகுராட் ஶடகோப ஹ்ருத்யம்
வேதாந்த தேசிக யதீந்த்ர மஹம் ப்ரபத்யே

ஶ்ரீமதே ஶ்ரீவண் ஶட கோப
ஶ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹா தேசிகாய நம:

ஶ்ரீமத்3 ரங்க ஶடாரி ஸம்ய விவராத் லப்3தாக3 மாந்த த்வயம்
ஶ்ரீமத்3 வீர ரகூத்3வ ஹாத்3ய ஶடஜித் பாதாரவிந்த3ா ஶ்ரயம் ।
ஶ்ரீமத்3 வேத3 வதம்ஸ தே3 ஶிகயதே: காருண்ய வீக்ஷா ஸ்பத3ம்
ஸேவே ரங்க3துரீண ஶாஸந வஶம் நாராயணம் யோகி3நம். ।।

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

வேத3ாந்த தே3ஶிக யதீந்த்3ர கடாக்ஷலப்த4
த்ரைய்யந்த ஸாரமநவத்3ய குணம் பு3த4ாக்3ரயம்।
நாராயணாத்3ய யதிது4ர்ய க்ருபாபி4ஷிக்தம்
ஶ்ரீரங்க3நாத2 யதிஶேக2ரம் ஆஶ்ரயாம:।।

ஶ்ரீமதே ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீரங்க3நாத2 யதீந்த்3ர மஹாதே3ஶிகாய நம:

க்ருஷ்ணாய வாஸுதே3வாய தே3வகீ நந்த3நாய ச
நந்த3கோ3ப குமாராய கோ3விந்த3ாய நமோ நம:

நம: பங்கஜ நாப4ாய நம: பங்கஜ மாலிநே
நம பங்கஜ நேத்ராய நமஸ்தே பங்கஜா ங்க்4ரயே

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை *
விழுமிய முனிவர் விழுங்கும் *
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக் *
குவலயத்தோர் தொழுது ஏத்தும் *
ஆதியை அமுதை என்னை ஆளுடை அப்பனை *
ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும் *
மாட மாமயிலைத் *
திருவல்லிக்கேணி கண்டேனே

வஸுதே3வ ஸுதம் தே3வம் கம்ஸ சாணூர மர்த3நம் ।
தே3வகீ பரமாநந்த3ம் கிருஷ்ணம் வந்தே3 ஜக3த்3கு3ரும் ।।

வந்தே3 ப்3ருந்த3ாவந சரம் வல்லவீ ஜந வல்லப4ம் ।
ஜயந்தீ ஸம்ப4வம் த4ாம வைஜயந்தீ விபூ4ஷணம் ।।

ஸாந்த்3ரா நந்த3ாவ பே3ாத4ாத்மக மநுபமிதம் கால தே3ஶாவதிப்யாம்
நிர்முக்தம் நித்ய முக்தம் நிக3ம ஶத ஸஹஸ்ரேண நிர்ப4ாஸ்ய மாநம்
அஸ்பஷ்டம் த்3ருஷ்டமாத்ரே புநருரு புருஷார் த2ாத்மகம் ப்3ரஹ்ம தத்வம்
தத்தாவத்3 ப4ாதி ஸாக்ஷாத்3 கு3ருபவநபுரே ஹந்த ப4ாக்3யம் ஜநாநாம்.

அடியேன் செய்யும் விண்ணப்பமே

ஸ்வாமி தேசிகன் தனியன்

**கண்ணாவான் கண்ணன் * கனிந்துரைத்த மறைப்பொருளை*
விண்ணோரும் வியக்க * விதி உலகில் விரித்து உரைத்து /
மண்ணோரும் மகிழ்ந்து * மலர்மகள் நாதன் அடி அடைய *
தண்ணார் வேங்கட* தனிவிளக்காய்த் தோன்றித் தந்தனனே *

மனிதர்களுக்கு எல்லா அவயங்களிலும் கண்தான் மிக முக்யமானது. அதுபோல பகவான் ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயணன் பல அவதாரங்களைச் செய்து இருந்தாலும் கிருஷ்ணாவதாரம் என்பது எல்லோருக்கும் கண்போல உள்ளது. எப்படி கண் உலக விஷயங்களை நேரில் பார்த்து அறிகிறதோ அதைபோல ஸகல சாஸ்திர விஷயங்களையும் அறிவதற்கு ஸாதனமாய் இருக்கிறது கண்ணனின் அவதாரமும் அவனுடைய லீலைகளும். பகவத் கீதை என்னும் உயர்ந்த உபனிஷத் தத்துவத்தை தானே தன் திருவாக்காலே சொல்வதற்காக ஏற்பட்ட அவதாரம் இது.

பகவத்கீதையில் எம்பெருமான நம்மைபோல சேதனர்கள் நல்ல கதி அடைய பல வழிகளை காண்பிக்கிறான். சாஸ்திரம் என்பது கடினமானது. அந்த சாஸ்திரத்தை விளக்க வந்த பகவத் கீதையோ இன்னமும் குழப்பமானது. ஞானமில்லாத, சக்தியில்லாத நமக்கு அவற்றை அறிந்து கொள்வது என்பது பகீரத ப்ரயத்தனம்.

வேத வேதாந்த கருத்துக்களின் ஸாரத்தை எல்லாம் பிழிந்து எடுத்து, ஒரு அல்பமான ஜீவன், அறிவில்லாத மனிதன், சாஸ்திர வாசனையே இல்லாதவன் கூட எளிதில் அறிந்து கொள்ளும்படி ஸ்வாமி தேசிகன் பல இடங்களில் ஸ்தோத்ரம், பிரபந்தம், நாடகம், காவியம், தத்துவம், ரஹஸ்யம் என அருளி உள்ளார். தவிர சாஸ்திரம் பல இடங்களில் ஒன்றுக் கொன்று மாறாக சொல்வது போல் இருக்கும். சாஸ்திரத்தை ஸம்பிரதாயத்தைக்

கொண்டே விளக்க வேண்டும். நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தை ஸத்ஸம்பிரதாயம் என்று பூர்வாசாரியர்கள் வழியே அவர்களின் கருத்துகளுக்கு ஒத்ததாய் பல வகையாக விளக்கியவர் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளையே தஞ்சமாக பற்றி பூலோகத்தில் உள்ள பக்தர்கள் அனைவரும், மேலான ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் நித்யஸூரிகளும், முக்தர்களும் அதிசயிக்கும்படி உஜ்ஜீவனம் அடைய ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீசூக்திகள் விளங்குகின்றன.

நீர்ச்சுனைகள் நிரம்பிய திருமலையில், கலி உலகத்தின் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் திருவேங்கடமுடையானின் திருமணியாய், வேங்கடநாதன் என்னும் குருவாய் அவதரித்து, கண்ணன் காட்டிய கீதையின் தாத்பர்யத்தை, எல்லா மக்களும் ப்ரபத்தி என்னும் உயர்ந்த உபாயத்தின் மூலம் எம்பெருமானை வசீகரித்து, மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்து எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் நித்ய கைங்கர்யம் செய்து ஆனந்திக்க செந்தமிழுலும், வட மொழியிலும் பல கிரந்தங்கள் மூலமாய் அருளினார்.

ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி தேசிகனுடைய திருவடிகளில் முதலில் தலை வணங்கி கீதா சரம ஸ்லோகத்தின் பாடல்களையும் அதன் விளக்கத்தையும் இங்கே ஆரம்பிக்கிறோம்.

சரம ஸ்லோகம் - தமிழாக்கம்

ஆனந்தம் என்பது எல்லா மக்களும் விரும்புவது. அறம், பெருள், இன்பம், வீடு (தர்ம, அர்த்த, காம, மோஷம்) என்ற நான்கிலும், வீடு எனப்படும் பரமபதம், ஸ்ரீவைகுண்ட்டமே பரம ப்ராப்யம் என அசாரியர்கள் காட்டியுள்ளனர். மற்றைய இன்பங்கள் அல்பமானது, அஸ்திரமானது.

அந்த பேரின்ப பெரும் வீட்டை அடைய கர்ம, ஞான, பக்தி, ப்ரபத்தி ஆகிய நான்கு யோகங்களை உபாயமாகச் சொன்னாலும், கடைசி இரண்டும் மட்டும்தான் மோக்ஷத்திற்கு வழி வகுக்கிறது. அதிலும் ப்ரபத்தி ஒன்றே சாதரணமான மக்கள் (Common people) எல்லோரும் செய்ய ஸாத்யமானது. அந்த ப்ரபத்தியை விதிக்கும் ஸ்லோகமே கீதா சரம ஸ்லோகம்.

தீண்டிய வினைகள் அனத்தும் தீர்ந்திட *
வேண்டினேன் வேங்கடவா உன் திருவடி /
நீண்டிய நெறிகள் முற்றும் நசித்திட *
கண்டிலேன் நீ கொண்டபின் மறுபிறவி

அநாதி காலமாய் என் ஆத்மாவைப் பற்றி வாட்டுகின்ற பாபக் குவியல்களை எல்லாம் ஒரு நொடியில் பொசுக்கிட வேண்டும் என்பதால் திருவேங்டத்தில் எழுந்தருளயிருக்கும் ஸ்ரீநிவாஸனே!, உன் திருவடிகளையே எனக்கு உபாயமாக தந்து அருள்வாய் என வேண்டினேன்.

அது மட்டும் இன்றி உன் திருவடிகளையே பற்றுகிற ப்ரபத்தி யோகம் ஒன்றைத் தவிர, மற்ற கர்ம ஞான, பக்தி யோகங்களை பற்றிய சிந்தனை கூட, என் மனத்தில் தோன்றாதவாறு, மாஹாவிஶ்வாசத்தில் நிலை நிறுத்தி என்னை நீ அடைக்கலமாய் கொண்ட பின் எனக்கு ஏது மறு பிறவி?

இதில் உள்ள 4 வரிகளும் சரம ஸ்லோகத்திற்கு பொருளாக அமைகிறது.

நீண்டிய நெறிகள் முற்றும் நசித்திட = ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய

வேண்டினேன் வேங்கடவா உன் திருவடி = மாம் ஏகம் ஶரணம் வ்ரஜா
தீண்டிய வினைகள் அனத்தும் தீர்ந்திட = அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
கண்டிலேன் நீ கொண்டபின் மறுபிறவி = மோக்ஷயிஷ்யாமி மாசுச:

என்ற முறையில் சொல்லப்பட்டுள்ளது.

இந்த சரம ஸ்லோகத்திற்கு ஸ்வாமி தேசிகன், பிள்ளைலோகாசாரியார் போன்ற ஆசாரியர்கள் வெகு விரிவாக வியாக்யானம் செய்துள்ளார்கள். ஸ்வாமி தேசிகன், சரம ஸ்லோக சுருக்கு என்று தமிழில் 11 பாசுரங்களால் பதம் பதமாக வியாக்யானம் செய்ததைக் கொண்டு இங்கே இறுதியின் சுருதி என்று 11 பாடல்களால் சொல்லப்பட்டுள்ளது.

ஆசாரியர்களின் பாதங்களையே தலையில் கொண்டு, அடியேனது மந்த மதிக்கு எட்டிய வரை தமிழ் பாடல்களும், அதற்கு விளக்கமும் இங்கே எழுதப் பட்டுள்ளது. இதில் உள்ள நல்ல கருத்துக்கள் எல்லாம் அடியேனது ஆசாரியன் திருவருளால் ஏற்பட்டவை. பிழை, குற்றங்கள், எல்லாம் அடியேனைச் சேர்ந்தது என விண்ணப்பித்து அதைப் பொறுத்து அடியேனை திருத்தி அருளுமாறு பெரியோர்களை வேண்டுகிறேன்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம்
எம்பெருமானர் திருவடிகளே ஶரணம்
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்

ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹா தேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹா தேசிகாய நம:

இறுதியின் சுருதி – பாடல்கள்

(சரம ஸ்லோகம்)

1 - ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய

இயலா நிலையால் மனமிகழ்ந்து *
அத்தால் மற்றை நாடாது *
முயலா நெறியை முறித்து *
நெஞ்சம் வேறங்கம் தேடாது *
மலையாது மற்று பற்றற்று *
கலவாது வழிநின்று கலங்காது *
அழியாது ஆசிரியன் இயம்பினனே *
இகழாது மறையென இவ்வாறு

2 - மாம்

திருமால் குறையறியா இறையாய் *
திருமதுரையில் தாம் இறங்கி*
அருளால் அறங்காக்க தூதனாய் *
அவனியின் சுமைக்காக இரங்கி*
மருளால் மருண்ட பார்த்தன்தேரில் *
பாகனாய் மன்னன் தேற்றித் *
தருவாய் அடிமைக்கு திருமேனியைத் *
தாமென்று தொட்டுக் காட்டி

3 - ஏகம்

துறை அரு, தானும் வேறாய் *
ஆறும் பேறும் தாமே ஈந்து *

நெறியெல்லாம் பலன் ஒன்றாய் *
நம்பரத்தை இனி தான்சுமந்து *
மற்றொன்று வேண்டாம் என *
மகிழும் திருமகள் நாதனையே *
மனமே நீ ஏகமெனும் தனிச் சொல்லால் *
அறிந்தாயே இன்று

4 - ஶரணம்

உனக்கு ஏதுசுமை இனியென *
தமக்கு இனியவனான என்னை *
உமக்கு பணி செய்ய திருத்தி *
அருளிய அருங்குணங்களையும் *
சுடும்கடலில் சுழன்றமிழ்ந்த எம்மை *
மீட்டிக் காட்டிய நல்வழியும் *
தன்னையே தரும் தனியிறையாய் *
வேராய் ஓர் ஆறாகி நின்றாயே

5 - வ்ரஜா

மறத்தால் மறுத்த மறுமைப்
பயனால் * மனம் வெறுத்து *
அறத்தால் பிறழாது * அதன்
வழியே நடந்து * உறுதியுடன் *
ஒருக்கால் தஞ்சமென * உம் பொருளை
உமக்கே தந்து உயர்ந்து *
தரத்தால் அடைவிக்கும் அடிகளை *
அடைவோமே நாம் உணர்ந்து

6 - அஹம்

மறைநானே! அருள்சுரை நானே!
காக்கும் இறையும் நானே!
வானவருடன் மானிடனாய் புவியில்
தோன்றும் சுவை நானே!
அறியாருக்கு அறிவு நிதிநானே!
கதிநானே! உமக்குபதி நானே!
நிலைநானே! அறிவாய் *
நான் என்றவனும் திருநாரணன் தானே!

7 - த்வா

அரணிலாயாம் அடையெனக் காட்டிய
அடிகளை * உம்மறிவாலே பற்றி
துணையிலா பெரு நிலையென *
தனிமையின் இனிமை போற்றி
மூலத்திலும் முடியோன் முன்னிலும் *
முன் அமர்ந்த முழு முதல்வா *
உன் சீலமென்ன! சிறியேன் எம்மை
அடைக்கலமாய் ஆக்கி அருளினாயே

8 - ஸர்வ பாபேப்ய:

காணா இருளோ கவராப் பொருளோ *
தீராக் காடோ தணியா சூடோ *
தாரா நெஞ்சோ தாங்கா நஞ்சோ *
தாளா நரகோ மீளாப் பிறப்போ *
விளங்காது வினையனைத்தும் விலக்கி *

வீட்டைக் காட்டி விடுவிக்கும் *
தயங்காது நின்தாளில் அடையும்
சுகமே * என்றும் எமக்கு நிலைக்கும்

9 - மோசஷயிஷ்யாமி

தருவாய் வினை விடுத்து *
வீடு நான் விரும்பும்போது *
விரைவாய் இன்றே இல்லை *
நாளை என்று அப்போது *
அளித்து அழைப்பாய் உயரே *
உமக்கே குற்றேவல் செய்ய *
களித்து இருப்பார் வந்தார் *
அவரோடு ஒன்றாய் யானுய்ய

10 - மாசுச:

அமிழ்ந்து ஆழ்கடலில் அறிவில்லா *
அடிமை இணையடிகள் அடைய *
நெகிழ்ந்து பிறவி வேண்டாவென *
பொருந்தி பிரியா உறவுகாட்டி *
வினைதிருத்தி தகவால் காத்து *
திண்மதியுடன் துய்யநிலை ஏற்றி *
எமை வருத்தி வாடும் சோகம்
தவிர்த்து * வாழ்விப்பாய் வள்ளலே

11- பலன்

பக்திக்கு உறுப்பாம் கருமமும்
ஞானமும் * முதலிலவை சொல்லி *
சக்தியிலா மாந்தருக்கு உயர்த்தி
ப்ரபத்தியென * மற்ற களை தள்ளி *
தீயினில் தூசாய் மாசு நீக்கி *
வேண்டும் அன்றே வான் அளிக்கும் *
மறை ஈந்த சீ மாதவன் தாளே
சரண் * என்றே மனம் களிக்கும்.

0 - சரம ஸ்லோகம் அவதாரிகை
(The birth of Charama Sloka)

ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ।।
பகவத் கீதை 18-66

0-1 முன்னுரை – பகவத் கீதை

ஸ்ரீயப் பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீமந் நாரயணன் எல்லா ஜீவராசிகளெல்லாம் நல்ல கதி அடைய வேண்டும் என்பதற்காக பல வகையாக முயற்சிக்கிறான். தானே மண்ணில் தோன்றி, பல அறிய கருத்துக்களை அருளுகிறான். ஞானத்தில் சுருங்கி, நிலையற்ற உலக இன்பங்களில் மயங்கி, சாஸ்திர வாசனையே இல்லாத நம்மைப் போன்ற சாதாரண மக்களை திருத்தி நல்ல நிலையை அடைவிக்க வேண்டும் என்பதற்காகவே.

குன்றனைய குற்றம் செயினும் * குணம் கொள்ளும் *
இன்று முதலா என் நெஞ்சே *
பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி 41

என்ற ஆழ்வாரின் வாக்கின்படி, கோடிக்கணக்கான பாபங்கள் ஜன்மம் தோறும் செய்திருந்தாலும், பகவான் அவற்றை எல்லாம் கண்டு எடுத்தும் பாராது, நல்ல கதி அருள காத்திருக்கிறான். பகவான் தானே தன் திருவாக்காலே சொன்னதில் உயர்ந்ததாய் எல்லோராலும் போற்றப்படுவது **பகவத் கீதை**.

பாரதோ பஞ்சமம வேதா - ஐந்தாம் வேதம் என்று போற்றப்படும் மஹாபாரத்தில் பீஷ்ம பர்வத்தில் 25ம் அத்யாயம் முதல் 42ம் அத்யாயம் வரை உள்ள 18 அத்யாயங்களே பகவத் கீதை எனப்படும். இது அர்ஜீனனுக்கும் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணான எம்பெருமான் கண்ணனுக்கும் நடந்த ஸம்வாத ரூபமான சாஸ்திரம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிராத்யத்தில் ஆசாரியனிடம் அடி பணிந்து, ஏகாந்தமாக அவர் உபதேசம் செய்து, அறிந்து கொள்ள வேண்டியவை **கிரந்த ஸதுஷ்ட்யம் - ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீகீதா பாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத் விஷயம்** - என்ற நாலு.

- **தத்துவ** நிர்ணயத்தை ஸ்ரீபாஷ்யத்திலும்,
- எம்பெருமானை அடையும் **ஹிதங்களை** (உபாயங்களை) ஸ்ரீகீதா பாஷ்யத்திலும்
- அதில் உபதேசித்த பக்தி, ப்ரபத்தி மார்கங்களில் சிறந்ததான ப்ரபத்தியின் விவரணத்தை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும்
- ப்ரபத்தி செய்த சேதனன் உயர்ந்த **புருஷார்த்தமான** மோக்ஷத்தை அடையும் வரை இங்கிருக்கும் நாட்களில் உள்ள ஸ்ரீகானுபவத்தையும், மோஷத்தில் ஏற்படும் ஆனந்தத்தையும் பரக்க தெளிவிப்பது நாலாவதான பகவத் விஷயம் என்னும் திருவாய்மொழியின் வியாக்யானத்திலும் அறியலாம்.

பகவத்கீதைக்கு பல விளக்கங்கள் உள்ளன. அதில் முக்யமானவை

- ஸ்வாமி ஆளவந்தார் சுருக்கமாக அருளிய **ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹம்.**
- இதை ஓட்டி, ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய கருத்துக்களைக் கொண்டு எம்பெருமானார் அருளிய வியாக்யானம் **ஸ்ரீகீதா பாஷ்யம்.**
- ஸ்ரீபாஷ்யாகாரர் அருளிய கீதா பாஷ்யத்தின் ஒவ்வொரு பதத்திற்கும் தாத்பர்ய நிர்ணயம் செய்து ஸ்வாமி தேசிகன் அருளியது **ஸ்ரீகீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை.**

இவை எல்லாம் பகவத் கீதையை விஸ்தாராமாக விளக்கினாலும், அவற்றை அடிப்படையாக கொண்டு (keeping these fundamentals in the background), அதற்கு மேலே பகவத்கீதையின் உயிர் நாடியான சரம ஸ்லோகத்தை இங்கே ஆழ்ந்து அனுபவிக்க (deeply focused) ஆரம்பிக்கிறோம்.

0-2 பகவத் கீதையும், சரம ஸ்லோகமும்

கண்ணன், கலங்கிய, குழம்பிய அருச்சுனனுக்கு பல உபாயங்களைச் சொன்னாலும், ஸாரமானது, உயிரானது **கீதா சரம ஸ்லோகம்.**

எம்பெருமானை அடைய கர்ம, ஞான, பக்தி போன்ற யோகங்கள் இருந்தாலும் ப்ரபத்தி ஒன்றே சாதாரண மக்களால் அநுஸந்திக்கக் கூடியது. செய்வதற்கு எளிதாய், ஒரே ஒரு முறையே செய்யும்படியாய், ஞான, ஶக்திகள் எல்லாம் எதிர்பாராது எம்பெருமானின் கருணை ஒன்றையே துணையாய் கொண்டு செய்வது.

இந்த ப்ரபத்தியை விதிக்கும் ஸ்லோகமே சரம ஸ்லோகம். இது பகவத்கீதையின் கடைசி அத்யாயத்தில், எல்லாவற்றின் ஸாரமாகவும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் சிறப்பித்து சொல்லப்படும் **ஶரணாகதி சாஸ்திரத்தை விளக்கும் ஸ்லோகம்.**

ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யமும் ஜபம் செய்யும் **ரஹஸ்ய த்ரயங்களில் மூன்றாவதாக, திருமந்திரம், த்வயம். சரம ஸ்லோகம்** என்பதில் கடைசியாக கண்ணனின் திருவாக்காலே உபதேசம் செய்யப்பட்ட மந்திரம்.

0-3 அருச்சுனன் யுத்தகள ப்ரவேசம்

குருக்ஷேத்திரத்தில் பஞ்ச பாண்டவர்களும், அவர்களது பகைவர்களான துரியோதனாதிகளும் படை சூழ யுத்தத்திற்கு ஆயத்தமாய் நிற்கின்றனர். கண்ணன் அருச்சுனுக்கு சாரதியாய் தேரை ஓட்டிக் கொண்டு வருகிறான். வில்லேந்திய விஜயன் மஹா ஆக்ரோஷத்துடன் பகைவர்களை பொடிப்பொடியாய் நசுக்கி விடுவேன் என்ற ஆணவத்துடன் களத்தின் உள் நுழைந்தான்.

ஹ்ருஷீகேஸம் தத2ா வாக்யம் இத3ம் ஆஹ மஹீபதே
அர்ஜுந உவாச

ஸேநயோர் உப4யோர் மத்4யே ரத2ம் ஸ்த2ாபய மே அச்யுத

வியாஸ பகவான் பகவத்கீதை 1-21

- **மஹீபதே** - (ஸஞ்சயன் கூறுகிறான்) ராஜா திருதாஷ்டிரரே
- **ஹ்ருஷீகேஸம் இத3ம் வாக்யம் ஆஹ** - இந்திரியங்களுக்கு எல்லாம் இறைவனான கிருஷ்ணனிடம் இந்த வசனத்தை (அருச்சுனன்) கூறினார்
- **அச்யுத மே ரத2ம்** - ஹே அச்சுதனே, என்னுடைய தேரை
- **ஸேநயோ: உப4யோ: மத்4யே ஸ்த2ாபய** - படைகள் இரண்டிற்கும் நடுவே நிறுத்துவாயாக

அந்த சமயத்தில் ரிஷிகேஸனான கண்ணனை நோக்கி அருச்சுனன் பின்வரும் வாக்யத்தை சொன்னான். **"அச்சுதனே! இரண்டு படைகளுக்கும் நடுவில் என்னுடைய தேரை நிறுத்து,"** என்றான் அருச்சுனன். **ஆஶ்ரித பாரதந்திரியனான** (அடியவர் இட்ட வழக்கான) பகவான் கண்ணன், அர்ஜுனனுடைய வாக்கின்படி தேரை இரண்டு சேனைகளின் நடுவே கொண்டு போய் நிறுத்தினான்.

0-4 அருச்சுனனின் கலக்கம்

இரண்டு சைன்யங்களும் ஒன்றை ஒன்று எதிர் நோக்கி நின்று, சண்டையை ஆரம்பிக்க துடித்துக் கொண்டு இருந்தனர். தலையை நிமிர்ந்து விஜயன் பார்க்கும்போது தன்னுடைய உற்றார், உறவினர்கள் எல்லோரும் எதிரே அணி வகுத்து நிற்பதைக் கண்டான்.

இவர்களை எல்லாம் சண்டையில் கொல்ல வேண்டுமே என்ற துக்கம் நெஞ்சை அடைத்தது. தீடீரென்று பந்த பாசம் விழித்துக் கொண்டது. அவர்கள் பேரில் இரக்கம் கொண்டான். இப்படிப்பட்ட பெரியோர்களுடன் நான் எப்படி யுத்தம் செய்வேன்? எனக்கு போர் வேண்டாம், ராஜ்யமும் வேண்டாம்

என சோகித்து, கையிலிருந்து காண்டீபம் எனும் தன் வில்லை நழுவ விட்டான்.

அஸ்த2ாந ஸ்நேஹே காருண்ய த4ர்மாதர்ம தி4யா குலம் ।
பார்த2ம் ப்ரபந்நம் உத்3தி3ஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் ।।
ஸ்வாமி ஆளவந்தார், கீதார்த்த ஸங்க்ரஹம் - 5

- அஸ்த2ாந ஸ்நேஹே - தகாத இடத்தில் ஏற்பட்ட உறவின்அன்பாலும்
- அஸ்த2ாந காருண்ய - தகாதவர்களிடம் ஏற்பட்ட கருணையாலும்
- த4ர்ம அதர்மதி4யா ஆகுலம் - தர்மம் அதர்மம் இவற்றில் கலங்கியவனாய்
- ப்ரபந்நம் பார்த2ம் உத்3தி3ஶ்ய - ஶரணாகதனான அர்ஜீனனை சாக்காகக் கொண்டு
- ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் - கீதா சாஸ்திரத்தை வரையறுத்தான்.

ஸ்வாமி ஆளவந்தார், அருச்சுனன் கலக்கம் மூன்று காரணங்களால் என்றார். **தகாத இடத்தில் நட்பு, தகாத இடத்தில் இரக்கம், க்ஷத்ரியனான தன்னுடைய ஸ்வதர்மம் எது என்பதில் மயக்கம்**. இவற்றினால் கலங்கி மனம் குழம்பி கிடந்தான். அவனை நோக்கி பகவான் கிருஷ்ணன் **தத்வ ஹித புருஷார்த்தங்களை** (உண்மை நிலை, செயல் வழி, பலன்) உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறான்.

ஸது பார்த்தோ மஹாமதா பரம காருணிகோ
தீர்க பந்து பரம தார்மீக: உபாவிஸத்
ஸ்வாமி எம்பெருமானார், கீதா பாஷ்யம்

அருச்சுனனின் நிலையை ஸ்வாமி எம்பெருமானார், கீதா பாஷ்யத்தில் விவரிக்கிறார். துரியோதனனும் நடுங்கினான். அவன் நடுங்கிய காரணம் வேறு. அருச்சுனனும் நடுங்கினான். இவனை **பார்த்த ஏவ தநுர்தர:** என்று புகழும்படியான சிறந்த வில்லாளி. மஹாமத என்று தான் கீழே விழுந்தாலும் மற்றவர் உயர வேண்டும் என்கிற மனப்பான்மை கொண்டவன். பரம உதாரன் என்றும் கொண்டாடினார்.

0-5 ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் முன்னுரை

ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: ।
நாக3 பர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாக3தோ மது4ராம் புரீம் ।।
ஹரி வம்ஸம் 113-62

இத்யாதிகளிற்படியே ஶ்ரிய: பதியான ஸர்வேஶ்வரன் ஸாது பரித்ராணாதிகளுக்காக (நல்லவர்களை காத்தல்) **வந்து அவதரித்து அருளி, ஸுலபனாய் ஶரணாகதரான பாண்டவர்களுக்கு இன்னார் தூதன் என நின்று அர்ஜுநனை ரதியாக்கித்** (தேருக்கு எஜமானனாய்) **தான் ஸாரதியாய்** (தேர் ஓட்டியாய்) **அவனுக்கு விதேயனாய்** (கட்டளையைச் செய்யும் வேலைக்காரன் போலே) **நின்ற அளவிலே, தன்னை நிமித்தமாகக் கொண்டு தன் ப்ரதிபக்ஷங்களை** (பகைவர்களை) **ஸர்வேஶ்வரன் நிரஸிக்க** (அழிக்கிற) **நிற்கிற நிலையைக் கண்ட அர்ஜுநன் பந்து விநாஶ நிஶ்சயத்தாலும்** (உறவினர் அழிவதில் நிச்சயம்) **அஸ்த்தாந ஸ்நேஹாதிகளாலும்** (தகாத இடத்தில் நட்பும்) **கலங்கி தர்ம புபுத்ஸையாலே** (தர்மத்திலே ஆசை உடையவனாய்) **ஶரணாகதனாய்**

ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், நல்லவர்களை காப்பதற்கும், துஷ்டர்களை அழிக்கவும், குன்றியிருக்கும் தர்மத்தை நிலை நிறுத்தவும், எல்லா உயிரினங்களும் அணுகுவதற்கு எளியனாய் பல அவதராங்கள் செய்கிறான்.

இங்கே கிருஷ்ணனாய், தன்னை ஶரணம் என்று அடைந்த பஞ்ச பாண்டவர்களுக்கு தூது செல்வதை தனக்கு பெருமையாக கருதினான். மஹா வில்லாளியான அருச்சுனனை தேரில் தலைவனாக அமர்த்தி, அவன் ஆணையை கேட்டு, அந்த தேருக்கு ஓட்டியாக தான் தாழ்ந்து நின்று பிரகாசித்தான்.

தான் தலைவன் என்பது ஒரு பேச்சுக்குத்தான் (figure head) என்றும், எல்லாக் காரியங்களையும் உண்மையில் நடத்துபவன் கண்ணனே என்பதை

உணர்ந்தான் அருச்சுனன். தன்னை ஒரு சாக்காக (excuse) கொண்டு, தன் உற்றார், உறவினர்களை பூண்டோடு அழிப்பதாக கங்கணம் கட்டிக் கொண்டு கண்ணன் நிற்பதை அறிந்து கலங்கினான்.

0-6 அருச்சுனன் ஶரணாகதி

தகாத அடத்தில் அன்பும், தகாத இடத்தில் இரக்கமும், தான் செய்ய வேண்டிய செயலில் கலக்கமும் அடைந்த விஜயன், தர்மத்தை அறிய விரும்பி எம்பெருமானிடம் சரணம் புகுகிறான்.

கார்ப்பண்ய தே3ஷோ பஹுத ஸ்வப4வ:
ப்ருச்ச2மி த்வாம் த4ர்ம ஸம்மூட4சேதா: ।
யச்ச்2ரேய: ஸ்யாந் நிஶ்சிதம் ப்3ரூஹி தந் மே
ஶிஷ்யஸ் தேஹம் ஶாதி4 மாம் த்வாம் ப்ரபந்நம் ।।
பகவத் கீதை 2-7

- **கார்ப்பண்ய தே3ஷ உபஹுத ஸ்வப4வ:** - கார்ப்பண்யம் என்ற தோஷத்தினால் (சோகம் தவிர்க்கும் உபாயத்தை அறியாமையினால்) சீரழிந்த ஸ்வபாவத்தை உடைய
- **த4ர்ம ஸம்மூட4சேதா: த்வாம் ப்ருச்ச2மி** - எது தர்மம் என்பதை தெரியாத மனதை உடைய நான் உன்னை கேட்கிறேன்
- **யத் நிஶ்சிதம் ச்2ரேய: ஸ்யாத்** - (குழம்பி கிடக்கும் எனக்கு) எது நிச்சயமாக, மேன்மையைத் தருமோ
- **தத் மே ப்ரூஹி** - அதை எனக்கு (நீங்களே) சொல்லுங்கள்
- **அஹம் தே ஶிஷ்ய:** - நான் உங்களுடைய சிஷ்யன்
- **த்வாம் ப்ரபந்நம் மாம் ஶாதி4** - உங்களை அடைக்கலம் அடைந்த எனக்கு அறிவுரை கூறுங்கள்.

அருச்சுனன், "கிருஷ்ணா எதை நான் செய்தால் நல்லவை விளையும் என்று என்னால் நிச்சயம் செய்ய முடியவில்லை. நான் கலங்கி கிடக்கிறேன். நீ

எனக்கு ஆசாரியன். நான் உனக்கு ஶிஷ்யன். நீயே, எனக்கு (என் ஆத்மாவிற்கு) எது நல்லதோ, அதை உபதேசிப்பாயாக," என்றான்.

இங்கே பல விஷயங்களை கவனிக்க வேண்டும்.

- அருச்சுனன் தன்னுடைய கையிலாகாத தன்மை, **க்ருபணத்வம்** அதாவது தன்னால் எதையும் ஸாதிக்க முடியாதது என்பதை உணர்கிறான். அவனுடைய இழிவான நிலை என்பது கருணையுடன் கூடிய கோழைத்தனமும் சோகமும். **(ஆகிஞ்சன்யம்)**
- தனக்கு **புகல் இல்லை**. புத்தி இல்லை. சக்தி இல்லை. பிடித்துக் கொள்ள ஒருவரும் இல்லை என்பதை அர்ஜீனன் உணர்ந்தான். **(அநந்யகதிவம்)**
- அதனால், எம்பெருமானிடம் **ஶரணாகதி** அடைகிறான்.
- ஶ்ரேயஸ் என்று **ஆத்மாவிற்கு எது நன்மை பயக்குமோ** அதைச் சொல்லவும் என்றான். உடல் நலனையோ, செல்வதையோ, புகழையோ வேண்டவில்லை.
- **தான் சிஷ்யன், பகவான் ஆசாரியன்** எனக் கூறி, கிரமமாக உபதேசத்தை வேண்டுகிறான்.

அருச்சுனனின் பிராத்தனையை ஒரு சாக்காக கொண்டு பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையை உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறான்.

0-7 அர்ஜீனனின் கார்ப்பண்ய தோஷம்

கார்ப்பண்ய தோஷம் என்று ஶ்லோகத்தில் வருகிறது. இங்கே கார்ப்பண்யம் என்றால் என்ன? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

க்ருபண: என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு.

1. பணம் செலழிக்காத கருமியை க்ருபணன் என்பது வழக்கம்.

2. பகவானை சாஸ்த்ர முறையாக அறிய முயலாது, சுக போகங்களில் மயங்கி கிடப்பவனே க்ருபணன் என்பதும் உண்டு.
3. தவிர, பரிதாபகரமான நிலையில் இரக்கம் கொள்ளும்படியான நிலையில் இருப்பனையும் க்ருபணன் என்பார்கள்.

இங்கே அர்ஜீனனை **கார்ப்பண்ய தோ3ஷ** என்று சொன்னது கடைசி இரண்டு அர்த்தங்களையும் குறிக்கும்.

யாஜ்ஞவல்க்யர் என்னும் ரிஷி கார்கி என்பவளுக்கு பல உபதேசங்களைச் செய்கிறார். ஓரிடத்தில், சொல்கிறார்

யோ வா க3ார்கி3
ஏதத3க்ஷரம் விதி3த்வா அஸ்மாத் லோகாத் ப்ரைதி ஸ க்ருபண:
அத ய
ஏதத3க்ஷரம் க3ார்கி3 விதித்வா அஸ்மாத் லோகாத் ப்ரைதி ஸ ப்ராஹ்மண:
ப்ருஹதாரண்ய உபனிஷத்

பரமாத்மா ஸ்வரூபத்தை அறிந்து இறப்பவனை ப்ராஹ்மணன் என்றும், அதை உணராமலே இறப்பவனை க்ருபணன் என்றும் உபதேசித்தார் என்கிறது உபனிஷத்.

இதிலிருந்து தெரிவது - **கார்ப்பண்யம் என்பது பரம் பொருளை அறியாமை.** இங்கே அர்ஜீனன் பரமாத்ம ஸ்வரூப, ஸ்வபாவாதிகளை அறியாது, மிகவும் மோகம் அடைந்து இருக்கும் நான், உமக்கு சிஷ்யனாகி, அது மட்டுமின்றி, உங்களையே ஶரணாகதி என்று வரிக்கிறேன், என்றான். **தத்வ ஹித புருஷார்த்தங்களை** உபதேசித்து **என் ஆத்மாவை ரக்ஷிக்க வேண்டும்** என்ற அர்ஜீனன் பிராத்தனை என்பது ஆசாரியர்கள் வியாக்கியானம்.

0-8 அருச்சுனனை கலக்கியது யார்?

அருச்சுனன் லக்ஷ்ய க்ஷத்ரியன். இயற்கையிலேயே வீரன், அதிசூரன். தர்ம சாஸ்திரங்களை நன்கு அறிந்தவன். துரியோதனாதிகள் செய்த அக்ரமத்தை 13 வருஷங்கள் பொறுத்து இருந்து கடைசியில் போருக்கு எதிரிலே கண்டவுடன் கலக்கமா? **இது அர்ஜீனனின் ஸ்வபாவம் மாதிரி தெரியவில்லையே!**

போர்க் களத்தில், எதிரிகளிடம் கரை புரண்டு ஓடும் கருணையும், நட்பும் கொள்வது குணமாகாது. குற்றமே ஆகும். நீதிபதி (Judge) குற்றவாளியிடம் (Criminal) இரக்கம் கொள்ள முடியுமா? அறுவை சிக்ச்சை செய்யும் மருத்துவர் (Suregeon), நோயாளியின் (Patient) வருத்தத்தினால் விட முடியுமா? உயர்ந்த வீரனாகிய ஆர்ஜீனனுக்கு இவை எல்லாம் தெரியாதா? அவன் எப்படி இவ்விதம் கங்கினான்?

பகவான் கிருஷ்ணனே, உண்மையில் அர்ஜீனனை கலக்கினான்.

யுத்தத்திற்கு புறப்படும்போதும், சங்கு ஊதும் போதும் கலங்காத அர்ஜீனனை, இந்திரியங்களுக்கு எல்லாம் ஈஶனான கண்ணன் தன் ஸங்கல்பத்தின் படி ஆட்டி வைக்கிறான். பகவான் ஒருவனே ஸர்வ வஸ்துக்களையும் ஆட்டி வைப்பவன் என்பதை நினைவுறுத்த **ஹ்ருஷிகேஶன்** என்ற நாமாவை பல இடங்களில் ஶப்த ப்ரயோகத்தால் சுட்டிக் காட்டியது.

ஸஞ்சய உவாச
ஏவ முக்த்வா ஹ்ருஷிகேஶம் கு3டா3கேஶ: பரந்தப ।
ந யோத்ஸ்ய இதி கோ3விந்த3 முக்த்வா தூ3ஷ்ணீம் ப3பூ4வ ஹ ।।
பகவத் கீதை 2-9

- **ஸஞ்சய உவாச** - ஸஞ்சயன் கூறினார்
- **பரந்தப கு3டா3கேஶ:** - பகைவர்களை வாட்டுபவனும், தூக்கத்தையும் ஜயித்த அர்ஜீனன்
- **ஹ்ருஷிகேஶம் கோ3விந்த3ம் ஏவம் உக்த்வா** - இந்திரியங்களை ஆட்டிவிக்கிற கோவிந்தனிடம் இப்படி சொல்லி விட்டு
- **ந யோத்ஸ்ய இதி உக்த்வா** - யுத்தம் செய்ய மாட்டேன் என்று தெளிவாக சொல்லி

- தூஷ்ணீம் ப3பூ4வ ஹ - மௌனமாக இருந்து விட்டான், என்ன ஆச்சரியம்!

ஸஞ்சயன் ஆச்சரியப்பட்டு மேலே சொன்னான். எல்லா ஜீவன்களும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் கண்ணன், கலங்காத அர்ஜீனனை கலக்கினானே, என்ன ஆச்சரியம் என்று வியந்தான் ஸஞ்சயன். ஹ என்ற பதம் இதை தெரிவிக்கிறது.

மேலும் இங்கே கோவிந்த என்ற ஶப்தத்தை ப்ரயோகித்த முறை தனி அற்புதம்.

கோ என்றால் பூமி.

- பூபாரத்தை குறைக்கவே திருவதாரம் பண்ணினான் கிருஷ்ணன் என்பதை தெரிவிக்கவே.

> கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரணது நிற்கவந்து *
> மண்ணின் பாரம் நீக்கு தற்கே வட மதுரைப் பிறந்தான் *
> நம்மாழ்வார், திருவாய்மொழி 9-1-10

கோ என்றால் வாக்கு.

- சோகித்து கிடந்த அர்ஜீனனுக்கு நல்வார்த்தை கூறுவதை வ்யஜமாக்கி உலகத்துக்கு உபதேசம் செய்ய நல்ல வாக்குடைய ஜகத்கு கிருஷ்ணன் என்பதை காட்டும்.
- வேதைஶ்ச ஸர்வை: அஹமேவ வேத்ய: (15-15) எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே என்றார். நான் சொல்லப்போகும் இந்த கருத்துக்கள் வேத ஸ்வரூபியாக இருக்கும் என் வாக்கிலிருந்து வருபவை என்பதை சுட்டிக்காட்டுவது கோவிந்த பதம்.
- கே3பி4ர் வேத3 வாக்யைர் வித்3யதே லப்4யதே இதி கே3விந்த3 என்ற வாக்கின்படி, கோபிகைகளாலும், வேதங்களின் கருத்துக்களாலும் அடையப்படுபவன் எம்பெருமான். இடக்கை வலக்கை தெரியாத ஞான சூன்யமான கோபிகைகள் முதல் ஸகல உபனிஷத் ஸாரம் வரை அனைவரும் எம்பெருமானை அனுபவிக்க வேண்டும் என்ற காரணத்தாலே கீதையை சொன்னான்.

0-9 பகவத் கீதைக்கு கண்ணன் ஆயத்தம்

பகவத் கீதை என்பது ஸஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு சொல்வதாக மஹாபாரத்தில் அமைந்துள்ளது. ஹஸ்தினாபுரத்தில் இருவரும் அமர்ந்து இருக்கின்றனர். ஸஞ்சயன், குருக்ஷேத்திரத்தில் நடப்பதை டிவியில் பார்ப்பது போல் ஞான திருஷ்டியில் பார்த்து ராஜாவிற்கு சொல்கிறான்.

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே என்ற ஶ்லோகத்திலிருந்து பகவத் கீதை ஆரம்பம் (1-1). உண்மையில் கண்ணனுடைய உபதேசம் என்பது 2-11 லிருந்து ஆரம்பம்.

கண்ணன் உபதேசத்தை ஆரம்பிப்பதற்கு முன் அர்ஜீனனை நோக்கி சொன்ன ஶ்லோகத்தில் (2-10), பரிகாசத்துடன் சொன்னான் என்று வருகிறது.

> **தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந் நிவ ப4ாரத ।**
> **ஸேநயோ ருப4யோர் மத்4யே விஷீத3ந்த மித3ம் வச:**
> பகவத் கீதை 2-10

- **ப4ாரத** - பரத வம்சத்தில் பிறந்த திருதாஷ்டிர மஹாராஜாவே
- **ஹ்ருஷீகேஶ:** - இந்திரியங்களுக்கு எல்லாம் அரசனான பகவான்
- **உப4யோ: ஸேநயோ: மத்4யே** - இரண்டு படைகளுக்கம் நடுவில்
- **விஷீத3ந்தம் இத3ம் வச:** - துக்கப்படும் அந்த அர்ஜீனனை நோக்கி இந்த வார்த்தையை
- **ப்ரஹஸந் இவ உவாச** - பரிகாசம் செய்பவன்போல் சொன்னான்

பரத குலத்தில் தோன்றிய திருதாஷ்டிர மஹாராஜாவே! இந்திரியங்களை எல்லாம் ஆட்டி வைக்கும் அந்த பரந்தாமன், இரண்டு படைகளுக்கும் நடுவில் சோர்ந்து, வாடி, துக்கித்து கிடக்கும் அர்ஜீனனை நோக்கி, பரிகாசம் செய்பவன் போல் இந்த வார்த்தைகளைச் சொன்னான் என்றான் ஸஞ்சயன்.

0-10 பரிகாச வார்த்தைகள்

கண்ணன் பரிகாசத்துடன் சொன்னானா? பரிகாசம் எதற்கு! இதை கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்

- **உண்மையில் அர்ஜீனன் மன நிலை பரிகாசமானதுதான்.** தத்துவத்தை அறியாது குழம்பி கிடக்கிறான். உடல் அழியும். ஆத்மா ஆழியாதது. அழியும் உடலை நோக்கி பந்துக்கள் என கலங்கி தன் தர்மத்தில் குழம்பி கிடக்கும் பரிகாசமான நிலைதான். ஆனால், விஷயம் அறிந்தவன்போல் அவனுடைய யுத்த காரியத்தால் முன்னோர்கள் (பித்ருக்கள்) எல்லாம் ஸ்வர்கத்திலிருந்து நரகத்தில் வீழ்வார்கள் என்று எல்லாம் பிதற்றுகிறான்.

- **அது பரிகாசமில்லை. கண்ணனின் நமுட்டு சிரிப்பு.** கண்ணன் நினைத்து பார்க்கிறான். அர்ஜீனனை நாம் கலக்கினோம். மஹாவீரனான அவனும் கலங்கினான். சோகித்து ஶரணாகதி செய்தான். அவனை சாக்காகக் கொண்டு நம் காரியத்தை ஸாதித்து கொள்வோம் என்று ஆசார்ய தோரணைக்கு ஆயத்தமான புன் சிரிப்பு. அது பரிகாசம் இல்லை.

- **கடினமான உபனிஷத்தை, பரிகாச வாக்யங்கள் போல் சுலபமாக சொன்னான்.** கீதை புரிவதற்கு கஷ்டம் என பயப்பட வேண்டாம். வேதங்களில் புதைந்து கிடக்கும் தத்வ, ஹித, புருஷார்த்த கருத்துக்களை எளிமையாக, எல்லோரும் அறியும் முறையில் பரிஹாச வாக்யங்களைச் சொல்கிற மாதிரி உபதேசித்தான் என்பது எம்பெருமானார் கருத்து. **ப்ரஹஸந்நிவ** என்பது **பரிஹாஸ வாக்யம் வதந்நிவ** என்றது கீதா பாஷ்யம். கண்ணன் கதை சொல்வதுபோல் ஆத்மார்த்த நுணுக்கமான இனிமையாக, ரஸனையுடன் ஹாஸ்யங்களுடன், கேட்பவர்கள் சந்தோஷிக்கும்படி சொன்னான்.

- **ஶரணாகதிக்கு பின் பிரபன்னன் எப்படி இருக்க வேண்டும் என்பதை நினைத்து கண்ணனின் புன்னகை.** ப்ரபன்னனான அர்ஜீனன்

நிலையைப் பற்றி சிரிப்பு. அர்ஜீனன் கலங்கி கண்ணனிடம் வேண்டினான் - நீ எனக்கு அறிவுரை கூறு. நான் சிஷ்யன் என்று சொல்லி ஶரணாகதி செய்கிறான். சொல்லி முடித்த உடனே, என்ன செய்தான்? காண்டீபத்தை கீழே போட்டான். நான் போர் செய்ய மாட்டேன் என்றான். (After making saranagati, and requesting Lord to instruct him, Arjuna decides himself that he shouldn't fight and sits down. If you think you are capable of making the decision by yourself, then why ask the Lord?). அதனால்தான் கண்ணன் உடனேயே சரம ஶ்லோகத்தை சொல்லவில்லை. ஶரணம் அடைந்த அர்ஜீனன் தன் நிலையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இதற்காக மேலும் கலக்கினான்.

0-11 கண்ணனின் வருத்தம்

எம்பெருமான் **ஸர்வஜ்ஞன்** - எல்லாவற்றையும் நேரில்கண்டு அறிபவன். **ஸர்வ ஶக்தன்** - எந்த செயலையும் செய்யும் வல்லமை உடையவன்.

எல்லோரும் பராசஶர, வியாஸார்களையே ஞானவான்களாக கருதி, அவர்களையே ஆசாரியர்களாக பற்றினார்கள். கண்ணனுக்கு, தானே பூலோகத்தில் கீழே இறங்கி அவதாரம் செய்திருந்தாலும், தன்னை ஒருவரும் திரும்பிக் கூட பார்க்கவில்லையே, தனக்கு **ஆசாரிய ஸ்தானம் இல்லையே** என்று பெரிய குறை.

> **தீவகை மாற்றி அன்று ஓர் தேரில் ஆரணம் பாடிய * நம்**
> **தேவகீ சீர் மகனார்**
> ஸ்வாமி தேசிகன், பரமத பங்கம் 7

என்று ஸ்வாமி தேசிகன், கண்ணன் சேதனர்களின் பாவங்கள் எல்லாம் கழிந்து ஒழியும்படி, ஆசாரிய ஸ்தானத்தில் இருந்து வேதங்களின் அர்த்தங்களை எல்லாம் **பகவானின் பாடல்கள் (பகவத் கீதா)** என்று பாடினான் என்றார்.

அர்ஜீனனின் குழப்பத்தைக் கண்ட கண்ணன், "அருச்சுனா! க்ஷத்ரியனான உனக்கு எங்கிருந்து இந்த மோஹமும் கோழைத்தனும் (timidity) உண்டாயிற்று?, உன் ஸ்வதர்மம் என்ன என்பதை மறந்து விட்டாயா? என கேட்க ஆரம்பித்தான்.

அஹம் ஏவ வேத்ய: என்று எல்லா வேதங்களாலும் அறியக் கூடிய பரம் பொருளான கண்ணன், திகைத்து நின்ற அருச்சுனனின் கலக்கத்தை ஒரு சாக்காக கொண்டான்.

0-12 கீதை ஆரம்பமும் முடிவும்

எம்பெருமான் துஷ்டர்களை அழிக்க வேண்டும் என்றால் இருந்த இடத்திலேயே, தன் நினைவாலேயே **(ஸங்கல்பத்தினால்)** ஒரு க்ஷணத்தில் செய்துவிட முடியும். கிருஷ்ணனாய் அவதரித்த நோக்கம், அது துஷ்ட நிக்ரஹத்திற்காக இல்லை.

வேதாந்த கருத்துக்களை விளக்கிச் சொல்லும் காரியம். தானே அவதரித்து தன் திருவாக்காலே, ஆசாரியனாக நின்று, ஆசாரிய - சிஷ்ய முறையில் உலகத்திற்கு செய்து காட்ட வேண்டும் என்ற காரணத்தினால்தான் இந்த அவதாரம்.

அர்ஜூனக்கு ஸாரதியாய் நின்று, அவன் துக்கத்தை போக்குவதை ஒரு வ்யாஜமாகக் கொண்டு பகவத் கீதையை உலகத்தோர் அனைவருக்குமாக சொல்ல ஆரம்பிக்கிறான், ஸ்ரீகிருஷ்ணன். பகவானின் அருளிச் செயலாலே கீதைக்கு பெருமை.

கீதையின் ஸாதனை என்பது இந்த இடத்திலிருந்து (2-11) ஆரம்பிக்கிறது.

- **ஶாதி4 மாம் த்வாம் ப்ரபந்நம்** என்ற அர்ஜீனனின் ஶரணாகதிதான் வித்து, கண்ணனின் உபதேசத்திற்கு.

- **மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:** என்கிற சரம ஶ்லோகத்தில் (18-66) கீதோபதேசம் முடிவு அடைகிறதே அதுதான் கனிந்த பழம்.

அருச்சுனன் **ஶிஷ்யஸ் தேஹம் ஶாதி4 மாம் த்வாம் ப்ரபந்நம்** என்று கேட்ட உடனே, கிருஷ்ணனுக்கு குதூகலம். அருச்சுனனை பற்றாகக் கொண்டு கீதையை உபதேசிப்பதன் மூலம் சிறந்த சாஸ்திரத்தின் அர்த்தங்களை எல்லாம் உலகத்து மக்கள் அனைவரும் உய்வதற்காக வாரி வழங்கினான் கண்ணன்.

அறிவினால் குறைவில்லா * அகல் ஞாலத்தவர் அறிய *
நெறி எல்லாம் எடுத்துரைத்த * நிறை ஞானத்து ஒரு மூர்த்தி *
நம்மாழ்வார், திருவாய்மொழி 4-8-6

உலகம் பரந்தது. அதில் எத்தனையோ விதமான மக்கள். அறிவில் அவர்கள் மிகுந்து இருக்கிறோம் என இறுமாந்திருந்திருக்கலாம். ஆனால் பகவத் விஷயத்தை தெரியாத ஞானம் ப்ரயோஜனமில்லை. எனவே நிறைந்த ஞானம் உடைய கிருஷ்ணன் அவர்கள் எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்பதற்காக கர்ம யோகம் முதல் ப்ரபத்தி வரை எல்லா உபாயங்களையும் விளக்கினான்.

கீதா சாஸ்திரத்தில் உள்ள பதினெட்டு அத்யாயங்களை ஆறு ஆறாக, மூன்று பாகங்களாக **(ஷட்கங்களாக)** விளக்குவது ஆசாரியர்கள் வியாக்யானம்.

0-13 பகவத் கீதை முதல் ஆறு அத்யாயங்கள்

ஜ்ஞாந கார்மாத்மிகே நிஷ்டே2 யோக3 லக்ஷயே ஸுஸம்ஸ்க்ருதே !
ஆத்மாநுபூ4தி ஸித்3த்4யர்தே2 பூர்வஷட்கேந சோதி3தே !!
ஆளவந்தார், கீதார்த்த ஸங்க்ரஹம் 2

பகவத் உபாஸனத்திற்கு (பக்தி யோகத்திற்கு) அங்கமானாது ஜீவாத்ம தரிசனம். இதற்கு ஸாதனங்கள் கர்ம, ஞான யோகங்கள். முதல் ஆறு

அத்யாயங்களில், நன்கு பக்குவமான ஞான, கர்ம யோகங்கள் பகவானை அடைய வழி என சொல்லப்பட்டது.

ஜீவத்மானவை உள்ளபடி அறிவதுதன் ஆரமம்பம். உடலைவிட வேறானது ஆத்மா. அது ஞானமானது, அணுவானது, நித்யமானது. ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம், எம்பெருமானுக்கு அடியவனாய் இருப்பதே. அதுவே ஆத்மாவிற்கு நித்யமான அளவில்லாத ஆனந்தம் என்பதை உபதேசிக்கிறான்.

இப்படி ஆத்மாவின் உண்மை நிலையை அறிவித்து, தர்மங்களை பற்றி விவரித்து, அவற்றுள் இந்த பிறவிக்கு செய்வதை விட்டு, மறு பிறவிக்கு செய்யும் தர்மங்களே சிறந்தது என்றான். எல்லாவற்றை விட உயர்ந்த செல்வமான மோக்ஷத்திற்கு ஆரம்ப வழி கர்ம, ஞான, யோகங்களே என்று அவற்றின் ஆழ்ந்த கருத்துக்களையும் சொன்னான்.

0-14 பகவத் கீதை இரண்டாம் ஆறு அத்யாயங்கள்

மத்4யமே ப4க3வத் தத்வ யாத2ாத்ம்ய அவாப்தி ஸித்3த4யே ।
ஜ்ஞாந கர்மாபி4 நிர்வர்த்யோ ப4க்தியோக3: ப்ரகீர்தித: ।।
ஆளவந்தார், கீதார்த்த ஸங்க்ரஹம் 3

நடுவில் உள்ள ஆறு அத்யாயங்களில் பகவானுடைய உண்மை ஸ்வரூபத்தையும், அதனை அறிய ஞானம், கர்மம் இவற்றால் உண்டாகும் மோக்ஷத்திற்கு நேர் காரணமான பக்தியோகத்தை அதன் அங்கங்கள், விஷயம், பலன் இவற்றுடன் தெளிவாக விவரித்தான்

பக்தியோகமே பகவானை அடைய ஸாக்ஷாத் உபாயம். எம்பெருமானை உள்ளபடியே அறியவும், காணவும், அநுபவிக்கவும் பக்தியே உயர்ந்த ஸாதனம். முதல் பாகத்தில் விவரித்தபடி கர்ம, ஞான யோகங்களைச் செய்து தன் ஆத்மாவை அறிந்து கொள்வதே பக்தி யோகத்திற்கு தகுதியாகும்.

பகவான் இயற்கையிலே (ஸ்வாபாவிகமாய்) எல்லாவிதமானா மங்கள குணங்கள் நிறைந்தவன். ஹேய குணங்கள் ஒன்றும் இல்லாது இருப்பவன். அவனே ச்ரிய:பதி.

0-15 பகவத் கீதை கடைசி ஆறு அத்யாயங்கள்

ப்ரத4ாந புருஷ வ்யக்த ஸர்வேஶ்வர விவேசநம் ।
கர்மதீ4ர் ப4க்திரித்யாதி3: பூர்வ ஶேஷோந்தி மோதி3த:

கடைசி ஆறு அத்யாயங்களில் முக்குணங்களால் ஆன ப்ரகிருதி, சேதனன், காரண, காரிய நிலை, ஈஶ்வரன் என்பதில் உள்ள சர்ச்சைகளை (argument, debate) தெளிவாக, தத்வத்ரயத்தின் மூலம் விவரித்தான். மேலும் கர்ம, ஞான, பக்தி யோகத்தில் சொல்ல கீழே விட்டுபோன விஷயங்களையும் இறுதியாக அறிவித்தான்.

0-16 அருச்சுனனின் கலக்கம்

அர்ஜீனன் அறிவுடையவன். பல சாஸ்திரங்களை ஆசாரியர்களிடமிருந்து முறைப்படி உபதேசம் கேட்டவன். அவை எல்லாம் சாதாரண சாஸ்திரம். அத்யாத்ம (ஆத்மாவின் உண்மை நிலை) சாஸ்திரத்தை கண்ணனிடம் கேட்டான். பகவான்தான் எல்லாவற்றிற்கும் காரணம். சேதனன் அவனை அடைந்து அவனுக்கு கைங்கர்யம் செய்வதே உயர்ந்த செல்வம். நித்யமான கைங்கர்யம் அடைய, இந்த ஸம்ஸாரத்திலிருந்து விலக வேண்டும் என்பதை புரிந்து கொண்டான்.

கண்ணனின் உபதேசம் கேட்ட விஜயனுக்கு மோக்ஷத்தை பெற வேண்டும் என்ற துடிப்பு வந்து விட்டது. கர்ம, ஞான,

பக்தியோகம் கடுமையானது. பல அங்கங்கள் உடையது. செய்வதில் பல தடைகள் ஏற்படும், காலத்தினால் நீண்டது. ஏராளமான ஞானமும், சக்தியும் அவசியம். தன் வாழ்நாளோ மிகக் குறுகியது என்பதை உணர்ந்து மோக்ஷத்திற்கு உபாயமான பக்தி யோகத்தை தான் செய்ய இயலா நிலமை உணர்ந்து சோர்ந்தான்.

0-17 பகவான் ஒரு பொம்மலாட்டக்காரன்

பகவான் கர்ம, ஞான, பக்தி யோகங்களை விவரமாக பதினெழு அத்யாயங்களில் அருளிய பிறகு, பதினெட்டாம் அத்யாயத்தில் ஸர்வமும் நானே என்கிறான்.

ஈஶ்வர: ஸர்வபூ4தானாம் ஹ்ருத்3தேஶே அர்ஜுந திஷ்ட2தி ।
ப்4ராமயந் ஸர்வபூ4 தானி யந்த்ரா ரூட4ானி மாயயா ।।
பகவத் கீதை 18-61

- அர்ஜுந - ஹே அர்ஜுநநே
- யந்த்ர ஆரூட4ானி ஸர்வ பூ4தானி - உடல் என்ற இயந்திரத்தில் ஏற்றப் பட்ட எல்லா பிராணிகளையும்
- ஈஶ்வர மாயயா ப்4ராமயந் - எல்லோரையும் நியமிக்கும் அந்த பகவான் அவரவர் கர்மாவின்படி ஏற்ற தாழ்வை உண்டாக்கி
- ஸர்வபூ4தானாம் ஹ்ருத்3தேஶே திஷ்டதி - எல்லாப் பிராணிகளுடைய (அறிவிற்கு மூலஸ்தானமான) இதயத்தில் நிலைத்திருக்கிறான்.

கிருஷ்ணன் சொல்லுகிறான், "அர்ஜுநா, உடல் என்பது ஒரு இயந்திரம் (machine). அதற்குள் ஒவ்வொரு உயிரையும் அவரவர் கர்ம வினைக்கு (sins and merits) ஏற்றவாறு உள்ளே நுழைத்து, ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுடைய ப்ரகிருதி என்னும் மாயையால் கட்டி, ஆட்டிப் படைக்கிறேன். நானும் அதனுள் உறைந்து நிற்கிறேன்," என்றான்.

ஒரு பொம்மலாட்டக்காரன் (Performer in a puppet show) எப்படி தன் கைகொண்டு, நூலினால் அந்த பொம்மையை கட்டி வைத்து ஆட்டுகிறானோ அதுபோலே எல்லாருடைய இதயத்திலும் பகவான் உறைந்து பிரக்ருதி என்னும் மாயையினால் ஆட்டிப்படைக்கிறான்.

எங்கும் உள்ள பகவானை இதயத்தில் இருப்பதாக சொன்னது - **ஒருவன் காரியம் செய்வதோ, செய்யாமல் இருப்பதோ அறிவினால்தான்.** அந்த அறிவு உண்டாக பாங்கான இடம் இதயமே என்ற கருத்தினால்.

0-18 ப்ரகிருதி என்னும் மாயை விலக காரணம்

கண்ணன் சொல்கிறான், "அருச்சுனா, கீழே சொன்னேனே அந்த பிரகிருதி கட்டிலிருந்து விடுதலை அடையும் உபாயத்தை சொல்கிறேன், கேள்."

> தமேவ ஶரணம் க3ச்ச2 ஸர்வப4ாவேந ப4ாரத ।
> தத் ப்ரஸாத3ாத் பராம் ஶாந்திம் ஸ்த2ாநம் ப்ராப்யஸி ஶாஶ்வதம் ।।
> பகவத் கீதை 18-62

- ப4ாரத பரத குலத்தில் தோன்றியவனே
- தம் ஏவ ஸர்வப4ாவேந ஶரணம் க3ச்ச2 - அந்த அந்தர்யாமியான பகவானையே எல்லா வகைகளாலும் உபாயமாக அடைவாய்
- தத் ப்ரஸாத3ாத் - அந்த பரமாத்மாவின் அருளால்
- பராம் ஶாந்திம் ஶாஶ்வதம் ஸ்த2ாநம் ப்ராப்யஸி - கர்ம பந்தத்திலிருந்து விடுதலையும் (அநிஷ்ட நிவ்ருத்தியும்), நிலையான பரமபதத்தையும் (இஷ்ட ப்ராப்தியும்) அடைவாய்

"உன் உள்ளத்தில் உறைந்திருக்கும் அந்த உத்தமனை, வாசுதேவனை எல்லா வகையாலும் ஶரணம் என்று பற்று. அவனுடைய அருளால் எல்லாம் நிறைந்து, ஸம்ஸார பந்தத்திலிருந்து நீ விடுபடுவாய். நிலையான மோக்ஷத்தை அடைந்து ஆனந்திப்பாய்," என்றான்.

நம்மை ஸம்ஸாரத்தில் கட்டி வைப்பதில் எப்படி ஸத்ய ஸங்கல்பனோ, அதைப்போல் ஸம்ஸாரத்திலிருந்து தப்பிவிக்க ஸத்ய ஸங்கல்பன் ஆகிறான் அவன். நம் முயற்சியால் இந்த கட்டு அவிழாது. **எம்பெருமானின் காலைக் கட்டினால்தான் நம்மை கட்டியிருக்கும் ஸம்ஸாரம் விலகும்**.

தம் ஏவ என்று இங்கே சொன்னது, பகவான் எல்லோருக்கும் நியந்தாவாக (இயக்குபவனாக) இருந்தாலும், இங்கே ஆஶ்ரிதனான அர்ஜீனனுக்கு ஸௌலப்யத்தால் ஸாரதியாக நின்றான். இதனால் எம்பெருமானை பற்றுவதற்கு வேண்டிய **பரத்வ, ஸௌலப்ய** குணங்கள் சொல்லிற்று.

ஸர்வப4ாவேந என்றால் முழு மனதோடு என்று சொல்லலாம்.

ஸர்வப4ாவேந என்றால் எல்லா வகையாலும் எம்பெருமானை பற்று என்று சொல்லலாம். எம்பெருமானே ஸர்வ உறவும் என்பதால் அவனையே எஜமானராக (boss), காப்பராக (Protector), பராமரிப்பவராக (care taker), தூண்டுபவராக (catalyst) என்று எல்லா விதமாகவும்.

0-19 கண்ணனின் கடைசி பரிசை2ஷ

இப்படி கிருஷ்ணன் ஒருவாறு தன் உபதேசத்தை முடித்தான். கீதா சாஸ்திரத்தின் ஸாரமான சரம ஶ்லோகம் சொல்வதற்கு முன், அருச்சுனன் அதற்கு தகுதி உள்ளவனா என்பதை சோதிக்கிறான் (testing the eligibility of Arjuna - whether he is qualified to listen to charama sloka).

இதி தே ஜ்ஞாந மாக்3யாதம் கு3ஹ்யாத்3 கு3ஹ்யதரம் மயா ।
விம்ருஶ்யை தத3 ஶேஷேண யதே2ச்ச2ஸி தத2ா குரு ।।

பகவத் கீதை 18-63

- **இதி மயா** - இப்படி என்னால்

- **கு3ஹ்யாத்3 கு3ஹ்யதரம் ஜ்ஞாநம்** - ரஹஸ்யமான ப்ரவருத்தி தர்மமாகிற சாஸ்திரத்தைவிட ஜ்ஞாநமாய் இருக்கும் நிவ்ருத்தி தர்மம்
- **ஆக்3யாதம்** - உபதேசிக்கப்பட்டது
- **ஏதத்3 அஶேஷேண விம்ருஶ்ய** - இதை எல்லாம் நன்கு ஆராய்ந்து
- **யதா2 இச்ச2ஸி தத2ா குரு** - எப்படி விரும்புகிறாயோ அப்படியே செய்

“அர்ஜுனா, இது வயில் சிறந்த பல தர்மங்களை உனக்கு சொன்னேன். அவை எல்லாவற்றையும் நீ சிந்தித்து பார். அவைகளில் நீ எதை செய்ய விரும்புகிறாயோ, அதைச் செய்,” என்றான்.

இதைக் கேட்டதும் அருச்சுனன் மிகவும் கலங்கினான். ஏற்கனவே கண்ணனிடம் என் ஆத்மாவிற்கு எது உயர்ந்ததோ அதை நீயே நிச்சயித்து சொல் என்று ஶரணாகதி செய்தேன். இவன் இவ்வளவையும் சொல்லி என் மனதை குழப்பி, இதிலிருந்து சரியான ஒன்றை நீயே பொறுக்கி எடுத்துக் கொள் என்கிறானே என வாடினான்.

நளன் தமயந்தியிடம் விதர்ப்ப நாட்டிற்கும், கோஸல நாட்டிற்கும் போகும் வழியை காண்பித்து, நீயே உனக்கு வேண்டியதை தேர்ந்து எடுத்துக் கொள் என்கிறாற்போல் இருக்கிறதே பகவானின் இந்த பேச்சு!

கண்ணன் இதுவரை கர்ம, ஞான, பக்தியோகங்களைச் சொன்னது அருச்சுனனை சோதிப்பதற்கே. இப்போது “நீ உன் இஷ்டப்படி செய்” என்று சொன்னது கடைசி பரிக்ஷை (final test).

பஞ்சவடியில் ராமன், லக்ஷ்மணனை நோக்கி, “நீயே ஒரு நல்ல இடம் தேர்ந்து எடுத்து பர்ண சாலை அமைப்பாய்,” என்று கூறியவுடன், இளய பெருமாள் கலங்கினார். இது நாள் வரை எமக்கு அதைச் செய், இதைச் செய் என்று பகவான் ஆணையிட்டு, நான் அதைச் செய்துதான் பழக்கம். இன்றைக்கு எனக்கு சுதந்திரமாக நீயே செய் என்றதும் அது **ஸ்வரூப விருத்தம்** என உணர்ந்து கலங்கினான். அதுபோலே இங்கே அருச்சுனனும்.

0-20 கடைசி பரிக்ஷையில் அர்ஜீனனின் வெற்றி

அவனுடைய கலக்கத்தை அறிந்த கண்ணன் "அர்ஜீநா, நீ இப்போது அதிகாரத்தில் பூர்த்தி பெற்று விட்டாய். உனக்கு சாஸ்திரத்தின் உயர்ந்த பொருளை இப்போது சொல்கிறேன் என ஆரம்பிக்கிறான்.

ஸர்வ கு3ஹ்யதமம் பூ4ய: ஸ்ருணு மே பரமம் வச:
இஷ்டோஸி மே த்3ருட4மிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்.
பகவத் கீதை 18-64

- **ஸர்வ கு3ஹ்யதமம் மே பரமம் வச:** - வேதார்த்தங்களுக்கு எல்லாம் வேதார்த்தமான என்னுடைய பரம ரஹஸ்யமான வார்த்தையை
- **பூ4ய: ஸ்ருணு** - மீண்டும் கேள். ஏற்கனவே 9ம் அத்யாயத்தில் சொல்லி இருக்கிறார். பகவானை அடைய சாஸ்திரங்கள் பல வழிகளை காண்பிக்கும். ஆனால் எம்பெருமான் ஒருவனே இதுதான் சிறந்த வழி என நிச்சியித்து சொல்ல முடியும்.
- **மே த்3ருட4ம் இஷ்டோஸி** - எனக்கு பிடித்த நண்பனாய் இருக்கிறாய்
- **தத் ஹிதம் இதி வக்ஷ்யாமி தே** - எனவே உயர்ந்த நன்மை பொருட்டு (இந்த உரையை) கூறுகிறேன், உனக்கு.

குஹ்யம் என்பது கர்ம யோகம்; குஹ்யதரம் ஞான யோகம், அதைவிட உயர்ந்தது; **குஹ்யதமம் என்பது பக்தியோகம்** அது இன்னமும் உயர்ந்தது என்று படிப்படியாய் உயர்த்திக் கொண்டு போய், இனிச் சொல்லப் போகும் **ப்ரபத்தி ஸர்வ குஹ்ய தமம்,** எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தது என்றான்.

அர்ஜீனன் அறிவாளி. அதனால் எம்பெருமானிடம் சிஷ்யன், பிரபன்னன் என்றெல்லாம் சொன்னான். எம்பெருமான் சொன்னதை கிரஹிக்கும் தன்மை உடையவன். ஆனால் கண்ணன் பரம் ரஸஸ்யம் என்று சொல்வது அவனுக்கு மட்டுமில்லை. எல்லோருக்கும். நாமும் எம்பெருமானே நமக்கு துணை என்று பணிய வேண்டும். எப்படி என்பதை அடுத ஸ்லோகத்தில் சொல்கிறான்.

மந்மநா ப4வ மத்3ப4க்தோ மத்3யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே ।।
பகவத் கீதை 18-65

- **மந்மநா ப4வ மத்3ப4க்த:** - என்னையே தைல தாரை போல த்யானம் (வேதநம், உபாஸனம் எல்லாம் ஒன்றே) செய். அது கம்ஸன் போல் பயத்தால் இல்லை. சிசுபாலன் போல் த்வேஷத்தால் இல்லை. பக்தியால் எம்பெருமானை எப்பொழுதும் நினைத்திரு.

- **மாம் நமஸ்குரு (ப4வ) மத்3ப4க்த:** - என்னையே வணங்கியிரு. பகவானையே ஸதா தியானம் செய்பவன் அவனது பெருமைகளையும், கருணையும் கண்டு மனோ வாக் காயையால் அவனை நமஸ்கரிப்பான்

- **மத்3யாஜீ (ப4வ) மத்3ப4க்த:** - என்னையே பூஜை செய். பக்தி அதிகமாகி என்ன செய்வது, எம்பெருமானை எப்படி ப்ரீதி செய்வது என துடிப்பான்

- **மத்3ப4க்த:** - (இந்த மூன்றினாலும்) என்னிடம் பக்தி உடையவாய் இரு.

- **மாம் ஏவ ஏஷ்யஸி** - (இப்படி செய்தால்) என்னையே பெறுவாய். **ஏவ** சப்தம் இங்கே கால தாமதமின்றி என்பதை காட்டும். பிரம்மாவும் மோக்ஷம் போகிறார். ஆனால் பக்தியோகத்தால் பிரம்ம பதவியை அனுபவித்து பின் மோக்ஷம். மது வித்தை செய்பவர்கள் அஷ்டவசுக்களில் ஒருவராக இருந்து கடைசியாக மோக்ஷம் போய் சேருவார்கள். அதைப்போல் இல்லை இங்கே - ஆடி பாடி, அகம் கரைந்து, கண்ணீர் மல்கி பகவனிடம் போய் சேர வேண்டும் என்று துடிப்பவர்களுக்கு.

- **தே ஸத்யம் ப்ரதிஜாநே** - உனக்கு ஸத்ய வாக்கு கொடுக்கிறேன். ஏதோ உன்னை தேற்றுவதற்காக சொல்கிறேன் (not just a consolation) என நினைக்காதே. ப்ரதிக்ஞை செய்து னிறைவேற்றுகிறேன்.

- **மே ப்ரிய: அஸி** - நீ எனக்கு ப்ரியமானவன். நீ என்னிடம் அன்பாய் இருக்கும்போது உன் பிரிவை என்னால் தாங்க முடியுமா?

இது எல்லாம் சரம ஸ்லோகம் சொவதற்கு முன் பூர்வ பீடிகை (Prelude).

வேதங்கள்தாம் உயர்ந்த ப்ரமாணம் (authority, rule book). அந்த வேதத்தின் ஸாரமாய் விளங்குவது உபனிஷத்துக்கள். அந்த உபனிஷத்தின் ஸாரமே பகவத்கீதை. கிருஷ்ணன் அருச்சுனனுக்கு பகவத்கீதையில் 700க்கும் மேற்பட்ட ஸ்லோகங்களை எல்லாம் சொல்லி, கடைசியாக கீதையின் உயிர் நாடியான (quintessence) சரம ஸ்லோகத்தையும், அது விவரிக்கும் ப்ரபத்தி யோகத்தையும் (total unconditional surrender), சொல்ல ஆரம்பிக்கிறான்.

0-21 சரம ஸ்லோகம் அவதரித்தல்

ஶோகாவிஷ்டனான (எல்லையில்லாத துக்கத்தை உடைய) **அருச்சுனனை வ்யாஜமாகக் கொண்டு, கீதோபநிஷதசார்யன் தன் பரம க்ருபையாலே,**

- **ஸாங்கமாக** (எல்லா அங்கங்களுடன்)
- **ஸுகரமாய்** (செய்வதற்கு எளிதாய்),
- **ஸக்ருத் கர்த்தவ்யமாய்** (ஒரு தடவையே செய்ய வேண்டியதாய்),
- **ஸர்வாதிகாரமாய்** (எல்லோரும் தகுதியுடையவராய்),
- **ஸகல பல ஸாதநமாய்** (எல்லா பலன்களை அளிக்கும் ஒரே உபாயமாய்),
- **ஆஸீகாரியாய்** (விரைவில் பலன் அளிப்பதாய்),
- **ப்ரதிபந்த அநர்ஹமாய்** (தடை வருவதற்கு இடமின்றி)
- **ப்ரஹ்மாஸ்த்ர துல்யமான** (ஒப்பான)

சரம ஸ்லோகத்தாலே ஸகல லோக ரக்ஷார்த்தமாக (எல்லா உலகங்களின் நன்மை கருதி) **அருளிச் செய்து இவனை**

வீதஶோகனாக ஆக்குகிறான் (துக்கத்தை நீங்கயவனாய் ஆக்குகிறான்).

ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

எல்லையற்ற கருணை உடைய பகவான், அவனை வ்யாஜமாக (சாக்காக, கருவியாக) (mere instrument) கொண்டு, எல்லோரும் பின்பற்றக் கூடிய ஒரு எளிய உபாயத்தை உபதேசிக்கிறான். அதுதான் சரம ஸ்லோகத்தில் வெளியிடும் ப்ரபத்தி, ஶரணாகதி என்னும் பரம ரஹஸ்யம்.

ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ।।

பகவத் கீதை 18-66

எல்லா தர்மங்களையும் கைவிட்டு (ஏற்கனவே கைவிட்டிருக்கும் நீ) என்னையே உபாயமாக அடைவாய். நான் உன்னை எல்லாப் பாவக்களிலிருந்தும் விடுவிக்க்கிறேன். வருந்தாதே.

ப்ரபத்தி மற்ற யோகங்களைப் போல் இல்லாமல் சரணடைபவர் எப்பொழுது மோஷம் வேண்டும் என்று கேட்கிறார்களோ அப்பொழுதுதே மோக்ஷம் கிடைக்கும்படி செய்யும் உபாயம்.

0-22 பிள்ளைலோகாசாரியார் முமுக்ஷுப்படியில் விளக்கம்

கீழே சில உபாயவிஶேஷங்களை உபதேஶிக்க அவை துஶ்ஶகங்கள் என்றும், ஸ்வரூப விரோதிகள் என்றும் நினைத்து ஶோகாவிஷ்டனான அர்ஜீனனைக் குறித்து, அவனுடைய ஶோக நிவ்ருத்த்யர்த்தமாக "இனி இதுக்கு அவ்வருகில்லை" என்னும்படியாக சரமோபாயத்தை அருளிச் செய்கையாலே, சரம ஸ்லோகம் என்று இதுக்குப் பேராயிருக்கிறது.

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 185

கீழே பதினெட்டு அத்யாயங்களிலும் கண்ணன் **தன்னை அடையும் வழி கர்ம, ஞான, பக்தியோகம்** என விவரித்தான். ஆனால் அந்த உபாயங்கள் எல்லாம் உடம்பை வாட்டி, பல காலங்கள் கடைபிடித்து, இந்திரியங்களை அடக்கி செய்வது என்பது முடியாத காரியம் என உணர்ந்தான் அருச்சுனன். இந்த காரியங்கள் எல்லாம் எம்பெருமானின் சரீரமான உள்ள தன் ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு விரோதி என எண்ணினான்.

எங்கே நாம் எம்பெருமானை அடையாமல் போய் விடுவோமோ என்ற துக்கம் வாட்டியது. இப்படி கலங்கிய அருச்சுனனுக்கு, ஆத்மஸ்வரூபத்திற்கு அநுகூலமாய், இதைவிட சுலபமான உபாயம் வேறில்லை என்னும்படி, கடைசியான உபாயத்தை அருளினான். அதனால் இதற்கு சரம ஶ்லோகம் எனப் பெயர்.

0-23 பிள்ளைலோகாசாரியார் தனி சரமத்தில் விளக்கம்

- **திருமந்த்ர முகத்தாலே ஸ்வரூப ஜ்ஞாநத்தை உடையவராய்**
- **ஸ்வரூப அநுரூப புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்திலே ருசி உடையவராய்**
- **விடப்பட்ட கர்ம ஜ்ஞாந பக்தி யோகத்தை உடையவராய்**
- **ஆநுகூல்ய மாத்ரமுடையரான ஜந்துக்களைப் பார்த்து**

பரம காருணிகனான ஸர்வேஶ்வரன் தானே, பாண்டு புத்ர வ்யாஜத்தாலே சதுர்த்த உபாயத்தை வெளியிட்டது சரம ஶ்லோகம் ஆகிறது.

பிள்ளைலோகாசாரியார், தனி சரமம்

திருமந்திரத்திலே பிறந்து என்கிறபடி **தன்னையும், எம்பெருமானையும் தெரிந்து கொண்டு**, அடைய வேண்டிய **உயர்ந்த பலன், மோக்ஷம்** என்பதை தெரிந்து கொண்டு, அதற்கு **தடையான** மற்ற யோகங்களும், எம்பெருமானுக்கு உகந்த காரியங்களை செய்யாமையும் என தெளிந்து என்று அர்த்த பஞ்சகத்தில் உள்ள

நாலையும் சொல்லி ஆகி விட்டது. கடைசியாக, உயர்ந்த உபாயம் என்பதை கிருஷ்ணன் சரம ஶ்லோகத்தாலே வெளியிடுகிறான்.

0-24 சரம ஶ்லோகத்தின் அமைப்பு - தேசிகன் விளக்கம்

> இப்படி திருமந்த்ரத்திலும், த்வயத்திலும் ப்ரகாஶித்த உபாயத்துக்கு அகிஞ்சந அதிகாரித்வ (கைம்முதல் அற்ற தன்மையே தகுதியாகக் கொண்ட) நிரபேக்ஷத்வாதிகளைக் (வேறு ஒன்றையும் எதிர்பாராமை) காட்டிக் கொண்டு விதி முகத்தாலே (கட்டளையின் மூலம்) உபப்ருஹ்மணம் (தெளிவாக விளக்குதல்) பண்ணுகிறது சரம ஶ்லோகம்.
>
> இதுதான் மூன்று வாக்யமாய், பன்னிரண்டு பதமாய் இருக்கும். இப்படி ரஹஸ்யத்ரயம் உத்தரோத்தரம் (அடுத்து அடுத்து) பதங்கள் இரட்டிப்பாய் விஶதீகரணமாய் (தெளிவாக்குதல்) இருக்கும். இஶ்ஶ்லோகத்தில் ப்ரதம வாக்யம் உபாய விதாயகம் (உபாயத்தை விதிப்பது). மத்யம வாக்யம் ப்ரதிபாதகம் (பலனைக் கூறுவது). உத்தர வாக்யம் க்ருதக்ருத்வாதி (செய்ய வேண்டியத்தை செய்து முடித்தல்) தத்பரம் (முதலியவற்றைக் காட்டுவது).
>
> ஸ்வாமி தேசிகன், ஶ்ரீ ரஹஸ்ய பதவி

கீழே திருமந்திரமும், த்வயமும் ப்ரபத்தியே உயர்ந்த உபாயம் என்பதை தெளிவாக காட்டியது. இங்கே சரம ஶ்லோகம் அந்த ஶரணாகதியை நீ செய் என்று விதிப்பதாய் உள்ளது.

ஆகிஞ்சன்யனாய், அநந்ந்யகதியராய் ஸ்வதந்த்ர ப்ரபத்தி செய்தவருக்கு, வேறு ஒன்றையும் எதிர்பாராது பலனைத் தருவது ப்ரபத்தி என்ற வேத வாக்குகளை உறுதிப் படுத்துகிறது சரம ஶ்லோகம்.

இந்த சரம ஶ்லோகத்தில் மூன்று வாக்யங்கள்

1. ஸர்வத4ர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ - முன் பகுதி ஶரணாகதியை செய் என விதிக்கிறது -
2. அஹம் த்வா ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி - மத்யமம் - நடுப்பகுதி அந்த ஶரணாகதியின் பலனைக் காட்டும்
3. - மா ஶுச: - கடைசி பகுதி, சேதனன் செய்து முடிக்க வேண்டிய காரியத்தை செய்து முடித்தவானாகி (க்ருதக்ருத்யனாகி), இனி பொறுப்பு எல்லாம் நீங்கிய நிலையை காட்டுகிறது.

பன்னிரண்டு பதங்கள் - 1. ஸர்வத4ர்மாந், 2. பரித்யஜ்ய, 3. மாம், 4. ஏகம், 5. ஶரணம், 6. வ்ரஜ, 7. அஹம், 8. த்வா, 9. ஸர்வபாபேப்4யோ, 10. மோக்ஷயிஷ்யாமி, 11. மா, 12. ஶுச:

0-25 ப்ரபத்தியின் பெருமை

பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யா வா மஹாமதே ।
ப்ராப்யோஹம் நாந்யதே ப்ராப்ய: மம கைங்கர்யலிப்ஸுபி: ।।
அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை

- மஹாமதே மம கைங்கர்ய லிப்ஸுபி- புத்திமானே, என்னுடைய பணியை செய்ய ஆசை உடையவர்களால்
- பரமயா பக்த்யா ப்ரபத்யாவா - உயர்ந்த பக்தியினால், ப்ரபத்தியினால் மட்டுமே
- அஹம் ப்ராப்ய - நான் அடையத் தகுந்தவன்
- அந்யதா ந ப்ராப்ய - வேறு விதமாக அடையத் தகுந்தவன் அல்ல

மோக்ஷத்தில் எனக்கு நித்ய கைங்கர்யம் செய்ய ஆசைப்படுவர்கள் பக்தி யோகத்தையோ அல்லது ப்ரபத்தியைச் செய்தால்தான் அடைய முடியும். வேறு எந்த வழியாலும் என்னிடம் மோக்ஷம் பெற முடியாது என்று எம்பெருமானே சொல்லுகிறார்.

ஶரணம் த்வாம் ப்ரபந்நாய யே த்யாநயோக விவர்ஜிதா
தேபி ம்ருத்யும் அதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம்
ப்ரஹ்ம புராணம் 53

- **த்யாநயோக விவர்ஜிதா: யே** - த்யான யோகம் போன்றவற்றை செய்யாது கைவிட்டவர்களான, எவர்கள்
- **த்வாம் ஶரணம் ப்ரபந்நா** - உம்மிடம் ப்ரபத்தி செய்தார்களோ
- **(தேபி ம்ருத்யும் அதிக்ரம்ய** - அவர்களும் பிறப்பு/இறப்பு என்னும் ஸம்ஸாரத்தை தாண்டி
- **தத் வைஷ்ணவம் பதம் யாந்தி** - அந்த விஷ்ணுவின் இடத்தை அடைகிறார்கள்

ஒரு மனிதன் தன் தகுதியை அறியாதலால், பக்தி போன்ற வேறு உபாயங்களைச் செய்ய முற்படுகிறான். தன்னுடைய நிலையை உணர்ந்தால், தகுதியை சிறிது சிந்தித்து பார்த்தால் ப்ரபத்தி ஒன்றுதான் ஸாத்யமானது எனப் புரியும்.

அஹமஸ்ய அபராத4ாநாம் ஆலயோஅகிஞ்சநோSக3தி: ।
த்வம் ஏவ உபாய பூ4தோ மே ப4வேதி ப்ராத்த2நா மதி: ।।
ஶரணாக3திரித்யுக்தா ஸா தே3வேஸ்மிந் ப்ரயுஞ்ஜதாம் ।।
அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை 36-38

- **அஹம் அபராத4ாநாம் ஆலய** -நான் குற்றங்களுக்கு எல்லாம் இருப்பிடம்
- **அகிஞ்சந: அக3தி: அஸ்மி** - வேறு உபாயம் ஒன்றும் அறியாதவன், என்னை காத்துக் கொள்ள முடியாதவன் ஆகிறேன்
- **த்வம் ஏவ மம உபாய பூ4த: ப4வ** - நீயே எனக்கு உபாயமாக ஆக வேண்டும்
- **இதி ப்ராத்த2நா மதி: ஶரணாக3தி இதி உக்தா** - என்று இப்படி ப்ராத்தனை செய்யும் புத்தியானது ஶரணாகதி என்று அழைக்கப்படும்
- **ஸ அஸ்மிந் தே3வ ப்ரயுஞ்ஜதாம்)** - அது இந்த தேவனிடம் ஆகட்டும்
- [இப்படி செய்தால்] **(பாப்மாந: ஸர்வே)** - [தடையான] பாபங்கள் எல்லாம்
- **தத்க்ஷணாத் நஶ்யந்தி** - அந்த க்ஷணத்திலேயே நசித்து போகும்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை பாஞ்சராத்ரம் இந்த உபாயத்தை சொல்லுகிறது. "நான் குற்றங்களின் இருப்பிடம். என்னை காத்துக் கொள்ள ஒரு வழியும் இல்லாதவன். உன்னைத் தவிர வேறு கதி இல்லை. நீயே எனக்கு உபாயம் ஆவாயாக என்று பிராத்திக்கும் அறிவே ஶரணாகதி

0-26 பக்தி, ப்ரபத்திக்கு அதிகாரி

> **இத்யாதிகளிலே ப்ரபத்தியும் பக்தி போலே ப்ராப்தி விரோதிகளைக்** (மோஷ பலனுக்கு தடை) **கழிக்கவற்று என்னுமிடம் ஸித்தம். இவ்விகல்பம்** (பக்தியையோ, ப்ரபத்தியையோ உபாயமாக சொன்னது) **ஸகிஞ்சனன்** (செய்ய முடிந்தவன்), **அகிஞ்சனன்** (செய்ய இயலாதவன்) **என்றாதல், விளம்பசஹமன்** (கால தாமதத்தை பொறுப்பவன்), **விளம்பாசஹமன்** (கால தாமதத்தை பொறுக்காதவன்) **என்றதால் அதிகாரி விஶேஷத்தைப் பற்றி இருக்கிறது.**
>
> ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

ப்ரபத்தியும், பக்தி யோகத்தைப்போல, பலனுக்கு தடையாய் உள்ள கர்மாக்களை விலக்கி மோக்ஷத்தை அளிக்கும் என்கிறது சாஸ்திரம். பக்தியினாலோ இல்லை, ப்ரபத்தியினாலோ மோக்ஷத்தை அடைய முடியும். இது **விகல்பம்** (இந்த இரண்டினுள், ஒன்றாலே பலன் பெற முடியும்).

செய்பவனின் தகுதியினால் இந்த இரண்டு வழிகளும் வேறே. சக்தி உடையவன், கால தாமதத்தை பொறுப்பவன் பக்தியோகத்தை செய்கிறான். அதில் தகுதியற்றவன் ப்ரபத்தியை செய்கிறான்.

0-27 ப்ரபத்திக்கு அதிகாரி - மற்றதில் தகுதி இல்லாமை

விஶ்வாஸாதி தாரதம்யத்தாலே அதிகாரி பேதம் சொல்லுவார்க்கு இது வ்யவஸ்தித (தகுதியின் வரையறைப் பற்றியே இரண்டினுள் ஒன்றைச் செய்தல்) **விஷயமாம்.**

ஆன பின்பு சிலர் துல்ய விகல்பம் (இரண்டினுள் ஒன்றைச் செய்தல்) **என்றதற்கும் உபாய ஸ்வரூபம் லகுவேயாகிலும் பலத்தில் குறையில்லை என்கையிலே தாத்பர்யம்.**

ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

பக்தி இல்லை ப்ரபத்தி என்ற இரண்டு உபாயங்களில் ஏதாவது ஒன்றைச் செய்து (**விகல்பம்**) மோக்ஷம் அடையலாம் என்பதில் சிலர் வேறு பொருள் சொல்லுகின்றனர்.

நம்பிக்கை அதிகம் உடையவன் ப்ரபத்தி செய்கிறான். நம்பிக்கை கொஞ்சம் குறைந்தவன் பக்தியோகம் செய்கிறான் என்று ஒரு வாதம். அது தப்பு.

ஆணாக பிறந்த மனிதனை எடுத்துக் கொள்வோம். அவனுக்கு நம்பிக்கை அதிகம் இருந்தால் ப்ரபத்தி யோகம் செய்கிறான். குறைந்தால் பக்தி யோகம் செய்கிறான் என்று வரும். அப்போது பெண்களுக்கு என்ன வழி?

நம்பிக்கையினால் இந்த பிரிவு ஏற்படவில்லை. நாலாம் வர்ணத்தாருக்கும், பெண்களுக்கும் பக்தி யோகத்தில் தகுதி இல்லை என்றது சாஸ்திரம். தகுதியினால்தான் இந்த பிரிவு.

(TICE - Time, Intelligence, Caste, Energy) கால தாமத பொறுமை, ஞானம், ஜாதி வரை முறை, சக்தி இவற்றில் தகுதி உடையவன் பக்திக்கு அதிகாரி. இவற்றில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அவன் ப்ரபத்திக்கு அதிகாரி.

சிலர் பக்தி பெரியது (giant). ப்ரபத்தி சிறியது (tiny) என்றனர். ப்ரபத்திக்கு அருகதை என்று சொல்லும் தகுதி (eligibility criteria, qualification) ஒன்று மட்டும்தான் மிகச் சிறியது. ஒன்றும் அவசியமில்லை. ஆனால் பலனில் இரண்டும் ஒன்றே.

0-28 பக்தி யோகம் மூடர்களுக்கே என்பது தவறு

நரஸ்ய புத்தி தௌர்பல்யாத் உபாயந்தரம் இஷ்யதே
லக்ஷ்மீ தந்த்ரம் 28-17

என்ற இடத்தில் துர்ப்பல புத்தியானவனை (குறைந்த அறிவு உடையவன்) **பக்தி யோகத்திற்கு அதிகாரி என்கிறபடி அன்று. அகிஞ்சனாயிருக்கச் செய்தே ஸ்வதந்த்ர ப்ரபத்தியில்** (மோக்ஷத்திற்கு நேர் வழியான ப்ரபத்தியில்) **விஶ்வாஸ மாந்ய்யத்தாலே** (நம்பிக்கை குறைவாலே) **பாலன் சந்திரனைப் பிடிக்க கை நீட்டுமாப் போலே தனக்கு எட்டாத நிலத்திலே ஏற ஆசைப்படுபவனை உபாலம்பித்தபடி** (பழித்து கூறியபடி)

இங்ஙனம் அல்லாதபோது அநேக ஶாஸ்த்ரங்களுக்கும், க்ருத்ஸ்நவித்துக்களாய் (ஸர்வஜ்ஞர்) **ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கும் உபதேஷ்ட்டாக்களாய் பக்தி யோக நிஷ்டராய் போருகிற பரமயோகிகளுடைய நிலைக்கு விருத்தமாம்.**

ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

- **நரஸ்ய புத்தி தௌர்பல்யாத் -** மனிதனுடைய விஶ்வாசத்தின் குறைவால்
- **உபாயந்தரம் இஷ்யதே -** வேறு உபாயம் விரும்பப் படுகிறது

இதைக் கொண்டு சில பேர் அறிவு குறைந்தவர்கள்தாம் பக்தி யோகம் செய்வார்கள் என்றனர். இது தவறு. எல்லா சாஸ்திரங்களும் ஞானிகளே பக்தியோகம் செய்ய முடியும் என்றது.

மஹரிஷிகள் எல்லோரும் பக்தி யோகத்தை செய்கின்றனர். அவர்கள் அறிவில்லாதவர்களா? தவிர, நமக்கு ப்ரபத்தியைப் பற்றி சொல்லிக் கொடுத்தவர்கள் அவர்கள்தாமே!

பக்தி யோகத்திற்கு தகுதி அற்ற ஒருவன், ப்ரபத்தியைப் பற்றி தெரிந்தும், ப்ரபத்தியில் நம்பிக்கை ஏற்படாது, மோக்ஷ ஆசையால் பக்தி யோகம் செய்வது குழந்தை கை நீட்டி நிலாவைப் பிடிக்க முயலுவது போலே என்றார்.

அதாவது எளியதான ப்ரபத்திக்கு தகுதி உடையவன் எதற்கு மற்ற உபாயங்களை நாட வேண்டும்? அப்படி செய்பவன்தான் அறிவில்லாதவன்.

0-29 ப்ரபத்தி யாருக்கு?

> **ஆகையால் மஹாவிஶ்வாஸம் உடையவனான அவன் ஆகிஞ்சந்யாதி யுக்தனாய்க் கொண்டு** (இயலா நிலமை உடையவனாய்) **ப்ரபத்திக்கு அதிகாரி ஆகிறான். இவனுக்கு திருமந்திரத்திலும், த்வயத்திலும் ப்ரகாஶித்த உபாய விஶேஷம் இங்கே விதிக்கப்படுகிறது. இதில் மாம்** (என்னை), **ஏகம்** (ஒருவனையே), **ஶரணம்** (உபாயமாக), **அஹம்** (நான்), **மோக்ஷயிஷ்யாமி** (விடுவிப்பேன்), **என்ற பதங்களிலே ப்ரதாநமான ஸித்தோபாயமும்** (ஏற்கனவே உள்ள உபாயம்) [Existing means] **ப்ரகாஶிதமாயிற்று.**
>
> ஸ்வாமி தேசிகன், ஶ்ரீஸார ஸாரம்

அப்படி ஆனால், ப்ரபத்திக்கு எவன் தகுதியானவன்? (NICE)

1. **வேறு தெய்வத்தை நாடாதவன்** (No other gods)
2. **பக்தியோகம் செய்ய இயலாதவன்** (Ineligibility in other yoga)
3. **மஹாவிச்வாசம் உடையவன்** (Condfidence - Extreme Trust)
4. **மோக்ஷத்திலேயே ஆசை உடையவன்** (Excitment for Moksham)

இவனே ப்ரபத்திக்கு தகுதி உடையவன். திருமந்திரத்திலும், த்வயத்திலும் சொன்ன ப்ரபத்தி என்கிற உபாயம் இவனுக்கு சரம ஶ்லோகத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

0-30 சரம ஶ்லோகம் – சுருக்கமான கருத்து

திருமந்த்ரத்திலும், த்வயத்திலும் ப்ரகாசித்த உபாய விஶேஷத்தை (ப்ரபத்தியை) **அதிகாராதிகளுடனே கூட விதிமுகத்தாலே** (கட்டளையாலே) **வெளியிடுகிறது சரம ஸ்லோகம். இத்தால் ஸபரிகரமாக** (அங்கங்களுடன் கூடிய) **ஸுதுஷ்கரமாய்ச்** (செய்வதற்கு கடினமாய்) **சிரகால ஸாத்யமான** (நெடுங்காலம் செய்ய வேண்டியதாய்) **உபாயந்தரம்** (வேறு உபாயம் - பக்தி யோகம்) **அல்பஜ்ஞனாய், அல்ப ஶக்தியாய், அல்ப காலாவர்த்தியான தனக்குத் தலைக்கட்ட அரிதென்று ஶோகித்தவனுக்கு ஸாங்கமாக ஸுகரமாய்** (செய்வதற்கு எளிதாய்) **ஸக்ருத் கர்த்தவ்யமான உபாய விஶேஷத்தை உபதேசித்து நீ ஶோகிக்க வேண்டாம் என்கிறான்.**

ஸ்வாமி தேசிகன், ஶ்ரீரஹஸ்யத்ரய ஸாரம்

திருமந்திரமும், த்வயமும் ப்ரபத்தியே சிறந்த உபாயம் என காட்டின. சரம ஶ்லோகமும் அதையையே சொல்கிறது. இது விரிவாகவும், ப்ரபத்திக்கு வேண்டிய தகுதியும், இதைச் செய் என்ற கட்டளையாகவும் சொல்கிறது.

மற்றொரு பற்றின்றி வந்து அடைந்தார்க்கு எல்லாம்
குற்றம் அறியாத கோவலனார் - முற்றும்
வினைவிடுத்து விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார்
நினைவு உடைத்தாய் நீ மனமே நில்லு

அமிர்தரஞ்சனி 36

சேதனன் எவ்வளவு பாபமான காரியம் செய்து இருந்தாலும், வேறு கதியில்லை என்று எம்பெருமானை சரண் அடைந்தால், பகவான் அவனது குற்றங்களை காண மாட்டான். இப்படியான ஸர்வேச்வரன், நம் கர்மாக்கள அத்தனையும் ஒழித்து, நித்யர்களோடு நம்மை சேர்த்து வைக்க விரைந்து வருகிறான். மனமே, இதை நினைத்து நீ கவலைப் படாதே.

0-31 சரம ஶ்லோகத்தால் மனம் தெளிவுறுதல்

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இரண்டு ஸ்லோகங்களால் எம்பெருமான் கண்ணனின் கீதோபதேசத்தால், முக்யமாக சரம ஸ்லோகத்தால் சேதனன் மனம் தெளிவதை விளக்கி உள்ளார்.

ய உபநிஷத3ா மந்தே யஸ்மாத3 நந்த த3யாம்புதே4:
த்ருடித ஜநதா ஶோக: ஶ்லோக: ஸ்வயம் ஸமஜாயத ।
தமிஹ விதி4நா க்ருஷ்ணம் த4ர்மம் பரபத்3ய ஸநாதநம்
ஶமித து3ரிதா: ஶங்கா தங்கத்யஜ: ஸுக2மாஸ்மஹே ।।
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் 66

- **ய உபநிஷத3ாம் அந்தே** - எந்த கிருஷ்ணன் உபனிஷத்துக்களின் அருகே இருக்கிறானோ
- **அநந்த தயாம்புதே: யஸ்மாத்** - எல்லையிலா கருணைக் கடலான எந்த எம்பெருமானிடமிருந்து
- **த்ருடித ஜநதா ஶோக: ஶ்லோக: ஸ்வயம் ஸமஜாயத** - மக்களின் துயரத்தை நீக்கிய சரம ஸ்லோகம் தானே தோன்றியதோ
- **ஸநாதநம் த4ர்மம் க்ருஷ்ணம்**- (அந்த) ஸித்தோபாயமான கிருஷ்ணனை
- **தமிஹ விதி4நா பரபத்3ய ஶமித து3ரிதா:** - இந்த பிறவியில் முறையாக சரணம் அடைந்து, பாபங்கள் நீங்கப் பெற்று
- **ஶங்க அதங்க த்யஜ: ஸுக2ம் ஆஸ்மஹே** - சந்தேஹம், பயம் இவற்றை விட்டு இன்பத்துடன் இருக்கிறோம்

து3ர்விஜ்ஞாநைர் நியமக3ஹநைர் தூ3ர விஶ்ராந்தி தே3ஶை:
ப3ாலாநர்ஹைர் ப3ஹுபி4ரயநை: ஶோசதாம் ந: ஸுபந்த2ா: ।
நிஷ்ப்ரத்யூஹம் நிஜபத3மஸௌ நேதுகாம: ஸ்வபூ4ம்நா
ஸத்பாதே2யம் கிமபி விதி3தே4 ஸாரதி2: ஸர்வநேதா ।।
ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் 67

- **து3ர்விஜ்ஞாநைர்** - அறிவதற்கு கஷ்டமான
- **நியமக3ஹநைர்** - நியமங்கள் அதிகமாய் இருப்பாதாலும்

- தூ3ர விஶ்ராந்தி தே3ஶ: - காலம் கடந்து பலன் தருவதாயும்
- ப3லாநர்ஹர் - ஞானம், சக்தி போன்றவை இல்லாதலாலும்
- ப3ஹூபி4ரயநை: ஶோசதாம் ந: - பல உபாயங்களால் வருந்தி நிற்கும் நமக்கு
- ஸுபந்த2ா: - மேலான உபாயமாய்
- ஸர்வநேதா - அனைத்தையும் நியமிப்பவனாய்,
- அஸௌ ஸாரதி2: - அருச்சுனனுக்கு தேரோட்டியாய்
- ஸ்வபூ4ம்நா - தன் பெருமையால்
- நிஷ்ப்ரத்யூஹம் நிஜபத3ம் நேதுகாம: - தடை இல்லாது தன்னுடைய இடத்திற்கு அழைத்து செல்ல விரும்பி
- கிமபி ஸத்பாதே2யம் விதி3தே4 - உயர்ந்த ப்ரபத்தி என்னும் சிறந்த வழி உணவை, சரம ஸ்லோகத்தில் விதித்தான்

0-32 தேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தில் அருளியது

ஒண்டொடியாள் திருமகளும் தானும் ஆகி *
ஒரு நினைவால் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய *
வண் துவரை நகர் வாழ் வசுதேவர்க்கு ஆய் *
மன்னவர்க்கு தேர்ப் பாகனாய் நின்ற /
தண் துளவ மலர்மார்பன் தானே சொன்ன *
தனித்தருமம் தானே எமக்காய்த் * தன்னை என்றும்
கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற *
கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 46

- வண் துவரை நகர் வாழ் வசுதேவர்க்கு ஆய் மன்னவர்க்கு தேர்ப்பாகனாகி நின்ற - சிறந்த துவாரகா நகரம் செழிக்கும்படி வசுதேவர்க்கு மகனாய் அவதரித்து, அருச்சுனனுக்கு தேரோட்டியாய் நின்றவனும்
- தண் துளவ மலர்மார்பன் ஒண்டொடியாள் திருமகளும் தானும் ஆகி – குளிர்ந்த துளஸி மாலைகளை மார்பில் அணிந்த கிருஷ்ணன் அழகிய வளையல்களை அணிந்த லக்ஷ்மியும், தானும் ஒன்று கூடி

- **ஒரு நினைவால் ஈன்ற உயிர்கள் எல்லாம் உய்ய** - ஒரே விதமான ஸங்கல்பத்தால், ஸ்ருஷ்டித்த ஜீவாத்மாக்கள் எல்லாம் நல்ல கதி அடைய வேண்டி
- **தானே சொன்ன தனித்தருமம் எமக்குத் தான் ஆய்** - தானே சரம ஸ்லோகத்தில் சொன்ன நிகரற்ற உபாயமாக, அகிஞ்சனர்களான நமக்கு தானே நின்று (பரந்யாஸம் செய்ய தானே உபாயமாய் நின்று)
- **தன்னை என்றும் கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற** - உபய விபூதி நாதனாகிய தன்னை எல்லாக் காலத்திலும், எல்லோரும் பார்த்து மகிழ்ந்து, அவன் திருவடிகளைத் தலையில் சூடி கைங்கர்யம் செய்வதற்கு தடையான
- **கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே** - (முக்குணங்களால் ஆகிய ப்ரகிருதியைக் கொண்டு தத்வ ஞானத்தை மறைக்கும்) கண் பொத்தும் விளையாட்டை போக்குகிறான்.

0-33 சரமசுலோகச்சுருக்கில் தேசிகன் அருளியது

**கல்லார் அகலும் * கருமமும் ஞானமும் காதலும் *
மற்று எல்லா நிலைகளுக்கு ஏற்ப * விதித்த கிரிசைகளும் /
வல்லார் முயல்க * வலி இழந்தார் எந்தனைத் தொழுக என்று *
எல்லாத் தருமம் உரைத்தவன் * இன்னடி சேர்ந்தனமே**
ஸ்வாமி தேசிகன், சரமசுலோகச்சுருக்கு 1

- **கல்லார் அகலும் கருமமும் ஞானமும் காதலும்** = விசேஷமான ஞானம் இல்லாதவர்கள் நம்மால் செய்ய முடியாது என விலக்குகின்ற கர்ம, ஞான, பக்தி யோகங்களையும்
- **மற்று எல்லா நிலைகளுக்கு ஏற்ப விதித்த கிரிசைகளும்** = மேலும் எல்லா யோகங்களுக்கும் பொருத்தமாக, கீதையில் விதிக்கப்பட்ட கர்மாக்களும்
- **வல்லார் முயல்க, வலி இழந்தார் எந்தனைத் தொழுக என்று** = சக்தி உடையவர்கள் செய்வீர்கள், இல்லாதவர்கள் அந்த இடத்தில் என்னை வைத்து வணங்குவீர் என்று

- **எல்லாத் தருமம் உரைத்தவன் இன்னடி சேர்ந்தனமே** = ஸகல வேதங்களின் ஸாரத்தை கீதையின் மூலம் உபதேசித்த கண்ணனுடைய இனிமையான திருவடிகளைப் பற்றினோம்

0-34 கீதையின் பாதை பாடல்கள்

கீதையின் பாதை என்று எழுதிய பகவத் கீதையின் பாடல்களில் முதல் இரண்டு பாடல்களிலும் இதையே சொன்னோம்.

ஆவி அறிவாலும், நீதி முறையாலும் *
பாழும் உலகில் பற்றிலா குணத்தாலும் *
ஆகி வரும் பத்தியால் மகிழ்ந்து *
உணர்ந்து அவர் தேடி அடைவதும் /
ஒதுமறையின் முதலாய் காக்குமிறையாய் *
தொல்வினை தீர்க்கும் பெருங்காரணமே *
தீதிலா பாகனாய் தேருர்ந்த நாதனாய்
கீதையில் காண்பதும் திரு நாரணனே
கீதையின் பாதை 1

பகவத்கீதையில் வர்ணிப்பவன் ஸ்ரீமந் நாரயணனே.

பக்தி யோகத்தை ஸாதிக்கக் கூடியவர்கள் -

1. **ஆவி அறிவாலும்** - ஜீவாத்மா நாரயணனுக்கே அடிமை என்கிற ஆத்ம ஞானத்தை கொண்டவர். (கர்ம யோகம்)
2. **நீதி முறையாலும்** - அவரவர் குலத்திற்கேற்ப சொன்ன தர்ம சாஸ்த்ர விதிகளின்படி நடப்பவர். (ஞான யோகம்)
3. **பற்றிலா குணத்தாலும்** - இருள் தருமா ஞாலத்தில் உலக இன்பத்தில் தொடர்பு இல்லாது விளங்கும் வைராக்கிய நிலை உடையவர் (வைராக்ய நிலை)

உயர்ந்த புருஷார்த்தமாகிய பகவானை அடைவதற்கு உள்ள நினைவை கொடுக்கக் கூடியது பக்தி யோகம்.

வேத வேதாந்தங்கள் பர ப்ரம்மம் என்று கொண்டாடுவது நாராயணனே.. அவனே ஸர்வ காரணன், ஸர்வ ரக்ஷகன், ஸர்வ புருஷார்த்த பூதன், ஸர்வ பாபமோசகன். பார்த்தனுக்கு தேரில் அமர்ந்து ஸாரதியாய் தீது சூது இல்லாமல் கர்ம, ஜ்ஞான, பக்தி, ப்ரபத்தி யோகங்களைப் பற்றி விரிவாக விளக்கினான். அந்த கீதா சாஸ்த்ரத்தில் புகழப்படுபவனும் ஸ்ரீமந் நாராயணனே.

களிப்புடன் களத்தில் வாளுருவிய
உறவைக் கண்டு மனமிரங்கி
சலிப்புடன் அறத்தில் சுருண்டு
வெறுப்புடன் அவன் தயங்கி
தனிப்படை திருநாரணன் தாளை
விருப்புடன் அடைய தலையிட்டு
வெளிப்படை மறையை விளக்கினனே
வித்தகன் அவ்விசயனை முன்னிட்டு
கீதையின் பாதை - 2

அன்று குருஷேத்ரம் என்கிற யுத்த களத்தில் மிக்க சந்தோஷத்துடன் போர் செய்ய தயாராகி நிற்கும் தன்னுடைய உறவினர்களையும், நண்பர்களையும் கண்டு இரக்கம் கொண்டான் அருச்சுனன். க்ஷத்ரியனுக்கு உரிய கடமையான யுத்தத்தில் சலிப்படைந்து,, தர்மத்தில் குறைந்து, போர் செய்ய இயலாத நிலையில் தான் இருப்பதை நினைத்து வெறுத்து, பயந்து, மனத்தில் பொங்கி எழுந்தான் பார்த்தன்.

ஆயுதம் ஏந்தாமல் தனியாக நிற்கும் தான் வேண்டுமா? இல்லை தன்னுடைய சைன்யம், ஆயுதங்கள் அனைத்தும் வேண்டுமா? என்று கேட்டபோது "கிருஷ்ணா நீ ஒருவன் மட்டுமே போதும்", என்று வேண்டிய விஜயன் பிராத்தனைக்கு இணங்கி தனிப்படையாய் தான் ஒருவனாய் நின்ற கண்ணன் என்று கூறும் மந் நாராயணனின் திருப்பாதங்களை தஞ்சம் என்று தன் தலை வைத்து விருப்பத்துடன் அடைந்தான் விஜயன்.

அந்த அருச்சுனனை முன்னிட்டு, அவனை ஒரு சாக்காகக் கொண்டு **"பாரதமோ பஞ்சமோ வேதா"** என்ற வாக்கிற்கேற்ப வேதத்தின் விழுப்பொருள் எல்லாவற்றையும் உலகில் உள்ள மக்கள் அனைவரும் அறிந்து உஜ்ஜீவிக்க

வேண்டும் என்ற பரந்த நோக்கத்தில், மஹா பாரதத்தில் ஞான காண்டமாய் விளங்கும் கீதா சாஸ்த்ரம் என்பதை சொல்ல ஆரம்பித்தான், அதிசய செயல்களைச் செய்யும் கிருஷ்ணன்.

0-35 சரம ஸ்லோகம் பொருள் – சுருக்கம்

- **ஸர்வத4ர்மாந்** - எல்லா தர்மங்களையும் கீழ்ச் சொன்ன ஸபரிகரங்களான எல்லா உபாயங்களையும்
- **பரித்யஜ்ய** - ருசி, வாஸனைகளோடு விட்டு
- **மாம்** - உன் கார்யத்திலே அதிகரித்துக் கொண்டு நிற்கிற என்னை
- **ஏகம்** - ஒருவனையுமே
- **ஶரணம்** - உபாயமாக
- **வ்ரஜ** - அத்யவஸி
- **அஹம்** - ஸர்வ சக்தியான நான்
- **த்வா** - என்னை ஒழிந்த உபாய உபேயங்களை விட்டிருக்கிற உன்னை
- **ஸர்வபாபேப்4யோ** - என்னைக் கிட்டுகைக்கு விரோதியாய் இருந்துள்ளவை எல்லாவற்றிலும் நின்று
- **மோக்ஷயிஷ்யாமி** - விடுவிக்கக் கடவேன்
- **மா ஶுச:** - நீ சோகியாதே கொள்

  பிள்ளைலோகாசாரியார், யாத்ருச்சிக படி

0-36 இறுதியின் சுருதி

பத்து பாசுரங்களால் சரம ஸ்லோகத்தின் பத்து பாகத்திற்கும் **1. ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, 2. மாம், 3. ஏகம், 4. ஶரணம், 5. வ்ரஜ:, 6. அஹம், 7. த்வா, 8. ஸர்வ பாபேப்யோ, 9. மோக்ஷயிஷ்யாமி, 10. மாசுச:** விளக்கம் சொல்லப்படுள்ளது. பதினொன்றாவதாக, கடைசி பாசுரம் ப்ரபத்தியின்

பெருமையை பேசி பலனைக் கூறி முடிக்கிறது, இறுதியின் சுருதி என்னும் தலைப்பில் இந்த பாடல்கள்.

1 - ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய

இயலா நிலையால் மனமிகழ்ந்து *
அத்தால் மற்றை நாடாது *
முயலா நெறியை முறித்து *
நெஞ்சம் வேறங்கம் தேடாது *
மலையாது மற்று பற்றற்று *
கலவாது வழிநின்று கலங்காது *
அழியாது ஆசிரியன் இயம்பினனே *
இகழாது மறையென இவ்வாறு

இயலா நிலையால்	= உபாயம் ஒன்றும் அனுஷ்டிக்க முடியாத நிலையால்
மனம் இகழ்ந்து	= மனம் வருத்தப்பட்டு
அத்தால்	= அதனால்
முயலா நெறியை	= நிறைவேற்ற முடியாத மற்ற உபாயங்களை
முறித்து	= எல்லாம் விட்டு ஒழித்து
நெஞ்சம் மலையாது	= மனம் நிலை குலையாமல்
மற்றை நாடாது	= வேறு உபாயங்களை பின்பற்றாது
வேறங்கம்	= ப்ரபத்திக்கு தேவையான அங்கம் தவிர வேறு ஒன்று
தேடாது	= அவசியம் என்று தேடிப் பார்க்காமல்
மற்று பற்றற்று	= உலக விஷயங்களில் உள்ள பற்றை நீக்கி
கலவாது	= வேறு ஒரு உபாயத்தை இத்துடன் கலக்காமல்
கலங்காது	= மனம் பயப்படாமல், மஹா விசுவாசத்துடன்
வழிநின்று	= ப்ரபத்தி என்னும் உபாயம் வழி நடப்பாய் என்று
இகழாது	= நம்மிடம் உள்ள குறைகளைக் கண்டு வெறுக்காமல்
இவ்வாறு	= இவ்விதம்
அழியாது	= என்றும் நிலைத்து நிற்கும் கருத்துக்களை
இயம்பினனே	= உபதேசித்தான்
மறை ஆசிரியன்	= கீதாசாரியனான கிருஷ்ணன்

1.1 முன்னுரை

சரம ஶ்லோகம் என்பது ஶரணாகதியை சொல்லுகிறது. ப்ரபத்தியை இப்படி அனுஷ்டிக்க வேண்டும் என விதிக்கிறது. மோக்ஷ பலனுக்காக பகவானை அடைவதைப் பற்றி விவரிக்கிறது.

அந்த சரம ஶ்லோகத்திலே **ஸர்வதர்மாந் பரித்யஜ்ய** என்ற முதல் இரண்டு பதங்களால் **"எல்லா விதமான தர்மங்களையும் அறவே விட்டு ஒழி"** என்கிறான் கிருஷ்ணன். இது சரியா?

வேதங்கள் எல்லாம் பரக்க தர்மங்களை இப்படி செய், அப்படி செய் என்று விவரிக்கின்றன. கண்ணனே கர்மாக்களை பற்றியும் அவற்றின் முக்யத்வத்தையும் (preached the importance of the karmas) கீழே சொல்லிவிட்டு இங்கே தர்மங்களை விடு என்றால் அது ஒன்றுக்கு ஒன்று முரணாக (conflicting ideaologies) அல்லவா இருக்கிறது?

எல்லா கர்மாக்களையும் விட்டு என்னை ஒருவனையே அடை என்றால், கண்ணன், **யாரிடம் சொல்கிறான்? எதை விடச் சொல்கிறான்** என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் **ஸர்வ தர்மாந்** என்பதற்கு சரியான அர்த்தம் விளங்கும்.

1.2 சுருக்கமான அர்த்தம்

முதலில் சுருக்கமான அர்த்ததை காண்போம். எல்லா தர்மங்களையும் விடு என்று கண்ணன் சொல்லி விட்டான் என்று அரைகுறையாக புரிந்து கொண்டு ப்ரபத்தி பண்ணி விட்டு பொய் சொல்லலாம், திருடலாம், ஸந்தியா வந்தானாதி போன்ற கர்மாக்களை எல்லாவற்றையும் விட்டு விடலாம் (Prapatti is not a license to escape one's duties) என்று நினைக்கக்கூடாது என்பதால் அதை முதலில் காணலாம்.

ஸர்வ தர்மாந் என்ற தொடருக்கு (phrase) எல்லா உபாயங்களையும் விட்டு (discarding all kinds of means) என்று அர்த்தம். தர்மாந் என்று **பஹுவசனத்தில் (plural) கூறியது பலவிதமான தர்மங்களை** என்று குறிக்கிறது.

சாதாரணமாக, உலக வாழ்க்கையில் தர்மம் என்பது ஏதாவது பலனை எண்ணித்தான் செய்கிறோம். இருந்தாலும் **இங்கு மோக்ஷ பலனுக்காக செய்யும் தர்மம் என்கிற பக்தி யோகத்தையும் அதன் அங்கங்களையும்** சொல்லுகிறது என்பர் முன்னோர்.

நித்ய கர்மாக்கள் என்று பகவானும், ப்ரமாணங்களும் அருளியவை - பொய் பேசாதே, நல்ல வழியில் நட **(ஸத்யம் வத, தர்மம் சர)** போன்றவை எல்லா மனிதருக்கும் பொதுவானவை. இவைதான் முதல் **நித்ய கர்மா.**

மேலே, வர்ணாஶ்ரம தர்மங்கள், அவற்றிலிருந்து உண்டான எம்பெருமானின் கட்டளைகளான **ஆஜ்ஞாகைங்கர்யம்** (ஸந்தியா வந்தனம், தர்ப்பணங்கள் போன்றவை), அவற்றுடன் இணைபிரியாது (complementing) பிரகாசிக்கும் **அநுஜ்ஞா கைங்கர்யங்கள்** (பெருமாள் திருவாராதனம், கோவில் விளக்கு ஏற்றல், பூ தொடுத்தல், மாலை கட்டல் போன்றவை) இவற்றை எல்லாம் விட்டு விடு என்கிறதா சரம ஶ்லோகம் என்றால் இல்லை.

1.3 எம்பெருமானார் சரம ஶ்லோக உபதேசம் பெறுதல்

எம்பெருமானார், பகவத் ராமாநுஜர் த்வயத்தின் அர்த்தத்தை பெரிய நம்பிகளிடமிருந்து உபதேசம் பெற்றார். அதன் பின் ஆசாரியரான பெரிய நம்பிகள், எம்பெருமானாரை திருக்கோஷ்டியூர் நம்பியை அடைந்து மீதியை அறிந்து கெள்வீர் என நியமித்தார்.

நம்பி சரம ஶ்லோக அர்த்ததை மிக குஹ்யமாக (ரஹஸ்யமாக மூடி மறைத்து) வைத்திருக்கிறார். எளிதில் உபதேசிக்க மாட்டார் என்று எம்பெருமானாருக்கு தெரியும். அதனால்தான் பதினெட்டு தடவை திருவரங்கத்திலிருந்து திருக்கோஷ்யூர் வரை நடந்தே சென்று திருமந்திரார்த்தத்தை ப்ராத்தித்து

முதலில் அதைப் பெற்றார். ஆசை உடையோர்க்கு எல்லாம் அதை உபதேசித்து எம்பெருமானார் என்ற பட்டத்தை நம்பியின் வாக்காலே பெற்றார்.

எம்பெருமானார் கேட்பதற்கு முன்னமே நம்பியே வலுவில், சரம ஶ்லோகத்தை உபதேசித்தார் என்று ஆசாரிய வரலாறுகள் கூறுகின்றன.

முமூக்ஷுப்படி சரம ஶ்லோக ப்ரகண ஆரம்பத்திற்கு வியாக்யானத்தில் மணவாள மாமுனிகள் அருளியது - "**இதில் அர்த்தம் கேட்கைக்காக விறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளியது**".

எம்பெருமானார் மிகவய்ம் கஷ்டப்பட்டு, திருமந்திர, சரம ஶ்லோக அர்த்தத்தை உபதேசம் பெற்றாலும், அவற்றிலும் ப்ரதானமானது சரம ஶ்லோகார்த்தமே. எனவே சரம ஶ்லோக அர்த்தம் என்பது கிடைப்பதற்கு அரிதானது. எளிதில் பெற முடியாது. சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

1.4 தர்மம் என்றால் என்ன?

முதலில் தர்மம் என்றால் என்ன? ஒரு பலனைக் கொடுக்கக்கூடிய செயலே தர்மம் என்பது. ஆனால் அதை சாஸ்திரத்தை ஒட்டியே அறிய வேண்டும், செய்ய வேண்டும். இப்படி, ஒரு பலனுக்காக அனுஷ்டிக்கப்படும் எல்லா உபாயங்களுமே தர்மம்.

ப்ரமாணங்களுடன் "**இதைச் செய், அதைச் செய்யாதே,**" என்று விதி வாக்யமாய் உள்ளது, தர்மம்.

> **சோதநா லக்ஷணார்த்தோ தர்ம:**
> பூர்வ மீம்மாம்ஸை 1-1-2

ஆக தர்மம் என்பது நித்யம், நைமித்திகம் முதலியவற்றை அங்கமாகக் கொண்ட கர்ம யோகம் முதலான மோக்ஷ உபாயங்கள் என பொதுவாக அறியலாம்.

தர்மம் என்று சரம ஶ்லோகத்தில் சொன்னது, இங்கே சந்தர்ப்பத்தை ஒட்டி (based on the context) சிறப்பாக மோக்ஷத்திற்கு ஸாதநமான பக்தியோகத்தையே குறிக்கும்.

1.5 ஸர்வ தர்மாந் - ஸ்வாமி தேசிகன் விளக்கம்

> **ஸர்வ தர்மாந் என்றது எல்லாத் தர்மங்களையும் என்றபடி. தர்மமாவது - சாஸ்த்ரமே கொண்டு அறிய வேண்டும் அபிமத ஸாதநம் (விரும்பும் பலனுக்கு உபாயம்). இங்கு தர்மம் என்றது கீழ்ச் சொன்ன பக்தியோகத்தை. இது பலவகையான படியை பஹுʼ வசநம் (இரண்டிற்கு மேலான பன்மை) காட்டுகிறது. இவற்றில் ஒன்றும் ஒழியாமைக்காக ஸர்வ ஶப்தம். பரிகரங்களையும் கூடக் காட்டுகைக்காகவுமாம்.**
>
> ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய சாரம்

உதாரணமாக, பக்தி யோகம் செய்ய முடியாமல் இருக்கிறான் ஒருவன். ஶக்தியோ, ஞானமோ, அவனுக்கு இல்லை. ஆனால், மோக்ஷத்தில் மட்டும் ஆசை. அதை உடனே பெற வேண்டும் என்கிற துடிப்பு.

மோக்ஷத்திற்கு வேறு ஒரு உபாயத்தை அவனிடம் காட்டும்போது "**இந்த தர்மங்கள் எல்லாம் உனக்கு எதற்கு? வேண்டவே வேண்டாம். விட்டு விடு,**" என்று சொன்னால், அது எதைச் சொல்லும்? ஏற்கனவே செய்ய முடியாமல் கைவிட்டிருக்கும் (discarded) பக்தியோகத்தை சொல்லும். **இங்கே கைவிடு என்று சொல்லப்பட்ட தர்மம், பக்தியோகம்.**

தர்மாந் என்ற சொல் பன்மை(Plural). எல்லாவிதமான பக்தி யோகங்களையும் என்று பொருள். பக்தி யோகம் என்பது **ஸத் வித்தை, தஹர வித்யை** போன்ற

32 விதமான வித்தைகள் கொண்டது. அந்த யோகங்களை அவ்வளவையும் ஒன்று விடாமல் குறிப்பிடுகிறது, இந்த பதம்.

சரி, தர்மாந் என்று பன்மையில் சொன்ன பிறகு, அதற்கு மேலே ஸர்வ என்ற பதம் அவசியமா? சொன்னதையே திருபிச் சொல்வது போல இருக்கிறதே என்று கேட்கலாம். (redundant emphasis) இல்லை, ஸர்வ என்பது பக்தி யோகங்களின் பலவிதமான அங்கங்களையும் சேர்த்து கொள்வதைக் காட்டுகிறது.

1.6 பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

பிள்ளைலோகாசாரியார் முமுக்ஷுப்படியில் விளக்கியதை காண்போம்.

> **ஸர்வ தர்மாந் என்பது எல்லா தர்மங்களையும்.**
> **தர்மமாவது பல ஸாதநமாய் இருக்குமது.**
> **இங்கு சொல்கிற தர்ம ஶப்தம் த்ருஷ்ட பல ஸாதநங்களைச் சொல்லுகை இன்றிக்கே. மோக்ஷ பல ஸாதநங்களைச் சொல்லுகிறது.**
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 191-193

தர்மம் என்பது ஒரு பலனைப் பெறச் செய்வது. அதனால் தர்ம பதம் உலக விஷயங்களை அடையவிக்கும் ஸாதனமாய் இருப்பதால், இங்கு அவற்றை கூறவில்லை என தள்ளுகிறார்.

இங்கு சொல்லப்பட்டது மறு பிறவியில்லாத மோக்ஷத்தை கொடுக்கக்கூடிய உபாயங்கள் மட்டுமே ஆகும். வீடு, வாசல், நிலம், பெண், புத்திரன் உடல் ஆரோக்யம், ஸ்வர்க்கம் போன்ற உலக விஷயங்களை அடையும் ஸாதனங்களைச் சொல்லவில்லை

> **அவைதான் - ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாய் இருக்கையாலே பஹுவசநப் ப்ரயோகம் பண்ணுகிறது.**
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 194

இந்த மோக்ஷோபாய ஸாதனங்கள் ஶ்ருதி, ஸ்மிருதிகளில் பல வகைகளால் சொல்லப்பட்டதால் தர்மாந் என்று பன்மையில் சொன்னது.

> அவையாவன - கர்ம ஜ்ஞாந பக்தியோகங்களும், அவதார ரஹஸ்ய ஞானம், புருஷோத்தம வித்தை, தேஶவாஸம், திருநாம ஸங்கீர்த்தனம், திருவிளக்கு எரிக்கை, திருமாலை எடுக்கை தொடக்கமான உபாய புத்த்யா செய்யுமைவையும்.
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 195

- **கர்மணைவ ஹி ஸம்ஸித்3தி4ம் ஆஸ்தி2தா: ஜநகாத3ய:**
  பகவத்கீதை 3-20
  பற்றுதல் இல்லாமல் செய்யும் கர்மாக்கள் மூலமாகவே சிறந்த பேற்றை அடைந்தனர், ஜனகர் முதலிய ஞானிகளும் என்று மோக்ஷோபாயம் கர்ம யோகம் என்றும்,

- **ஜ்ஞாநாக்3நி: ஸர்வ கர்மாணி ப4ஸ்மஸாத் குருதே ததா**
  பகவத்கீதை 4-37
  ஞானம் என்னும் நெருப்பு எல்லா கர்மங்களையும் சாம்பலாகச் செய்கிறது என்று கர்ம யோகத்தால் அடையப்படுவது ஞான யோகம் என்றும்

- **ப4க்த்யா த்வநந்யயா ஶக்ய அஹம் ஏவம் வித4: அர்ஜீந ।**
  ஜ்ஞாதும் த்3ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ।।
  பகவத்கீதை 11-54
  பலனை எதிர்பாராத பக்தி மூலம் நான் அறியப்படுகிறேன் என்றும்,

  மந்மநா ப4வ மத்3ப4க்தோ மத்3யாஜீ மாம் நமஸ்குரு
  பகவத்கீதை 9-34
  அதனால் என்னிடம் உன் மனதை வைத்து பக்தி செய், என்று கர்ம, ஞான யோகத்தால் விளைவது பக்தி யோகம் என்றும்

- **ஜந்ம கர்ம ச மே தி3வ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத:**
  த்யக்த்வா தே3ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜீந:
  பகவத்கீதை 4-9

என்னுடைய பிறப்பும், செயலும் தெய்வீகமானவை என்று இவ்விதம் எவன் தத்வரீதியாக அறிந்து கொள்கிறானோ அவன் உடலைத் துறந்து மறு பிறவியை அடைவது இல்லை; என்னையே அடைகிறான் என்று **அவதார ரஹஸ்யமும்** சொல்லப் பட்டது.

- **யோ மாம் ஏவம் அஸம்மூடோ4 ஜானாதி புருஷோத்தமம்**
  பகவத்கீதை 15-19
  நானே புருஷோத்தமன் என்று த்தவ ரீதியாக அறிந்தால் அவனுக்கு நல்ல அறிவு பிறக்கிறது. எல்லா கர்மாக்களையும் செய்து முடித்தவனாக ஆகிறான் என்றும்

- **தேஶோயம் ஸர்வகாம துக்**
  கருட புராணம்
  என்று திருவரங்க தேஶ வாஸம் எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும் என்றும்

- **ஸர்வபாப விஶுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம்**
  விஷ்ணு ஸஹஸ்ர நாமம்
  என்று வாசுதேவனை அடைந்தவன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்றும்

- **க்ருதேந வாத தைலேந தீபம் யோ ஜ்வாலயந் நர:**
  விஷ்ணுவே விதிவத் பக்த்யா தஸ்ய புண்ய பலம் ஶ்ருணு
  நாரசிம்ம புராணம்
  என்று விஷ்ணுவிற்கு எவன் விளக்கு ஏற்றுகிறானோ அவன் ஸகல பாபங்களை ஒழித்து பரமபத்தை அடைகிறான்

ஸர்வ ஶப்தத்தாலே அவ்வவஸாதந விஶேஷங்களை அநுஷ்டிக்கும் இடத்தில் அவற்றுக்கு யோக்யதா பாதங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது.

ஆக ஶ்ருதி, ஸ்மிருதி சோதிதங்களாய் நித்ய நைமித்திகாதி ரூபங்களான கர்மயோகாதி உபாயங்களை என்றபடி.

இவற்றை தர்மம் என்றது ப்ரமித்த அர்ச்சுனன் கருத்தாலே.
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 191-198

ஸர்வ என்ற பன்மையால் பலவிதமான சாதனங்களை சொன்னார். ஸந்தியா வந்தனம், பஞ்ச மஹா யக்ஞும் போன்ற கர்மாக்களை செய்பவன் இந்த ஸாதனங்களுக்கு அதிகாரி.

ஸந்த்யாஹ்ரிந: அசுசிர் நித்யம் அநர்ஹஸ் ஸர்வ கர்மஸு
தக்ஷஸ்மிருதி

ஸந்தி செய்யாதவன் அசுத்தன். அவன் எந்த கர்மாவிற்கும் தகுதி இல்லாதவன் என்றது. ஆக நித்ய, நைமித்ய அங்கங்களைக் கொண்ட கர்ம யோகம் போன்ற மோக்ஷ உபாயங்கள். இவற்றை விலக்கு என்றான் கண்ணன்.

அருச்சுனன் ப்ரமித்தான் - பகவத் பாரதந்தியத்திற்கு மாறான இவைகளை அதர்மம் என்றும் யுத்தத்தில் தன் பந்துக்களை கொல்வது அதர்மம் என்றும் நினைத்தான். கண்ணன் அப்படியே தலைகீழாக சொல்கிறானே (Totally contradcitory actions) என குழம்பினான்.

1.7 பரித்யஜ்ய என்றால் நன்றாக விடுதல்

த்யாஜ்யம் என்றால் ஒன்றை விடுகை எனப் பொருள். **பரி** என்பது உப ஸர்க்கத்திற்கு (adjective). முழுவதும், எல்லாவற்றையும் என்ற பொருள்.

ஆனால் இங்கே **ஸர்வ** என்ற பதம் ஏற்கனவே அதை செல்லிவிட்டது. எனவே **பரி** என்பது இங்கே **ஆசை அறுப்பதின் மிகுதியை** காட்டுகிறது எனக் கொள்ள வேண்டும் (extreme case of renunciation). சிறிதும் பற்று இன்றி, அடியோடு ஒரு தொடர்பும் இல்லாமல், கழித்து ஒழிக்கையை காட்டுகிறது **பரி.**

தியாகம் என்பது கேவலம், வெறுமே துறப்பது (not a mere abandonment) என்று நினைக்கக் கூடாது. வேறு உபாயங்கள் என்று சொல்லப்பட்டவை,

அவற்றின் தன்மைகள் இவற்றை எல்லாம் நன்கு அறிந்து, அவற்றின் ஞானம் பெற்று பின் கைவிடுதல் (complete disassociation).

முத்து சிப்பியை வெள்ளி என்று தவறாக எண்ணுவது; தவறான பாதையில் சென்று அதுதான் சரியான பாதை என எண்ணுவது. இப்படி தவறான ஞானம் உண்டாகி பின் அந்த உபாயங்களை கைவிடுதல். ருசி, வாஸனை, லஜ்ஜையோடு துறக்க வேண்டும்.

ப்ரஹ்மஹத்யா ஸுராபானம் ஸ்தேயம் குர்வங்கநாகம: என்கிறது மநுஸ்மிருதி. பிராம்மணனை கொல்பவன், மதுபானம் அருந்துபவன் இவர்களோடு தொடர்பே கூடாது. அப்படி ஏற்பட்டால், அவர்களின் சேர்க்கையை கைவிடும்போது திரும்பி மறுபடி அந்த வாஸனை ருசி வராதபடியும், **ஐயோ இப்படி தப்பு பண்ணிவிட்டோமே என்ற வருத்தத்துடன், வெட்கப்பட்டு** துறக்க வேண்டும்.

அதுபோல **ப்ரபத்தி செய்ய நினைப்பவன், மற்ற உபாயங்களை பாவத்திற்கு பயப்படுபவன் போலே துறக்க வேண்டும்.**

- ஏதோ முடிந்த வரை செய்து பார்ப்போமே (do as much as possible)
- ஒன்றுக்கு இரண்டாக, எதற்கும் கூட இதுவும் இருக்கட்டுமே (supplement, complement) என்று செய்வது,
- அது தவறி விட்டால் இது கவனித்துக் கொள்ளும் (alternate, backup)

இது மாதிரி நினைத்துகூட பார்க்க கூடாது. மற்ற உபாயங்களில் தனக்கு தகுதி இல்லை என்பதை நன்றாக, பூர்ணமாக உணர வேண்டும்.

1.8 பரித்யஜ்ய – ஸ்வாமி தேசிகன் விளக்கம்

பரித்யஜ்ய என்றது துவக்கற (சம்பந்தம் விலக்கி) **விடுகையைச் சொல்லுகிறது. தர்மங்களை விடுகையாவது அவற்றின் அருமையைக் கண்டு நிராஶனாகை** (ஆசை இல்லாதவனாய்)**. பரி என்கிற**

உபஸர்க்கம் (உரிச்சொல் - adjective) **ஸர்வ காலத்திலும் ஸர்வ ப்ரகாரத்திலும் யோக்யதை இல்லை என்றும் நைராஶ்யாதிஶயத்தைக்** (ஆசை இல்லாமையின் மிகுதி) **காட்டுகிறது.**

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய சுளகம்

வேறு உபாயங்களை செய்ய அருகதை அற்றவன் சேதநன். ஆனால் மோக்ஷ பலனைப் பெறுவதிலோ துடிப்பு அவனுக்கு. தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற துக்கம் ததும்புகிறது. இதுதானே ப்ரபத்திக்கு தகுதி!

இந்த தகுதி நன்றாய் புரியும்படி பக்தி யோகம் எனும் ஆசையை விட்டு, என்பதை **பரித்யஜ்ய** என்ற பதம் காட்டுகிறது. தர்மங்களை விட்டுவிட்டு என்பது பொருள் அல்ல. **தர்மங்கள் மோக்ஷோபாயம் என்ற அறிவை விட்டு** என்பதே பொருள்.

ஸ்நாத்வா புஞ்ஜீத என்கிறது ஸ்ருதி. அதாவது குளித்தபின்னே சாப்பிட வேண்டும் என்பது விதி வாக்யம். அதுபோல **மற்ற உபாயங்களை அறவே கைவிட்ட பின்னே ப்ரபத்தி என்ற உபாயத்தை பற்ற வேண்டும்.**

1.9 தர்மங்களை விடுதல் என்பது அநுவாதம்

ப்ரபத்தியை விவரிக்கும் சரம ஸ்லோகம் முதலில், தர்மங்களை விடுதல் என்பதை யாருக்கு அது விதிக்கிறது? அதைச் செய்ய சக்தி உடையவனையா? சக்தி இல்லாதவனையா? என்ற கேள்வி எழும்.

- **தர்மங்களை செய்ய சக்தி உடையவன் அதைச் செய்தே தீர வேண்டும்.** இது ஶ்ருதி, ஸ்மிருதிகளில் ஆணித்தரமாக சொல்லப்பட்டது. எனவே தர்மங்களை விடு என்பது அவனுக்கு பொருந்தாது.
- அதே சமயம், **சக்தி இல்லாதவன் முயலவே மாட்டானே!** அவனிடம் எதற்கு தர்மங்களை விடு என்று சொல்ல வேண்டும்? கால் இல்லாத முடவனை நோக்கி "நீ ஓடாதே" என்பது போல பொருந்தாது.

ஆக தர்மங்களை விடு என்பதை எல்லா தர்மங்களையும் விட்டு ஓழி என்று விதியாக கொள்ள முடியாது. எல்லா தர்மங்களையும் அடியோடி விட்டு ஒழித்தவனுக்கு சாஸ்திரம் என்ன? ஸம்பிரதாயம் என்ன? எல்லாம் கைகழுவினனுக்கு ப்ரபத்தி என்ன வேண்டிக் கிடக்கிறது?

ஆனால் ஒருவனிடம் ஏற்கனவே உள்ள தகுதியை சொல்வதாக கொள்ளலாம். **எல்லா தர்மங்களையும் ஏற்கனவே கைவிட்டு நிற்கும் நீ என்னை அடைக்கலம் கொள்** என்று சொல்வதாக கொள்ள வேண்டும். இது அநுவாதம். சொன்னதை திருப்பிச் சொல்வதை குறிக்கும். இது ஒரு விளக்கம்.

1.10 ஸாத்விக த்யாகம்

ஸாத்விக த்யாகம் என்பது சேதனன் எந்த காரியத்தையும், தானே தன் பலனுக்காக தன்னுடைய திறமையால் செய்கிறோம் என்ற நினைவை துறக்க வேண்டும்.

பகவானே அவன் விருப்பத்தின்படி(for His pleasure), அவன் பலனுக்காக (for His benefit), நம்மை ஒரு வ்யாஜமாக வைத்து (using us as an instrument) நம் மூலம் செய்து கொள்கிறான் என்கிற எண்ணம் தோன்ற வேண்டும். **கர்ம ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே பகவான் ஸ்வயமேவ காரயதி.**

- **பலன் – (Rewards) பல த்யாகம்** (செய்யும் செயலின் பலன் நம்மைச் சேர்ந்தது என்ற எண்ணம் விடுகை)
- **உடமை (Ownership)- மமதா த்யாகம்** (செய்யும் செயல் தன்னைச் சேர்ந்தது என்ற எண்ணம் விடுகை)
- **செய்கை (Implementor) - கர்த்ருத்வ த்யாகம்** (தானே செயல்களை செய்கிறேன் என்ற எண்ணம் விடுகை)

ROI - Return on Investment என்று பொதுவாக சொல்வது இங்கு எதுவும் இல்லை.

1.11 தர்மங்களை விடுதல், ஸாத்விக த்யாகமாகாது

தர்மங்களை விடு என்பது ஸாத்விக த்யாகத்தை சொல்கிறதா? என்று கேட்கலாம்.

கண்ணன் இங்கே தர்மங்களை விட்டு விடு என்றது, "கர்மாக்களை செய், ஆனால் ஸாத்விக த்யாகத்துடன் செய்" என்று சொல்லுகிறான் என வைத்துக் கொள்வோம். அப்படி எடுத்துக் கொண்டால், கர்மங்களை செய்தே ஆக வேண்டும். அதை ஸாத்விக த்யாகத்துடன் செய்ய வேண்டும் என்று வரும்.

இந்த வாதத்தில் இரண்டு மறுப்பு (Objection) உள்ளது.

1. முதலாவதாக, **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பது **ப்ரபத்தியை உபாயமாக சொல்ல வந்த வாக்யம்**. அது எதற்கு ப்ரபத்திக்கு பிறகு எஞ்சிய நாட்களில் எப்படி இருக்க வேண்டும் என்பதை சொல்ல வேண்டும்? ஸம்பந்தம் இல்லாமல் இருக்கிறது.

2. ஸாத்விக த்யாகத்துடன் செய்யும் கர்மங்கள் அவசியம் என்றால் அது ப்ரபத்திக்கு அங்கம் என்று ஆகிவிடும். ஸித்தாந்தம் சொல்வது ப்ரபத்திக்கு ஐந்து அங்கங்கள் தவிர மற்ற எதுவும் அங்கம் ஆகாது என்று. அதற்கு முரண்பட்டு (contradictory) விடும் இந்த ஸாத்விக த்யாகத்துடன் செய்யும் கர்மாக்கள்.

ஆகவே **ஸர்வ தர்மாந்** என்பது, இங்கு **ஸாத்விக த்யாகத்துடன் செய்யும் ஸகல தர்மங்களையும், ப்ரபத்தி தனக்கு அங்கமாக கொள்வதில்லை** என்பதை முடிவு செய்ய வேண்டும்.

> **வேறு சிலர் தர்ம ஶப்தத்தாலே பலத்தை சொல்லுகிறத்தாக்கி தர்மத்தை அநுஷ்டியா நின்றே பலத்தில் இச்சையை விடவே, அது மோக்ஷத்திற்கு ஸாதநம் என்றார்கள்; அதுவும் கூடாது.**

தர்ம ஶப்தம் பலத்தைக் காட்டாமையாலும், ஶரணாகதிவிதியோடு அதுக்கு ஸங்கதி இல்லாமையாலும், ஶோகியாதே கொள்ளென்கிற இது கூடாமையாலும் (அதுவும் பொருள் அன்று)

பிள்ளைலோகாசாரியார், தனிசரமம்

1.12 தர்மங்களை விட்டு சரணாகதி செய் என்பது யாருக்கு?

சிலர் சொல்லுவார்கள் - பெண்கள், நாலாம் வர்ணத்தார்கள் பக்தி யோகம் செய்ய முடியாது என்று வேதம் விதித்துள்ளது. அதனால் இங்கே எல்லா தர்மங்களையும் விட்டு, ஶரணாகதி செய் என்பது அவர்களை நோக்கி சொன்னது என்பார்கள். அதுவும் இல்லை.

வேறு சிலர் தர்மத்தில் அதிகாரம் இல்லாத ஸ்த்ரீ ஸூத்ராதிகளுக்கு மோக்ஷோபாயமாக ஶரணாகதியை விதித்தது என்றார்கள். அதுவும் கூடாது. அவர்களுக்கு தர்ம ப்ராப்தி இல்லாமையாலே த்யாகம் விதிக்கக் கூடாமையாலும், அர்ஜீநனை நோக்கி அருளிச் செய்கையாலும், (அதுவும் அர்த்தம் அன்று)

பிள்ளைலோகாசாரியார், தனிசரமம்

1.13 கர்மாக்களின் பிரிவுகள்

ஜீவர்கள் செய்யும் காரியங்களை மூன்று விதமாக பிரிக்கலாம்

1. நித்யம்

என்பது தொடர்ந்து விடாமல் கட்டாயம் செய்யவேண்டியவை இவைகளை செய்யாவிட்டால் பாபம் வரும். உண்மை பேசுதல், நல்ல வழி நடத்தல், ஸந்தியா வந்தனம் போன்றவை

2. நைமித்யம்

குறிப்பிட்ட காலங்களில் செய்ய வேண்டியவை அப்படி செய்யாவிட்டால்

பாபம். அமாவாசை, சூரிய, சந்திர க்ரஹண தர்ப்பணம் போன்றவை

3. காம்யம்

ஆசைப்பட்டதை நிறைவேற்ற வேதத்தில் விதித்த காரியத்தை செய்தல். இது **ஆசையினால் செய்வது**. செய்யாவிட்டால் பாபம் இல்லை. மழை விரும்புவன் **காரீரி,** புத்திரன் வேண்டுபவன் **புத்திர காமேஷ்டி**, ஸ்வர்க்கம் வேண்டுபவர் **ஜோதிஷ்டோமம்** போன்ற யாகங்களை செய்தல்

ஜீவர்கள் செய்யும் காரியங்களை வேறு விதமாகவும் பிரிக்கலாம்

1. ஆஜ்ஞா கைங்கர்யம்

பகவானுடைய **கட்டளை**களாகச் சொல்லப்பட்ட காரியங்கள் - ஶ்ருதி, ஸ்மிருதி போன்ற சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டவை.
இவற்றை செய்வதால் புண்ணியம் ஒன்றும் இல்லை. செய்யாவிட்டால் பாபம்
உண்மை பேசுதல், திருடாமை, வர்ணாஶ்ரம தர்மங்கள் போன்றவை.

2. அநுஜ்ஞா கைங்கர்யம்

சாஸ்திரத்தின் அநுமதியுடன் ஒரு பலனுக்காக செய்வது.
செய்தால் புண்ணியம். செய்யாவிட்டால் பாபம் வராது.
கோவில் போவது. பெருமாளுக்கு பூ சாத்துவது போன்றவை.

1.14 தர்மங்களை விடுதல் - நித்ய கர்மாக்கள் அவசியமில்லையா?

ப்ரபத்திக்கு வேறு தர்மங்கள் அங்கங்கள் ஆகாது. **எல்லா தர்மங்களையும் விட்டு என்பதால்** இது புலனாகிறது. அப்படி என்றால் ப்ரபத்தி செய்த பிறகு பிரபன்னனுக்கு செய்ய வேண்டிய தர்மங்களை எல்லாம் விட்டு விடலாமா? நித்ய, நைமித்ய கர்மாக்கள் போன்றவை ஒன்றும் அவனுக்கு கிடையாதா?

நான்தான் ப்ரபத்தி செய்து விட்டேனே. மோக்ஷம் நிச்சயம் தானே. மோக்ஷத்திற்கு மற்றைய தர்மங்கள் அங்கங்கள் இல்லையே என ஸந்தியா வந்தனம் போன்றவை செய்ய வேண்டாமா? என்ற கேள்வி எழும்.

எல்லோருக்கும் விதிக்கப்பட்ட **உண்மையை சொல், நல்ல வழியில் நட** என்பதை எல்லோரும் செய்தே தீர வேண்டும். தவிர, வர்ணாஶ்ரம தர்மங்களை தனிப்பட்ட முறையில் அவரவர்கள் செய்தே தீர வேண்டும்.

ப்ரபத்திக்கு அவை அங்கம் ஆகாவிட்டாலும் பிரம்மசரியம், க்ருஹஸ்தாஸ்ரமம் போன்றவற்றிற்கு அவை அங்கம் என்று சாஸ்திரத்தில் விதித்துள்ளது (special enforcement). அவற்றை ஒருக்காலும் கைவிட முடியாது. இவை பகவத் ஆஜ்ஞா கைங்கர்யங்கள் ஆனதால், செய்யாவிடில் பகவானின் கோவத்திற்கு ஆளாக நேரும்.

ஶ்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாம் உல்லங்க்4ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச் சே2தீ3 மம த்3ரோஹீ மத்3 ப4க்தோபி ந வைஷ்ணவ: ।।
விஷ்ணு தர்மம் 6-31

என்று பகவானே ஶ்ருதி, ஸ்மிருதி எல்லாம் என் கட்டளைகள். இதை மீறியவன், எனக்கு த்ரோஹம் செய்தவன் ஆகிறான். அவன், தன்னை பக்தன் என்று கூறிக் கொண்டாலும், அவன் வைஷ்ணவன் இல்லை.

1.15 பிரபத்திக்கு பிறகு அநுஜ்ஞா கைங்கர்யங்கள் அவசியமா?

நித்ய நைமித்ய கர்மாக்கள் பகவானுடைய மீற முடியாத ஆணை (Command). இவை ஆஜ்ஞா கர்மாக்கள் - அவற்றை செய்தே தீர வேண்டும், சரி, ஒத்துக் கொள்ளலாம்.

ஆனால் காம்ய கர்மாக்கள் - பகவானுக்கு தீப, தூபங்கள் ஸமர்ப்பித்தல், மாலை கட்டல் - போன்றவற்றை பிரபன்னன் அனுஷ்டிக்க வேண்டுமா? **காம்ய கர்மாக்களை செய்யும்படி எங்கும் கூறவில்லையே?**

இதற்கு ஸமாதாநம் - உண்மைதான். **அநுஜ்ஞா கர்மாக்கள்** அதாவது பகவானின் ஆணை இல்லாவிட்டாலும் அவன் **அநுமதியைக்** (Consent) கொண்டு செய்வது. இவை

1. மோஷோபாயமா? என்றால் **இல்லை.**
2. ப்ரபத்திக்கு அங்கங்களா? என்றால் **இல்லை.**
3. இவற்றை செய்யாவிட்டால் பகவானின் நிக்ரஹத்திற்கு ஆளாவோமா? என்றால் **இல்லை**
4. இந்த கைங்கர்யங்களால் பகவானை மகிழ்வித்து தனக்கு புத்திரன், செல்வம், சுவர்க்கம் வேண்டும் என்று அல்ப பலன்களை தருவதற்காக ப்ரபன்னன் செய்வானா? என்றால் **இல்லை.**
5. பொழுது போக்கிறகாக செய்கிறானா? என்றா **இல்லை.** சாதாரணமாக உலகத்தில் இப்படி காண்பதில்லை. அதற்கு சீட்டு ஆடுவது, சூதாட்டம் போன்றவையே மக்கள் விரும்பிகின்றனர்.
6. முக்தர்களைப்போல் ப்ரபன்னனும் எம்பெருமானின் உகப்பிற்காகவே கைங்கர்யம் செய்கிறானா? என்றால் **இல்லை.** ப்ரபன்னன் ஆனாலும் ப்ரகிருதி ஸம்பந்தத்தால் எம்பெருமானின் திருவுள்ளத்தை நேராக அறிய முடியாது.

பின் எதற்கு அநுஜ்ஞா கைங்கர்யங்கள் செய்ய வேண்டும்?

அநுஜ்ஞா என்றாலே பகவானின் ஆணை இல்லை என்று தெரிகிறது. ஆனால் **பகவானின் ப்ரீதியை அவை உண்டு பண்ணும்** என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

காம்ய கர்மா என்றால் பலனில் ஆசையின் பொருட்டு செய்வது என்றுதானே அர்த்தம். அதனால், ஸாத்விக குணங்கள் மேலோங்கிய ப்ரபன்னன் எம்பெருமானை மகிழ்விப்பதே தன் ஸ்வரூபம் என்ற நினைவோடு எப்போதும் இருப்பான். பகவானை உகப்பிக்கும் கைங்கர்யத்தில் அதிக ஆசையுடன் எப்போது எப்படி செய்யலாம் என காத்திருப்பான். பகவானை மகிழ்விப்பதே அவனுக்கு பலன்.

எப்படி தன் உற்றார், உறவினரை மகிழ்விக்கிறானோ அதுபோல ஸர்வ பந்துவான எம்பெருமானை சாஸ்திர விஹிதமான கைங்கர்யங்களால் மகிழ்விக்கிறான், பிரபன்னன்.

முக்தர்களைப் போல் எம்பெருமான் திருவுள்ளத்தை நேரிடையாக அறிய முடியாவிட்டாலும், **சாஸ்திரம் என்னும் கைவிளக்கைக் கொண்டு, ஆசாரியன் என்னும் தீபத்தைக் கொண்டு தன்னால் முடிந்த வரை கைங்கர்யத்தில் திளைக்கிறான்.**

ஸ்வாமி தேசிகன் **தத்வமுக்தாகலாபம்** போன்ற பல இடங்களில் இவற்றை வெகு விஸ்தாராமாக விளக்கியுள்ளார்.

1.16 த்வய அர்த்தாநுஸந்தானம்

த்3வயம் அர்த2ாநுஸந்த4ாநே
ஸஹ ஸத3ா ஏவம் வக்தா
எம்பெருமானார், சரணாகதி கத்யம்

என்று எம்பெருமானார் கத்யத்தில் அருளி உள்ளாரே! அதாவது த்வயத்தை எப்பொழுதும் அர்த்ததுடன் அநுஸந்தானம் செய்ய வேண்டும் என்று. அப்படி என்றால் மீதி ஸந்தியா வந்தனம் போன்ற நித்ய கர்மாக்களை தவிர்த்து த்வயத்தையே உச்சாரணம் செய்ய வேண்டுமா? என்ற கேள்வி.

இல்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் எல்லாவற்றிக்கும் பொருள் சொல்ல வேண்டும். மூன்று சூழ்நிலைகளை ஸ்வாமி தேசிகன் காட்டுகிறார், ரஹஸ்யத்ரய சுளகத்தில்.

- **ஸ்வபாவ ப்ராப்தம்** - தூக்கம், இருமல், தும்மல், கொட்டாவி போன்றவை
- **அர்த்த ப்ராப்தம்** - பசி, தாகம் போன்றவை தணித்துக் கொள்வது
- **சாஸ்த்ர ப்ராப்தம்** - நித்ய நைமித்ய கர்மாக்களை செய்வது

ஆக தவிர்க்க முடியாத இந்த மூன்று **சூழ்நிலைக்கு தக்கவாறு எஞ்சிய பொழுதிலே த்வயத்தை உச்சரிக்க வேண்டும்** என்று பொருள் சொல்ல வேண்டும்.

அதே சமயம், பகவானை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வீதியில் ஊர்வலம் வருகிறான் ஒரு சேதனன் என்று வைத்துக் கொள்வோம். வீதி வலம் வரும்போது ஸாயம் காலம் வந்தது என்னில் ஸந்தியா வந்தன காலம் வந்து விட்டது என்று பெருமாளை நடுத் தெருவில் போட்டு விட்டு ஒடிப் போய் ஸந்தியாவந்தனம் செய்யப் புகுவானோ? நேரம் கழிந்தாலும் ஸந்தியா வந்தனத்திற்கு பிராயசித்தம் அனுமதித்து உள்ளது.

அதனால் விதி முறைகளை அந்த அந்த இடத்திற்கு (context sensitive) தக்கவாறு பொருள் கொள்ள வேண்டும். **சாதாரண தர்மம்** என்ன? **விசேஷ தர்மம்** என்ன என்பதை அறிந்து செய்ய வேண்டும்.

1.17 ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய - ஆறு அர்த்தங்கள்

ஸ்வாமி தேசிகன் **"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய"** என்பதற்கு ஆறு அர்த்தங்களை அருளியதை இந்த பாசுரத்தில் காணலாம்.

1. **அசக்தியை உணர்தல்** (Inability Realization) - இயலா நிலையால்
2. **ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்** (Distressed on helpless state and forgo other means) - மனம் இகழ்ந்து அத்தால் மற்றை நாடாது
3. **ப்ரபத்தியே பூர்த்தியானது** (Complete in itself) வேறு அங்கம் தேடாது
4. **வீண்முயற்சியை விலக்கல்** (Extinguish futile attempts) - முயலா நெறியை முறித்து
5. **முடியாததை விரும்பாமை (செய்ய முடியாத உபாயங்களில் ஆசை ஒழித்தல்)** (Abandon any desire on unfeasible means) – மலையாது வேறு பற்று அற்று
6. **ப்ரம்மாஸ்திர ந்யாயத்தை அறிதல்** - கலங்காது, கலவாது வழி நின்று

1.18 தேசிகன் அதிகார ஸங்ரஹத்தில் அருளியது

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்ற வாக்யத்திற்கு பொருள் ஸ்வாமி தேசிகன் அருளுகிறார்

மூண்டாலும் அரியதனில் முயல வேண்டா *
முன்னம் அதில் ஆசைதனை விடுகை திண்மை *
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு *
வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும் /
நீண்டாகு நிறை மதியோர் நெறியிற் கூடா *
நின் தனிமை துணையாக எந்தன் பாதம்
பூண்டால் * உன் பிழைகள் எலாம் பொறுப்பன் என்ற *
புண்ணியனார் புகழ் அனைத்தும் புகழுவோமே
ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 47

1. **நீண்டாகு நிறை மதியோர் நெறியில் கூடா - (அசக்தியை உணர்தல்)** நீண்ட காலம் அனுஷ்டிக்கப் பட வேண்டிய பூர்ண ஞானம் உடையவருக்கு சொன்ன பக்தியோகம் போன்றவற்றில் சேராது இருக்கும் நீ

2. **நின் தனிமை துணையாக எந்தன் பாதம் பூண்டால் – (ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்)** உன்னுடைய பரிதபகரமான நிலையை ஸஹாயமாகக் கொண்டு என் திருவடிகளை உபாயமாக அடைந்தால்

3. **சரணநெறி வேறோர் கூட்டு வேண்டாது – (ப்ரபத்தியே பூர்த்தியானது)** சரணாகதி அதற்கு என்று குறிப்பிட்ட ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒரு துணையையும் எதிர் பார்க்காது.

4. **அரியதனில் மூண்டாலும் முயல வேண்டா - (வீண்முயற்சியை விலக்கல்)** செய்ய முடியாத உபாயத்தை செய்யத் தொடங்கி விட்டாலும் இனிமேல் அதில் தலையிட வேண்டாம்

5. **முன்னம் அதில் ஆசைதனை விடுகை திண்மை – (முடியாததை விரும்பாமை)** முதலிலேயே அந்த உபாயத்தை செய்வதற்கு அசையை ஒழித்திடுவது வலிமையானது.

6. **வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும் – (ப்ரம்மாஸ்திர ந்யாயத்தை அறிதல்)** சேதனன் அறியாமல் வேறு அங்கங்களையும் செய்ய விரும்பி விட்டால் ப்ரம்மாஸ்திரம் வாறு அஸ்திரங்களை பொறுக்காதது போல் சரணாகதியும் பலன் கொடுப்பதற்கு கூசி நிற்கும்.

உன் பிழைகள் எல்லாம் பொறுப்பன் - உன் பாபங்கள் அனைத்தும் பொறுத்துக் கொள்வேன்
என்ற புண்ணியனார் புகழ் அனைத்தும் புகழுவோமே - என்று சரம ஸ்லோகத்தில் அருளிய கண்ணனின் எல்லாப் புகழை வணங்குவோம்

1.19 இயலா நிலையால்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதின் முதல் அர்த்தம் **அசக்தி.**

ப்ரபத்தியில் அதிகாரம் அசக்தனுக்கே வரும் என்பது. தன்னுடைய அசக்தியை உணர்வது இங்கே முதல் அர்த்தம். (Realization of the inability)

இயலா நிலையால் என்று இங்கே சொன்னது ப்ரபத்திக்கு முக்யமான காரணம் அசக்தி. **ப்ரபத்தி என்னும் உபாயம் அத்யந்த அசக்தனுக்கே** விதிக்கப் பட்டுள்ளது.

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்றால்

- எத்தனையோ பிறவிகள் கடந்து நல்ல கதி அடைய வழி ஒன்றும் தெரியாது திகைத்து
- பக்தி யோகம் போன்ற வேறு உபாயங்களை எந்த காலத்திலும் எந்த வகையாலும் பின்பற்ற தகுதி இல்லாமல்

- தன்னுடைய இழிந்த, கைம்முதல் அற்ற தன்மையை உணர்ந்து
- வேறு உபாயத்தை செய்து நிறைவற்ற முடியாதபடி
- **வேறு உபாயத்தில் ஆசையற்று நிற்கும் நீ** என்ற பொருள்.

சேதனன் எத்தனையோ பிறவிகளில் உய்யும் வழி அறியாது தவித்து இருக்கிறான். எந்த காலத்திலும், எந்த இடத்திலும், எந்த நிலையிலும் சாஸ்திரத்தில் சொன்ன முக்திக்கான உபாயங்களை செய்யத் தெரியாது, செய்ய சக்தி இன்றி, எம்பெருமானை அடைய முடியாமல் ஸம்ஸார பந்தங்களிலே உழன்றுக் கொண்டு இருக்கிறான்.

எம்பெருமானை அடைய தன்னால் செய்யக் கூடிய உபாயம் ஒன்றும் இல்லை என்னும் தன் நிலை உணர்வே **"இயலா நிலை"**

1.20 மனம் இகழ்ந்து அத்தால் மற்றை நாடாது - ஆகிஞ்சன்யம்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதின் இரண்டாம் அர்த்தம் **ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்**. அதாவது **கார்ப்பண்யம்**.

ஸகல உபாயங்களும் கைவிட்டதால், ஒரு உபாயமும் சேதனனின் கையில் இல்லை. ஆக ஆகிஞ்சன்யத்தின் அநுஸந்தானத்தை முன்னிட்டே செய்யும் ஶரணாகதி என்ற பொருள் ஆகிறது.

தன்னால் வேறு ஒரு உபாயத்தையும் கைக்கொள்ள முடிய வில்லையே என வருந்தி எம்பெருமானை அடைதல். அப்படி வேறு ஒரு உபாயத்தை நாடாமல் இருக்கும் வெறுமையை **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பது காட்டுகிறது. (Distressed on helpless state and give up on other means)

வேறு ஒரு ஸாதனத்தை பற்றாமல் இருக்கும் வெறுமை (emptiness, blankness) **என்கிற கர்ப்பணயமாகிற அங்கம் கொண்டு எம்பெருமானிடம் சரண் புகுதலே** இங்கு எல்லா தர்மங்களையும் விடுதல் என்பதற்கு பொருள் ஆகும்.

மனம் இகழ்ந்து என்பது கார்ப்பண்யத்தையும், **அத்தால் மற்றை நாடாது** என்பது வேறு உபாயத்தை அனுஷ்டிக்காமல் இருக்கும் வெறுமையை காட்டுகிறது.

எனக்கு ஞானம் கிடையாது. கர்மாக்கள் செய்ய அஶக்தன். தேஶ காலங்களோ துணையாக இல்லை. கர்ம, ஞான, பக்தி யோகங்களைச் செய்ய நினைத்து பார்க்கக்கூட முடியாது. அப்படி அவற்றை கடைபிடிப்பத்தில் ஆபத்துக்கள்தான் அதிகம். இப்படி எல்லாம் சொல்லி, தன் இழிந்த நிலையை புரிந்து, வருந்தி எம்பெருமானிடம் தாழ்ந்து நிற்பதே **கார்ப்பண்யம்.**

1.21 வேறு அங்கம் தேடாது - பூர்த்தி

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதின் மூன்றாம் அர்த்தம் **பூர்த்தி.**

வேறு அங்கம் தேடாது என்று இந்த பாசுரத்தில் சொன்னது, ப்ரபத்தியின் பூர்த்தியை காட்டுகிறது. ப்ரபத்திக்கு, அதற்கு உரித்ததான ஆநுகூல்ய ஸங்கல்பம் போன்ற அங்கங்களே அவசியம். (Prapatti is complete by itself)

ப்ரபத்தி என்பது அதற்கென குறிப்பிட்ட அங்கங்களைத் தவிர வேறு ஒரு அங்கத்தையும் எதிர்பார்க்காது. **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பதில் **ப்ரபத்திக்கு அங்கமாக ஒரு தர்மத்தையும் அனுஷ்டிக்காமல்** என்று பொருள் கொள்ளலாம்.

பக்தி யோகங்களில் வர்ணாஶ்ரம தர்மங்கள் போன்றவை அங்கங்களாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதுபோலவே ப்ரபத்தியும் என்று நினைக்கக் கூடாது என்பதற்காகவே மற்ற தர்மங்களை விட்டு என்று சொல்லியது எனக் கொள்ள வேண்டும்.

> ஶரணம் ப4வ தே2வேஶ! நாத2! லக்ஷ்மீபதே! மம ।
> ஸக்ருத்2 ஏவ ப்ரபந்நஸ்ய க்ருத்யம் ந ஏவ அந்யத்3 இஷ்யதே ।।
> லக்ஷ்மீதந்த்ரம் 28-10

தேவர்களுக்கு எல்லாம் தலைவனே! திருவின்நாயகனே! எனக்கு உபாயம் ஆவாய். ஒரு தடவை சரணம் என்று அடைந்த ப்ரபன்னன், அந்த பலனுக்காக செய்ய வேண்டியது எதுவும் இல்லையே!

ஸக்ருத் ப்ராத்த2நா மாத்ரேண அபேக்ஷிதம்
த3ாஸ்யதி இதி
விஶ்வாச பூர்வக ப்ராத்த2நாம்
இதி யாவத்
பகவத் ராமாநுஜர் வாக்யம்

ப்ரபத்தி என்பது நம்பிக்கை. அதாவது, ஒரு முறை வேண்டுதலாலே நாம் விரும்பியதை கொடுப்பான் என்னும் நம்பிக்கையோடு பிரார்த்திப்பது என்பது எம்பெருமானார் வாக்கு.

நநு ப்ரபந்ந: ஸக்ருதே3வ நாத2
தவாஹ மஸ்மீதி ச யாசமாநா:
தவாநு கம்ப்ய: ஸ்மரத: ப்ரதிஜ்ஞாம்
மதே3க வர்ஜம் கிமித3ம் வ்ரதம் தே
ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 64

- **நாத2 ப்ரதிஜ்ஞாம் ஸ்மரத: தவ** = பகவானே, ராமயணத்தில் அன்று நீ கடற்கரையில் விபீஷணனுக்கு செய்த ஸத்யத்தை நினைத்து கொண்டிருக்கும் உனக்கு
- **ஸக்ருதே3வ ப்ரபந்ந:** = ஒரு முறை ஶரணாகதி செய்தேன் என்றும்
- **அஹம் அஸ்மி இதி ச** = உனக்கே அடிமையாக இருப்பேன் என்றும்
- **யாசமாநா: நநு அநுகம்ப்ய:** = பிரார்த்தித்த அடியேன், அருள் செய்ய தக்கவன் அல்லவா
- **தே இதம் வ்ரதம் மத்3 ஏக வர்ஜம் கிம்** = உன்னுடைய இந்த விரதமானது, என்னை ஒருவனை மட்டும் விலக்கியதோ, ஏன்?

வேறு அங்கங்கள் அவசியம் இல்லை என்பதால் செய்வதற்கு சுலபமானது ப்ரபத்தி. **ஸக்ருத்** என்ற பதத்திற்கு கூரத்தாழ்வான் சடக்கென (instantaneous spontaneous), என்று அற்புதமாக ஸாதித்துள்ளார். **டக்** என்று ஒரு காரியத்தை செய்தான் என்று சொல்லுகிறோமே.

ஒரு சமயத்தில், நம்பெருமாளும், ஸ்ரீரங்க நாச்சியாரும் பங்குனி உத்திர திருநாளில் ஒன்றாய் எழுந்தருளி இருந்த போது, இதுதான் நல்ல சந்தர்ப்பம் என சடக் என்று கத்யத்தை எம்பெருமானார் ப்ரவாகமாக ஸாதித்தார். அதுபோலே.

1.22 நெஞ்சம் முயலா நெறியை முறித்து - வீண் முயற்சியை விடுதல்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதின் நாலாம் அர்த்தம் **வீண் முயற்சியை விடுதல்.**

நெஞ்சம் முயலா நெறியை முறித்து என்று இங்கே சொன்னது ஸாதிக்க முடியாத காரியத்தில் வீணான முயற்சியை தடுத்தலே ஸகல தர்மங்களையும் விட்டு என்பதின் பொருளாக கொள்ளலாம். (Extinguish futile attempts)

முடவன் ஒருவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டு அதனைப் பெற எத்தனித்தால், அதனால் துன்பமே விளையுமே தவிர பொருள் கிடைக்காது. அதுபோல மீதி உபாயங்களைக் கொண்டு எம்பெருமானை அடைதல் என்பது வீணான ப்ரயாஸையை என்பதை கைவிடுதலை இங்கே **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பது காட்டுகிறது.

கடினமான பக்தி யோகத்தை செய்யலாம் என்று நீ அரம்பித்தாய். அதன் கஷ்டத்தை அறிந்து தோல்வி அடைந்து, வெட்கப்பட்டு அதை கைவிட்டாய் என்று சொல்வதும் உண்டு.

உத்3ப3ாஹ்ய ப4ாவம் அபஹ்ராய யதை2வ க2ர்வ:
ப்ராம்ஶும் ப2லார்த2 மபி4யாசதி யோகி3 சிந்த்ய
ஏவம் ஸது3ஷ்கர முபாய க3ணம் விஹாய
ஸ்த2ானே நிவேஶயதி தஸ்ய விசக்ஷணஸ் த்வாம்
ஸ்வாமி தேசிகன், ஶரணாகதி தீபிகை 25

- **யோகி3 சிந்த்ய** - யோகிகளின் சிந்தனைக்கு உரியவனே

- க2ர்வ: ப2லார்த2 உத்3ப3ாஹ4வம் அபஹராய - குள்ளமான ஒருவன் பழத்திற்காக தன் கைகளைத் தூக்கி இருப்பவை விட்டு
- ப்ராம்ஶும் யத2ா ஏவ அபி4யாசதி - உயரமான ஒருவவை எப்படி வேண்டுகிறானோ
- ஏவம் விசக்ஷண - இப்படி புத்திமான்
- ஸுது3ஷ்கரம் உபாய க3ணம் விஹராய - செய்ய கடினமான மீதி உபாயங்களின் கூட்டங்களை கைவிட்டு
- தஸ்ய ஸ்த2ானே த்வாம் நிவேஶயதி - அதன் ஸதாநத்தில் உன்னை நிறுத்துகிறான்

1.23 மலையாது மற்று பற்று அற்று- மற்ற உபாயங்களை விலக்குதல்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதின் ஐந்தாம் அர்த்தம் **மற்ற உபாயங்களை விலக்குதல்.**

முடியாத காரியங்களில் ஆசையை அறவே ஒழித்தல். சரி கொஞ்சம் முயன்று பார்ப்போமே என்று மற்ற யோகங்களில் சிறிது செய்ய ஆரம்பிப்பது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முயன்று பார்ப்போமே என்கிற அற்ப ஆசையை கைவிட்டு. (Abandon any desire on any other unfeasible means)

முடியாத காரியத்தில் **முதலிலேயே அசையை துறந்து** என்று பொருள். பெருவெள்ளமாய் உள்ள ஆற்றில் அகப்பட்டு தவிப்பவன், சின்ன நாணல் கயிற்றை பிடித்துக் கொண்டு கரை ஏற ஆசைப்படுவது போலே.

மலையாது மற்று பற்று என்று இங்கே சொன்னது, அப்பா, நீ மலைத்துபோய் ஒரு துறும்பினால் எல்லா காரியங்களையும் ஸாதித்து விடலாம் என பெருமைப்படாதே. ப்ரபத்தி உனக்கு ஒரு நொடியில் பலனைத் தரும். மற்றவை பார்ப்பதற்கு ஒரு வேளை சரி என்று தோன்றினாலும், படுகுழியில் தள்ளி விடும் என்பதை காட்டுகிறது.

ப4க3வத் ப்ரவ்ருத்தி விரோதி4
ஸ்வ ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:
ஸோமாஸியாண்டான் வார்த்தை

எம்பெருமானார் சிஷ்யரில் ஒருவர் ராமமிச்ரர் என்னும் ஸோமாஸியாண்டான் என்பவர்.

அவர் சொல்வது, "**நாம் எம்பெருமானை அடைய, செய்யும் எந்த முயற்சியும், எம்பெருமான் நம்மை அடைய செய்யும் முயற்சிக்குத் தடையாக உள்ளது. எனவே அப்படிப்பட்ட முயற்சியை தவிர்த்து இருப்பதே ப்ரபத்தி.**"

நித்யால ஸார்ஹ மப4யம் நிரபேக்ஷ மந்யை:
விஶ்வாதி4கார மகி2லா பி4மத ப்ரஸூதிம் ।
ஶிக்ஷா விஶேஷ ஸுபகம் வ்யவஸாய ஸித்தா:
ஸத்குர்வதே த்வயி முகுந்த3 ஷட3ங்க3 யோக3ம் ||
ஸ்வாமி தேசிகன் ஶரணாகதி தீபிகை 26

- **முகுந்த3** மோக்ஷத்தை அளிப்பவனே!
- **ஸித்தா: வ்யவஸாய ஸத்குர்வதே** - உறுதியான மனம் உடையவர்கள் எல்லாம் சிறந்ததாக மதிப்பது எது என்றால்
- **நித்ய அலஸ அர்ஹம்** - எப்போதும் சோம்பேறிகளுக்கும் உகந்ததாய்,
- **அப4யம் அந்யை: நிரபேக்ஷம்** - பயமின்றி வேறு துணை நாடாது,
- **விஶ்வ அதி4காரம்** - உலத்தவர் எல்லோரும் அனுஷ்டிக்கும்படியாய்,
- **அகி2ல அபி4மத ப்ரஸூதிம்** - வேண்டியவற்றை வாரி வழங்கும்படி
- **ஶிக்ஷா விஶேஷ ஸுபகம்** - நல்ல பயிற்சியால் செய்ய சுலபமாய் இருக்கும்
- **த்வயி ஷட்3 அங்க3 யோக3ம்** - உன்னிடம் செய்யப்படும் ஆறு அங்கங்களை உடைய ப்ரபத்தியை, என்றார்.

"ஹே தீபப்பிரகாச!, திடமான மனம் உள்ளவர்கள் பக்தியோகத்திற்கு இல்லாத பெருமை ப்ரபத்திக்கு இருப்பதை நன்கு அறிந்து அதையே பின்பற்றி மிகுந்த உயர்வை அடைகின்றனர். பக்தி யோகம் நிறைவேற பல இன்னல்கள்.

சோம்பேறிகள் அதைச் செய்ய முடியாது. மற்ற கர்ம ஞான யோகங்களை அங்கமாக செய்ய வேண்டும், அவை நன்கு செய்தோமோ, செய்கின்றோமோ என்ற பீதி எப்போதும். சில வர்ணத்தார் மட்டுமே செய்ய முடியும்."

- **A** - All the rewards
  - எல்லா பலன்களையும் தரக் கூடியது.
- **E** - Easy
  - ஆனால் ப்ரபத்தியோ மிகவும் சுலபமானது.
  - ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் வேண்டாது
- **I** - Instantaneous
  - ஆசாரியன் அருளால் ஒரு க்ஷணத்தில் நிறைவேறக் கூடியது.
- **O** - Only once
  - ஒரு தடவை செய்தாலே போதும்.
- **U** - Universal
  - ஜாதி வரம்பு கிடையாது
  - சோம்பேறிகளும் ப்ரபத்தி செய்து பலனை பெற முடியும்.

அதனால் ப்ரபந்நர்கள் மிக மதிப்பு பெறுகிறார்கள்," என்றார் ஸ்வாமி தேசிகன்.

தமிழில் உயிர் எழுத்து (vowels) என்றும் மெய் எழுத்து (Consonants) என்றும் இரண்டு வகை. இதை ஆத்மா, உடல் என்றும் கொள்ளலாம். அதில் முக்கியமானது உயிர் எழுத்து.

ப்ரபத்தியின் சுலபத்தை, ஆங்கிலத்தில் **AEIOU** என்பதன் மூலம் சுலபமாக ஞாபகம் வைத்துக் கொள்ளலாம்.

1.24 கலங்காது, கலவாது வழி நின்று – மஹாவிச்வாஸம்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்ற பதத்திற்கு ஆறாம் அர்த்தம் **மஹாவிஶ்வாசம்**. (unshakeable faith, unwavering trust, stanch belief, steadfast reliance)

ஒரு க்ஷணத்திலே செய்யக் கூடியதாய், அந்த க்ஷணமே பலன் கொடுக்க கூடியதாய், எல்லோராலும் செய்வதற்கு சுலபமாய் இருப்பது ப்ரபத்தி. இது இப்படி இருக்க, இதை விட்டு சந்தேகத்தால் வேறு ஒரு உபாயத்தை கலந்து செய்வது உண்டா?

இப்படி ப்ரபத்தியில் நம்பிக்கை குறைந்து கலங்கி, மற்ற உபாயங்களை கலந்து செய்வது, ப்ரம்மாஸ்திரத்தின் சக்தியில் சந்தேகப்பட்டு சணல் கயிறு கொண்டு கட்டுவது போல் ஆகும்.

ஞான ஸாரத்தில் எம்பெருமானாரின் முக்யமான சிஷ்யரில் ஒருவரான **யஜ்ஞமூர்த்தி என்னும் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் நாயனார்,** இதை ஸ்பஷ்டமாக தெரிவித்தார்.

> **சரணாகதி மற்றோர் சாதனத்தைப் பற்றில்**
> **அரணாகா * அஞ்சனை தன் சேயை - முரண் அழியக்**
> **கட்டியது * வேறு ஓர் கயிறு கொண்டு ஆர்ப்பதன் முன் ***
> **விட்ட படை போல் விடும்**
>
> அருளாளப் பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 28

அதற்கு மணவாள மாமுநிகள் அருளிச் செய்த வியாக்கியானத்தை கீழே காணலாம்.

> **இனி இப்பாட்டில், பரமபதத்தில் போமவர்களுக்கு இப் பேற்றுக்குக்கடியாகச் சொன்ன சரணாகதியானது, தன்னை அவலம்பித்து நிற்குமவன் உபாயந்தரத்திலே கைவைக்கில் தான் ரக்ஷகம் ஆகாதே, தன்னைக் கொண்டு நழுவும்படியை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார்.**
>
> மணவாள மாமுநிகள் வியாக்யானம்

- **சரணாகதி -** (மஹா விஶ்வாஸபூர்வகமாக அகிஞ்சநாதிகாரியாலே அநுஷ்டிக்கப்படும் ப்ரத்தியானது) சேதனன் தான் அகிஞ்சனன் என்று அறிந்து பெரும் நம்பிக்கையுடன் அனுஷ்டிக்கிறான் ப்ரபத்தியை

- **மற்றோர் ஓர் சாதனத்தைப் பற்றில்** ஸ்வயத்ந ரூபக கர்மஜ்ஞாநாதிகளான உபாயங்களில் ஒன்றை பேற்றுக்கு ஸாதனமாக அவலம்பிக்கில் (இந்த ப்ரபத்தியை. அதற்கு பிறகு எதற்கும் இருக்கட்டும் (as a backup or supplementary) என இன்னொரு உபாயத்தை அதே மோக்ஷ பலனுக்காக செய்தால்

- **அரணாகாது =** தான் ரக்ஷகம் ஆகாமல் நழுவிப்போகும் தான் அவனைக் காக்காது விலகிப் போகும் (எப்படி என்னில்)

- **அஞ்சனை தன் சேயை முரண் அழியக் கட்டியது -** (அஞ்ஜநாபுத்ரனான திருவடியை அவர் பலம் அழியும்படியாய் ராக்ஷஸர்களாலே கட்டப்பட்டால்) அஞ்சனையின் மகனான அனுமானை, அவர் பலம் அழியும்படி பிரம்மாஸ்திரத்தால் அசுரர்கள் கட்டியிருந்தது.

- **வேறு ஓர் கயிறு கொண்டு ஆர்ப்பதன் முன்** – (தன் பக்கல் விச்வாஸம் இல்லாமல் வேறு ஒரு சணல் கயிறு கொண்டு கட்டுகையில் ப்ரவ்ருத்தமானபோதே) அந்த ராக்ஷஸர்கள் அதன் மேல் நம்பிக்கை இல்லாது) வேறு ஒரு சணல் கயிறால் கட்ட

- **விட்ட படை போல் விடும் -** (தான் விட்டுப்போன ப்ரஹ்மாஸ்த்ரம் போலே இவனைவிட்டு நீங்கிப்போகும்) அந்த பிரம்மாஸ்திரம் தானே விலகிப் போனது போல, சேதனன் செய்த ப்ரபத்தி நழுவிப்போகும் (slips away).

அதனால் இங்கே **கலங்காது, கலவாது வழி நின்று** என்பது மஹா விஶ்வாசத்தை காட்டுகிறது. ப்ரம்மாஸ்திர ந்யாயத்தை அறிவுறுத்துகிறது.

வேண்டாது சரணெநறி வேறோர் கூட்டு *
வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும் /

என்று ஸ்வாமி தேசிகனும் அதிகார ஸங்க்ரஹத்தில் ஸாதித்ததை கீழே கண்டோம்.

1.25 பிரம்மாஸ்திர ந்யாயம் - ஸந்த்குமார ஸம்ஹிதை

ப்ரபத்தே: க்வசிதப் யேவம் பராபேக்ஷா ந வித்யதே ।
ஸா ஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா ।।
ஸக்ருத் உச்சாரிதா யேந தஸ்ய ஸம்ஸார நாஶினீ ।
ராக்ஷஸாநாம விஸ்ரம்பாத் ஆஞ்ஜநேயஸ்ய பந்தநா ।।
யதா விகளிதா ஸத்ய: த்வமோகாப்ய ஸ்த்ர பந்தநா ।
ததா பும்ஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத் ।
தஸ்மாத் விஸ்ரம்பயுக்தாநாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத் ।।

ஸநத்குமார ஸம்ஹிதை

- ஏவம் ப்ரபத்தே பராபேக்ஷா க்வசிதபி ந வித்யதே = இப்படி ப்ரபத்திக்கு மற்றொன்றை எதிர்பார்த்து இருப்பது ஒரு இடத்திலும் இல்லை
- ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா = அதுவோ எல்லா இடத்திலும் எல்லோருக்கும் ஆசைப்படுவதை எல்லாம் அளிக்கிறது
- யேந ஸக்ருத் உச்சாரிதா தஸ்ய ஸம்ஸார நாஶினி = எவனால் ஒரு தடவை சொல்லப்பட்டதோ அவனுடைய ஸம்ஸாரத்தை அறுக்கும்
- அஸ்த்ர பந்தநா அமோகா அபி ஆஞ்ஜனேயஸ்ய பந்தநா = அஸ்திரத்திற்கு கட்டுப்பட்டு வீண் போகாது ஆயினும் அனுமாருடைய ப்ரம்மாஸ்திர கட்டு
- ராக்ஷஸாநாம் அவிஸ்ரம்பாத் யதா ஸத்ய: விகளிதா = அரக்கர்களுடைய நம்பிக்கை குறைவால் எப்படி அப்போதே நழுவி விட்டதோ
- ததா பும்ஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்தி ப்ரச்யுதா பவேத் = அப்படியே மனிதர்களுடைய நம்பிக்கை குறைவால் சரணாகதி நழுவினதாய் ஆகும்.
- தஸ்மாத் விஸ்ரம்பயுக்தாநாம் ஸா அசிராத் முக்திம் தாஸ்யதி = எனவே நம்பிக்கை உடையவர்களுக்கு அந்த ப்ரபத்தி சீக்கிரமே மோக்ஷத்தை கொடுக்கப் போகிறது

1.26 ஆசிரியன் இயம்பினனே

என்று அழியாத வேதங்களின் ஆதி குருவான பகவான், பார்த்தசாரதி, நம் இயலாத நிலமையைக் கண்டு நம்மேல் வெறுப்பு கொள்ளாமல், இந்த வழியை (ப்ரபத்தியை) அருளினான்.

ஆசிரியன் என்று சொல்லும்போது வேதாந்தாசாரியாரான ஸ்வாமி தேசிகனையும் சொல்லும். ப்ரபத்தி வித்தையைப் பற்றி தேசிகன் பல இடங்களில் அதி அற்புதமாக ஸாதித்தை காட்டுகிறது.

ப்ராய: ப்ரபத3நே பும்ஸாம் பௌந: புந்யம் நிவாரயந் ।
ஹஸ்த: ஶ்ரீரங்க3ப4ர்து: மாம் அவ்யாத்3 அப4யமுத்3ரித: ।।
ஸ்வாமி தேசிகன், நிஷேப ரக்ஷை மங்கள ஸ்லோகம், ஶ்ரீந்யாஸ திலகம் 2

ப்ரபத3நே பும்ஸாம் ப்ரபத்தியில் சேதனர்களுக்கு,
பௌந: புந்யம் பல தடவை செய்வதை
ப்ராய: நிவாரயந் மறுப்பது போல்
ஶ்ரீரங்க3ப4ர்து: ஹஸ்து ஸ்ரீரங்கநாதனுடைய (வலது) திருக்கையானது
அப4யமுத்3ரித: மாம் அவ்யாத்3 அபய முத்திரை உடையது, (அது) என்னை காத்தருள வேண்டும்," என்று, ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்.

என்று ஸக்ருத் காரியமாக ஒரு தடவையே செய்தால் போதும் என்கிறபடி உள்ளது என்று விளக்கினார்.

ஸ்வாமி தேசிகன் நிக்ஷேப ரக்ஷையில் **(ப்ரபத்தியைப் பற்றி வரும் கலக்கங்களை தகர்த்து தெளிவை அளித்தல்)** ப்ரபத்தியின் பெருமையை விவரமாக அருளியுள்ளார்.

1.27 ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய – ந்யாஸ விம்ஸதி

ந்யாஸாதே3ஶோ4 த4ர்ம த்யஜந வசநத:

அகிஞ்சநாதி4 க்ரியோக்தா
கார்பண்யம் வாங்க3முக்தம் ப4ஜந வதி3 தரா
பேக்ஷணம் வாப்யபோட4ம் ।
து3ஸ்ஸாதே4ச்சா உத்யமெள வா க்வசித்3 உபஸமிதெள
அந்ய ஸம்மேளநே வா
ப்3ரஹ்மாஸ்த்ர ந்யாய உக்தஸ் ததி3ஹ ந விஹதோ
த4ர்ம ஆஜ்ஞாதி3 ஸித்3த4: ।।
ஸ்வாமி தேசிகன், ஶ்ரீந்யாஸ விம்ஸதி 15

ந்யாஸ ஆத3 ஶேஷ ஶ த4ர்ம த்யஜந வசநத: = ப்ரபத்தியை விதிக்கும் இடங்களில் தர்மங்களை விட்டு விடு என்கிற சொல்லால்

1. அகிஞ்சந அதி4க்ரிய உக்தா = வேறு உபாயங்களை செய்ய முடியாதவன் தகுதி சொல்லியது. (அசக்தியை உணருதல்)

2. வா கார்பண்யம் அங்க3ம் உக்தம் = அல்லது கார்ப்பண்யம் அங்கமாக கூறப் பட்டது (ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்)

3. வா ப4ஜநவத்3 இதர அபேக்ஷணம் அபி அபோட4ம் = அல்லது பக்தி யோகத்தைப்போல் மற்ற உபாயங்களை எதிர்பார்த்தலும் மறுக்கப் பட்டது (ப்ரபத்தி பூர்த்தியானது)

4. வா க்வசித்3 து3ஸ்ஸத4 இச்சா உத்யெள = அல்லது ஒருவனிடம் செய்ய முடியாதலில் ஆசையும் (முடியாதலில் ஆசை ஒழித்தல்)

5. உத்யெள உபஸமிதெள = முயற்சியும் மறுக்கப்பட்டன (வீண்முயற்சியை விலக்கல்)

6. வா அந்ய ஸம்மேளநே ப்3ரஹ்மாஸ்த்ர ந்யாய உக்த: = அல்லது வேறு உபாயத்தை கலத்தலும் ப்ரம்மாஸ்திரத்தின் கதி வந்து சேரும் என்பது கூறப்பட்டது (ப்ரம்மாஸ்திர ந்யாயம்)

தத் இஹ ஆஜ்ஞா ஆதி3 ஸித்3த4: த4ர்ம ந விஹத: = எனவே தர்மங்களை சொல்லும் இடங்களில்கட்டளை போன்றவற்றால் ஏற்பட்ட தர்மம் விலக்கியது என ஆகாது.

என்று **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பதற்கு இந்த ஆறு அர்த்தங்களையும் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீந்யாஸ விம்சதியில் அருளினார்.

1.28 தேசிகன் துவயச் சுருக்கில் அருளியது

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்ற வாக்யத்திற்கு பொருள் ஸ்வாமி தேசிகன் அருளுகிறார்

> **வெறுமை உணர்ந்து அது முன்னிட்டு * வேறு அங்கம் இல்லை எனக் * குறியவன் இன் நறவு எட்டக் * குறித்திடும் கோணை துறந்து /**
> **உறும் அயன் அத்திரன் என்னப் * பொறா நிலை ஓர்ந்திட * ஓர் அற நெறி அன்று உரைத்தான் * அழியா அறம் ஆயினனே**
> ஸ்வாமி தேசிகன், சரமஸ்லோகச்சுருக்கு 2

1. **வெறுமை உணர்ந்து** - பலனை அடைவதில் தன்னிடம் ஒரு உபாயமும் இல்லாமையை உணர்ந்து (அசக்தியை உணருதல்)

2. **அது முன்னிட்டு** – அந்த இல்லாமையையே தகுதியாகக் கொண்டு (அகிஞ்சன்ய அநுஸந்தானம்)

3. **வேறு அங்கம் இல்லை எனக்** – வகுத்த அங்கங்களைத் தவிர வேறு அங்கம் இல்லை என்று (ப்ரபத்தி பூர்த்தியானது)

4. **குறியவன் இன் நறவு எட்டக் குறித்திடும் கோணை துறந்து** – குள்ளமான ஒருவன் (எட்ட முடியாத) இனிமையான கொம்புத் தேனை தனக்கு லக்ஷியமாகக் கொண்டு (வீண்முயற்சியை விலக்கல்)

5. அதை அடைய முயல்வதால் உண்டாகும் துன்பத்தை விட்டு ஒழித்து (முடியாதலில் ஆசை ஒழித்தல்)

6. **உறும் அயன் அத்திரம் என்ன பொறா நிலை ஓர்ந்திட** - வலிமையான ப்ரம்மாஸ்திரம் வேறு ஸாதனத்தை பொறுக்க முடியாத நிலமையை நன்கு அறிந்து (ப்ரம்மாஸ்திர ந்யாயம் நினைவுறுதல்)

ஓர் அற நெறி - ஒரு தர்ம மார்க்கத்தை
அழியா அறம் ஆயினன் - அழியாத தர்மத்தின் ஸவ்ரூபமான கண்ணன்
அன்று உரைத்தான் - அன்றைக்கு போர்க்களத்தில் உபதேசித்தான்.

என்று **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்பதற்கு இந்த ஆறு அர்த்தங்களையும் ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கில் அருளினார்.

1.29 முடிவுரை

கடைசியாக, பகவான் கிருஷ்ணன் உத்தவருக்கு செய்த உபதேசத்தை நினைவு கொள்கிறோம் இங்கே.

> **"உத்தவரே எழுந்திருப்பீர். சாஸ்திரத்தை செய்யும்படி ஆணையிட்டது, அதை வேண்டாம் என தவிர்க்க கட்டளையிட்டது - உலகத்தில் ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி இவறறை எல்லாம் விட்டு ஒதுங்குவது. கேட்டது, கேட்கப்பட்டது எல்லாவற்றையும் தவிர்ப்பது இவை எல்லாம் விட்டு ஒன்றே ஒன்று மட்டும் செய்வீர். ஸர்வத்திற்கும் ஆத்மாவாக இருக்கும் என்னை மட்டுமே சரணமாக அடைவாய். நீ பயம் இல்லாது சுகமாக வாழலாம்," என்றான்.**
> ஸ்ரீமத் பாகவதம் 1-12-14

இது தர்ம த்யாகத்தை போதிக்கவில்லை. மோக்ஷத்தை அடைய ஆசை உடைய அகிஞ்சனான சேதனனுக்கு என்ன வழி என்று காட்டுவது. அது எம்பெருமானை, அவன் ஒருவனையே சரணாக அடைவதே.

விடச் சொன்னது ஸாதிக்க முடியாத கர்மாக்களில் ஆசை வைப்பது. அதில் முயற்சி செய்வது.

2 - மாம்

திருமால் குறையறியா இறையாய் *
திருமதுரையில் தாம் இறங்கி*
அருளால் அறங்காக்க தூதனாய் *
அவனியின் சுமைக்காக இரங்கி *
மருளால் மருண்ட பார்த்தன்தேரில் *
பாகனாய் மன்னன் தேற்றித் *
தருவாய் அடிமைக்கு திருமேனியைத் *
தாம் என்று தொட்டுக் காட்டி

குறையறியா திருமால்	= குறை ஒன்றும் இல்லாத ஸ்ரீமந் நாராயணன்
அவனியின் சுமைக்காக	= பூலோகத்தின் பாரத்தைக் கண்டு
இரங்கி	= மனம் வருத்தப்பட்டு
அருளால் அறங்காக்க	= தம்முடைய திருவருளால் தர்மத்தை நிலை நாட்ட
திருமதுரையில்	= வட மதுரையில்
இறையாய்	= ரக்ஷகனாய்
தாம் அவதரித்து	= தானே அவதரித்தான் (ஆவிர்பவித்து)
தூதனாய்	= தூது செல்பவனாய் நடந்து
மருளால் மருண்ட	= அஞ்ஞானத்தால் பீதியடைந்த
பார்த்தன் தேரில்	= அருச்சுனன் ரதத்தில்
பாகனாய்	= அதை ஒட்டும் சாரதியான
மன்னன்	= துவராபதியின் மன்னனான கிருஷ்ணன்
தேற்றி	= துக்கத்திற்கு ஆறுதலையும், போக்கும் வழியும்
தாம் என்று	= நான் ஒருவனே என்று
தொட்டுக் காட்டி	= தம் சரீரத்தைத் தொட்டு காண்பித்து
அடிமைக்கு	= அருச்சுனன் போன்ற எல்லா சேதனர்களுக்கு
தருவாய்	= அருள் புரிவாய்

2.1 முன்னுரை

பகவத் கீதையை தன் கருணையால் எல்லா ஜீவராசிகளும் உய்விக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்துடன் உரைத்த பகவான் சரம ஶ்லோகத்தில் மாம் என்று தன் திருமேனியைத் தொட்டுக் காட்டுகிறான்.

மிக உயர்ந்த இடத்தில் உள்ள பகவானை, மிகவும் தாழ்ந்த இடத்தில் உள்ள நம்மைப் போன்ற சேதனர்கள் அணுகி, அறிந்து, அவனையே அனுபவிப்பதற்கு உகந்ததாய் அவனிடம் பொருந்தியிருக்கும் நான்கு முக்கிய குணங்களை அவை கண்பிக்கின்றன. வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌஸீல்யம், ஸௌலப்யம்.

2.2 ஶ்ரீயபதித்வம் - திருமால்

இப்படி அபிமதத்துக்கு (ஆசைப்படும் பலனுக்கு) வேறு கைம்முதல் அற்றுப் பற்றிலார் பற்ற தன்னை மாம் ஏகம் சரணம் என்கிறான்.

மாம் ஏகம் என்கிறது என்னை ஒருவனையும் என்றபடி. விஹிதத்தினுடைய (விதித்த ப்ரபத்தி) அநுஷ்ட்டாந ப்ரகாரத்தை (செய்யும் முறை) ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் கண்ட்டோக்தமான வைஶிஷ்ட்யத்தையும் (ஶ்ரீமத்-ஶ்ரீமதே என்று வெளிப்படையாய் கூறப்பட்ட பிராட்டி ஸஹிதத்தை)

ஏஷ நாராயண ஶ்ரீமாந்
இத்யாதிகளையும் அடியொற்றி இங்கே அநுஸந்திப்பது. இங்கு ஆஶ்ரயணீயதைக்கு உறுப்பான ஸௌலப்யாதி குண பூர்த்தியையும் அதில் ஏக வசநம் உண்டாயிருக்க மிகுதியான ஏகம் என்கிற பதத்தாலே இனிச்சுமையும் (ப்ரபத்திக்கு பின் வேறு ஒரு உபாயம் என்ற பாரத்தை சுமக்க வேண்டாமல்) எடுக்காமைக்கு நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம்.
ஸ்வாமி தேசிகன், ஶ்ரீ ரஹஸ்யத்ரயசுளகம்

சேதனன் தான் ஆசைப்படும் மோக்ஷ பலனுக்கு சாதனமான பக்தியோகம் போன்றவற்றில் கைம்முதல் இல்லாது அநந்யகதியராய் வந்து அடையும்படி நிற்கும் தன்னை **மாம் ஏகம்** என்கிறான்.

மாம் என்று சொல்லும்போது எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லா நிலையிலும் **(ஸர்வ தேஶ, ஸர்வ கால, ஸர்வ அவஸ்தைகளிலும்)** பிரியாமல் அவனுடன் என்றும் கூடி பொருந்தியிருக்கும் பிராட்டியையும் சேர்த்து என்பதை **"திரு"** என்ற பதத்தால் சொல்லப்பட்டது இங்கே.

இது த்வயத்தில் **ஶ்ரீமந் நாராயண, ஶ்ரீமதே நாராயணாய** என்று பிராட்டி உபாய உபேய தசையில் பிரியாது இருப்பதை காட்டியது. ஆக **மாம்** என்பது, **ஶ்ரீமானுமாய்**, **நாராயணனாயும்** இருக்கும் என்னை ஒருவனையே ஶரணமாக அடை என்று பொருள்.

மாம் என்பது உபாயமாக பற்றுவதற்கு வேண்டிய ஸௌஸீல்யம், ஸௌலப்ய குணங்கள் நிரம்பியுள்ள என்னை என்று பொருள்.

2.3 மாம் என்றால் எம்பெருமான் ஸ்வரூபம் மட்டும் அல்ல

இப்படி அஶக்யங்களிலும் அநபேக்ஷிதங்களிலும் (வேண்டாதவை) **கைவாங்கி** (ஒய்ந்து போய்) **நின்றவனுக்குக் கைம்முதலாய் ஸநாதந தர்மமான** (ஸித்தோபாயமான) **தன்னை "மாம் ஏகம்" என்கிறான். பரஸ்வீகார கர்த்தாவைக்** (பொறுப்பை ஏற்றுக் கொள்பவன்) **காட்டுகிற இப் பதங்களில் தர்மிஸ்வரூப** (பகவானுடைய ஸ்வரூபம்) **மாத்ரத்தை விவக்ஷிகை** (கூறல்) **உசிதம் அல்லாமையாலே ஸ்வரூப நிரூபக தர்மங்களோடே கூட** (ஸ்வரூபத்தை நிருபிக்கும் குணங்களாலான)

அகலகில்லேன் இத்யாதிகளிற்படியே ஆஶ்ரயணீயதைக்கு (அடியவரால் உபாயமாய் அடைதல்) **உறுப்பான ஸஹதர்மசாரிணீ**

ஸம்பந்தாதி விஶேஷணங்களும் இங்கே அநுஸந்தேயங்கள். ஸர்வகுணாஶ்ரய விஶேஷங்களான (எல்லா குணங்களையும் உடைய எம்பெருமானை) மாம் அஹம் என்கிற பதங்களுக்கு அடைவே ஸௌலப்யத்திலும், ஸ்வாதந்திரியத்திலும் ப்ரதாந்யேந (முக்யமான) நோக்கு. இவை ஒன்றை ஒன்று விட்டால் அநுபவஹீவ்யங்களாம் (பயன்படாதன).

இப்படி, சேதனன்

- தன்னால் இயலாத பக்தியோகம் போன்றவற்றிலும்,
- ப்ரபத்திக்கு தேவையில்லாத செயல்களில் முயலாமலும் இருக்க,

அவனுக்கு எம்பெருமானே கைம்முதலாய் நின்று

- ஸித்தோபாயமாய் இருப்பதைக் காட்டி
- "என்னையே சரணம் புகுவாய்" என்கிறான்.

என்னை என்றால் ப்ரபத்தி செய்பவனது பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானைச் சொல்லுகிறது.

மாம் என்ற சொல் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை மட்டும் கூறாது. ஸ்வரூப நிரூபக தர்மங்களான ஸத்யம், ஞானம், அநந்தம், ஆநந்தம், அமலத்வம், ஶ்ரீயப்பதித்வம் என்ற ஆறும் மற்றைய ஸௌஸீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களும் அவனுடைய திவ்யமான திருமேனியும் சேர்த்து அநுஸந்திக்க வேண்டும்.

2.4 மாம் என்பது ஸௌலப்யம், அஹம் என்பது பரத்வம்

மாம், அஹம் இந்த இரண்டு சொல்லும் எம்பெருமானை குறிப்பன. இரண்டும் அவனுடைய அளவற்ற கல்யாண குணங்களை காட்டும்.

மாம் என்ற பதம் சரம ஶ்லோகத்தின் முதல் வாக்யத்தில் வருகிறது. முதல் வரி உபாய விசேஷத்தை காட்டுவதால், மாம் என்பதற்கு **ஸௌலப்யம் அல்லது எளிமை** என்பதையே முக்யமான பொருளாக ஆசாரியர்கள் கொண்டார்கள்.

அஹம் என்ற சொல் பின் வரியில் அதாவது **பலனைச்** சொல்வதில் வருவதால் அது மோக்ஷ பலனைத் தரக்கூடிய **ஸ்வாதந்திரியம்** என்னும் குணத்தை காட்டும் என்றனர் முன்னோர்.

ஒருவனிடம் **பரத்வம்** இருந்து **ஸௌலப்யம்** இல்லாவிடில் அவனை அணுக முடியாது. அப்படி அணுகினாலும், வேலைக்காரன் செய்வது போல் நிர்பந்தத்தினால் கைங்கர்யம் செய்வான். அதில் ஆனந்தம் இல்லை

அதுவே **ஸௌலப்யம்** இருந்து **பரத்வம்** இல்லாவிடில் அவன் பலன் கொடுக்க வல்லமை இல்லாதாவன் ஆகிறான். தவிர அணுகுவதற்கு மிக எளியவனாதால் பயமில்லாமல், இஷ்டப்படி நடக்கலாம் என்பதால் கைங்கர்யம் செய்ய வாய்ப்பில்லை.

எனவே ஸுலபமாக மட்டுமுள்ள புல் பூண்டு போல் இல்லாது, கைக்கு எட்டாத மேரு மலை போல் இல்லாது அணுக எளியவன் ஆனதால், ஸுலபனாய் உள்ள சரண்யன் அஶ்ரயிக்க உரியவனாயும், அநுபவிக்கப்படும் பலானகவும் உள்ளான்.

2.5 மாம் - எம்பெருமான் காத்துக் கொண்டு இருப்பவன்

மாம் - ஸர்வ ரக்ஷகனாய், உனக்கு கையாளாய், உன் இசைவு பார்த்து, உன் தோஷத்தை போக்யமாகக் கொண்டு, உனக்கு புகலாய், நீர் சுடுமாபோலே சேர்ப்பாரே பிரிக்கும்போதும் விடமாட்டாதே ரக்ஷிக்கிற என்னை

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 211

மாம் என்றால்

- **ஸர்வ ரக்ஷகனாய்** - நான் உன்னை ரக்ஷிப்பானோ என்ற சந்தேகம் கொள்ளாதே. அனைவரையும் ரக்ஷிப்பவன் நான்
- **உனக்கு கையாளாய்** - தவிர நான் உனக்கு பணியாளான இருப்பேன். நீ ஆணையிட்டு பெறலாம், அருச்சுனன் படை இரண்டின் நடுவே தேரை நிறுத்து என்கிறாற்போலே
- **உன் இசைவு பார்த்து** - நீ என்னை காத்தருள வேண்டும் என்கிற வார்த்தைக்காக காத்துக் கொண்டு இருக்கிறேன் (**ரக்ஷா பேஷாம் ப்ரதீக்ஷதே** - லக்ஷ்மீ தந்த்ரம் 17-78)
- **உன் தோஷத்தை போக்யமாகக் கொண்டு** - அர்ஜீனா, தகாத இடத்தில் நட்பும், இரக்கமும் கொண்டு உன் தர்மத்திலே குழம்பி தோஷத்துடன் இருக்கும் உன்னை இனிமையாகவே கொண்டுள்ளேன்
- **உனக்கு புகலாய்** - உன் குற்றம், குறை கண்டு பயப்படாதே. நானே அனைவருக்கும் புகலிடம்
- **நீர் சுடுமாபோலே சேர்ப்பாரே பிரிக்கும்போதும் விடமாட்டாதே** - நீருக்கு குளிமை இயற்கை. ஆனாலும் சில சமயம் அதுவும் சுடும். அது போல கருணையே ஆன பிராட்டி உனக்கு புருஷகாரமாய் உன்னை சிபாரிசு பண்ணினாலும், சில சமயம் சோதனை செய்வாள். அப்போதும் நான் அவள் கூறுவதை மறுத்து பேசி உன்னை காப்பேன்

தன்னடியார் திறத்தகத்துத் *
தாமரையாள் ஆகிலும் சிதகு உரைக்குமேல் *
என்னடியார் அது செய்யார் *
செய்தாரேல் நன்று செய்தார் போலும்
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 4-9-2

பெரியாழ்வார் பகவான் நமக்காக பரிந்து பேசுவதாக சொல்கிறார். பிராட்டி கருணையே வடிவெடுத்தவள். அவள், எதோ தப்பித் தவறி, ஒரு வேளை, ஒரு பேச்சுக்கு, சேதனனிடம் குறை கண்டால்கூட பகவான் விட்டுக் கொடுப்பதில்லை. அவன் சொல்கிறான், "என்னுடைய அடியார்கள், தவறே செய்வதில்லை. அப்படி செய்தாலும், அது குறை இல்லை, எனக்கு உகந்ததே ஆகும்" என்று.

2.6 மாம் – திருமேனியைத் தாம் என்று தொட்டுக் காட்டி

கண்ணன் **மாம்-என்னை** என்று தன்னைத் தொட்டுக் காட்டினான். அத்தால் அவன்

- கண்ணுக்கு எதிரே நின்று எளிதாய் அடையக்கூடியவன்.
- பர, வ்யூஹங்களைபோல் தூரத்தில் அடைய முடியாதபடி இல்லை
- அக்நி, வாயு, இந்திரன் போன்றவர்கள் உள்ளே அந்தர்யாமியாக இருந்தாலும் அவர்களுடைய உடலைச் சொல்லவில்லை. அங்கே எம்பெருமானின் உயர்ந்த திருமேனி இல்லை.

பிள்ளைலோகாசாரியாரும் முமுக்ஷுப்படியில் இதையே அருளினார்.

> **இத்தால் பர வ்யூஹங்களையும் தேவதா அந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது**
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 212

2.7 மாம் – திருமேனியைத் தாம் என்று தொட்டுக் காட்டி

இந்த காலத்தில் வேலைக்கு interview போனால், Ok. Mr. Rajagopalan, Tell me about yourself" என்பார்கள். அதைப்போலே இங்கே கிருஷ்ணனின் resume பார்த்து விட்டு, உன்னை பற்றி சொல் என்றால் **மாம்-என்னை** என்று அவனுடைய achievement listஐ சொல்வது போல் இருக்கிறது.

இதில் மாம் என்ற பதத்தாலே விஶேஷித்து

- **ஸர்வலோக ஹிதார்த்தமாக, அவதீர்ணனாய், ஸர்வ ஸுலபனாய்,**
- **"என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது" என்று ரக்ஷணத்திலே அவஸர ப்ரதீக்ஷனாய்** (சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருப்பவன்)
- **தன் வைபவம்** (பெருமை) **கண்டு வொருவாதபடி** (அகலாதபடி) **தன்னைத் தாழ விட்டு**

- உபாய தெசையிலும் போக்யனாம்படியான மாதுர்யத்தை (இனிமையை) உடையவனாய்,
- ஆஶ்ரித விஶ்லேஷ அஸஹிஷ்ணுதையாலே (அடியவர் பிரிவை பொறுக்காதவனாய்)
- ஸுப்ரவேஸனாய் (அணைத்துக் கொள்ள ஏற்றவன்),
- அவதீரித ஸ்வபர தாரதம்யமான (தனக்கும் பிறருக்கும் உள்ள வேற்றுமையைக் காணாத) ஆர்ஜவத்தாலே (நேர்மையாலே)
- நெறி எல்லம் எடுத்து உரைத்த என்னும்படி தத்வ ஹித உபதேஶங்களில் தத்பரனாய் (ஈடு பட்டவனாய்)
- தன்னை ஆஶ்ரயிக்கைக்கு பரிபூர்ணனான தனக்கு ஸர்வஸ்வதாநமாகக் (செல்வம் எல்லாம் அளித்தல்) கொண்டு அவர்களை உதாரரக்கி (கொடையாளி)
- ஸவிபூதிகனான (லீலா விபூதி, நித்ய விபூதி இரண்டையும் உடையவன்) தன்னை வழங்க ஒருப்பட்டு நிற்கிற வள்ளல்

மணி வண்ணனான தன் நிலையை காட்டுகிறான்

ஸ்வாமி தேசிகன், ஸாரசாரம்

இங்கு மாம்-என்னை என்று பகவான் தொட்டுக் காடும்போது தன்னைப் பற்றி சொல்கிறான். அவன் கூறும் அம்சங்கள்

- நன்மை செய்யவே என்னுடைய அவதாரம்
- அனைவரும் வெட்கமின்றி, பயமின்றி என்னை அணுகும்படி எளிமை
- என்னை காக்க வேண்டும் என்று நீங்கள் எப்போது கேட்பீர்கள் என காத்துக் கொண்டு, உங்களை ரக்ஷிக்க நேரத்தை நோக்கி இருக்கிறேன்
- நான் உயர்ந்தவன். ஆயினும் என்னைக் கண்டு நீங்கள் பயப்படாமல் இருக்க தாழ்ந்து நிற்கிறேன்.
- நானே உபாயம். நீங்கள் என்னை பற்றும்போது, உபாய தெசையிலும் போக்யமானவன்
- என் அடியவர்களின் பிரிவை நான் பொறுக்காதவன்
- எனக்கும் பிறர்க்கும் உள்ள வேற்றுமையை தள்ளும்படியான நேர்மை உடையவன். அதனால் எல்லோருக்கும் தத்வ ஞானத்தையும், உபாய விசேஷத்தையும் உபதேசிக்கிறேன்.

- நான் **பரி பூர்ணன்**. மற்றவரால் எனக்கு கொடுக்கக் கூடியது என்பது எதுவும் இல்லை. இருந்தாலும், என் அடியவர்களை வள்ளல்களாக நினைத்து எனக்கு அளிப்பதில் மகிழ்கிறேன்
- அவர்களுக்கு உபய விபூதியிலும் வேண்டியவற்றை அளித்து நானும் **வள்ளலாக** இருப்பேன்.

நீல மணி வண்ணனான எம்பெருமான் இவற்றுடன் தன் நிலையை **மாம்** என்று சுட்டிக் காட்டுகிறான்

2.8 குணங்கள்- தண்டிக்கவும், அருள் புரியவும்

ஶரண்ய குணங்களில் ஸர்வ ஸ்வாமித்வ ஸர்வஜ்ஞத்வ ஸர்வ ஶக்தித்வாதிகள் நிக்ரஹ (தண்டிக்க) **அநுக்ரஹ** (அருள் புரிய) **ஸாதாரணங்கள்** (பொதுவானவை).

காருண்யமும் ததநுபந்திகளான (அத்துடன் சேர்ந்த) **வாத்ஸல்யாதிகளும் அநுக்ரஹத்திற்கு ஏகாந்தங்கள்** (அதற்கு மட்டுமே உள்ளவை).

ஆகையால் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் காருண்ய ஏகாந்திகளாய்ப் (கருணை ஒன்றிலே ஊன்றியவராய்) **போந்தார்கள்.**

ஸ்வாமி தேசிகன், ஸாரசாரம்

எம்பெருமானிடம் உள்ள சில குணங்கள் மிக உயர்ந்தவை.

- **ஸர்வ ஸ்வாமி** - எல்லோருக்கும் ஸ்வாமி
- **ஸர்வஜ்ஞத்வம்** - எல்லாவற்றையும் அறிதல்
- **ஸர்வ ஶக்தித்வம்** - எதையும் செய்ய சக்தி.

இவை ரக்ஷிப்பதற்கும் (அருள் செய்யவும்) பயன்படும். தண்டிக்கவும் பயன்படும்.

ஆனால் எம்பெருமானிடல் உள்ள சில குணங்கள் அருள் புரிய் மட்டுமே உள்ளன. அவை தண்டிப்பதற்கு பயன்படாது.

- அன்பு
- அதன் ஸம்பந்தமான கருணை
- அதன் மிகுதியான வாத்ஸல்யம் போன்றவை

இவை அருள் புரிய மட்டுமே. அதனால் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் இந்த குணங்களிலேயே ஆழ்ந்து கிடந்தனர்.

2.9 அருள் புரியம் குணங்கள்

மாம் என்ற இடத்திலே ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான சில குணங்களையும் அஹம் என்ற இடத்திலே பலப்ரதாநத்துக்கு ஏகாந்தமான சில குணங்களையும் அநுஸந்தித்து போருவாரும் உண்டு.

ஆஶ்ரயணத்திற்கு ஏகாந்தமான குணங்களாவன – வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌஸீல்யமும், ஸௌலப்யமும்

பிள்ளைலோகாசாரியார், தனிச்சரமம்

2.10 குறை அறியா - வாத்ஸல்யம்

தன்னை அடைந்தவன் குற்றங்களை பொருட்படுத்தாது, அதைத்தள்ளி, அவனை ஏற்றுக் கொள்ளும் கருணையே வாத்ஸல்யம். பசு தன்னுடைய கன்றிடம் எவ்வளவு தோஷங்கள் இருந்தாலும் அதை கவனிக்காது. வத்ஸம் என்றாலே கன்றுக் குட்டி. தாய்ப்பசு தன் கன்றிடம் காட்டும் அளவிலாத கருணையே வாத்ஸல்யம் என்றனர்.

அதைப்போல் பகவானும் தன்னடியார்களிடம் உள்ள தோஷங்களை பொருட்படுத்த மாட்டாத உயர்ந்த திருக்கல்யாண குணம். இதை **"குறை அறியா"** என்ற பதம் காண்பிக்கிறது.

வண்டு படி துளப மார்பனிடைச் செய்த பிழை *
உண்டு பல என்று உளம் தளரேல் * - தொண்டர் செய்யும்
பல்லாயிரம் பிழைகள் பார்த்து இருந்தும் * காணும் கண்
இல்லாதவன் காண் இறை
அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஞான ஸாரம் 24

என்று ஞானஸாரத்தில் ஸாதித்தார். எம்பெருமான் துளஸீ மாலையை அணிந்திருக்கிறான். எப்படிப்பட்ட துழாய் மாலை என்றால் வண்டுகள் எல்லாம் ரீங்காரத்துடன் துளஸீயில் இருக்கும் தேனை சாப்பிட சுற்றி கொண்டிருக்கிறதாம். அந்த எம்பெருமானுக்கு உகக்காதவை என நாம் செய்த குற்றங்கள் கணக்கில்லாதவை. என்னுடைய மனமே, நீ இதை நினைத்து சோர்வு அடையாதே! (don't' despair)"

எம்பெருமான் ஸர்வஜ்ஞன். எல்லாவற்றையும் நேரில் கண்டு அறிபவன். ஆனால் தன்னுடைய அடியவர்கள் செய்யும் ஆயிரக்கணக்கான குற்றங்களை எல்லாம் பார்த்து கொண்டே இருந்த போதும், அப்பிழைகளை உணரும் ஞான ரூபமான கண்கள் இல்லாதவன் ஸேஷி," என்றார் அருளாப் பெருமாள் எம்பெருமானார்.

இங்கே அருச்சுனன் தன் ஸ்வதர்மமான யுத்தத்தை அதர்மாக கருதினான். இந்த குற்றத்தை எம்பெருமான் கண்டும் அதைக் காணாது போல் அவனுக்கு கீதை மூலமாக ஞானத்தை அளித்தான். எம்பெருமானின் வாத்ஸல்யம் இப்படி வெளியானது.

2.11 இறையாய் - ஸ்வாமித்வம்

பகவானைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை என்று சிறந்து இருக்கும் குணம். ப்ரணவம் எம்பெருமானுக்கும் நமக்கு உள்ள உறவை காட்டுகிறது.

அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்கே கைங்கர்யம் செய்ய மகார அர்த்தமான சேதனன் இருக்கிறான் என்பதை விளக்குகிறது.

- எம்பெருமானைவிட உயர்ந்த **பர தத்வம்** வேறில்லை.
- அவனைவிட உயர்ந்த **போக்யமான** பொருள் எதுவும் இல்லை.

கண்ணனே **"என்னைக் காட்டிலும் சிறந்த வஸ்து எதுவும் இல்லை"** என்கிறான்.

"இறையாய்" என்ற பதம் இதைக் காண்பிக்கிறது.

பகவான் தன்னுடைய மேன்மையை பல இடங்களில் பரக்க கீதையில் சொல்லி இருக்கிறான். சொன்னது மட்டும் அல்லாது, அர்ஜீனனுக்கு தன்னுடைய விச்வரூபத்தை காட்டி தான் மட்டுமே ஸர்வ ஸ்வாமி என்றும் எல்லாப் பொருட்களும் தனக்கு அதீனம் என்பதை நிருபித்தான்.

2.12 ஸௌஸீல்யம் - தூதனாய், மன்னன் பாகனாய்

மிக உயர்ந்த இடத்தில் உள்ளவன் அடி மட்டமான கீழ் இடத்தில் உள்ளவனுடன் சரி சமமாக தானே வலிய வந்து பழகுவது. இதை **"மன்னன் பாகனாய்"** என்ற பதம் காண்பிக்கிறது.

மன்னன் என்பது இங்கே கண்ணனையும் குறிக்கும். அர்ஜீனனையும் குறைக்கும். துவராபுரியின் மன்னன் கண்ணன். அவனே தேர்ப்பாகனாக தாழ்ந்து நின்றான். அல்லது பாண்டவர்களில் ஒருவனான அர்ஜீனன் மன்னன். கண்ணன் அவனுக்கு சாரதியாக நின்றான் என்றும் கூறலாம்.

அருச்சுனன் கண்ணனிடம் ஏவல் வாங்குகிறான். "கண்ணா தேரை நிறுத்து, குதிரையை கட்டு- ஹே க்ருஷ்ண, ஹே யாதவா" என்கிற ஆணைகளுக்கு எல்லாம் கண்ணன் தன்னைத் தாழ நிறுத்தி அடிபணிகிறான்.

2.13 ஸௌலப்யம் – திருமதுரையில் தாம் இறங்கி

லப்யம் என்பது அடைவதற்கு எளியனாய் இருப்பவன். **"திருமதுரையில் தாம் இறங்கி"** என்ற பதம் இதைக் காண்பிக்கிறது.

ஸநகாதிகள், சிவன், பிரம்மா போன்றவர்கள் கூட அணுகமுடியாதவன், தன்னை அல்பமான பூலோகத்து சேதனர்கள், எல்லா பிராணிகளும் கண்ணாலே கண்டு பழகும்படி எளியவனாய் நிற்றலே ஸௌலப்யம்.

பகவான் திருமேனி அப்ராகிருதமானது. அதாவது இந்த ப்ரகிருதி வாசனையே இல்லாதது. அப்படி இருக்க, இந்த பூலோகத்து மக்கள் எல்லோரும் கண்டு களிக்க தன்னுடைய திவ்யமான திருமேனியை எல்லோருக்கும் அளித்தான்.

ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷிரார்ணவநிகேதந:
நாக$_3$பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக$_3$தோ மது$_4$ராம் புரிம்
ஹரி வம்ஸம் 113-62

க்ஷிரார்ணவ நிகேதந: = திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும்
ஶ்ரீமாந் = ஸ்ரீதேவியை ஒரு கணமும் பிரியாதவனான
ஏஷ நாராயண: = இந்த நாராயணன்
நாக$_3$பர்யங்கம் = தன்னுடைய ஸேஷ ஸயனத்தை
உத்ஸ்ருஜ்ய = விட்டு
மது$_4$ராம் புரிம் ஆக$_3$த: = மதுரை நகரத்திற்கு எழுந்தருளினான்

என்றது ஹரிவம்ஸம். பாற்கடலில் ஸயனித்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே இங்கு துவாரகை மன்னனாக, கிருஷ்ணனாக அவதாரம் செய்திருக்கிறான் என்றது.

பகவானின் திவ்ய ஆத்ம ஸ்வரூபம் யோகிகளுக்கே ஸாத்யம். சாதாரண, ஞானம் சக்தி இல்லாத மக்களுக்காக விபவாவதாரம் செய்கிறான்.

அஜாயமானோ ப3ஹுதா4 விஜாயதே ।।
தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம் ।
புருஷ ஸூக்தம் உத்தராநுவாகம்

என்று புருஷஸூக்தம் சொல்கிறது. பரம புருஷனான பகவான் பிறப்பு இல்லாதவன். அனாலும் பலபடியாக பிறக்கிறான் (The one who has no birth is born many times). அவற்றை எல்லாம் அறிவாளிகள் அறிகிறார்கள்.

அது மட்டுமா! பகவான்

- **தேவ** (நர நாராயணத்ய அவதாராங்கள்),
- **மநுஷ்ய** (ராம் கிருஷ்ணாதி),
- **திர்யக்** (ஹம்ஸ, மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நாரஸிம்ஹ, ஹயக்ரீவாதிகள்),
- **ஸ்தாவர** (அக்ஷய்ய வட - அஶ்வத்த நாராயணாதிகள்) என்று எல்லாவிதமான சரீரமாகவும் அவதரிக்கிறான்.

எம்பெருமானார் கீதா பாஷ்யத்தில் ஆரம்பத்திலே **"ஸகல மநுஜ நயந விஷயதாம் கத:"** என்று எல்லோரும் கண்டு களித்திட பகவான் கண்ணனாக வந்து அவதரித்தான் என்கிறார்.

திவ்ய மங்கள விக்ரஹ ஸேவை என்று அர்ச்சாயவதார மூர்த்தியாய் எல்லோருக்கும் அருளுகிறான்.

2.14 அவதார ரஹஸ்யங்கள்

இங்கே கண்ணன் மாம் என்று தன்னை சுட்டிக் காண்பிப்பது, எம்பெருமானின் **அவதார ரஹஸ்யங்களை** சொல்லுகிறது. என்று நம் ஆசாரியர்கள் பணிப்பர்.

பகவானின் அவதாரங்கள் என்பது அவனுடைய ஸங்கல்பத்தால் தோன்றியது.

ஜந்ம கர்ம ச மே தி3வ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: ।
த்யக்த்வா தே3ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந:
பகவத் கீதை 4-9

அர்ஜுந:	- ஹே அர்ஜீநா,
ய	- எந்த உபாஸகன்
மே ஜந்ம	- என்னுடைய திவ்யமான அவதாரத்தையும்
கர்ம ச	- திவ்யமான செயல்களையும் (லீலைகள்)
ஏவம் தி3வ்யம்	- வினைகளுக்கு உட்படாத அப்ராகிருதமானது
தத்வத: வேத்தி	= (என) தத்வ ரீதியாக அறிகிறானோ
ஸ தே3ஹம் த்யக்த்வா	= அவன் உடலை விட்டு
புந: ஜந்ம ந ஏதி	= மறு பிறவி அடைவதில்லை
மாம் ஏதி	= என்னை அடைந்து விடுகிறான்

என் பிறப்புகள் எல்லாம் தெய்வீகமானவை என்றான் கண்ணன், கீதையில். அவனுக்கு கர்மவசம் கிடையாது அவன் காரணத்வத்தை, அவன் நிலையை புத்திமான்கள்தான் அறிந்து கொள்ள முடியும். கிருஷ்ணனே பகவத் கீதையில் அவதார ரஹஸ்யங்களைப் பற்றி சொல்கிறான்.

Protect the good - ஸாது ரக்ஷணம்
Resurrect the Vedas - தர்ம ஸ்தாபனம்
Immortal - அப்ராக்ருதமானது
Not fake - அவதாரங்கள் உண்மை. போலி இல்லை
Complete with all qualities - அவதாரத்திலும் பூர்ண கல்யாண குணங்கள்
Ego - ஸங்கல்பத்தினால் உண்டானவை, கர்மாவினால் அல்ல.
(சுலபமாக PRINCE என்று ஞாபகம் வைத்துக் கொள்ள)

பகவானின் அவதார ரஹஸ்யங்கள்

1. **அடியவர்களை ரக்ஷிக்க ஏற்பட்டது** (Protect the good)
   - சுக துக்கங்களை அனுபவிப்பது என்பது அவன் அவதாரத்திற்கு பலன் இல்லை.
   - அவனைக் காணாது, உயிர் தரிக்காது ஏங்கி வாடி கிடக்கும் சிறந்த பக்தர்களுக்கு தன்னையும், தன் லீலையும் காட்டவே ஏற்பட்டது
   - பக்தர்களை காத்து, அந்த பக்தர்களுக்கு எதிரிகளான பகைவர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்டுவதே அவதார நோக்கம்.
   - **"அவனியின் சுமைக்கு இரங்கி"**

2. **அறம் காப்பதற்காகவே (Resurrect the vedas)**
   - எப்பொழுது வர்ணாச்ரம தர்மங்கள் குறைந்து அதர்மங்கள் தலை எடுக்கிறதோ அப்போது
   - அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட அவ்வப்போது எடுப்பது அவதாரம்.
   - நமக்கு கர்மா பரிபக்குவம் ஆகும்போது பிறவி ஏற்படுகிற மாதிரி இல்லை.
   - **"அறங்காக்க"**

3. **சுத்த ஸத்வமே கொண்டவை (Immmortal)**
   - பகவான் திருமேனி சுத்த ஸத்வமானது.
   - அல்பமான ஜீவன்களுக்கு உள்ள ரஜஸ், தமோ போன்ற குணங்கள் கலவாதது
   - "**குறையறியா**"

4. **உண்மையானவை** (Not fake)
   - எம்பெருமானின் அவதாரங்கள் மாய ஜால வித்தை போல் இல்லை. உண்மையானதே.
   - **"தாம் இறங்கி"**

5. **திருக்கல்யாண குணங்கள் நிரம்பியவை (Complete qualities)**

- அவதார நிலையிலும் பகவானின் இயற்கையான (ஸ்வாபாவிகான) தன்மைகள் பிரகாசிக்கும்
- நமக்கு ஞானம் பூமியில் சுருங்கி கிடக்கும்
- அவனுடைய பரிபூர்ண கல்யாண குணங்களான பிறவாமை, அழியாமை, தலைமை, கருணை போன்றவை.
- **"அருளால், இறையாய்"**

6. **ஸங்கல்பத்தால் எழுந்தவை (Ego)**
   - பகவான் அவதாரம் செய்வது தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே. சேதனர்களைபோல் கர்ம வசத்தால் அல்ல.
   - **"தாம் இறங்கி"**

2.15 அவதார ரஹஸ்யங்கள்

பிறவாமை தந்திடத் தானே பிறக்கும் பெருமைகளும் *
துறவா கிரிசைகள் தூ மதி தன்னால் துலங்குகையும் *
ஸ்வாமி தேசிகன், கீதார்த்த சங்கிரகம் 5

என்றார் ஸ்வாமி தேசிகன் கீதார்த்த ஸங்கிரஹத்தில். சேதனர்களின் பிறவிகளை ஒழிக்கத் தானே வந்து பிறந்தான். ஸாதுக்களான ஸம்ஸாரிகள் **மாறி மாறி பல பிறப்பும் பிறந்து** என்கிறபடி இந்த கர்ம பூமியில் பிறந்து, உழன்று படும் கஷ்டங்களை நிவர்த்திக்க, அவர்களை உஜ்ஜீவிக்க ஸர்வேச்வரன் தானே பலவகையாய் அவதாரம் செய்கிறான்.

"உடைமைக்கு ஒரு முழுக்கு, உடையவனுக்கு ஒன்பது முழுக்கு" என்கிறாற்போலே, அடிக்கடி வந்து பிறந்தான்.

நாநா விதை$_4$: அகபடை: அஜஹத் ஸ்வப$_4$ாவை:
அப்ராக்ருதைர் நிஜ விஹார வஶேந ஸித்$_3$தை$_4$:
அத்மீய ரக்ஷண விபக்ஷ விநாஶநார்தை$_2$:
ஸம்ஸ்த$_2$ாபயஸி அநக$_4$ ஜந்மபி$_4$ர் ஆத்$_3$ய த$_4$ர்மம்
தேசிகன், ஶரணாகதி தீபிகா 17

நாநா விதை4: = பல வகையான
அகபடைர் = ஸத்யமான (4) N
அஜஹத் ஸ்வப4ாவை: தன் தன்மைகளை விடாதவனாய் (5) C
அப்ராக்ருதைர் = ப்ரகிருதி ஸம்பந்தம் இல்லாது, (3) I
நிஜ விஹார வஶேந ஸித்3தை4: = தன் லீலையால் ஏற்ப்பட்டதாய் (6) E
அத்மீய ரக்ஷண = அடியார்களை காக்க, (1) P
விபக்ஷ விநாஶநார்தை2: = எதிரிகளை அழிக்கவும் ஏற்பட்டதாய்
அநக4 ஜந்மபி4ர் = குற்றமிலாத அவதாரங்களாய்
ஆத்3ய த4ர்மம் = கிருத யுக தர்மத்தை (2) R
ஸம்ஸ்த2ாபயஸி = நிலநாட்டுகிறாய்.

1. அடியவர்களை ரக்ஷிக்க ஏற்பட்டது (Protect the good)
2. அறம் காப்பதற்காகவே (Resurrect the vedas)
3. சுத்த ஸத்வமே கொண்டவை (Immmortal)
4. உண்மையானவை (Not fake)
5. திருக்கல்யாண குணங்கள் நிரம்பியவை (Complete qualities)
6. ஸங்கல்பத்தால் எழுந்தவை (Ego)

என்று ஸ்வாமி தேசிகன் அவதார ரஹஸ்யங்களைப் பற்றி கூறினார்.

அவதாரஸ்ய ஸத்யத்வம் அஜஹத்ஸ்வ ஸ்வபாவதா
ஶுத்த ஸத்வமயத்வம் ச ஸர்வேச் சாமாத்ர நிதாநதா
தர்மக்லாநெள ஸமுதய: ஸாது ஸம்ரக்ஷணார்த்ததா
இதி ஜந்ம ரஹஸ்யம் யோ வேத்தி நாஸ்ய புநர்பவ:
ஸ்வாமி தேசிகன்

என்று தேசிகன் இன்னொரு இடத்தில் இதையே ஸாதித்தார்.

2.16 ஸௌலப்யத்தின் பெருமை

கையும் உழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும், தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமான ஸாரத்ய வேஷத்தை மாம் என்று காட்டுகிறான்.

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 218

பகவானுக்கு எண்ணற்ற திருக்கல்யாண குணங்கள். அவற்றிலும் இங்கே **வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌஸீல்யம், ஸௌலப்யம்** என்ற நாலும் உபாய விசேஷமாக சிறப்பித்து சொல்லப்பட்டது. அந்த நான்கிலும் கண்ணனாக அவதரித்து காட்டியதில் சிறந்தது ஸௌலப்யமே. அந்த ஸௌலப்ய நிலையை வர்ணிக்கிறார்.

- **கையும் உழவுகோலும்** - கண்ணன் கையில் சிறிய சாட்டைக் குச்சி வைத்திருக்கிறான்,
- **பிடித்த சிறுவாய்க்கயிறும்** - குதிரைகளை மிரட்டி சரியானபடி நடத்த. அவைகளை இடது, வலது பக்கம் திருப்ப, கடிவாளத்தை பிடித்து இருக்கிறான்.
- **ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும்** - தலையில் கிரீடம் தரிக்காமல், யுத்த களத்திலே எழும்பிய புழுதி அவன் திருமுடியிலும் படிந்து அழகாய் விளங்குகிறது.
- **தேருக்குக் கீழே நாற்றின திருவடிகளுமான** - தேரில் அமர்ந்து காலை கீழே தொங்க விட்டதால், சின்ன சலங்கைகள் கட்டிய அவன் திருவடிகள் பிரகாசிக்கின்றன.
- **ஸாரத்ய வேஷத்தை மாம்** - இந்த தேரோட்டி வேஷத்தையே **மாம்** - **என்னை** என்று சுட்டிக் காட்டினான்.

**கடல்வண்ணன் கண்ணன் * விண்ணவர் கரு மாணிக்கம் எனதாருயிர் *
பட அரவினணைக் கிடந்த * பரஞ்சுடர் பண்டு நூற்றுவர் /
அடவரும் படை மயங்க * ஐவர்க்கட் காகி வெஞ்சமத்து * அன்று தேர்
கடவிய பெருமான் கனை கழல் காண்பது என்றுகொல் கண்களே**

நம்மாழ்வார், திருவாய்மொழி 3-6-10

என்று நம்மாழ்வாரும் அந்த கண்ணனுடைய கனைக்காலை எப்போது காண்பேன் எனத் துக்கிக்கிறார்.

2.17 ஸௌலப்யத்தின் பெருமை

பரத்வமும் ஸௌலப்யமும் ஒன்றுக்கு ஒன்று துணை புரிதல்

மாம், அஹம் என்ற இரண்டு பதங்களும் எம்பெருமான் சேதனனை ரக்ஷிக்க காத்திருக்கும் நிலையை காட்டுகிறது. எம்பெருமான் ஸர்வ ஸேஷி, ஸர்வ ரக்ஷகன். என்றைக்கு இந்த சேதநன் நம்மை அடைய விரும்பி ஒரு உபாயத்தை செய்வான் என்று ஆசையோடு நாளை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறான்.

2.18 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

வாரிதி விட்டு * மலர்மகளோடு மதுரைக்கு வந்து *
பாரத வெஞ்சமர் * பார்மகள் பாரம் செக உகந்து /
சாரதியாய் முன்பு தூதனுமாய் * தளரும் விசயன் *
தேர் அதில் நின்று அவனைத் * தேற்றினான் திறம் ஆயினனே
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 3

- **வாரிதி விட்டு மலர்மகளோடு மதுரைக்கு வந்து** = திருப்பாற்கடலை விட்டு தாமரை மார்பில் அவதரித்த பிராட்டியோடு, வட மரையில் கிருஷ்ணாவதாரமாய் வந்து
- **பார்மகள் பாரம் செக உகந்து வெம் பாரதச்சமர் உகந்து** = பூதேவியின் சுமை ஒழிவதற்காய் கொடிதான மாஹாபாரத போரை நடத்தி
- **முன்பு தூதனுமாய் சாரதியாய்** = முதலில் பாண்டவ தூதனாய், தேர் ஓட்டியாய்
- **தளரும் விசயன் தேர் அதில் நின்று அவனைத் தேற்றினான் திறம்** = கலங்கிய அருச்சுனன் தேரில் நின்று அவனை தேற்றிய கண்ணனிடம்

- **ஆயினனே** = அடிமை ஆனோம்

3 - ஏகம்

**துறை அரு, தானும் வேறாய் *
ஆறும் பேறும் தாமே ஈந்து *
நெறியெல்லாம் பலன் ஒன்றாய் *
நம்பரத்தை இனித் தான்சுமந்து *
மற்றொன்று வேண்டாம் என *
மகிழும் திருமகள் நாதனையே *
மனமே நீ ஏகமெனும் தனிச்
சொல்லால் * அறிந்தாயே இன்று**

துறை	= [பகவானுடைய அருளால் சித்திக்கும்] உபாயமும்
அரு	= [அதை அனுஷ்டிக்கும்] ஜீவனும்
தானும் வேறாய்	= அதைவிட வேறாக பிரிந்திருக்கும் பகவான்
ஆறும் பேறும்	= உபாயமும் புருஷார்த்தமும்
தாமே ஈந்து	= தானே முன் வந்து அளித்து
நெறி எல்லாம்	= மற்ற உபாயங்கள் (தரும்)
பலன் ஒன்றாய்	= பலன்களையும் எல்லாம் சேர்த்து அருளி
இனி	= இன்று முதல்
நம் பரம்	= சேதனர்கள் தன்னுடைய ரக்ஷக வஸ்து (என்று)
தான் சுமந்து	= தானே ஏற்றுக்கொண்டு
மற்று ஒன்று	= ப்ரபத்தி தவிர மற்றறைய உபாயங்கள்
வேண்டா	= அவசியமில்லை என்று
மகிழும்	= அந்த ப்ரபத்தி ஒன்றிலேயே சந்தோஷிக்கும்
திருமகள் நாதனையே	= அந்த ஸ்ரீமந் நாராயணனையே
மனமே	= என்னுடைய மனதே
இன்று	= இன்று
ஏகம் என்னும்	= ஏகம் என்று
தனிச் சொல்லால்	= சிறந்து தனித்து நிற்கும் ஒரு சொல்லால்
நீ அறிந்தாய்	= அறிந்து கொண்டாயே நீ!

3.1 முன்னுரை

மாம் என்ற பதமே என்னை என்கிற ஒருமையை காட்டுகிறது. பின் எதற்கு ஏகம் என்ற பதம்? நான் செய்யும் ப்ரபத்தி என்னும் உபாயத்தால் எம்பெருமானைப் பலனாக பெறுகிறேன் என்று கருதாமல், பகவானே உபாயமும் பலனும் என்பதை காட்டவே.

ஏகம் என்றால் ஒன்று. பகவான் மாம் ஏகம் என்று சொல்லும்போது "என்னை ஒருவனையே" என்பதை வலியுறுத்துகிறான்.

3.2 அதிகார ஸங்க்ரஹத்தில் தேசிகன் அருளியது

சாதனமும் நற்பயனும் நானே ஆவன் *
சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும் *
சாதனமும் சரண் நெறியன்று உனக்குச் *
சாதனங்கள் இந்நிலைக்கு ஓர் இடையில் நில்லா /
வேதனை சேர் வேறங்கம் இதனில் வேண்டா *
வேறு எல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன் *
தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச் *
சோகம் தீர் என உரைத்தான் சூழ்கின்றானே

ஸ்வாமி தேசிகன், அதிகார ஸங்க்ரஹம் 48

1. **சாதனமும் நற்பயனும் நானே ஆவன்** - உபாயமும், சிறந்த பலனும் நானாகவே இருப்பன்

2. **சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும்** - அந்த உபாயத்தை அனுஷ்டிப்பவனும் எனக்கு அடங்கி இருந்து என்னையே சரணாக அடைவான்

3. **உனக்கு சாதனமும் சரண் நெறி அன்று** - சேதனனாகிய உனக்கு சரணாகதியும் நேர் வழி ஆகாது (பலனை அளிக்கத் தூண்டும் வ்யாஜம் மட்டுமே)

4. **சாதனங்கள் இந்நிலைக்கு ஓர் இடையில் நில்லா** - மற்றைய பக்தி யோகங்கள் போன்ற உபாயங்கள் (இந்த ப்ரபத்திக்கு) ஸம்பந்தம் ஏதுவும் இல்லை. அதாவது பக்தி யோகங்கள் ப்ரபத்திக்கு துணையாகாது

5. **வேதனை சேர் வேறங்கம் இதனில் வேண்டா** - மிகுந்த கஷ்டத்துடன் செய்யும் வேறு விதமான அங்கங்களும் இந்த ப்ரபத்திக்கு தேவை இல்லை

6. **வேறு எல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன்** - மற்ற உபாயங்கள் நிற்கும் ஸ்தானத்தில் நானே நின்று பலன் அளிப்பேன்

தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச் சோகம் தீர் என உரைத்தான் சூழ்கின்றானே – தூது செல்லும் ஸௌலப்யனாயும், ஸர்வஸ்வாமி என்று சொல்லும் பரத்வமும் ஆன என்னை சரணாகதி அடைந்து, உன் துக்கத்தை போக்கிக் கொள் என்று சரம ஸ்லோகத்தில் உபதேசித்த கண்ணன் தானே வளைய வந்து நம்மை சூழ்ந்து கொள்கிறானே.

3.3 ஏக சப்தத்திற்கு பொருள்

ஏக சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளமாக, பூர்வாசாரியர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

1. உபாயமும் பலனும் பகவானே - **ஆறும் பேறும் தாமே**
2. ப்ரபத்தி செய்யும் சேதனன் ப்ரதான உபாயம் இல்லை - **தாமே ஈந்து**
3. சேதனன் செய்யும் ப்ரபத்தி வ்யாஜம் மட்டுமே - **தாமே**
4. பகவான் வேறு உபாயங்களை சுமத்துவதில்லை - **நம் பரத்தை இனித் தானே சுமந்து**

5. பகவான் வேறு அங்கங்களை எதிர் பார்ப்பதில்லை - **மற்றொன்றும் வேண்டா என மகிழும்**
6. எல்லா உபாயங்களின் பலனையும் பகவான் தனித்தே தானே அருள்கிறான் - **நெறி எல்லாம் பலன் ஒன்றாய் தந்து.**

3.4 ஏகம் = உபாயமும், பலனும் பகவானே

ஏகம் என்பதின் முதல் அர்த்தம் ஒருவனையே. உபாயமும் பலனும் எல்லாம் பகவான் ஒருவனே (Lord is the means and ends).

த்வயத்தில் முதல் வரி உபாயத்தையும் இரண்டாம் வரி பலனையும் சொல்லும். அது போல இங்கு **ஏகம்** என்ற பதம் பகவானே உபயமாகவும், பலனாகவும் நிறபதைக் காட்டுகிறது.

சாதரணமாக உலகில் ஒருவன் **ஜ்யோதிஷ்டோமம்** செய்கிறான். அதனால் ஸ்வர்கம் போகிறான் என்றால், செய்யும் அவனும் அந்த யாகமும் உபாயம். ஸ்வர்கம் அடைதல் பலன். இப்படி உபாயமும் பலனும் வேறு வேறு ஆக இருக்கும். அது போல் அன்றி இங்கே பெருமாள் தானே **உபாயம்**, அவனே **பலன்.**

முக்திக்கு **பராபகன்** எம்பெருமான். அந்த முக்தியில் **ப்ராப்யனும்** அவனே. **ஆறும் பேறும் தாமே** என்ற பாசுரத்தின் வரி இதைக் காட்டும். **ப்ராப்ய ப்ராபக ஐக்யம்** இங்கே.

> **தனக்கு இணை ஒன்று இல்லாத திருமால் பாதம் ***
> **சாதனமும் பயனும் என சலங்கள் தீர்ந்தோம் ***
> ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 8

தனக்கு நிகர் ஒருவருமில்லை என்ற ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடியே உபாயம், பலன் என்று தீய வழிகளை ஒழித்தோம், என்றார்.

திருமால் அடி இணையே * தின் சரணாகக் கொண்டு *
திருமால் அடி இணையே சேர்வார் * - ஒரு மால்
அருளால் அருளாத * வானோர்கள் வாழ்ச்சி *
அருளால் நமக்கு அளித்தார் * ஆய்ந்து
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சினி 33

ஸ்வாமி தேசிகன் அமிருதரஞ்சனியில் சொல்கிறார். ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளையே உபாயமாகவும், பலனாகவும் கொண்டவர்கள் நம் ஆசாரியர்கள்.

தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித் *
திருமகளோடு ஒரு காலும் பிரியாத நாதன் *
திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 7

அடியேன், (தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டி) பரமபதத்தில் அஹங்கார மமகாரங்கள் இல்லாத அநந்த, ஆனந்தமான கைங்கர்யத்தை வேண்டினேன். (திருமகளோடு ஒரு காலும் பிரியாத நாதன் திண்கழலே சேதுவெனச் சேர்கின்றேனே) பிராட்டியை விட்டு என்றும் அகலாத அந்த திருமால், எம்பெருமானுடைய திருவடிகளே இந்த ஸம்ஸாரத்தை அடைக்கும் அணை, "சேது" எனத் துணிந்து அதையே உபாயமாகப் பற்றினேன். என்றார்.

ஏகம் வேக3வதீ மத்4யே ஹஸ்திஶைலே ச த்3ருஶ்யதே ।
உபாய ப2ல ப4ாவேந ஸ்வயம் வ்யக்தம் பரம் மஹ: ।।
ஸ்வாமி தேசிகன், வேகாஸேதுஸ்தோத்ரம் 1

(ப4ாவேந உபாய ப2ல) முறையாக உபாயமும், பலனும் காணப்படுவது வேகவதியின் நதிக்கரையில் தானே தோன்றிய அதி அற்புதமான தேஜஸ், அதுவே அத்திகிரியிலும் காணப்படுகிறது என்றார்.

3.5 ஏகம் = ப்ரபத்தி செய்யும் சேதனன் முக்ய உபாயம் இல்லை

ஏகம் என்ற பதம் சேதனனுடைய முக்ய தன்மையை கழிக்கிறது. சேதனனுடைய சுதந்திரம் கழிகையை காட்டுகிறது, என்பது இரண்டாம் அர்த்தம்.

பகவான் அநுபவிக்கப்படும் பலனாய் உள்ளான். இது எல்லோரும் அறிந்த விஷயம். சேதனன் அவனை அடைய அதற்கு ஒரு ஸாதனத்தை அனுஷ்டிப்பதால் (ப்ரபத்தியை செய்வதால்) தானும் ஒரு உபாயம், ஸாதனம் என்று நினைப்பது தவறு.

சேதனன் பாரதந்த்ரியன் (sentient things are dependent) சுதந்திரம் அற்றவன். உபாயம் என்கிற செயலை செய்தாலும் உண்மையில் பகவான் ஒருவனே அந்த எண்ணத்தையும், அதை நடத்திவிப்பதும், அதற்குறிய பலனைத் தருவதும். இதை **"தாம் ஈந்து"** என்னும் பதம் காட்டுகிறது.

சேதனன் உபாயத்தை பின்பற்றினாலும் அவன் ஒரு கருவியே. சேதனன் செய்கை உடையவனே. ஆனாலும் அவன் செயல் எம்பெருமானின் ஸங்கல்பத்தால் விளைவது. கையை தூக்குவதும், தூக்கிய கையை இறக்குவது ஒரு அல்பமான செயல் போல் தோன்றும். அதுகூட எம்பெருமான் ஸங்கல்பமின்றி நடக்காது.

சேதனன் உபாயத்தை அனுஷ்டிக்கவும் எம்பெருமானின் கடாக்ஷம் வேண்டும். மழையை நோக்கி மேலேயே பார்த்து கொண்டு காத்திருக்கும் சாதக பறவை போலே இருப்பவன் சேதனன். ஸர்வ ஸ்வதந்திரம் உடையவன் எம்பெருமான்.

எனவே என்னை ஒருவனையே என்று சொல்லும்போது நானே உபாயம். நானே ப்ரதானம். நீ என்னை உபாயமாக பற்றுகிறாய். **என்னை மட்டுமே பற்றுகிறாய் என்ற காரணத்தால், நீயும், நீ செய்கிற ப்ரபத்தியும் என வசமே.**

3.6 ஸித்தோபாயம், ஸாத்யோபாயம் விளக்கம்

உபாயம் இரண்டு வகை, **ஸித்தோபாயம், ஸாத்யோபாயம்.**

பகவான், ஶ்ரிய:பதி ஸித்தமாக உள்ளான். அவனே உபாயம் என்று சொன்னால் அது ஸித்தோபாயம். இது யாராலும் செய்யப்படாத, ஏற்கனவே இருக்கும் உபாயம். அது பிராட்டியுடன் கூடிய பகவான் ஒருவனே.

பகவான் மட்டும் இருந்தால் போதுமா? அவனவன் தன் கடமையை செய்ய வேண்டாமா? வேறு ஒருவருக்கும் அடிமையின்றி எம்பெருமானுக்கு மட்டுமே அடிமையாய் இருப்பது ஜீவனின் ஸ்வரூபம் ஆயிற்றே **(அநந்யார்ஹ, நிருபாதிக ஸேஷத்வம்)**. அதனால் அவனிடம் சரணம் அடை என்பது சேதனன் செய்யக்கூடிய, செய்ய வேண்டிய உபாயம். ஸாத்யோபாயம். சேதனன் செய்யும் பக்தி, ப்ரபத்தி ஸாத்யோபாயமாகும்.

பகவான் க்ருணாமூர்த்திதான். அதனால் எல்லோருக்கும் பாகுபாடின்றி, சகட்டு மேனிக்கு மோக்ஷத்தை கொடுப்பதில்லை (doesn't grant moksham indiscriminately). பக்தி அல்லது ப்ரபத்தி செய்தவர்களுக்கு (deliberately) மட்டும்தான்.

இப்படி உபாயத்தை இரண்டாக பிரித்து பேசுவது விஷயங்களை விளக்கம் செய்யவே. ஸ்வாமி தேசிகன். சரணாகதி விம்ஶதியில் சொல்கிறார்.

ஸ்வாபீ4ச்ஷட ப்ராப்தி ஹேது: ஸ்வயமிஹ
புருஷை: ஸ்வீக்ருத: ஸ்யாது3பாய:
ஶாஸ்த்ரே லோகே ச ஸித்3த4: ஸ புநருபயதா
ஸித்3த4 ஸாத்4ய ப்ரபே4த3ாத்
ஸித்3தே4பாயஸ்து முக்தெள நிரவதி4க த3ய:
ஶ்ரீஸக2: ஸர்வ ஶக்தி:
ஸாத்4யோபாயஸ் து ப4க்திர் ந்யஸநம் இதி
ப்ருத2க் தத்3 வஶீகார ஸித்3த்4யை
ஸ்வாமி தேசிகன், ந்யாஸ விம்ஸதி 17

- **இஹ ஸ்வ அபீ$_4$ச்ஷட ப்ராப்தி ஹேது: புருஷை: ஸ்வயம்** - இந்த உலகத்தில், அவர் ஆசைப்படும் பலனுக்கு காரணமாக, மக்களால் தாமாகவே
- **ஸ்வீக்ருத: உபாய: ஸ்யாத்$_3$ ஶாஸ்த்ரே லோகே ச ஸித்$_3$த$_4$:** - கைபிடிக்கும் உபாயமாக ஆகும் என்று சாஸ்திரத்திலும், உலகிலும் ஏற்ப்பட்டது
- **முக்தெள ஸ புந: ஸித்$_3$த$_4$ ஸாத்$_4$ய ப்ரபே$_4$த$_3$ாத் உபயதா** - மோக்ஷ விஷயத்தில் அந்த உபாயமோ ஸித்தோபாயம், ஸாத்யோபாயம் என்ற இரண்டு பிரிவாக ஆகிறது
- **ஸித்$_3$தே$_4$பாய: து நிரவதி$_4$க த$_3$ய: ஸர்வ ஶக்தி: ஶ்ரீஸக$_2$** - ஸித்தோபாயமோ எல்லையிலா கருணையுடன், எல்லாம் செய்ய வல்லவனும் ஆகிய பிராட்டியுடன் கூடிய நாராயணன்.
- **ஸாத்$_4$யோபாய: து தத்$_3$ வஶீகார ஸித்$_3$த்$_4$யை ப$_4$க்தி: ந்யஸநம் இதி ப்ருத$_2$க்** - ஸாத்யோபாயமோ அவனை வசீகரப்படுத்த பக்தி, ப்ரபத்தி என தனித்தனியாக உள்ளது

3.7 ஏகம் = சேதனன் செய்யும் ப்ரபத்தி உபாயம் இல்லை

சேதனன் அனுஷ்டிக்கும் ப்ரபத்தி என்ற காரியம் எம்பெருமானைப்போல் முக்யமான உபாயம் ஆகாது. இது **ஏகம்** என்னும் சொல்லுக்கு மூன்றாம் அர்த்தம்.

ப்ரபத்தியை ஸித்தோபாயமாக இருக்கும் இறைவனுக்கு ஈடானதோர் உபாயமாக நினைக்கக் கூடாது. சேதனன் தன்னால் அனுஷ்டிக்கப்படும் ப்ரபத்தி என்னும் உபாயத்தை பகவானோடு சரி சமமாக நினைக்காது பகவானே உபாயம், அவனே பலன். என்ற கருத்து **ஏக** என்ற சொல்லால் விளங்குகிறது.

பகவானின் நல்ல எண்ணமே எல்லாவற்றிற்கும் காரணம் (Lords good intentions are the cause of everything). ப்ரபத்தி என்பது ஸாத்யோபாயம். பகவான் ஸித்தோபாயமாய் விளங்குபவன். இரண்டும் வேறானவை. பக்தி, ப்ரபத்தி இரண்டும் பகவானுக்கு நம்மேல் இருக்கும் அதிருப்தியை

போக்குவதுடன் சரி. அத்துடன் அவை ஓய்ந்து விடும். நேராக பலன்களை தராது. பலன் கொடுப்பது எம்பெருமானின் ஸங்கல்பம் மட்டுமே. இயற்கையான கருணையுடன் கூடிய அவன் நல்லெண்ணமே எல்லாவற்றிற்கும் காரணம்.

ப்ரபத்தியை செய்தவனுக்கு பகவான் பக்தி மற்றும் கஷ்டமான யோகங்களை செய்தாற்போல் நினைத்து அதன் ஸ்தானத்தில் தான் நின்று பலனை தருகிறான். முறையாக செய்த ப்ரத்தியை ஒன்றையே, ஒரு சாக்காக கொண்டு, பலனைத் தருகிறான்.

ஆறும் செய்வனும் தானும் வேறாய் அதாவது உபாயமும், அதை செய்த (அனுஷ்ட்டித்த) சேதனனும், பகவானைவிட வேறு, ஜீவாத்மாவும் அவன் செய்யும் ஸித்தோபாயமும் பரமத்மாவாகிற சாத்யோபாயத்தைவிட வேறு.

3.8 ஏகம் = ப்ரபன்னின் சுமையை பகவான் தாங்குதல்

ஏகம் என்னும் சொல் பகவான் **தனித்து நிற்கும் நிலையைக்** காட்டுகிறது. இது நாலாம் அர்த்தம்.

சேதனன் ஆசைப்பட்ட பலனை அடைய சாஸ்திரங்கள் பல தர்மங்களை, உபாயங்களை விதிக்கின்றன. ஆனால் சேதனனோ அகிஞ்சனன். அந்த உபாயங்களை எல்லாம் செய்ய இயலாது வருந்தி நிற்கிறான்.

பகவான் பரம காருணீகன். அவன் சேதனனிடம், "நீ அந்த உபாயங்கள் எல்லாம் செய்ய வேண்டும் என்று அலையாதே!. எதற்காக நீ அந்த உபாயங்களை தேடுகிறாய். உன் கர்மாக்கள் எல்லாம் பொசுங்க வேண்டும் என்றுதானே? நீ செய்த ப்ரபத்தியில் நான் மகிழ்கிறேன். நான் ஒருவனே தனித்து, அந்த தர்மங்களில் ஸ்தாநத்தில் நின்று, உன்னுடைய எல்லா பாபங்களையும் கழித்து, மோக்ஷத்தை தருகிறேன், என்கிறான்.

3.9 ப்ரபன்னன் கவலையற்ற நிலையுடன் இருத்தல்

**எல்லாத் தருமமும் என்னை இகழ்ந்திடத் * தான் இகழாது *
எல்லாம் தனது என * எல்லாம் உகந்து அருள் தந்த பிரான் /
மல்லார் மதக் களிறு ஒத்த * வினைத் திரள் மாய்ப்பன் என்ற
சொல்லால் * இனி ஒருகால் * சோகியாத் துணிவு உற்றனமே**

ஸ்வாமி தேசிகன், அமிருதரஞ்சனி 37

- **எல்லாத் தருமமும் என்னை இகழ்ந்திட** - பக்தி யோகம் போன்ற மற்ற உபாயங்கள் எல்லாம் என்னை வெறுத்து கைவிட்டன.
- **தான் இகழாது எல்லாம் தனது என** - ஆனால் எம்பெருமானோ என்னை வெறுத்து ஒதுக்காமல் அந்த உபாயங்களின் ஸ்தானத்தில் நின்று அவை கொடுக்கும் பலனைத் தர வேண்டிய கடமை முழுவது தன்னுடையது என நினைத்து
- **உகந்து எல்லாம் அருள் தந்த பிரான்** - மகிழ்ச்சியுடன் ஸகலவிதமான பலன்களையும் எனக்கு கடாக்ஷித்த எம்பெருமான்
- **மல் ஆர் மதக் களிறு ஒத்த வினைத் திரள் மாய்ப்பன் என்ற சொல்லால்** - வலிமையான, மதம் பெருகும் யானை போன்ற என் பாபக்குவியல்களை ஒழித்து விடுவேன் என்கிற சரம ஸ்லோக வாக்யத்தால்
- **இனி ஒருகால் சோகியாத் துணிவு உற்றனமே** - இனிமேல் ஒரு நாளும் வருத்தம் அடையாதபடி துணிவு அடைந்தோம்.

3.10 ரஹஸ்யத்ரயங்கள் காட்டும் அர்த்தங்கள்

**பத்திதனில் படிவில்லார் பரம் சுமத்த *
பார்த்தன் தேர் முன்னே தான் தாழ நின்று *
உத்தமனார் உத்தம நல்லுரை நாலெட்டும் *
உணர்ந்தவர் தம் உகந்து எம்மை உணர்வித்தாரே**

ஸ்வாமி தேசிகன், அமிருதசுவாதினி 13

- **பத்திதனில் படிவில்லார் பரம் சுமத்த** - பக்தி யோகத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் தம்மை காக்கும் பொறுப்பை அவன் மீது சுமத்த
- **பார்த்தன் தேர் முன்னே தான் தாழ நின்று** - அர்ஜீனன் தேருக்கு முன்னே ஸாரதியாய் தாழ்ந்து நின்ற
- **உத்தமனார் உத்தம நல்லுரை நாலெட்டும்** - ஸர்வேச்வரனுடைய உயர்ந்த உபதேசமாகிய 32 அக்ஷரங்கள் பொருந்திய சரம ஸ்லோகத்தையும்
- **உணர்ந்தவர் தம் உகந்து எம்மை உணர்வித்தாரே** - அர்த்தத்தை அறிந்த ஆசாரியர்கள் எமக்கு ஆசையுடன் உபதேசித்தனர்.

3.11 எம்பெருமான் திருவடிகளையே உபாயமாக காட்டல்

**நமக்கு ஆர் துணை என * நாம் என்று அருள் தரு நாரணனார் *
உமக்கு ஆறு இவை என்று அடியிணை காட்ட * உணர்ந்து அடையும் /
எமக்கு ஓர் பரம் இனி இல்லாது * இரு வினை மாற்றுதலில் *
தமக்கே பரம் என்று * தாம் முயலும் தரம் சாற்றுவமே**
ஸ்வாமி தேசிகன், பரமத பங்கம் 45

- **நமக்கு ஆர் துணை என நாம் என்று அருள் தரு நாரணனார் =** ஸம்ஸாரத்தில் உழலும் நமக்கு ஸஹாயம் யார் என தவிக்க, நானே உனக்கு துணையாய் நிற்போம் என்று சேதனர்கள் மேல் அருள் புரியும் மந் நாராயணன்
- **உமக்கு ஆறு இவை என்று அடியிணை காட்ட உணர்ந்து அடையும்** - சேதனனான உனக்கு இதுதான் உபாயம் என்று தன் இரண்டு திருவடிகளையும் காட்ட, அதை அறிந்து ப்ரபத்தி செய்யும் நமக்கு
- **இரு வினை மாற்றுதலில் எமக்கு ஓர் பரம் இனி இல்லாது** - புண்ய பாவங்களை ஒழிப்பதில் உனக்கு ஒரு பொறுப்பும் கிடையாது என்று சொல்லி
- **பரம் தமக்கே என்று தாம் முயலும் தரம் சாற்றுவமே** - பொறுப்பு என்னுடையதே என, மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் தானே நின்று பலன் கொடுக்க முயலும் பெருமையை இங்கே கூறுவோம்.

பகவான் ரக்ஷகன் (Lord is the savior). ப்ரபத்தி செய்த சேதனனிடம், ப்ரபத்திக்கும் பகவானுக்கும் நடுவே சேதனன் தலையில் வேறு ஒரு பொறுப்பை ஏத்தி அவனை கஷ்டப்படுத்துவதில்லை.

மற்ற உபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று சேதனுடைய சுமையை தான் தனித்து தாங்குகிறான். **நம் பரத்தை இனித் தாமே சுமந்து** என்று இங்கே பாசுரத்தில் சொன்னது.

3.12 ஏகம் = ப்ரபத்திக்கு வேறு அங்கங்கள் தேவையில்லை

பகவான் மற்ற எதுவும் எதிர் பார்ப்பதில்லை (Lord doesn't expect anything in return). பகவான் ப்ரபத்தி செய்தவனிடம் பரபத்திக்கு உரிய அங்கங்கள் தவிர வேறு ஒன்றும் எதிர்பாராமல் தனித்து பலனைத் தருகிறான். **"மற்றொன்று வேண்டா என மகிழும்"** என்று இங்கே சொன்னோம்.

பகவான் ப்ரபத்திக்கு பலனைக் கொடுக்க ஸித்தமாக உள்ளான். அவ எதிர் பார்ப்பது ஐந்து அங்கங்கள் மட்டுமே. வேறு எதுவும் அங்கமாக செய்ய வேண்டியதில்லை. அப்படி சேதனன் செய்தாலும் அதற்கு பலன் இல்லை. சில சமயம் அதுவே செய்யும் ப்ரப்த்திக்கு இடையூறாக அமையும்.

எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும் *
இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும் *
சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும் *
துணிவு அரிதாய் துணை துறக்கும் சுகரத்தாலும் *
கல்லார்க்கும் கற்றார் சொல் கவர்தலாலும் *
கண்ணன் உரை முடிசூடி முடித்தாலும் *
நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம் *
நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே
ஸ்வாமி தேசிகன் பரமத பங்கம் 47

- **எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும்** = எல்லாரும் அனுஷ்டிக்க சுலபமாய் இருக்கும் பெருமை.
- **இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும்** = ஒரு முறை சொன்னால் போதும் என பகவான் கருணையோடு
- **சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும்** = சொன்ன மாத்திரத்திலே பலன் தர, அதற்கு மேல் வேறு ஒன்றும் தேவையில்லை என
- **துணிவு அரிதாய் துணை துறக்கும் சுகரத்தாலும் =** மஹாவிஶ்வாஸம் கஷ்டமான அங்கம் அனாலும், அதை விட கடினமான ஞான, பக்தி யோகங்களை விடுகிற சௌகரியத்தாலும்
- **கல்லார்க்கும் கற்றார் சொல் கவர்தலாலும்** = ஜ்ஞானம் இல்லாதவருக்கு ஜ்ஞானமுடைய ஆசாரியர்கள் முலமாய் ப்ரபத்தி பலனைத் தருகிறது.
- **கண்ணன் உரை முடிசூடி முடித்தாலும் =** கீதா சரம ஸ்லோகத்தில் இதுவே சிகரமாக (crown jewel) விவரிக்கப் பட்டுள்ளது.
- **நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம் =** புண்யம், பாபம் (for both merits and sins) செய்த இருவருக்குமே இதுவே சிறந்த உபாயம்.
- **நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே = எனவே** ஸ்ரீமந் நாராயணனுக்கே காக்கப்படும் பொருளாய், ஶரணமாக அடைவீர்

3.13 ப்ரபத்தி நிரபேக்ஷ வித்தை

ப்ரபத்தி (ஶரணாகதி) என்பது ஒரு வித்யை. இது நிரபேக்ஷ - உபாயத்வம். மற்றொன்றை அபேக்ஷிக்காமல் (எதிர்பாராமல்) உபாயமாகக் கூடிய தன்மை, பலன் கொடுக்கக்கூடிய தன்மை இதற்கு உண்டு.

பக்தி யோகம் தனக்கு அங்கமாக ப்ரபத்தியை அபேக்ஷிக்கிறது கர்ம யோகம் போன்றவைகளையும் அபேக்ஷிக்கிறது. ப்ரபத்தி அப்படி இல்லாமல் நேராகவே எம்பெருமான் அநுக்ரஹத்தை உண்டு பண்ணி மோக்ஷத்திற்கு காரணமாக அமைகிறது

45ம் பட்டம் ஸ்ரீமத் அழகியஸிங்கர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விவரணம்

என்று ப்ராக்ருதம் ஸ்ரீமத் அழகியஸிங்கர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார விவரணத்தில் ப்ரபத்தியின் ஸாரத்தை அற்புதமாக ஸாதித்துள்ளார்.

3.14 மாம் = பகவான் பலன்கள் எல்லாம் சேர்த்து அருள்கிறான்

பகவான் எல்லா பலன்களையும் சேர்த்து அருளுகிறான் (Lord bestows all rewards) பகவான் ப்ரபத்தியினால் மகிழ்ந்து, மீதி உபாயங்கள் எல்லாம் தனித்தனியே கொடுக்கும் பலன்களை எல்லாம் ஒன்று சேர்த்து, தானே கொடுக்கிறான் **"நெறி எல்லாம் பலன் ஒன்றாய் தந்து".**

சாஸ்திரங்கள் ஒவ்வொரு பலனுக்கும் தனித்தனியே அதற்கு உரிய உபாயத்தை விதிக்கிறது. சாதாரணமாக, சேதனன் அவற்றை அனுஷ்டிக்க சக்தியோ, ஞானமோ, பொறுமையோ இல்லாது வருந்தி நிற்கிறான்.

பகவான் அவனைப் பார்த்து, "அப்பா, நீ கவலைப்படாதே. அந்த உபாயங்களைத் தேடி நீ அலையாதே. அவை எல்லாம் தனித்தனியே கொடுக்கும் பலனை ஒன்றாய் சேர்த்து நீ ஒரு தடவை செய்த ப்ரபத்திக்கு மகிழ்ந்து நானே கொடுக்கிறேன். நான் ஒருவனே எல்லா பலனுக்கும் உபாயம்" என்கிறான். இதைக் காட்டுவது ஏக சப்தம்.

**வேதத்திரளின் விதி உணர்ந்தோர்கள் * விரித்துரைத்த *
காதல் கதியையும் * ஞானத்தையும் கருமங்களையும் *
சாதிக்கவல்ல சரணாகதி * தனி நின்ற நிலை *
ஒதத் தொடங்கும் எழுத்தின் திறத்தில் * உணர்மின்களே.**
ஸ்வாமி தேசிகன் அமிருதஸ்வாதினி 18

- **(வேதத்திரளின் விதி உணர்ந்தோர்கள் விரித்து உரைத்த)** பலவாக உள்ள வேதங்களில் விதிக்கப்படவைகளை அறிந்தவர்கள் நன்கு உபதேசித்தார்கள். அவர்கள் எதை உபதேசித்தார்கள் என்றால்,

- **(காதல் கதியையும் ஞானத்தையும் கருமங்களையும்)** பக்தி யோகத்தையும் ஞான யோகத்தையும், கர்ம யோகத்தையும்
- **(சாதிக்கவல்ல சரணாகதி தனி நின்ற நிலை)** அவற்றினால் உண்டாகும் பலனை எல்லாம் தான் ஒன்றே கொடுக்க வல்ல தனித்த ப்ரபத்தி என்னும் உபாயம் ஒப்பற்றது என்னும் கருத்தை.

சேதனனின் ப்ரபத்தியில் மகிந்த எம்பெருமான் எல்லா ஸௌக்யங்ளையும் அளிக்கிறான்.

3.15 ஏகம் என்னும் தனிச்செல்லால் அறிந்தாயே இன்று

இப்படி ஏகம் என்னும் சொல்லுக்கு ஆறு பொருள்கள். இந்த பதம் வேறு உபாயத்தைச் செய்யத் தகுதியில்லாத சேதநன் விஷயத்தில் முறையாக செய்யும் சரணாகதி தவிர எம்பெருமான் வேறு ஒன்றையும் எதிர்பார்ப்பதில்லை. தானே நின்று எல்லாப் ப்லன்களையும் அருள்கிறான் என்பது தொகுத்த கருத்து.

ஆதே3ஷ்டும் ஸ்வ ப்ரபத்திம் தத3நுகுண கு3ணா
த்3யந்விதம் ஸ்வம் முகுந்தே3ா
மாம் இதி உக்த்வா ஏக ஶப்3த3ம் வத3தி தது3சிதம்
தத்ர தாத்பர்யம் ஊஹ்யம்
தத் ப்ராப்ய ப்ராபகைக்யம் ஸகல ப2ல த3தாம்
ந்யாஸதோந்யாந பேக்ஷாம்
ப்ராத4ான்யாத்3யம் ச கிஞ்சித் ப்ரத2யதி ஸ பரம்
ஶ்ரீஸகே2 முக்த்யுபாயே
ஸ்வாமி தேசிகன், ந்யாஸ விம்ஸதி 16

- முகுந்த3 ஸ்வப்ரபத்திம் ஆதே3ஷ்டும் - கண்ணன் தன்னிடம் செய்ய வேண்டிய ப்ரபத்தியை விதிப்பதற்கு
- தத்3 அநுகுண கு3ண ஆதி அந்விதம் - அதற்கேற்ற குணம் இவற்றுடன்

- ஸ்வம் மாம் இதி உக்த்வா ஏக ஶப்3த3ம் வத3தி - என்னை என்று சொல்லி ஒருவனையே என்ற சொல்லை சொல்கிறான்
- தத்ர தத்3 உசிதம் தாத்பர்யம் ஊஹ்யம் - அதற்கு தகுந்த கருத்து ஊகிக்க வேண்டும்
- தத் ஸ: முக்தி உபாயே ஶ்ரீஸகே2 - அதற்கு சரியான அர்த்தம், மோக்ஷத்திற்கு பிராட்டியுடன் கூடிய பகவானிடத்தில்
- ப்ராப்ய ப்ராபக ஐக்யம் பலனும் உபாயமும் ஒன்றாய் இருப்பதையும்
- ஸகல ப2ல த3தாம் - எல்லாப் பலன்களையும் அளிக்கும் தன்மையாய்
- ந்யாஸத: அந்ய = ப்ரபத்தி தவிர வேறு ஒன்றை எதிர் பாராதலும்
- பரம் ப்ராத 4ான்ய அத்3யம் ச - வேறு முக்யமாய் இருத்தல் போன்றவற்றை
- அநபேக்ஷாம் கிஞ்சித் ப்ரத2யதி - எதிர்பாராமையும் என்கிற ஒரு பொருளையும் காட்டுகிறது.

ஸ்வாமி தேசிகன் ந்யாஸ விம்ஸதியில் அருளுகிறார்.

3.16 ஏக சப்தத்திற்கு பொருள் ஸ்வாமி தேசிகன்

ஏகம் என்கிற பதத்தாலே

1. இனிச் சுமையும் எடுக்காமைக்கு (ப்ரபத்திக்கு பின் வேறு ஒன்றை உபாயமாக செய்ய வேண்டிய சுமையை சுமக்காதபடி) நிற்கிற நைரபேக்ஷ்யத்தையும் அருளிச் செய்கிறான்.
2. ஏக சப்தம் உபாய உபேயமாக தான் நிற்கிற நிலையைக் காட்டுகிறது ஆகவுமாம்.
3. ப்ரபத்தியின் கர்த்தாவான (செய்பவன்) தன் பக்கலிலும் தன் க்ரியையான (செயல்) ப்ரபத்தியிலும் பிறக்கும் ப்ரதாந்ய புத்தியைப் (முக்யமான உபாயம் என்ற நினைவை) பராதீநத்வாதிகளாலே (எம்பெருமானால் வருதல் ஆகியவற்றால்) கழிக்கிறதாகவுமாம்.

4. நாநாவித தர்மங்களுக்கு எல்லாம் ஸநாதந தர்மமான (ஏற்கனவே உள்ள ஸித்தோபாயமான) தான் ஒருவனுமே எதிர்த் தட்டாக நிற்கிற நிலையைக் காட்டுகிறதாகவுமாம்.

ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ரஹஸ்யத்ரயசுளகம்

மாம் என்ற சொல் ஏக வசனம். ஒருமை. இதனாலேயே ஒருவன் என்ற பொருள் கிடைக்கிறது. அதற்கு மேல் **ஏகம்** என்ற பதம் விசேஷமான அர்த்தத்தை சொல்லுகிறது.

1. என்னையே உபாயமாக எண்ணி ப்ரபத்தி செய்து முடித்த ப்ரபன்னன் நீ, இனிமேல் நீ மோக்ஷத்திற்காக செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. அதே மோஷ பலனுக்காக இன்னோரு உபாயம் செய்தல் ஆகிற சுமை எல்லாம் நானே சுமந்து உன்னிடம் எதுவும் எதிர்பாராமல் இருக்கிறேன்

2. உலகத்தில் உபாயம், பலன் இரண்டும் வேறாக இருக்கும். **ஏகம் மாம் ஒன்றான என்னை.** உபாயம் பலன் இரண்டும் ஒன்றான என்னை

3. சேதனன் ப்ரபத்தி செய்வதால் தான் தனது காரியம் என்ற எண்ணம் தவிர்க்கப்படுகிறது. எம்பெருமானே எல்லாவற்றையும் செய்விக்கிறான்.

4. ப்ரபத்தி செய்தால்தான் மோக்ஷம். அதனால் ப்ரபத்தியும் உபாயம் என நினைக்கக் கூடாது. ப்ரபத்தி என்னும் வ்யாஜம் எம்பெருமானின் திரு உள்ளத்திலே நம் பாவக்குவியல்களால் ஏற்பாட கோவத்தை தணிக்க காரணமாய் உள்ளது. அவ்வளவுதான்.

5. எல்லாவிதமான உபாயங்கள் அளிக்கும் பலன்களை எல்லாம் நான் ஒருவனே உன் ப்ரபத்திக்கு மகிழ்ந்து அளிக்கிறேன்.

இத்துடன் ஆறாவதாக, ப்ரபத்தி வேறு அங்கங்களை எதிர் பார்ப்பத்தில்லை என்பதையும் சேர்த்து கொள்ள வேண்டும்.

3.17 பிராட்டி ஸம்பந்தம்

ஏகம் என்ற பதம் எம்பெருமான், ஸர்வேச்வரனாகிய எம்பெருமான் ஒருவனையே குறிக்கும். அதில் பிராட்டி ஸம்ப்ந்தம் இல்லை என வாதாடுகின்றனர்.

எம்பெருமான் உபாயம் ஆகும்போது பிராட்டியும் உபாயம் ஆகிறாள். அவன் உபேயம் ஆகும்போது இவளும் உபேயம் ஆகிறாள். அவன் மோக்ஷத்தை அளிக்கும் ஸ்வாமியாக இருக்கும்போது இவள் அதை அனுக்ரஹிக்க சேதனுக்கு பரிந்துரை பேசுபவளாக புருஷகாரமாக இருக்கிறாள் என்பதை எல்லாம் த்வயத்தில் அறிந்தோம்.

எம்பெருமானை சொல்லும் இடத்தில் எல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றாம் ஆயிற்றே என்றார் எம்பெருமானார். எப்போது பகவான் என்றால் அவனை விட்டு அகலாத திருமேனி, ஸவ்ரூப நிரூக தர்மங்கள் எல்லாம் உள்ளனவோ, அதுபோல பிராட்டியும் அவனை விட்டு அகலாது இருக்கிறாள்.

3.18 எம்பெருமானின் திருக்குணங்கள்

எம்பெருமானே கண்ணனாக அவதாரம் செய்தலால், திருமந்திரத்திலும், த்வயத்திலும் வெளியான குணங்கள் அனைத்தும் பார்த்தசாரதியாய் நிற்கும் இவனை காட்டுகின்றன.

3.19 சரமசுலோகச்சுருக்கில் - ஏகம் பதம்

**தன் அருளால் பெரும் சாதனம் * சாதகன் என்று இவற்றைத் *
தன்னுடன் எண்ணுதல் நீங்கத் * தனித்து ஒரு சாதனமாய் /
பொன் அருளோடும் அப்பூமகளோடும் * புகழ் நின்ற ***

இன் உரை ஈசனையே * ஏகம் எண்ண இசைந்தனமே.
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 4

- **தன் அருளால் பெரும் சாதனம் சாதகன் என்று இவற்றைத்** = பரம் பொருளான தன் கடாக்ஷத்தால் பெறுகின்ற உபாயம், அதைச் செய்யும் சேதனன் என்று சொல்லப்படும் இந்த இரண்டையும்
- **தன்னுடன் எண்ணுதல் நீங்கத் தனித்து ஒரு சாதனமாய்** = ஸர்வேச்வரனாகிய தன்னோடு ஸமமாய் நினைத்தலை நீங்கும்படி தனியான ஒரு உபாயமாய்
- **பொன் அருளோடும் அப்பூமகளோடும் புகழ் நின்ற** = பொன்போல் உயர்ந்ததாயும், எல்லோரும் விரும்பும் கருணையும், தாமரைப்பூவில் அவதரித்த அப்பிராட்டியுடன் வாழ்த்தி நிற்கும்படி
- **இன் உரை ஈசனையே ஏகம் எண்ண இசைந்தனமே** = இனிய சூக்திகளை அருளிய எம்பெருமானையே ஏகம் என்னும் பதத்தின் பொருளாய் அநுஸந்தித்தோம்

3.20 உன்னால் வரும் நன்மையை விடு என்றால் என்ன?

ஸ்வாமி தேசிகன் ஸார ஸாரத்தில் சில வாதங்களையும் அதற்கான ஸமாதானத்தையும் சொல்லி இருக்கிறார்.

வாதம்

- **மாம் ஏகம் என்று எம்பெருமான் சொல்வதால், என்னை ஒருவனையே என்று பொருள்.**
- **உன்னால் வரும் நன்மையையும் விடு என்னும்போது, ப்ரபத்தி எனும் நல்ல காரியத்தை செய்யாமல் விடு என்கிறதா?**
- **எம்பெருமான் கருணா ஸாகரம், அவனே உன்னை காப்பான் என்பதால் உன் ப்ரபத்தி அவசியமில்லை என்று ஒரு வாதம்.**

பதில்

- நீ செய்யும் ப்ரபத்தியை, நீயே சுதந்திரமாகச் செய்கிறாய் என்ற எண்ணத்தை விட்டு விடு.
- எம்பெருமானே முக்ய உபாயம் என்று கருதாமல், பரப்த்தியே முக்ய உபாயம் எனும் கருத்தை விடு
- சேதனன் சுதந்திரம் அற்றவன். எம்பெருமானின் ஸங்கல்பத்தாலே எல்லாம் நடக்கிறது.

3.21 எம்பெருமான் உபாயம் எனில் ப்ரபத்தி எதற்கு?

வாதம்

- **என்னை ஒருவனையே சரண மடை என்பதால், பகவான் ஒருவனையே நம்ப வேண்டும்.**
- **அது இருக்க, ப்ரபத்தி எதற்கு செய்ய வேண்டும்?**

பதில்

பகவான் ஒருவன்தான் நேர் உபாயம். வேறு உபாயங்கள் கிடையாது. முதலில் ப்ரபத்தி என்ற காரியமே எம்பெருமான் கருணையால்தான் உண்டாகிறது. சேதனன் சுதந்திரமாய் செய்வது இல்லை.

நாம் எத்தனையோ பிறவிகளாக பாபங்களைச் செய்து வந்திருக்கிறோம். எம்பெருமானின் ஆஜ்ஞையை மீறியதால் அவனுக்கு நம்மேல் ஆஜ்ஞாதிலங்கனம். கடும் சீற்றம் . இந்த ப்ரபத்தி என்ற அல்பமான காரியம், அந்த கோவத்தை நீக்க வ்யாஜமாக உள்ளது. அதனால் மகிழ்ந்த எம்பெருமான் தன் ஸங்கல்பத்தால் பலனை அளிக்கிறான்.

உதாரணம் - 1

ஒரு குழந்தைக்கு அப்பா விளையாட்டு பொம்மை வாங்கித் தருவதாக இருந்தார். குழந்தை பெரிய தவறு செய்து விட்டது. அப்பாவிற்கு அதன் மேல் கடும் கோவம். உனக்கு அந்த toy கிடையாது என்கிறார். குழ்ந்திஅக்கு மிக்க வருத்தம்.

உடனே அது அப்பாவின் காலைக் கட்டிக் கொண்டு தெரியாமல் தப்பு செய்து விட்டேன். இனிமேல் செய்ய மாட்டேன். நீ என்னிடம் அன்பாக இருந்து எனக்கு punishment தராமல், அந்த toy வாங்கித் தா எனக் கெஞ்சுகிறது. என்னதான் தப்பு செய்திருந்தாலும், அப்பாவிற்கு குழந்தையிடம் வாஞ்சை. போதாக் குறைக்கு அம்மா வேறு குழந்தைக்கு support. அப்பா என்ன செய்வார்? கோவம் கொஞ்சம் கெஞ்சமாக குறைகிறது. சரி, போனால் போகிறது. நீ தப்பை புரிஞ்சிண்டிருக்கே. நானே பெரிய மனசு பண்ணி உனக்கு toy வாங்கித் த்ருகிறேன் என்கிறார்.

இங்கே குழந்தை அப்பா காலைக் கட்டிக் கொண்டால் toy வந்து விடுமா என்ன? இல்லை. அது ஒரு வ்யாஜம். அப்பா கோவத்தை குறைக்க. அவ்வளவுதான். குழந்தையின் மன்னிப்பை கேட்க அப்பா, தன் கருணையால் அந்த toy வாங்கித் தருகிறார்.

குழந்தை எங்கேயாவது அப்பா காலை பிடித்தால் toy தானகவே வரும் என நினைக்க முடியுமா?

சரி குழந்தை மன்னிப்பு கேட்கவில்லை என்று வைத்து கொள்வோம். அப்பவிற்கு இன்னுமும் கோவம் அதிகமாகும். இவ்வளவு தப்பு செய்து விட்டு கல்லுளி மங்கன் மாதிரி உட்கார்ந்து இருக்கிறானே! இவனுக்கு போய் நான் எதற்கு வாங்கித் தர வேண்டும். குற்றத்தை உணரும் தன்மையே இல்லாமல் போய்விடுமே.

உதாரணம் - 2

ஒரு கிராமத்தில் நல்ல மனம் உள்ள செல்வந்தர் இருக்கிறார். எல்லா ஜனக்களுக்கும் உதவி செய்பவர். அவரிடத்தில் ராம நென்பவன் வேளை செய்து வந்தான். ராமனுக்கு தன் பெண்ணிற்கு திருமணம் செய்ய ஆசை. ஆனால் செலவழித்து செய்ய பணம் இல்லை. அவனுடைய நண்பன் ஒருவன் சொன்னான். உன் எஜமானன் நல்லவராயிற்ற்ந்ந். அவரிடம் உன் குறையை சொன்னால் பணம் தர மாட்டாரா என்று.

ராமனும் செல்வந்தரிடம் விண்ணப்பித்தான். அவரு மகிழ்ந்து இது என்ன பெரிய காரியம்.,. நானே எல்லா பணமும் செலழித்து கல்யாணத்தை நன்கு நடத்தி வைக்கிறேன் என்று ஸகலவிதமான ஏற்பாடுகளையும் செய்து கல்யணாத்தை வெகு விமரிசையாக நடத்தினார்.

கல்யாண அமர்க்களம் முடிந்தவுடன் சாகவாசமாக திண்ணையில் உட்கார்ந்து இருந்தபோது ராமனின் நண்பன சொன்னான். "ராமா பார்த்தாயா உன் எஜமானருக்கு என்ன நல்ல மனசு. நல்ல பண்பு. உனக்கு முடியாது என்று தெரிந்திருந்தும் இப்படி தடபுடலாக செய்து வைத்தாரே" என்றான்.

ராமன் சொன்னான். அவரா செய்தார்? நான் போய் அவரைக் கேட்டதாலேத் தான் செய்தார். நான் கேட்ட விண்ணப்பம்தான் முக்யம். நான் கேட்காவிட்டால் அவர் செய்வாரா? நான் கேடதுதான் பெரிசு. அவர் என்ன பெரிசா செய்தார்? என்று சொல்ல முடியுமா?

3.22 மாம் ஏகம் என்பதில் பிராட்டி எங்கே?

வாதம்

- **மாம் ஏகம் என்பதால் பகவான் ஒருவனே ஸித்தோபாயம். இரண்டாவது என்பது கிடையாது.**
- **என்னை ஒருவனையே என்று கண்ணன் சொல்லும்போது பிராட்டியின் பங்கு அங்கு எங்கே?**
- **பிராட்டியை எம்பெருமானுடன் உபாயம் என்று வைத்துக் கொண்டால் மேலே கண்ணன் சொன்ன ஒரே உபாயம் என்பதை மறுக்கும்.**
- **எனவே பிராட்டி உபாயமில்லை என்பது சிலர் கருத்து.**

பதில்

- பிராட்டி பகவானை விட்டு எப்போதும் பிரியாதிருக்கிறாள். இது எல்லோரும் ஒத்துக் கொண்ட உண்மை.

- பகவான் ஸித்தோபாயமாக ஆகும்போது அவனது திருமேனிப்பற்றி சொல்லவில்லை. சில குணங்களை சொல்லவில்லை என்பதால் பகவான் இவற்றை எல்லாம் கழற்றி வைத்து விட்டு அவனுடைய ஸ்வரூபம் மட்டுமே உபாயமாக ஆகிறதா?
- எப்படி திருமேனி, திருக்கல்யாண குணங்கள் பகவானிடம் எப்போதும் உள்ளதோ அது போல பிராட்டியும் எம்பெருமானுடன் சேர்ந்தே இருக்கிறாள்.
- பகவான் விசேஷம். பிரிக்கமுடியாத விசேஷணங்கள் பிராட்டி, அவனுடைய திருமேனி, திருக்கல்யாண குணங்கள். இவை உபாய வகுப்பில் சேர்வதால் இரண்டு உபாயம் என்று ஆகி விடாது.
- தவிர பகவான் உபேயம் ஆகும்போது பிராட்டி, அவனுடைய திருமேனி போன்றவையும் பலனாக ஆகின்றன.
- பலனில் மட்டும் இவை சேர்ந்து இருக்கும், ஆனால் உபாயத்தில் இல்லை என்று சொல்வது அபத்தம்.
- பிராட்டி, திருக்கல்யாண குணங்கள் இவை உபாயமில்லை. பகவானின் ஸ்வரூபம் மட்டுமே உபாயம் என்றால் ப்ரமாணங்களுக்கு அது விரோதம்.

இப்படி ப்ரமாணங்களைத் தழுவிய கருத்துக்களையே நாம் அர்த்தமாக கொள்ள வேண்டும்.

3.23 முடிவுரை

ஆக, **மாம் ஏகம்** என்று சொல்லும்போது திருமகளோடு கூடிய பகவான் தான் ஒருவனாகவே தனித்து நின்று பலனைத் தருகிறான். அவனே உபாயம். அது ஸித்தோபாயம். அவனே பலன். அது பரம புருஷார்த்தம்.

ஆனால் சேதனன் செய்யும் ப்ரபத்தி என்னும் சடங்கை எதிர் பார்க்கிறான். அது ஸாத்யோபாயம். சேதனன் செய்யும் பரப்த்தி ஒரு வ்யாஜமே தவிர நேர் உபாயமில்லை. பகவான் ஒருவனே நேர் உபாயம்.

தவிர, ப்ரபத்திக்கு அதற்கு விதிக்கப்பட்ட ஐந்து அங்கங்கள் தவிர வேறு ஒன்றும் தேவையில்லை. செய்யவும் கூடாது.

ஒரு முறை செய்த ப்ரபத்திக்கு பிறகு மோஷத்திற்கு உபாயமாக வேறு ஒன்றையும் எதிர் பார்ப்பதில்லை. சேதனனின் இனி வாழ் நாட்களின் சுமையைத் தானே சுமக்கிறான். காலம் முடியும் தருவாயில் அவனுக்கு மோக்ஷ ப்ராப்தியை அளித்து தானும் மகிழ்கிறான்.

4 - ஶரணம்

உனக்கு ஏதுசுமை இனியென *
தமக்கு இனியவனான என்னை *
உமக்கு பணி செய்ய திருத்தி *
அருளிய அருங்குணங்களையும் *
சுடும்கடலில் சுழன்றமிழ்ந்த எம்மை *
மீட்டிக் காட்டிய நல்வழியும் *
தன்னையே தரும் தனியிறையாய் *
வேராய் ஓர் ஆறாகி நின்றாயே

இனியென	= இனிமேல்
உனக்கு ஏது சுமை	= சேதனனாகிய உனக்கு எதற்கு பாரம் என்று
தமக்கு இனியவனான்	= பகவானுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்
என்னை திருத்தி	= என்னை நல்ல வழியில் திருத்தி
ஈந்த குணங்களையும்	= நற்குணங்களை அருளி
உமக்கு பணி செய்ய	= அவனுக்கே கைங்கர்யம் செய்வதற்காகவே
சுடும்கடலில்	= வெந்து போகும்படியான ஸம்ஸாரக் கடலில்
சுழன்றமிழ்ந்த	= தத்தளித்து அமிழ்ந்து கிடக்கும்
எம்மை மீட்டிக்	= என்னை அதிலிருந்து காப்பாற்றி
காட்டிய நல்வழியும்	= நல்ல புருஷார்த்தத்தைக் காண்பித்து
தனியிறையாய்	= ஸர்வ ரக்ஷகன் தானே என்பதை நினைவுறுத்தி
தன்னையே தந்திடும்	= மேலும் தன்னையே தந்து
வேராய்	= மூல காரணமான வேர் போல் உள்ள அவன்
ஓர் ஆறு ஆகி	= ஒரு சிறந்த உபாயமாய்
நின்றாயே	= தானே நின்றானே

4.1 முன்னுரை

சேதனன் அகிஞ்சனன். எம்பெருமானைத் தவிர வேறு புகல் அற்றவன்.

மற்ற உபாயங்களை செய்ய சக்தி இல்லாமல் ப்ரபத்தியை பின்பற்றுகிறான் சேதனன். அவனுக்கு, **மற்ற உபாய ஸ்தானங்களில் எம்பெருமான் தானே நின்று பலனைத் தருவதை** இங்கு **ஶரண** சப்தம் காட்டுகிறது.

பிறப்பு இறப்பு எனும் வெப்பமான கடலில் நான் சுழன்று மூழ்கி கிடக்க பகவானே, நீ என்னை அதிலிருந்து காப்பற்றி என்னை தீய வழிகளிலிருந்து திருத்தி தூய குணங்களை கொடுத்து நல்ல வழியை காட்டி உமக்கே கைங்கர்யம் செய்ய அருளினாய் என்பது பாசுரத்தின் ஸாரார்த்தம்.

4.2 ஶரணம் என்றால் உபாயம்

உபாயே க்₃ருஹ ரக்ஷித்ரோ: ஶப்₃த₂: ஶரண மித்யயம் ।
வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தை₂க வாசக: ।।
அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை

ஶரணம் என்னும் பதத்திற்கு **உபாயம், க்ருஹம் (வீடு), ரக்ஷகன்** என்ற மூன்று பொருள் என்றது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை. இருந்தாலும் இங்கு இடத்திற்கு தகுந்த பொருள் (context sensitive meaning) சொல்ல வேண்டி இருப்பதால் **உபாயம்** என்ற அர்த்தத்தையே சொல்லுகிறது என்றனர் பூர்வாசாரியர்கள்.

மேலே அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் முதல் வரி, மூன்று பொருளைக் கூறினாலும், இரண்டாம் வரி "இங்கு உபாயம் என்பதை கூறுகிறது" என்று திடவட்டமாக (conclusively) சொல்லியது. சரம ஸ்லோகத்தில், எல்லாவிதமான தர்மங்களையும் அறவே விட்டு ஒழித்து, என்னை ஒருவனையே பற்றும்படியான ப்ரகரணம் (context) முதலில் கண்ணன்

சொன்னதால், அது சொன்ன முறையிலேயே இங்கேயும் பொருள் சொல்ல வேண்டும்.

4.3 ஸ்வாமி தேசிகன் விளக்கம் – ரஹஸ்யத்ரய சுளகம்

ஶரணம் என்றது உபாயமாக என்கிறபடி

என்னை ஒருவனையே சரணமாக பற்று என்று விதித்தது. இதன் பொருள் -- சேதனனே உனக்கு வேறு உபாயம் இல்லை. நான் ஒருவன்தான் அனைவருக்கும் ரக்ஷகன். என்னிடம் மஹாவிச்வாசம் போன்ற ஐந்து அங்கங்கள் உடையதாகவும், தன்னை காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிக்கிறதான பரந்யாஸத்தை என்னிடம் செய்" என்று ஆகிறது.

இங்கு பகவானுடைய திருவடிகள் என்பது நேரிடையாக சொல்லாமல் சொன்னது.

4.4 பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

ஶரணம் - உபாயமாக

இந்த ஶரண ஶப்தம் - ரக்ஷிதாவையும், க்ருஹத்தையும் உபாயத்தையும் காட்டக்கடவதே ஆகிலும், இவ்விடத்தில் உபாயத்தையே காட்டுகிறது. கீழோட சேர வேண்டுகையாலே

பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 236-237

இனி பஞ்சமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் - ஶரணம் - என்று. அதுக்கு அர்த்தம் அருளிச் செய்கிறார் - உபாயமாக - என்று

அர்த்தாந்தரங்களையும் காட்டவற்றாயிருக்க, இவ்விடத்தில் இது உபாயத்தையே காட்டுகிறமையை ஸஹேதுகமாக அருளிச் செய்கிறார் - இந்த ஶரண சப்தம் தொடங்கி

ஸ்வாமி மணவாள மாமுநிகள் முமுக்ஷுப்படி வியாக்யானம்

ஶரணம் - உபாயமாக.
உபாயமாகிறது அநிஷ்டநிவாரகமும், இஷ்டப் ப்ராபகமுமாய் இருக்கும்.
பிள்ளைலோகாசாரியார், ச்ரிய:பதிப்படி

மற்ற உபாயங்களை அறவே ஒழித்தல் என்பது எம்பெருமானை உபாயமாக பற்று என்பதை காட்டும். என்பது

எம்பெருமானை உபாயமாக கொள்ளுதல் என்றால் அதற்கு அங்கமாக மற்ற மற்ற உபாயங்களை கைவிடுதல் என்பது புரிகிறது. ஏற்கனவே **ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய** என்று மற்ற உபாயங்களை அறவே துறத்தல் என்று சொல்லிய பிறகு, இங்கு **ஶரண** பதம் அவசியமா? என்று கேட்கலாம்.

இது அவசியம். சில இடங்களில் மறைமுகமாக பொருள் அறிந்தாலும் நேரிடையாக, வெளிப்படையாக சொல்வது மிகவும் முக்கியம். எம்பெருமானாரும் இந்த கருத்தையே - அர்த்தத்தின் மூலம் அறிவதைவிட நேரான சொல்லின் முலமாக அறிவது - என்பது முக்யம் என வலியுறுத்தினார், ஶ்ரீபாஷ்யத்தில்.

ஆக எம்பெருமானே ஆறும், பேறும், ப்ராபகமும், ப்ராப்யமும் என்பதை தெளிவாக அறிய வேண்டி ஶரண பதம் இங்கே சொல்லியது.

4.5 ஶரணம் ப்ரபத்யே – ஶரணம் வ்ரஜ

ஶரணம் பதம் த்வயத்தைப் போலவே இங்கும் உபாயத்தைச் சொல்லுகிறது.

- **த்வயத்தில்** சேதனன் செய்யும் **ஶரணாகதியில் "எம்பெருமானே நீயே எனக்கு உபாயம் ஆக வேண்டும்,"** என வேண்டுகிறான்.
- இங்கே எம்பெருமான் கண்ணனே **சரம ஶ்லோகத்தை** சொன்னதால் **"அர்ஜுனா, உபாயமாக என்ன அடைவாய்,"** என்றான்.

- இரண்டு இடத்திலும் **ஶரணம் என்றால் உபாயம்** என்று பொருள்.

த்வயத்தில் சேதனன் பகவானை நோக்கி கூறுகிறான்- **உன்னை ஶரணமாக அடைகின்றேன்** என்று. இது சேதனன் நேரிடையாக சொல்வது.

இங்கே **சரம ஶ்லோகத்தில்** சேதனனை நோக்கி பகவான் சொல்கிறான் - **என்னை ஶரணமாக அடைவாயாக** என்று. இது பகவான் அறிவுரையாக, ஆணையாக (advice and command) சொல்வது.

இங்கு **ஶரணாகதி** அர்ஜீநனை நோக்கிதானே உபதேசித்தான் என்று எண்ணக் கூடாது. அது அர்ஜீனக்கும் மட்டும் இல்லை. உபாயந்தரத்தை (வேறு உபாயங்களை) அணுகாது எம்பெருமானே கதி என்று கிடக்கும் குறித்த அங்கங்களுடன் எல்லா பாகவதர்களும் அனுஷ்டிக்கும் **பரந்யாஸத்தை** சொல்லுகிறது.

4.6 ஶரணம் வ்ரஜ என்பதின் பொருள்

இப்படி ஸித்தோபாயமான தன்னைக் காட்டி ஶரணம் வ்ரஜ என்று தனக்கு வஶீகரணமான ஸாத்ய உபாயத்தை (செய்ய இயன்ற) **விதிக்கிறான். கத்யர்த்தமான** (அடைதல் என்ற அர்த்தமான) **வ்ரஜ என்கிற தாது புத்த்யர்த்தமாய் அத்யவஸாய முகத்தாலே** (திட மனத்தாலே) **ஸக்ருத் கர்த்தவ்ய** (ஒரு முறை செய்ய வேண்டிய) **ஸாங்க பரந்யாஸத்தைக்** (அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தி) **காட்டுகிறது.**

ஶரண ஶப்தத்திற்கும் க்ரியா பதத்திற்கும் (வ்ரஜ என்னும் வினை முற்று) **விவக்ஷிதங்களை** (சொல்லவேண்டிய கருத்துக்களை) **த்வயத்திலே சொன்ன பாகுரத்தில் இங்கும் அநுஸந்திப்பது.**

அங்கு ஸ்வாநுஷ்ட்டாநம் (தான் செய்வது) **சொல்லுகிறது ஆகையாலே உத்தமன்** (தன்மை நிலை) **ஆயிற்று.**

இங்கு அபிமுகனைக் (எதிரில் இருப்பவனை) குறித்து விதிக்கிறது ஆகையாலே மத்யமன் (முன்னிலை) ஆகிறது. இது விதி (கட்டளை) என்னுமிடம் ஸ்வாரஸ்யாதிகளாலும் இத்தை ப்ரபஞ்சிக்கிற (விவரிக்கும்) ஶாஸ்த்ரங்களிலும் ஸித்தம்.

ஸ்வாமி தேசிகன், ஸாரஸாரம்.

என்று ஸ்வாமி தேசிகன் காட்டினார்.

ஸித்தோபாயம் என்பது ஏற்கனவே இருக்கும் உபாயம் (Existing Means). ஸாத்யோபாயம் என்பது சேதனன் அனுஷ்டிக்கும் உபாயம் (Executable means). இது ப்ரபத்தி.

4.7 எம்பெருமானின் அருள்

அருளாது ஒழிவாய் * அருள் செய்து * அடியேனைப்
பொருளாக்கி * உன் பொன்னடிக்கீழ்ப் பூக வைப்பாய் *
மருளே இன்றி * உன்னை என் நெஞ்சத் திருத்தும் *
தெருளே தரு * தென்திருநாவாய் என் தேவே!

நம்மாழ்வார், திருவாய்மொழி 9-8-8

என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் சொல்கிறார். திருநாவாய்ப்பிரானே நீ அருள் செய்து என்னை ஒரு பொருளாக ஏற்று உன் திருவடித்தாமரையின்கீழ் பணி செய்ய ஆக்கி வைத்தாலும் சரி, அருள் செய்யாமல் இருந்தாலும் சரி, என்னுடைய அஞ்ஞானத்தை நீக்கி என் மனத்தில் உன்னை வைத்து போற்றும்படி செய், அது ஒன்னே போதும் என்றார்.

பகவானின் அருள், அவனுடைய நிர்ஹேதுக க்ருபைதான் ஸித்தோபாயம்.

4.8 உனக்கு ஏதுசுமை இனியென தமக்கு இனியவனான என்னை

ப்ரபத்தி செய்த நான் உனக்கு இனியவனானேன். அதனால் இனி எந்த விதமான பொறுப்பும் இல்லை. வேறு உபாயங்கள நாட வேண்டாம், என்னை இனிமேல் காக்கும் பொறுப்பை பற்றி கவலை வேண்டாம். நீயே என்னை தாங்கிறாய், ரக்ஷிக்கிறாய் என்று இங்கே பாசுரத்தில் அர்த்தம்.

ஸ்வாமி தேசிகன் **தாத்பர்ய சந்த்ரிகையில்** சரம ஸ்லோகத்திற்கு சுருக்கமான கருத்தை காட்டுகிறார்.

> **"எந்தெந்த உபாயம் தன்னால் செய்ய இயலாமையைக் கருதி எவன் வருந்துகிறானோ, அவனுக்கு அந்த உபாயத்தின் இடத்தில் நானே நின்று அந்த உபாயத்தை முடித்து வைப்பேன்," என்பது கருத்து.**

பகவான் உபாய ஸ்தானத்தில் நின்று உபாயத்தை நிறைவேற்றி, அதற்குரிய பலனை தந்த்ருள்கிறான்.

4.9 உமக்கு பணி செய்ய திருத்தி

மானேய் கண் மடவார் மயக்கில் பட்டு * மாநிலத்து
நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் *
தேனேய் பூம்பொழில் சூழ் திருவேங்கட மாமலை * என்
ஆனாய்! வந்து அடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 1-9-2

எம்பெருமானே, மான் போன்ற விழிகளை உடைய பெண்களில் மயங்கி, நரகம் செல்லும்படியான எல்லாவிதமான பாவங்களையும் செய்தேன். இப்போது வேங்கடவா, உன் திருவடி வந்து அடைந்தேன். எனக்கு அருள் செய்வாய் என்றார், ஆழ்வார்.

எம்பெருமான் திருத்துகிறான் என்றால், அல்பமான, அஸ்திரமான உலக விஷயங்களில் உள்ள ஆசைகளை விலக்கி, பரம போக்யமான பகவத் பாகவத கைங்கர்யத்தையும் கொடுத்து அருளுகிறான்.

4.10 சுடும் கடலில் சுழன்று அமிழ்ந்த எம்மை மீட்டிக் காட்டிய நல்வழியும்

அநிஷ்டநிவாரகம் என்பது பிறப்பு இறப்பு என்னும் ஸம்ஸார கடலிருந்து மீட்டி இனிமேல் உனக்கு பிறப்பு என்பதே இல்லை. இறப்பு என்பது ப்ரபத்திக்கு பின் ஒரே முறைதான் என்று பகவான் அருள் செய்வது.

காட்டிய நல்வழி என்பது சாஸ்திர விஹிதமாக ஜீவ யாத்ரையை தொடர வேண்டும் என்று சாஸ்த்ர நியமநாதிகாரத்தில் பார்த்தோம்.

4.11 வேராய் ஒரு ஆறாகி நின்றாயே

எம்பெருமான்தான் ஆறு, வழி, உபாயம், ஸாதனம். வேர் என்பது அவன்தான் ஆதிகாரணம். வேராய் வித்தாய் முதலாய் என்றார் நம்மாழ்வார்.

இப்படி தனித் தத்துவமாக தன்னையே தரும் ஒரு உபாயமாய், ஸித்தோபாயமாய் எல்லா ஜீவராசிகளுக்கும் ஆணி வேராக திகழ்கிறாய்.

4.12 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

ஊனில் இணைத்து உழல்விக்கும் * வினைக் கடலுள் விழுந்த *
யான் எனதான குணங்கள் * எனக்கு இசை நல்வழியும் /
தான் உதவித் தனைத் தந்திட நின்ற * தனித் தருமம் *
நான் இனி வேறு ஓர் பரம் * நணுகா வகை நல்கியதே.
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 5

- **ஊனில் இணைத்து உழல்விக்கும் வினைக் கடலுள் விழுந்த** = மாமிசமான உடலை ஒன்று சேர்த்து, அதில் அமிழ்த்துகின்ற கர்மா என்னும் ஸமுத்திரத்தில் விழுந்து தத்தளிக்கும் நான்
- **யான் எனதான குணங்கள் எனக்கு இசை நல்வழியும்** = என்னுடைய குணங்களையும், என்னுடைய அதிகாரத்திற்கு தகுந்த பக்தி, ப்ரபத்தி ஆகிற உபாயங்களையும்
- **தான் உதவித் தனைத் தந்திட நின்ற தனித் தருமம்** = எம்பெருமான் தானே அளித்து, தன்னையும் அநுபவிக்குமாறு கொடுத்து நிற்கும் ஓப்பற்ற ஸித்தோபாயமான பகவான்
- **நான் இனி வேறு ஓர் பரம் நணுகா வகை நல்கியதே** = நாம் இனிமேல் ஒரு பொறுப்பையும் சுமக்காதபடி அருள் புரிகிறது

4.13 த்வயத்தில் ஶரணம்

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும் *
தொல்வினை தீர்க்கும் என் இறையே *
மன்னித்து அருளும் சீமாதவன் மலரடிகள்
மருவ * மற்றொன்று இன்றி நிறைவே.
உகத்தின் சுகம் 9

வேறு தெய்வங்களை வணங்கும் அநாதியான கர்மாக்களை ஒரே மனதாய் களைந்து எடுக்கும் என்னுடைய ரக்ஷகன் நீயே! என்னுடைய பாபங்களை எல்லாம் மன்னித்து எனக்கு அனுக்ரஹம் செய்யும் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை நான் பற்ற, [அதுவே] வேறு ஒன்றையும் எதிர்பாராது [எல்லாப் பலன்களுக்கும்] பூர்த்தியாக ஆனது, என்று உகத்தின் சுகத்தில் எம்பெருமானின் திருவடிகளே உபாயம் என்பதை சொன்னோம்.

4.14 முடிவுரை

ஆக, இந்த சரம ஶ்லோகத்தில், ஶரணம் என்ற பதம் முன்னே த்வயத்தில் சொன்ன ஶரணம் பதம் போலவே பொருளைத் தருகிறது.

அது எம்பெருமானே உபாயம் என்று காட்டுகிறது. எம்பெருமான் உபாயம் என்றால் அவன் பிராட்டியுடன் சேர்ந்த நாராயணன், ஶ்ரீமந் நாராயணன் என்று விளங்கியது. அப்படி எம்பெருமானை உபாயமாக சொல்லும்போது அவன் **திருவடிகளே பற்றுவதற்கு சுலபம்** என்று த்வயத்தில் சொன்ன அர்த்தமே இங்கும் பொருந்தும்.

சேதனன் செய்கிற **ப்ரபத்தி ஒரு வ்யாஜமே** (சாக்கு) தவிர அது மோக்ஷத்திற்கு நேர் உபாயம் இல்லை. அது எம்பெருமானின் சீற்றத்தை தவிர்க்க காரணம் ஆகிறது. கோவம் தணிந்த எம்பெருமான், தன் கருணையாலே சேதனனுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருளுகிறான்.

ஆக, ப்ரபத்தி மோக்ஷத்திற்கு ப்ரதாந காரணம், நேர் காராணம் இல்லை என்ற கருத்தைக் கொண்டு "ப்ரபத்தி உபாயம் இல்லை" என்று சொல்கிறார்களே தவிர, **ப்ரபத்தியையே செய்ய வேண்டாம் என்ற கருத்தை சொல்லவில்லை.**

ப்ரபந்நாத்3 அந்யேஷாம் ந தி3ஶதி முகுந்தே3 நிஜ பத3ம்
ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் அதிகாரி விபாகாதிகாரம்

முகுந்த3; மோக்ஷம் அருளும் எம்பெருமானே,
ப்ரபந்நாத்3 அந்யேஷாம் ப்ரபன்னர்களைத் தவிர மற்றவர்களுக்கு நீ
நிஜ பத3ம் ந தி3ஶதி உன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் செய்யும் பரமபதத்தை கொடுப்பதில்லையே! என்று ஸ்வாமி தேசிகன் அதிகாரி விபாகாதிகாரம், ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித்தார். ஆக, ப்ரபத்தி என்ற காரியம் அவசியமே.

பிராட்டியும் எம்பெருமானை விட்டு பிரிக்க முடியாத அவனுடைய திருமேனி, குணங்கள் போல விசேஷணமாய் உள்ளாள். மனைவி என்ற முறையில் அவனுக்கு அடங்கியவளாக இருக்கிறாள். **பிராட்டியும் எம்பெருமானைப் போலவே ஸித்தோபாயம் ஆகிறாள்.**

5 - வ்ரஜா

மறத்தால் மறுத்த மறுமைப்
**பயனால் * மனம் வெறுத்து *
அறத்தால் பிறழாது * அதன்
வழியே நடந்து * உறுதியுடன் *
ஒருக்கால் தஞ்சமென * உம்
பொருளை உமக்கே தந்து உயர்ந்து *
தரத்தால் அடைவிக்கும் அடிகளை *
அடைவோமே நாம் உணர்ந்து**

மறத்தால்	= முன்வினை பாபங்களால்
மறுத்த	= நல்ல கதி மறுக்கப்பட்டு அதனால்
மறுமைப்பயனால்	= பல பிறவிகளை அடைவதைக் கண்டு
மனம் வெறுத்து	= மனம் வெதும்பி
அறத்தால் பிறழாது	= தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட
அதன் வழியே நடந்து	= கர்மாக்களை தவறால், பிழையின்றி செய்து
உறுதியுடன்	= மன உறுதியுடன்
ஒருக்கால்	= ஒரே ஒரு முறை
தஞ்சமென	= உம்மை அடைக்கலம் என்று அடைந்து
உம்பொருளை	= உமக்கு சொந்தமான என் ஆத்மாவை
உமக்கே தந்து உயர்ந்து	= உம்மிடம் ஸமர்ப்பித்து அதானல்
தரத்தால்	= பெருமையுடன்
அடைவிக்கும்	= மோஷ ப்ராப்த்தி அளிக்கும்
அடிகளை	= உம் திருவடிகளை
அடைவோமே	= நாம் ஶரணாக பற்றுவோமே
நாம் உணர்ந்து	= ஆசார்யர்கள் உபதேசத்தின் மூலம் அறிந்து

5.1 முன்னுரை

வ்ரஜ என்பது அடைவாயாக.

இந்த பதம் த்வயத்தில் விவரித்த ப்ரபத்யே என்பது போல் அங்கங்களுடன் செய்யும் ஆத்ம ஸமர்பணத்தையே கூறுகிறது.

5.2 சுருக்கமான பொருள்

எம்பெருமான் கண்ணனாக அவதரித்து சரம ஶ்லோகத்தை சொல்லுங்கால், மாம் ஏகம் என்ற சொற்களால் கீழே என்னை ஒருவனையே என்று ஸித்தோபாயமான தன்னைக் காட்டினான்.

இங்கே ஶரணம் வ்ரஜ என்று சரணம் அடைவாயாக என்ற பதங்களால் எம்பெருமானை வசீகரிக்க கூடியதான, சேதநன் செய்ய வேண்டியதாய் உள்ள ப்ரபத்தியை அனுஷ்டிக்கும்படி விதிக்கிறான்.

வ்ரஜ என்ற பதம் நேரிடையாக அடைவாய் என்ற பொருளைத் தரும். ஆனால், இலக்கணத்தில் அடைதல், செல்லுதல் போன்ற பதங்களுக்கு அறிதல் என்ற பொருளும் உண்டு என்பது விதி. ஆக வ்ரஜ என்ற பதத்திற்கு அறிதல் என்ற பொருளை இங்கே எடுத்துக் கொள்கிறோம்.

அறிவு என்றால் இங்கே எந்த அறிவைச் சொல்லும்? மன உறுதியை காட்டுகிறது. அதாவது நம்பிக்கை, மஹாவிச்வாசம் என்ற பெயரோடு, அங்கமாய், மற்ற அங்கங்களோடு கூடியதாக, ஒரே ஒரு தடவை செய்ய வேண்டியதாய், அனைவரும் அனுஷ்டிக்க சுலபமான பரந்யாஸத்தை காட்டுகிறது.

சிலர் வ்ரஜ என்ற பதம் விதிப்பதை (commanding or ordering word) காட்டாது, சாஸ்த்ரங்களைக் கொண்டு எம்பெருமானை அறிந்து கொள்வதைச்

சொல்லும். பகவானின் ஸம்பந்தத்தை அறிவதே **வ்ரஜ** என்றனர். இது பொருந்தாது.

கண்ணன் நேராக அர்ஜீனன் முன்னிலையில், என்னை ஒருவனையே உபாயமாக என்று சொன்ன பிறகு, "அடைவாய்" என்று ஆணையிடும் சொல்லாகக் கொள்வதே சரி என்று முன்னோர்கள் கருத்து. தவிர, ப்ரபத்தியைப் பற்றி பல இடங்களில் சாஸ்திரங்கள் முக்யமாய் செய்ய வேண்டிய காரியம் என்ற சொல்லி இருக்க, அதற்கு மாறாய் அர்த்தம் கொள்வது சரியாகாது.

5.3 ப்ரபத்தி என்றால் என்ன?

ப்ரபத்தி என்பது **ஶரணாகதி, ந்யாஸம், அடைக்கலம், தஞ்சம், ப்ரந்யாஸம், பர ஸமர்ப்பணம், அத்ருஷ்டம், ஆத்ம நிஷேபம்** என்று அழைக்கப்படும்.

ப்ரபத்யே என்பது உபாயமாக அடைகிறேன் என்று பொருள். இதில் **"பத்"** என்பது (தாது - root word) வினைப்பகுதி. இதில் கிடைக்கும் பொருள் **அடைதல், அறிதல். அறிவு, ஞானம்** என்று சொல்லும்போது எந்த ஞானத்தை சொல்கிறது என்றால், எம்பெருமான் ஒருவனே தஞ்சம் என்று அடைக்கலம் புகுந்தால், அவன் நிச்சயம் நம்மை ரக்ஷிப்பான் என்ற திட நம்பிக்கை என்ற ஞானத்தை காட்டுகிறது.

"ப்ர" என்பது (உப ஸர்க்கம்) உரிச்சொல் (adjective) **சிறந்த முறை**யில் என்பதை காண்பிக்கிறது. எம்பெருமானின் ரஷகத்துவத்தின் மேல் உள்ள விசுவாஸத்தின் மிகுதியை காட்டுகிறது. இந்த மாஹாவிசுவாசமே ப்ரபத்திக்கு அங்கங்களான ஐந்திலும் ஒன்றாய், இதுதான் மிக முக்யமானது என முன்னோர்கள் உரைத்தபடி உள்ளது.

ஆக **ப்ரபத்யே** என்றால் மஹா விச்வாசத்துடன் கூடிய ப்ரபத்தியை செய்கிறேன் என்று பொருள் ஆயிற்று. இங்கே, **வ்ரஜ** என்ற பதம் அதைக் காட்டியது.

5.4 த்வயத்தில் ஶரணம் ப்ரபத்யே இங்கே ஶரணம் வ்ரஜ

த்வயத்தில் **ஶரணம் ப்ரபத்யே** என்று சொல்லும்போது பிராட்டியை ஒருக்காலும் பிரியாத எம்பெருமானின் திருவடிகளை நான் உபாயமாக பற்றுகிறேன் என்று பொருள் சொன்னோம். அது போலவே இங்கு சரம ஶ்லோகத்திலும் **ஶரணம் வ்ரஜ** என்பதற்கு அதே அர்த்தம்தான்.

த்வயத்தில் சேதனன் சொல்வதாக அமைந்ததால் **"நான் ஶரணமாக அடைகிறேன்"** என்று நேரிடையாக தான் செய்யும் காரியத்தை சொல்வதாக அமைந்தது (அநுஸந்தானம்). [Active voice verb].

இங்கே எம்பெருமான் எதிரில் நிற்பவனை நோக்கி சொல்வதாக அமைந்ததால், **"நீ செய்வாயாக"** என்ற கட்டளையிடுவதாக அமைந்துள்ளது. [Command sentence verb].

5.5 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யமாத்ருகையில் அருளியது

வ்ரஜ என்ற பதத்திலே

[**வ்ரஜ** என்றால் அடைவாயாக.]

நெறி எல்லாம் (எல்லா உபாயங்களையும்) **எடுத்து உரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி** (ஸர்வஞ்ஞனான எம்பெருமான்) **தந்த ஜ்ஞாநக் கையாலே**

[*அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்து அவர் அறிய,*
நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி
(திருவாய்மொழி 4-8-6) அகன்ற இந்த பூலோகத்தில் சேதனர்கள் தங்கள் அறிவில் குறை இருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். அவர்கள் தன்னை வந்து அடைய கண்ணன் கர்ம யோகம் முதல் பல உபாயங்களை உலகத்திற்கு

காட்டியுள்ளான். அவனோ முழு ஞானத்துடன் இருப்பவன். அவனே சரணாகதியை உபதேசித்து சேதனர்களுக்கு ஞானத்தை அளித்துள்ளான்.]

நின்னிலங்கு பாதம் அன்றி மற்றோர் பாதம் பற்றிலேன் **என்று**

[*நின் இலங்கு பாதம் அன்றி* = உன் ப்ரகாசிக்கின்ற பாதம் தவிர (திருச்சந்த விருத்தம் 90) அந்த எம்பெருமானின் திருவடி அன்றி நமக்கு வேறு ஓர் கதி இல்லை என்பதை நன்கு வெளிப்படுத்தி]

நாம் அவனைப் பற்றலாம் படி தன் பாதமே ஶரணாகத் தந்து ஒழிந்தமையும்

[அவற்றை அடையும்படி தன் திருவடிகளை உபாயமாக காட்டிக் கொடுக்கும் தன்மை "**வ்ரஜ**" சப்தத்தால் தெளிவாகிறது.]

5.6 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகத்தில் அருளியது

வ்ரஜ என்றது அடை என்றபடி

[**ஶரணம் வ்ரஜ** என்றால் உபாயமாக என்னை அடைவாய் என்று பொருள்.]

என்னை ஒருவனையே ஶரணமாக அடை என்கிற இத்தாலே அஶரண்ய ஶரண்யனான (கதி அற்றவர்களுக்கு ரக்ஷகனான)

[என்னை சரணமாக அடை என்றால் என் திருவடிகளிலே ப்ரபத்தி செய்வாய் என்று பொருள். சாதாரணமான சேதனர்கள் அகிஞ்சனர்கள். மற்ற உபாயங்களை அனுஷ்டிக்க சக்தி இல்லாதவர்கள். வேறு கதி இல்லை என்று வந்து விழுபவர்களுக்கு எல்லாம் அபயம் தந்து காத்து அருளும் எம்பெருமான் சொல்கிறான்]

என் பக்கலிலே அத்யவஸாயாதி யுக்தமான (மஹா விஶ்வாஸம் போன்றவற்றுடன்) **ஆத்ம ரக்ஷா பரஸமர்ப்பணம்** (தன்னை காக்கும் பொறுப்பை ஸமர்ப்பிக்கும் பரந்யாஸம்) **பண்ணு என்றதாயிற்று.**

[என்னிடம் அடைக்கலம் புகுவாய் அதை எப்படி செய்ய வேண்டும் என்றால், நான் உன்னை நிச்சயம் ரக்ஷிப்பேன் என்ற மன உறுதியுடன் அநந்யகதியராய், உங்கள் ஆத்மாவை காக்கும் பொறுப்பை என்னிடம் ஸமர்ப்பிக்கவும் என்கிறான்]

மற்றும் கழிக்கிற உபாயங்களுடைய ஸ்தானத்திலே அகிஞ்சநான ஶேஷபூதனுக்கு அவலம்பநமான (பற்றும்படியாக உள்ள) **திருவடிகள் நிற்கிற நிலையைக் காட்டுகிறது.**

[எம்பெருமானின் திருமேனியில், பற்றுவதற்கு எளிமையாகவும், கருணை ஊற்றை பெருக்கக்கூடிய இரண்டு திருவடிகளையும் பற்றுகிறான். சேதனனால் செய்ய முடியாது என விடப்பட்ட மற்ற உபாயங்களின் இடத்திலே நேர்மையான பற்றுக்கோடாய் நின்று ரக்ஷிப்பவை எம் திருவடிகள் தாம் என்று பகவான் கூறுவதாய் உள்ளது.]

5.7 ப்ரபத்தியின் அங்கங்கள்

இந்த பாசுரத்தில் பரபத்தியின் ஐந்து அங்கங்களும் ஆறாவது அங்கியான ஆத்ம ஸமர்ப்பணமும் சொல்லப்பட்டது. த்வயத்தின் விவரணமான "**உகத்தின் சுகத்தில்**" இது 15ம் அத்யாயத்தில் "ப்ரபத்தி முறை" என்ற தலைப்பில் விவரமாக சொல்லப்படுள்ளது.

நாம் அடைய உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தை பெறாமல் தடுப்பவை நம்முடைய பாபங்கள். இப்பொழுது அதைத் தெரிந்து கொண்டு ப்ரபத்தியை அதற்கு சொல்லப்பட்ட அங்கங்களோடு செய்கிறோம்.

ப்ரபத்தியின் ஆறு அங்கங்கள்

1. ப்ராதிகூல்ய வர்ஜனம் - **அறத்தால் பிறழாது**
2. ஆநுகூல்ய ஸங்கல்பம் - **அவ்வழியே நடந்து**
3. கார்ப்பண்யம் என்னும் ஆகிஞ்சன்யம் - **மனம் வெறுத்து**
4. மஹாவிசுவாஸம் - **உறுதியுடன்**
5. கோப்த்ருத்வ வர்ணம் - **தஞ்சம்**
6. ஆத்ம ஸமர்ப்பணம் - **உம் பொருளை உமக்கே தந்துயர்ந்து**

ஷோட3ா ஹி வேத3விதுஷோ வத3ந்த்யேநம் மஹாமுநே ।
ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் ।।
ரக்ஷிக்ஷ்யதீதி விஸ்வாஸோ கோ3ப்த்ருத்வ வரணம் தத2ா ।
ஆத்ம நிக்ஷேப கார்ப்பண்யே ஷட்3விதா4 ஶரணாக3தி: ।।

மஹரிஷியே! வேதம் அறிந்தவர்கள் இந்த ஶரணாகதியை ஆறு வகையாய் அநுஸந்திக்கின்றனர். அவை, **பகவத், பாகவத விஷயத்தில்**

1. அநுகூலனாய் இருப்பேன் என்னும் திடமான எண்ணம் கொள்வது
2. அவர்களிடம் ப்ரதிகூலனாய் இருப்பதை கைவிடுவது
3. உடமையை காப்பது உடையவன் பொறுப்பு எனும் பெரும் நம்பிக்கை
4. என்னை காத்து அருள வேண்டும் என பகவானிடத்து பிராத்தனை
5. எம்பெருமானை அடைய தன்னிடத்து ஒரு கைம்முதல் இல்லாத தன்மையைக் கண்டு வருந்தி தன் இழிந்த, பரிதாபகரமான நிலைமையை உணர்வது
6. தன் ஆத்மாவை எம்பெருமானிடத்து அடைக்கலமாய் வைப்பது

5.8 ஆநுகூல்ய ஸங்கல்பம்

பகவான் திருவுள்ளத்திற்கு ஏற்ற காரியங்களையே செய்வது. இங்கே **அவ்வழியே நடந்து** என்று தர்ம சாஸ்திரங்களில் சொன்ன வழியே நடப்பதாக உறுதி கொள்வது.

உன்னருளுக்கு இனிதான நிலை உகந்தேன்
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

உகக்கும் அவை உகந்து
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து 5

5.9 ப்ராதிகூல்ய வர்ஜனம்

பகவானுக்கு விருப்பம் இல்லாதவற்றை தவிர்ப்பது. **அறத்தால் பிறழாது** என்று தர்ம சாஸ்திரங்களுக்கு கட்டுப்பட்டு அவற்றில் சொன்ன முறைக்கு மாறாக நடப்பத்தில்லை என உறுதி கொள்வது.

நெடுங்காலம் பிழை செய்து நிலை கழிந்தேன்
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

உகவா அனைத்தும் ஒழித்து
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து 5

5.10 கார்ப்பண்யம்

மற்ற உபாயங்கள் செய்வதற்கு தனக்கு தகுதி, அருகதை இல்லாததைச் சொல்லி மனம் வருந்துவது. **மனம் வெறுத்து** என்று இங்கே தன் இழிவான நிலையை எண்ணி எம்பெருமானிடம் சொல்லி வருத்தப்படுவது.

நின் அருளால் கதி இன்றி மற்று ஒன்று இலேன்
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

புகல் இல்லா தவம் அறியேன்
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து 5

5.11 மஹாவிச்வாஸம்

பகவான் நம்மை நிச்சயம் காப்பாற்றுவான் என்கிற மன உறுதி. **உறுதியுடன்** என்ற பதம் இங்கே அசைக்க முடியாத நம்பிக்கையை காட்டுகிறது.

உன் சரணெ சரண் எனும் துணிவு பூண்டேன்
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

மிகத் துணிவு பெற உணர்ந்து
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து 5

5.12 கோப்த்ருத்வ வரணம்

மீதி உபாயங்கள் செய்ய தனக்கு சக்தி இல்லாதலால், அந்த உபாய ஸ்தானத்தில் பகவானே கருணையுடன் நின்று அருள் செய்யுமாறு பிராத்தித்தல். தஞ்சம் என்று எம்பெருமானே உன் திருவடிலளே கதி, நீயே எம்மை ரக்ஷிக்க வேண்டும் பிராத்திப்பது.

மன்னிருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

காவல் என வரித்து
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து 5

5.13 ஆத்ம ஸமர்ப்பணம்

பகவானுக்கு உரிய பொருளான இந்த ஆத்மாவை எம்பெருமானிடமே திருப்பித் தருவது. **உம் பொருளை உமக்கே தந்து உயர்ந்து** என்று இங்கே சொல்லியது.

இன் அருளால் எனக்கு ஓர் பரம் ஏற்றாமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 31

நல் அடைக்கலமாய் அடைந்தேனே
ஸ்வாமி தேசிகன், அடைக்கலப் பத்து

5.14 ப்ரபத்தியின் அங்கங்கள் - தேசிகன் வாக்கு

ந்யஸ்யாம்யகிஞ்சந: ஶ்ரீமந் அநுகூலோந்யவர்ஜித:
விஶ்வாஸப்ராத$_2$ நா பூர்வம் ஆத்மரக்ஷாப$_4$ரம் த்வயி
ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகம் 2

ஸ்வாமி தேசிகன் ந்யாஸ தஸகத்தில் ப்ரபத்திக்கு ஐந்து அங்கங்கள் என்று ஸாதிக்கிறார்.

ஶ்ரீமந் - பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே!

1. அநுகூல - உனக்கு அநுகூலனாய்
2. அந்ய வர்ஜித - ப்ரதிகூலத்தை விட்டவனாய் என்ற எண்ணம் கொண்டு
3. அகிஞ்சன - வேறு உபாயத்திற்கு தகுதியும், சக்தியும் இல்லாமல் இழிந்த நிலையில் உள்ள நான்
4. விஶ்வாஸ - நீ எப்போதும் என்னைக் காத்து அருள்வாய் என்ற மிகுந்த நம்பிக்கையுடன்
5. ப்ராத்தநா - நீயே எனக்கு ரக்ஷகன், நீயே எனக்கு உபாயம் என்று கெஞ்சிக் கேட்கும் பிராத்தனையும் முன்னிட்டு
6. ஆத்ம ரக்ஷா பரம் - இத்தனை பூர்வ அங்கங்களுடன், அடியேனைக் காக்கும் பொறுப்பையும் உன்னிடம் ஸமர்ப்பிக்கின்றேன் என்றார்.

5.15 ப்ரபத்தியின் போது செய்யும் ஸமர்ப்பணங்கள்

எனக்கு உரியன் எனது பரம் என் பேறு என்னாது *
இவை அனைத்தும் இறை இல்லா இறைக்கு அடைத்தோம் *
ஸ்வாமி தேசிகன், அமிருத ரஞ்சனி 8

என்று இந்த ப்ரபத்தியை மூன்று ஸமர்ப்பணங்களுடன் செய்ய வேண்டியதை சொன்னார்.

எனக்கு உரியன்	= நானே எனக்கு ஸ்வாமி
பரம் எனது	= என்னை ரக்ஷிக்கும் கடமையும் என்னுடையதே.
என் பேறு	= அத்தால் வரும் பலனும் என்னுடையதே
என்னாது	= என்று இப்படி எல்லாம் விபரீதமாக எண்ணாமல்,
இவை அனைத்தும்	= ஸ்வரூபம், பரம், பலன் எல்லாவற்றையும்
இறை இல்லா	= தனக்கு ஒரு இறைவன் இல்லாத
இறைக்கு அடைத்தோம்	= பகவானிடம் ஸமர்பித்தோம்.

ப்ரபத்தி என்பது இந்த மூன்று அநுஸந்தானங்களுடன் **(ஆத்ம, பர, பல ஸமர்ப்பணம்)** எம்பெருமானிடம் தன் ஆத்மாவை ஸமர்ப்பிப்பது, மோக்ஷத்திற்காக.

ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே
லக்ஷ்மீ தந்த்ரம் 17-73

லக்ஷ்மீ தந்த்ரம், இந்த ஸ்லோகத்தை ஸ்வாமி தேசிகன் ப்ரதாந சதகத்தில் எடுக்கிருக்கிறார். தான் தன்னைச் சேர்ந்த வஸ்துக்கள் இவைகளின் ரக்ஷண பரத்தைப் பகவானிடத்தில் ஸமர்ப்பிப்பது ஆத்ம நிக்ஷேபம் என்று சொல்லப்படுகிறது என்று விவரித்தார்.

5.16 ப்ரபத்தியின் அங்கங்கள்

**உகந்தவை கொண்டு * உகவாவை கண்டு மருண்டு *
தகுந்தவை தனக்கு * தாழ்ச்சியே எனும் தனிநினைவில் *
மிகுந்த மன உறுதியில் * மாதவனையே காவல் வேண்டி *
வெகுந்த உயிரை வைப்பார் அடி * சேர்வது வைகுந்தமே.**

என்று இன்னொரு இடத்தில் இதையே சொன்னோம்.

1. **உகந்தவை கொண்டு** - எம்பெருமானின் விருப்பத்திற்கு தகுந்தவற்றை செய்யும் **ஆநுகூல்ய ஸங்கல்பம்**
2. **உகவாவை கண்டு மருண்டு** - எம்பெருமான் விரும்பாதவை என்பதை நினைக்கையிலே பயந்து நடுங்கும் **ப்ராதி கூல்ய வர்ஜனம்**
3. **தகுந்தவை தனக்கு தாழ்ச்சியே எனும் தனிநினைவில்** - தன்னுடைய ஸ்வரூபமே எம்பெருமானுக்கு அடி பணிந்து நிற்கும் ஸேஷத்வ பாரதந்திரியமே என அறிந்து, தன்னால் உபாயம் எதையும் கை பற்ற முடிய வில்லையே என வருந்தி நிற்கும் **கார்ப்பண்யம்**
4. **மிகுந்த மன உறுதியில்** - எம்பெருமான் நம்மை என்றும் ரக்ஷிப்பான். அவனே உபாயம், அவனே பலன் என்ற **மஹா விச்வாஸத்துடன்**
5. **மாதவனையே காவல் வேண்டி** - ஸ்ரீயப்பதியான திரு நாராயணனையே ரக்ஷிக்க வேண்டும் என்ற பிராத்தனை ஆகிற **கோப்த்ருத்வ வரணம்**
6. **வெகுந்த உயிரை அடி வைப்பார்** - ஆத்மாவை எம்பெருமானின் திருவடிகளில் ஸமர்பிக்கும் **ஆத்ம ஸமர்ப்பணம்**

இப்படி செய்தவர்கள் **சேர்வது வைகுந்தமே** என்று மோக்ஷம் நிச்ச்யம் அடைவார்கள் என்றது.

5.17 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

**கடுவினை நாம் பெறும் பேற்றைத் * தகைந்தமை கண்டு நம்மேல் *
தொடை விலகாமல் இசைந்து * ஒரு காலம் துணிவுடனே /
உடைமை அடைக்கலமாக * அடைக்கும் உகப்பதனால் *
அடை என அன்று உரைத்தான் * அடைவித்தனன் தன் அடியே**
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 6

- **நாம் பெறும் பேற்றைத் கடுவினை தகைந்தமை கண்டு** = நாம் பெற வேண்டிய உயர்ந்த புருஷார்த்தத்தை, நம்முடைய கொடிய கர்மா அடைய விடாது தடுத்ததை அறிந்து
- **நம்மேல் தொடை விலகாமல் இசைந்து** = நம்மிடத்தில் சாஸ்திரம் கூறுவதை வழுவாது எம்பெருமானுக்கு பிடித்த கர்ரியங்களை நடத்தி

- **துணிவுடனே உடைமை அடைக்கலமாக** = மஹாவிச்வாசத்துடன் ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக
- **ஒரு காலம் அடைக்கும் உகப்பதனால்** = ஒரு முறை ஸமர்பிப்பதில் உள்ள மகிழ்ச்சியோடு
- **அடை என அன்று உரைத்தான்** = என்னை சரணம் அடைவாய் என அன்றைக்கு அருச்சுனனுக்கு உபதேசித்த கண்ணன்
- **தன் அடி அடைவித்தனன்** = தன் திருவடிகளை உபாயமாக அடையும்படி செய்தான்

5.18 பிள்ளைலோகாசாரியார் முமுக்ஷுப்படியில் அருளியது

வ்ரஜ புத்தி பண்ணு.

[உறுதி கொள்வாய் என்று பொருள்]

கத்யர்த்தமாவது புத்யர்த்தமாய் அத்யவஸியம் என்றபடி

[**வ்ரஜ** என்கிற பதம் வ்ரஜகதௌ என்ற தாதுவிலிருந்து தோன்றியது. சஞ்சாரம் என்பதை காட்டும். ஆனால் **கத்யர்த்தா புத்யர்த்தா: -** கதியை சொல்கிற பதங்கள் புத்தியையும் சொல்லும் என்கிற விதியின்படி, இங்கே வ்ரஜ என்பது உறுதியுடன் செல்லுதல் என்பதை காட்டும்.]

வாசிக காயிகங்களுக்கு இதுக்கு அபேஷிதங்களாய் இருக்கச் செய்தேயும் ஜ்ஞாநாந் மோக்ஷமாகையாலே மாநஸமான அநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது.

[உடல், மனம், சொல் என்பதால் சஞ்சாரம் செய்யலாம் என்றாலும், இங்கே மனம் என்பது மட்டுமே சொல்லப்பட்டது. ஏனன் என்றால் ஞானத்தால் மட்டுமே மோக்ஷம் என்று சாஸ்திரங்கள் வரையறுப்பதால், மனம் மூலம் உறுதி எனப்பட்டது. உடலால் வணக்குவது, வாயால் அடைக்கலம் என்று சொல்வது எல்லாம் ஆர்வத்தை வெளிப்படையாக காண்பித்தாலும் உள்ளத்தில் உறுதி என்பதே முக்யமானது.]

ஆக த்யாஜ்யத்தை சொல்லி, த்யாக ப்ராகாரத்தை சொல்லி, பற்றப்படும் உபாயத்தைச் சொல்லி, உபாயநைரபேக்ஷயம் சொல்லி, உபாயத்வம் சொல்லி, உபாய ஸ்வீகாரம் சொல்லுகிறது.

[ஸர்வ தர்மாந் என்பதால் தள்ள வேண்டிய உபாயங்கள் சொல்லியது பரித்யஜ்ய என்பதால் மற்ற உபாயங்களை கைவிட வேண்டிய முறை காட்டப்பட்டது. ஐயோ இத்தனை காலம் இவைகளை உபாயம் என்று நினைத்து ஏமாந்திருந்தேனே என்று வருத்தப்பட்டு ருசி, வாஸனை இவற்றோடு விட வேண்டும்.
மாம் ஏகம் என்பது ப்ரபத்தி உபாயம் இல்லை. ப்ரபத்தியால் வசீகரிக்கப்படும் எம்பெருமானே உபாயம் என்ரு அறிந்து
ஶரணம் அந்த உபாயமான எம்பெருமானை
வ்ரஜ அடைகின்ற காரியத்தை காட்டியது.]

ஶரணம் வ்ரஜ என்றால் உபாயமாக என்னை அடைவாய் என்று பொருள். என்னை சரணமாக அடை என்றால் **என் திருவடிகளிலே ப்ரபத்தி செய்வாய்** என்று பொருள்.

5.19 ப்ரபத்தி - தெளிவுரை (ஸார ஸாரம்)

இப்படி விதேயமான (செய்தே ஆக வேண்டிய - must be done) **ப்ரபதநத்தைச்** (ப்ரபத்தியை) **சிலர்**

[சாஸ்திரங்கள் ப்ரபத்தியை செய்ய வேண்டிய காரியம் என்றே விதித்துள்ளன. ஆனால் சிலர் இந்த ப்ரபத்தியின் உருவத்தை மாற்றி கூறுகின்றனர்.]

அதிகாரி விசேஷணம் (அதிகாரியிடம் ஏற்கனவே இருக்கும் ஒரு நிலை - An existing qualification)

[ப்ரபத்தி என்பது புதியதாய் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே சேதனனிடம் உள்ள ஒரு நிலைதான். பலனை வேண்டி சேதனன் ஒரு காரியத்தை செய்ய நினைக்கிறான் என்றால் அவனுக்கு ஞானமும், தகுதியும் இருக்க வேண்டும் அல்லவா? அதுவே போதும் என்றனர், சிலர்.]

ஸம்பந்த ஞாநமாத்ரம் (எம்பெருமானிடல் உள்ள உறவை அறிதல் மட்டுமே Understanding the eternal relationship),

(பகவானுக்கும் தனக்கும் உள்ள உறவை அறியும் ஞானமே ப்ரபத்தி என்றனர் சிலர்.]

ஸித்தோபாய ப்ரதிபத்தி மாத்ரம் (எம்பெருமான் ஸைத்தோபாயம் என்பதை அறிதல் மட்டுமே Understanding the Lord as the existing means)

[சிலர், எம்ருமான் ஏற்கனவே உள்ள ஸித்தோபாயம் என்று புரிந்து கொண்ட மாத்திரம் போதும் என்றனர்.]

அநிவாரண மாத்ரம் (செய்கையை தடுக்காமை Not preventing the action)

[சிலர், எம்பெருமான் நம்மை ரக்ஷிக்க முற்படும்போது அவனை தடுக்காமல் இருப்பதே ப்ரபத்தி என்றனர்.]

அநுமதி மாத்ரம் (அநுமதி மாத்திரமே - granting the permission only)

[சிலர், எம்பெருமான் நம்மை ரக்ஷிக்க முற்படும்போது அவனை அனுமதிப்பதே ப்ரபத்தி என்றனர்.]

அசித் வ்யாவ்ருத்தி மாத்ரம் (அறிவற்றவைகளிலிருந்து வேறுபடுதல், differentiate from non-sentient)

[சிலர், அசேதன பொருள்களை காட்டிலும் வேறுபட்டு இருப்பதே ப்ரபத்தி என்றனர்.]

சைத்ந்ய க்ருத்யம் (அறிவினால் காரியம் knowledge based action)

[சிலர், நம்முடைய ஞானத்தாலே செய்யும் காரியமே ப்ரபத்தி என்றனர்.]

சித்தஸமாதாநம் (மன அமைதி mental peace)

[சிலர், கவலை இல்லாமல் வாழ்வதே ப்ரபத்தி என்றனர்.]

என்றாற்போலே சொல்லும் அதுவும் இவ்விதிக்கும்,

[இந்த வாதங்களை அப்படியே சரி என்று ஒத்துக் கொண்டால், இந்த சரம ஸ்லோகத்தில் சரணம் செய் என்று ஆணையிடும் செயலுக்கு விரோதமாக போகும்.]

இத்தை விஸ்தரிக்கிற ஶாஸ்திரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உபபத்திகளுக்கும் (பொருத்தங்கள் - matching ideas) **பாஷ்ய கத்யாதிகளுக்கும் நிபுண** (அறிவில் தேர்ந்தவர்கள் - Experts) **ஸம்ப்ரதாயங்களுக்குள் அநுகுணமாக வேண்டுகையாலே**

[தவிர, இந்த வாதங்கள் ப்ரபத்தியை வியாக்யானம் செய்யும் பல சாஸ்திரங்களுக்கும் மாறு பட்டு இருக்கும். மேலும், சாஸ்திரத்தோடு கருத்தில் ஒன்றி எழுதப்பட்டுள்ள கீதா பாஷ்யம், கத்யம் இவற்றில் ப்ரப்த்தியை விளக்கி இருக்கும் முறைக்கும் மாறாய் இருக்கும்.]

நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் என்று நிற்க நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிற இடத்தில்

[(பெரிய திருமொழி 1-9-2) கோடிக்கணக்கான கல்பங்களாய் பாபங்களே செய்து வரும் நமக்கு நரகத்திற்கு வழி தேடாது எம்பெருமான் நம்மை காத்து அருள வேண்டும் என்பதற்கு]

வந்து அடைந்தேன் என்று நாம் பண்ணுகிற அல்பமான வஶீக்ரணயத்நம் (வசீகரிக்கும் முயற்சி)

[(பெரிய திருமொழி 1-9-2) அடைக்கலம் அடைந்தேன் என்று அல்ப காரியமான, வ்யாஜ மாத்திரமான ப்ரபத்தியை செய்து எம்பெருமானின் கோவத்தை தணித்து அவனை வசீகரிக்கிறோம்.]

அதுவும் அவனது இன்னருளே

[(திருவாய்மொழி 8-8-3) என்னுடைய இந்த விருப்பமும் அவனுடைய திருவருளாலே உண்டானது]

இசைவித்து என்னை உன் தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே

[(திருவாய்மொழி 5-8-9) நித்யர்களும், முக்தர்களும் ஸதா ஸர்வ காலமும் வணங்குகின்ற உன் திருவடிகளை முதலில் சம்மதிக்காத என்னை மாற்றி அறிவைக் கொடுத்து இசையும்படி செய்தாயே]

இத்யாதிகளிற்படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜ மாத்ரமன்றோ (சிறு செயல்) **என்று ஸித்தோபாய ப்ராதாநயாநுஸந்தாநத்தில்** (ஸித்தோபாயத்தின் முக்யத்தை அறிதல்) **அவர்களுக்குத் தாத்பர்யம்.**

[இந்த ப்ரபத்தி என்பது நமக்கு தெரிய வந்ததே, அதுவே எம்பெருமானின் கருணையால்தான். அந்த காரியத்தை செய்கிறோமே அதுவும் அவனால்தான். நாம் சுதந்திரமாய் செய்வதில்லை. அவனே நமக்கு காட்டுகிறான். அவனே நடத்தி வைக்கிறான். அவனே பலனையும் அளிக்கிறான்.]

கீழே சொன்ன சந்தேகங்களை அப்படியே தள்ளாமல், அவர்களுடைய கருத்துகளையும் அநுகூலமாக்கி, அதற்கு ஆதாரங்களுடன் பதில் சொல்லுவது எப்படி?

ஸித்தோபாயமான எம்பெருமானே முக்யமான, நேரிடையான உபாயம் என் கருத்தைக் கொண்டு, அதற்கு அடுத்து இருக்கும் சேதனன் செய்யும் ப்ரபத்தியை பலவிதமாக உருவகப்படுத்தி பேசினர் என்று கொள்ள வேண்டும்]

ஸாத்யோபாயமான ப்ரபத்தியை காட்டிலும், ஸித்தோபாயமான எம்பெருமானே பல மடங்கு அவசியமான, முக்யமான உபாயம். அவனைப்போல் ப்ரபத்தி முக்யமான உபாயம் இல்லை என்பதால் பலவகையாக ப்ரபத்தியை பேசுகின்றனர் என்று ஸமாதானம் சொல்ல வேண்டும்.

Having the car with engine, tires and gas I nthe tank is existing means (like bhagavan). You knowing how to drive, go and take the car drive is executable means. Here we say, having the car is more important than you as a driver.

5.20 ப்ரபத்தி பற்றி மேலும் சந்தேகங்கள்

ஸ்வாமி தேசிகன் மேலும் பல வாதங்கள்/சந்தேகங்கள் இவை தோன்றும் என்று சொல்லி அதற்கும் விடை அளிக்கிறார், விவரமாக.

சுருக்கமாக வீண் வாதங்கள் என்பவை

1. **தன் பலனுக்காக தான் காரியம் செய்யாமல் இருப்பதே ப்ரபத்தி (அதாவது ப்ரபத்தி என்று ஒரு காரியம் செய்ய அவசியம் இல்லை. அது பலனுக்காக செய்வது, பலனைக் கருதி எதுவும் செய்யக் கூடாது என்று வீண் வாதம்)**
   [ஒரு காரியம் செய்யாதே என்று சொன்னால், அதை செய்யாமல் சும்மா உட்கார்ந்து இருப்பதும் ஒரு செயல் அல்லவா. ஆகவே ப்ரபத்தி செய்ய வேண்டாம் என்ற செயலை செய்கிறவன், அது செய்மால் இருந்தால் தன்னை காத்து கொள்ளள முடியும் என்ர நோக்குடன் அல்லவா?]

2. **பகவானின் செயலுக்கு எதிராய் நீ முயற்சி செய்யாமல் இருப்பதே ப்ரபத்தி**
[சரிதான். ப்ரபத்தி செய்த பிறகு அவன் மோக்ஷத்தை தருகிறேன் என்கிறபோது நீ மீதி காம்ய கர்மா, பாபம் செய்தல் போன்றவை செய்யாமல் இருக்க வேண்டும் என்று சொல்லலாம்]

3. **தன் பொறுப்பை பிறரிடம் அளிப்பது என்பது ப்ரபத்தி ஆகாது (எஜமானன் தனக்கு செய்ய சக்தி இருந்தாலும் பொறுப்பை வேலையாளிடம் கொடுப்பது இல்லையா?**
[தன் பொறுப்பை பிறரிடம் தள்ளி விடுவதோ, காசு கொடுத்து வேலை வாங்குவது வேறு. அங்கங்களுடன் கார்ப்பண்ய புத்தியுடம் செய்யும் ப்ரபத்தி வேறு. Not a true comparison]

4. **மனத்தால் மட்டுமே செய்வது ப்ரபத்தி**
[சாதாரணமாக, மனம், வாக்கு, காயம் என்று மூன்று கருவிகளாலும் செய்வது பூர்ண ப்ரபத்தி எனப்படும். அப்படித்தான் எல்லோரும் செய்வது வழக்கம். எதற்கும் ஒரு விதி விலக்கு (exception) உண்டு. உடல் முடியாத நேரத்தில், மரண காலத்தில் ஒருவனால் எழுந்து செய்யா முடியாத நிலையில், மனத்தால் மட்டுமே செய்யலாம்.]

5. **பக்திக்கு அருகதை உள்ளவன் மோக்ஷம் பெற துடித்தாலும் ப்ரபத்தி செய்ய முடியாது**
[துடிப்பு என்பது காலத்தை பொறுக்க முடியாது. ப்ரபத்திக்கு தகுதியில் இதுவும் ஒன்றே. அவனும் ப்ரபத்தி செய்யலாம் Refer TICE]

6. **எம்பெருமானின் இயற்கை கருணை ஒன்றே மோக்ஷம் தர முடியுமே? அப்படியிருக்க ப்ரபத்தி அவசியம் தானா?**
[பகவான் ஸ்வதந்திரன். அவனுடைய நிர்ஹேதுக க்ருபை என்றால் அது ஒன்றையும் எதிர் பார்க்காமல் ரக்ஷித்து விடும் என்று பொருள் ஆகாது. அவன் இயற்கை கருணை சேதனனுக்கு நல்ல அறிவு கொடுத்து, ஆசார்ய அனுக்ரஹம் செய்து, ப்ரபத்தி செய்ய தூண்டி அதன் மூலமே ரக்ஷிக்கும்]

7. **பகவானின் குழந்தைகள் நாம். அது ஒன்றே மோக்ஷத்தை தந்து விடும். ப்ரபத்தி அவசியமில்லை**

[சரிதான். ஆனால் எப்போது மோக்ஷம் கிடைடகும் என்று சொல்ல முடியுமா? யாருக்கு எதைக் கொண்டு மோக்ஷத்தை எப்போது கொடுப்பது? பகவான் நமக்கு பிரியா உறவு ஆனாலும், அவனுக்கு கல்யாண குணங்கள் இருந்தாலும், அவை முக்யமே தவிர அது சகட்டு மேனிக்கு எல்லோருக்கும் இன்றைக்கே மோக்ஷம் கொடுக்க முடியாது. சாஸ்திரங்கள் கூறும் யாத்ருச்சிக புண்யம், த்வய உபதேசம், ஆசார்யனால் திருந்துகை, ப்ரபத்தி என்று வரிசையாக சொன்னது எல்லாம் வீணாகி விடும்.]

8. **பகவான் ஸ்வதந்திரன் தானே? அவன் மோக்ஷத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாமே? ஒரு வரை முறை வேண்டுமா?**
[பக்ஷபாதம் (partiality, bias) ஏற்படும். ப்ரபத்தி இல்லாமல் மோக்ஷம் கொடுத்தால், அதை விதிக்கும் சாஸ்திரங்கள் எல்லாம் கலங்கி விடும். சாஸ்திரங்களுக்கே குழப்பம் ஏற்பட்டால் அதன் மூலம் அறிய வேண்டிய பகவானை புரிந்து கொள்ள முடியாது]

9. **சேதனன் அறியாமல் செய்யும் ஒரு புண்யமே உபாயமாய் போதுமே மோக்ஷத்திற்கு. ப்ரபத்தி அவசியம்தானா?**
[புண்யம் என்பதை கண்ணால் பார்க்க முடியுமா? சாஸ்திரத்தை வைத்துக் கொண்டுதான் அறிய வேண்டும். அதே சாஸ்திரம்தான் ப்ரபத்தியைச் செய் என்ரு விதிக்கிரது. அதையையும் ஏற்க வேண்டும்]

10. **சேதனன் ஸ்வதந்திரன் இல்லை. அப்படியிருக்க அவனால் எப்படி ப்ரபத்தி செய்ய முடியும்?**
[சேதனனுக்கு ஒரு செயலில் முயற்சி செய்ய சிறு சுதந்திரம் உண்டு. அதுவும் எம்பெருமான் கொடுத்ததே. ஶ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் சேதனனுக்கு ஒரு காரியம் செய்யும் தன்மை உண்டு, கர்த்ருத்வம் உண்டு என்கிறார். அப்படி இல்லை என்றால் சாஸ்திரங்கள் இதைச் செய். செய்யாதே என்று சொல்வது எல்லாம் பலன் இன்றிப் போகும். எல்லாம் பகவானே என்றால் நாம் ஏன் நித்ய கர்மாக்கள் எல்லாம் செய்ய வேண்டும்?]

11. **ஜீவன் காரியம் செய்வது கைங்கர்யத்தில் மட்டும்தான். அவனுடைய ஆற்றல் என்பது உபாயத்தில் இல்லை**

[சேதனன் செய்யும் கைங்கர்யம் என்பதே ஒரு உபாயம்தானே. அந்த உபாயத்தின் மூலம், பலனாகிய எம்பெருமானை மகிழ்விப்பது என்பதை அடைகிறான். அப்படி இருக்க சேதனன் செயலாற்றல் (ability, capacity) உபாயத்தில் கிடையாது என்று எப்படி சொல்ல முடியும்? அவனுக்கு கர்த்ருத்வம் உண்டு, ஆனால் எல்லாம் பகவானால் வந்தது, என்று கர்த்ருத்வ த்யாகம், மமதா த்யாகம், பல த்யாகம், பல உபாயத்வ த்யாகம் என்றவற்றுடன் ப்ரபத்தி செய்ய வேண்டும்].

12. **பகவானின் ஸங்கல்பத்தால்தான் எல்லா காரியமும் நடக்கிறது. அப்படி இருக்க பலனை மட்டும் நான் ஏன் அனுபவிக்க வேண்டும்? நான் பண்ணிய பாவம் ஏன் அவனுக்கு போகக்கூடாது? அவந்தானே என்னை இப்படி செய் என்று ஸங்கல்பித்தான்?**

[ஒரு காரியத்தை செய்ய பகவானின் ஸங்கல்பம் அவசியம்தான். ஆனால் சேதனனுக்கு எம்பெருமான் குறிப்பிட்ட சுதந்திரம் (limited indepedence) கொடுத்ததால், சேதனன் நல்லதோ, கெட்டதோ அவன் முன் வினைப்பயன் காரணாமாக, முக்குணங்களால் இழுக்கப்பட்டு காரியம் செய்கிறான். அதன் பலனை அவன்தான் அனுபவிக்க வேண்டும். ஜீவனுடைய பலன் ஜீவனைச் சேராது என்று எந்த மதமும் சொல்லாது. அப்படி என்றால் ப்ரபத்தி செய்தால் மோக்ஷமும் இவனைச் சேரக்கூடாதே. ஆக, சேதனனுக்கு கர்த்ருத்வ தன்மை உண்டு, அது எம்பெருமான் அளித்தது. ப்ரபத்தியின் போது இதை நன்கு உணர்ந்து ஸாத்விக தியாகத்துடன், அங்கங்களுடன் அந்த செயலைச் செய்கிறான்.]

5.21 முடிவுரை

இங்கே ஶரணம் வ்ரஜ என்று சரணம் அடைவாயாக என்ற பதங்களால் ஶரணம் ப்ரபத்யே என்று த்வயத்தில் சொன்னாற்போல் எம்பெருமானை வசீகரிக்க

கூடியதான, சேதநன் செய்ய வேண்டியதாய் உள்ள ப்ரபத்தியை அனுஷ்டிக்கும்படி விதிக்கிறான்.

இந்த ப்ரபத்தியைப் பற்றி பல சந்தேகங்களும், வாதங்களும் வரலாம், அவை எல்லாம் எம்பெருமானே ஸித்தோபாயம், முக்யமான உபாயம். சேதனன் செய்யும் ப்ரபத்தி ஒரு சாக்கு என்ற முறையில் அவர்கள் கருத்ததை தள்ளாது அவற்றிற்கு ஸமாதானம் சொல்லாம்.

இதுவரை, சரம ஸ்லோகத்தின் முதல் வாக்யத்திற்கு பொருள் பார்த்தோம்.

6 - அஹம்

மறைநானே! அருள்சுரை நானே!
காக்கும் இறையும் நானே!
வானவருடன் மானிடனாய் புவியில்
தோன்றும் சுவை நானே!
அறியாருக்கு அறிவு நிதிநானே!
கதிநானே! உமக்குபதி நானே!
நிலைநானே! அறிவாய் * நான்
என்றவனும் திருநாரணன் தானே!

மறைநானே	= வேதங்கள் அனைத்தும் நானே
அருள்சுரை நானே	= எல்லா பலன்களையும் அளிப்பவன் நானே
காக்கும் இறையும் நானே	= உனக்கு ஸர்வ ரக்ஷகன் என்பதும் நானே
வானவருடன்	= நித்ய ஸூரிகளுடன்
மானிடனாய்	= மனுஷ்ய ரூபத்தில்
பூமிதனில்	= பூலோகத்தில்
தோன்றும்	= அவதரித்து
சுவை நானே	= எல்லோரும் அனுபவிக்க ச்ய்வதும் நானே
அறியாருக்கு	= ஞானம் இல்லாதவர்களுக்கு
அறிவு நிதி நானே	= உயர்ந்த அறிவாய் விளங்குவதும் நானே
கதிநானே	= உனக்கு உபாயம் நானே
உமக்கு பதி நானே	= உபாயத்தால் அடையப்படும் பலனும் நானே
நிலைநானே	= பலன்களின் எல்லை நிலம் என்பதும் நானே
அறிவாய்	= இதை எல்லாம் தெரிந்து கொள்
தான்	= இப்படியாக, தான் தான்
என்றவனும்	= என்று சொல்லி கொள்பவனும்
திருநாரணன் தானே!	= அந்த ஶ்ரீயப்பதி ஶ்ரீமந் நாராயணனே

6.1 சரம ஶ்லோகம் பிற்பகுதி - முன்னுரை ஸார ஸாரம்

இப்படி ஓர் அதிகாரி விசேஷத்திற்குக் க்ருத்யமாகத் (கடமையாக) தன் பரம க்ருபையாலே நியமித்து வைத்த உபாய விசேஷத்தை உபதேசித்து,

[சரம ஸ்லோகத்தின் முற்பகுதியில் சேதனர்கள் நல்ல கதி அடைய வேண்டும் என்று எம்பெருமான், தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே, ப்ரபத்தி என்னும் விசேஷமான உபாயத்தை காட்டி, அதைப் பற்றுவதற்கான தகுதிகளையும், அதை கடைமையாக செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்தினான்.]

அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்கிற வாக்யத்தாலே பர ஸ்வீகர்த்தாவானவன் (பொறுப்பை ஏற்றுக் கொண்டவன்) தன் க்ருத்யத்தை அருளிச் செய்கிறான்.

[பிற்பகுதியில், சேதனன் செய்த ப்ரபத்தியில் மகிழ்ந்த எம்பெருமான், அவனது ரக்ஷக பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அவனை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறதாகிய தன் கடமையைப் பற்றிச் சொல்கிறான்.]

திருநாராயண அஸ்திர வ்ருத்தாந்தத்தை இங்கே அநுஸந்திப்பது.

[கடமையில் தவறாதவன் கண்ணன். இதை திருநாராயணாஸ்திர வரலாற்றில் அறியலாம். மஹாபாரத யுத்தத்தில், பகதத்தன் திருநாராயணாஸ்திரத்தை அருச்சுனன் மேல் ஏவ, அர்ஜீனன் அதன் வீர்யத்தை கண்டு நடுங்கினான். சரணம் என்று அடைந்த அர்ஜீனனை காப்பது கண்ணனின் கடமை. தன் திருமார்பை காட்டி, அதில் பிராட்டி வசிப்பதையும் பொருட்படுத்தாது, அந்த அஸ்திரத்தை ஏற்றுக் கொண்டான். இப்படி அர்ஜீனனுக்கு தீங்கு வராதபடி அவனைக் காத்தருளினான்.]

இதிலிருந்து எத்தகைய துன்பம் தனக்கு வந்தாலும் சரி, தன்னை அடைக்கலமாக அடைந்த சரணாகதனை எப்படியாவது காக்க வேண்டும் என்பதே எம்பெருமானின் குறிக்கோள் என தெளிவாகிறது.

6.2 அஹம் பதம் - முன்னுரை

மற்ற உபாயங்களை செய்ய சக்தி இல்லாமல் ப்ரபத்தியை பின்பற்றும் சேதனனுக்கு எம்பெருமான் மேலே எல்லா பாபங்களிருந்தும் விடுவிக்கிறேன் என்று சொல்கிறான்.

"விடுவிப்பேன்" என்று சொன்னால் யார் இந்த காரியம் ஆகிற விடுதலியை செய்வார்கள்? இது சரியாக தெரிய வேண்டும் ஆதலால், **அஹம்** என்று வெளிப்படையாக (explicitly) சொன்னான்.

அஹம் என்பதற்கு இரண்டு முக்யமான பொருள் சொல்லலாம்.

1. **வல்லமை - அபார சக்தி -** இன்னொரு ஆளைக் கேட்டு அவருடைய துணையால் செய்வதில்லை. தான் ஒருவனே, தனித்து, மீதி ஒருவராலும் செய்ய முடியாதான அபார சக்தியை காட்டுவது இங்கே **அஹம்** என்ற பதம். மோக்ஷத்தை தானே தனித்து நின்று அருள்கிறான்..

2. **ஸ்வாதந்திரியம்** மேலும் எம்பெருமானின் **நிர்ஹேதுக க்ருபையே** முக்யமான காரணம். அது நடுவிலே ப்ரபத்தியால் வந்த விசேஷ அநுக்ரஹத்தைக் கொண்டு தடையில்லாத எம்பெருமானின் **ஸ்வாதந்திரியத்தை** காட்டுவதாகவும் கொள்ளலாம். **எம்பெருமானைத் தடுக்க யாராலும் முடியாது**. தவிர எம்பெருமான் பாவமே செய்து வந்தவனுக்கு, பக்தி, ப்ரபத்தியால் **மோக்ஷம் தர இசைந்தால், அதை தடுக்கக் கூடிய சக்தி யாருக்கும் கிடையாது என்பதை** காட்டும்

வேறு ஒருத்தன் ஒருவனை முக்தனாக்க நினைத்தாலும் தாங்கள் ஆசார்ய ஸ்தாநத்திலே நின்று ஶ்ரிய:பதியை முன்னிட்டன்றி மோக்ஷம் கொடுக்க மாட்டான்.

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

6.3 பாசுரத்தின் சுருக்கமான கருத்து

சேதனன் செய்யும் எல்லா பாபங்களிருந்து அவனை காப்பாற்ற பகவானிடத்தில் உள்ள எல்லையற்ற (limitless, அபாரமான) சக்தியை **அஹம்** என்கிற பதம் இங்கு சொல்லுகிறது.

பகவான் இங்கு கூறுகிறான்.

- உபய வேதாந்தங்கள் என்றழைக்கப்படும் வடமொழி மறை, திராவிட வேதங்கள் அனத்தும் நானே.
- கன்றிற்கு தாய்ப்பசு தானே சுரக்கும் தன்மையைபோல் அவற்றையெல்லாம் அருளுபவன் நானே.
- பூமண்டலமும், திரிபாத் விபூதி போற்றப்படும் வான் வெளியும் அனைத்தையும் காப்பதும் நானே.
- நித்யசூரியுடன் பூமியில் தோன்றி சேதனர்கள் அனுபவிப்பதற்கு காரணமானவனும் நானே.
- அறிவு இல்லாதவருக்கு வேண்டிய அளவு கொடுக்கக்கூடிய நிதி நானே.
- சேதன, அசேதன பொருள்களுக்கு ஸ்வாமி நானே.
- அடைய வேண்டிய மோக்ஷமும் நானே.

பகவான் இப்படி கூறியதை என்னுடைய மனமே அறிந்து கொள், "நான், நான்" என்று கீதையில் சொல்லிக் கொள்கிறவன் வேறு யாருமில்லை, அந்த ஸ்ரீமந்நாராயணன் ஒருவன்தான்.

6.4 அஹம் என்று சொல்லும் பகவான் யார்?

இதில் அஹம் என்கிற பதத்தால்

[பகவான் தன்னை அஹம் என்று கூறிக் கொள்கிறான்]

"எருத்துக் கொடியானும்",

[எருத்துக் கொடியானும் பிரமனும் இந்திரனும் * மற்றும்
ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவாருமில்லை /
மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா மறு பிறவி தவிரத் திருத்தி
உன் கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலை எந்தாய்
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-3-6

"களைவாய் துன்பம்",

[களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன் *
வளைவாய் நேமிப்படையாய்! குடந்தைக் கிடந்த மாமாயா! *
தளரா உடலம் எனதாவி சரிந்து போம்போது *
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே.
நம்மாழ்வார், திருவய்மொழி 5-8-8

"என் நான் செய்கேன்",

[என்னான் செய்கேன் யாரே களைகண் என்னை என் செய்கின்றாய் *
உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன் *
கன்னார் மதிள் சூழ் குடந்தை கிடந்தாய் அடியேன் அருவாணாள் *
செந்நாள் எந்நாள் அந்நாள் உனதாள் பிடித்த செலக்காணே
நம்மாழ்வார், திருவய்மொழி 5-8-3

இத்யாதிகளிற்படியே தாங்களே ஹிதாஹிதங்களை (நல்லவை கெட்டவை) **அறிகைக்கு ஸஷமரன்றிக்கே** (சக்தியுடையவர்)

[மற்ற தேவர்கள் எல்லாம் ரக்ஷகர்கள் இல்லை. அந்த தேவதைகளே நல்லவை எவை தீயவை எவை என்பதை ஆராயும் அறிவு இல்லாதவர்கள்]

பராதீநராய் (எம்பெருமானின் வஸமாய்),

[அவர்கள் கரும நிலைக்கும் எம்பெருமானுக்கும் கட்டுப் பட்டவர்கள்.]

ஸ்வரக்ஷணேபி (தன்னைக் காத்துக் கொள்ள) **அஸக்தரான**

[அந்த தேவதைகள் தங்களை காத்து கொள்ளும் சக்தி கூட இல்லாதவர்கள்.]

மற்றுமுள்ள ரக்ஷகாபாஸர்களில் (போலியாய் காப்பவர் போல் ஏமாத்துபவர்) காட்டில் வ்யாவ்ருத்தனாய் (வேறுபட்டவனாய்),

[அவர்கள் ரக்ஷிப்பவர்கள் போல் தோன்றினாலும், உண்மையில் இல்லை. நான் அவர்களை விட வேறானவன்.]

ஆஸ்ரிதருடைய ஹிதா ஹிதங்களைத் தான் காண்கைக்கு ஈடான ஸர்வஜ்ஞத்வத்தையும்

[நான் ஸர்வஞ்ஞன். - எல்லாம் அறிந்தவன். என்னை அடைந்த அடியவர்களுக்கு நல்லவை, தீயவை என்பது எனக்கு தெரியும்]

தான் ப்ரஸ்வீகாரம் பண்ணியவர்களை நினைத்த போதே நித்ய ஸூரி பரிஷத்திலே வைக்கவல்ல ஸ்வாதந்திரியத்தையும் உடையவனாய்,

[என்னிடம் சரணாகதி செய்பவர்களின் பொறுப்பை நானே ஏறுக் கொண்டு அவர்கள் விரும்பும்போது மோக்ஷம் அளிக்கிறேன். நான் ஸர்வ சக்தி உடையவன். எனக்கு மேல் ஒருவரும் கிடையாது. நான் நினைப்பதை தடுக்கும் சக்தி எதற்கும் கிடையாது.]

ஸர்வ ஸ்வாமியாய் "என்று நாம் இவர்களை அழுக்கு கழற்றின ஆப்ரணத்தைப்போலே அங்கீகரிப்பது" என்ற அபிப்ராயத்தை உடையவனாக

[எல்லோரும் என் குழந்தைகள். என்னை சரணம் டைந்தவர்களின் அழுக்கை போக்கி ஆபரணம் போல் அணிந்து கொள்கிறேன்.]

தன்னைக் காட்டுகிறான்.

[என்று எம்பெருமான் தன்னை சுட்டிக் காட்டுகிறான்]

6.5 ரஹஸ்யத்ரயமாத்ருகையில் ஸ்வாமி தேசிகன் அருளியது

அஹம் என்ற பதத்திலே வல்லைகாண் என்னும்படியான ஸர்வ சக்தி கொழுஞ்சோதி உயரத்துக் (பரமபத்தில்) கூட்டரிய (பெறுவதற்கு அரிய) திருவடிக்கள் கூட்டி (நம் தலைமேல் வைத்து) அடிமை கொள்ள ஒருப்பட்டபடியும் (முன் வந்தமை)

பகவான் அஹம் என்று சொல்லும்போது நான் ஸர்வேச்வரன், என்னால் முடியாத காரியம் என்பது ஒன்றும் இல்லை. ஸர்வ சக்தன் நானே என்கிறான். ப்ரகாசமான உயர்ந்த பரமபத்தில் அவன் திருவடிகளை அடைந்து மீளாப்பணி செய்வது என்பது அப்படி சுலபமான காரியமா? அந்த புருஷார்த்தம் சேதனனுடயை முயற்சியில் மட்டுமே வரக் கூடியாதா? தன் திருவடிகளை எப்போது தரலாம் என்று காத்து கிடக்கிற நிலையை அஹம் என்ற பதம் காட்டுகிறது.

6.6 ரஹஸ்யத்ரய சுளகத்தில் ஸ்வாமி தேசிகன் அருளியது

இப்படி அகிஞ்சந்யாதி விசிஷ்டனான அதிகாரிக்கு அநுரூபமான க்ருத்யத்தை (செய்ய வேண்டிய காரியத்தை) பூர்வார்த்தத்திலே (முதல் பாதியிலே) விதித்துத்

[சேதனன் கைம்முதல் அற்றவன். வேறு கதி இல்லாதவன். அப்படிப்பட்ட அவன் செய்ய வேண்டியதான ப்ரபத்தி என்ற காரியத்தை, சரம ஸ்லோகத்தின் முற்பகுதியில் விதித்து]

தன் க்ருத்யத்தை "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற பதத்திலே நான் என்று தோற்றா நிற்க,

[கண்ணன், தான் செய்யப் போகும் காரியத்தை பிற்பகுதியில் சொல்ல, அதில் "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற பகுதியில் "தான்" என்பது வெளிப்படையாக தோன்றாமல் இருக்கவே

அஹம் சப்தத்தாலே தன்னை ஒழிந்தாரில் தான் விலங்கிட்டு வைத்தவனுக்கு மோக்ஷம் கொடுக்கவல்லார் இல்லை என்றும்

[அஹம் என்ற பதத்தாலே, *தன்னைத் தவிர வேறு ஒருத்தராலும், தான் போட்ட விலங்கை கழட்ட முடியாது,* அதாவது ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அளித்து மோக்ஷம் கொடுக்க முடியாது என்பதை நேரிடையாக (explicitly) சொல்ல வேண்டி

ஸ்வதந்திரனாய் விலங்கிட்ட தான் விலங்கை வெட்டி விடும்போது விலக்க வல்லார் இல்லை என்றும் தனக்குள்ள வாசி (ஏற்றம்) காட்டுகிறான்.

[பகவான் ஒருவனே தனி சுதந்திரனாய் சேதனனை ஸம்ஸாரத்தில் தள்ளியபோது, அதை விலக்க நினைத்தால் என்னைத் தடுப்பவன் ஒருவனும் இல்லை என்று தன்னுடைய பெருமையைக் காட்ட அஹம் என்ற பதம்.]

6.7 அஹம் பதம் அவசியமா?

மேலே **மோக்ஷயிஷ்யாமி,** அதாவது விடுவிக்கப் போகிறேன் என்ற க்ரியா பதத்தில் (வினை முற்றில்) உத்தம புருஷ ஏக வசனம் (தன்மை ஒருமை உருபு) இருப்பதாலேயே "நான்" என்பது தெளிவாகி விடுமே? அப்படியிருக்க **அஹம்** என்ற தனியான பதம் அவசியமா?

உண்மைதான். நான் என்பது அங்கேயே தெரியும். ஆனால் இங்கே **அஹம்** என்பது மேலே இரண்டு குணங்களை சிறப்பாக காட்டும்.

1. **விலங்கை மாட்டியவனும், அதை எடுப்பவனும் நான் ஒருவனே.** சேதனர்களுக்கு ஸம்ஸார பந்தம் என்பது பாவத்தினால் வந்த விலங்கு. அதை போட்டு பூட்டி வைத்திருப்பது நான். அவர்கள் ப்ரபத்தி செய்தால் அந்த விலங்கை வெட்டி எறிந்து மோக்ஷம் தர வேண்டுமே?

அதை செய்யும் வல்லமை என்னிடம் மட்டுமே உள்ளது.

2. **விலங்கை போடும்போதோ அல்லது அதை எடுக்கும்போதோ என்னை தடுக்க யாராலும் முடியாது.** தவிர, நான் முழு சுதந்திரம் படைத்தவன். நான் போட்ட விலங்கை மீதி யாராலும் கழட்ட முடியாது. அதறகு சக்தியோ, உரிமையோ வேறு ஒருவருக்கும் கிடையாது. தவிர நான் செய்யும் அந்த காரியத்தை தடுக்க எவருக்கும் அதிகாரமும் கிடையாது.

6.8 அஹம் பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

அஹம், ஸ்வக்ருத்யத்தை அருளிச் செய்கிறான்.

[இந்த சரம ஸ்லோகத்தின் இரண்டாவது வரியில் பகவான் சேதனனுக்கு என்ன செய்யப் போகிறான் என்பதை சொல்லுகிறான். முதல் பாதியில் தன்னை அடையும் சேதனன் செய்ய வேண்டிய உபாயத்தை சொல்லி, இங்கே தான் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை காட்டுகிறான்]

ஸர்வஞ்ஞனாய், ஸர்வ சக்தியாய், ப்ராப்தனான நான்.

[அனைத்தும் அறிந்தவனாய், எல்லா காரியங்களை செய்யும் வல்லமை உடையவனாகவும், ஸ்வாமியாகவும் உள்ளதால் சேதனர்கள் ஏற்கும்படியான நான்.]

இவன் கீழ்நின்ற நிலையும், மேல் போக்கடியும் அறிகைக்கும், அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தமான குண விசேஷங்களையும் தன் பேறாகச் செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான பந்த விசேஷத்தையும் காட்டுகிறது.

[எம்பெருமானுக்கு குணங்கள் பல இருப்பினும் மேலே சொன்ன குணங்களை அஹம் என்ற பதம் ஏன் உணர்த்த வேண்டும் என்றால் சேதனர்கள் வேண்டியவற்றை பெறுவதற்கும், வேண்டாதவற்றை விலக்குவதற்கும் **(அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி)** எம்பெருமானிடம் இரு தன்மைகள் இருக்க

வேண்டும் - அனைத்தும் அறிதல், அனைத்திலும் வல்லமை. இப்படி எம்பெருமான் சேதனர்களுக்கு உதவும்போது அதை தன் பேறாக எண்ணுகிறான். உடையவன் உடைமை மீது கொள்ளும் ஆசை. **ஸேஷித்வ ரூபமான உறவு.)**

> **தனக்காகக் கொண்ட ஸாரத்யவேஷத்தை அவனையிட்டு பாராதே, தன்னையிட்டுப் பார்த்து அஞ்சின அச்சந்தீரத் தானான தன்மையை அஹம் என்று காட்டுகிறான்.**

(மாம் என்ற பதம் அவனைச் சரணம் அடைவதற்கு வேண்டிய குணங்களை காட்டியது போல் இங்கே **அஹம்** என்ற பதம். **மாம் என்ற இடத்தில் தேரோட்டியாக பாரதந்திர்யத்தை காட்டினான். இங்கே அஹம் என்று மோக்ஷம் அளிக்கும் தன் ஸ்வாதந்த்ரியத்தை காட்டுகிறான்.)**

> **கீழில் பாரந்தந்த்ர்யமும்இந்த ஸ்வாத்ந்த்ரியத்தினுடைய எல்லை நிலமிறே.**
>
> பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 242-247

(பகவான் பாரதந்திரியமாக நிற்பதும் அவன் ஸ்வாதந்த்ரியத்தாலே என்பதை உணர வேண்டும். பாரதந்திரியம் எம்பெருமானின் ஸ்வரூபம் அல்ல. ஜீவனின் ஸ்வரூபம் மட்டுமே.]

6.9 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

**காணென்ற வேதங்கள் * காக்கும் பரன் என்று காட்ட நின்றோன் *
தான் என்று அறியகிலார்க்கு * அறிவிக்கும் தனித் திறலோன் /
வான் ஒன்றினாரோடு * மானிடன் என்ன அவதரிப்பான் *
நான் என்ற நம் திருமால் * நம்மை நற்பதம் சேர்த்திடுமே**

ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 7

- **(காணென்ற வேதங்கள் காக்கும் பரன் என்று காட்ட நின்றோன்) =** காடு போல் பரந்து, தெரிந்து கொள்ள கடினமான வேதங்கள் எல்லாம் ஸர்வ ரக்ஷகன் எம்பெருமான் ஒருவனே என்று அறிவித்து நின்றவன்

- **(தான் என்று அறியகிலார்க்கு அறிவிக்கும் தனித் திறலோன்)** தன்னை அறிய முடியாதவருக்கு தன் பெருமையைத் தானே சொல்லும் நிகரில்லாத பெருமையை உடையவன்
- **(வான் ஒன்றினாரோடு மானிடன் என்ன அவதரிப்பான்) =** ஸம்ஸாரிகளை க்அடைத்தேற்ற பரமபதத்தில் உள்ள நித்யர்களை பூலோகத்தில் அவதரிக்க வைத்து தானும் அவர்களோடு மனிதனாக அவதரிப்பவனும்
- **(நான் என்ற நம் திருமால் நம்மை நற்பதம் சேர்த்திடுமே) =** அஹம் என்று இங்கே சொல்லுகிற நம்முடைய திருநாராயணன் நம்மை மோக்ஷத்தில் சேர்ப்பான்

அஹம் என்பது என்றைக்கு இந்த சேதனனை அழுக்கு நீங்கிய அணிகலன் போல் ஏற்றுக் கொள்வது என்ற கருத்துடன், தன் பலனாகவே கொண்டு சேதனனுக்கு பலன் கொடுக்க விரைந்து நிற்கும் நிலையை காட்டுகிறது.

சேதனனின் எல்லா பாபங்களையும் விடுவிக்கக்கூடிய அபாரமான சக்தியை உடையவன் என்பதை அஹம் காட்டுகிறது.

6.10 முடிவுரை

அஹம் என்றால்

- நேராக மேக்ஷம் தருபவன் எம்பெருமான் ஒருவனே.
- இன்னொருவன் மோக்ஷத்தை அளிக்க விரும்பினாலும் அதற்கு அவனுக்கு சக்தி கிடையாது. எம்பெருமானைக் கொண்டே அடைவிக்க வேண்டும். (ஆசாரியர்களை முன்னிட்டுக் கொண்ட்டு மோக்ஷம் பெறுவதைப் போல).
- எம்பெருமான் ஸங்கல்பத்தால் வரும் காரியங்களை யாராலும் தடை செய்ய முடியாது.
- தேவர்கள் இந்த பூமண்டலத்தில் உள்ளவர்களைக் கொண்டே வாழ்க்கை நடத்துபவர்கள். எம்பெருமான் மோக்ஷம் கொடுத்துக் கொண்டே

போனால், ஸம்ஸாரிகள் குறைந்துவிடுமே என்று பயப்பட்டு, மோக்ஷத்தை தடை செய்ய நினைத்தால் அதுவும் முடியாது அவர்களால்.

- எவன் உன்னை சிறைக்குள் அடைத்தானோ அவனிடம்தான் அதிலிருந்து விடுவிக்கும் சக்தி, சாமர்த்யம் எல்லாம் உள்ளது.

இவற்றை எல்லாம் **அஹம்** என்ற பதம் காட்டும்.

7 - த்வா

அரணிலாயாம் அடையெனக் காட்டிய
அடிகளை * உம்மறிவாலே பற்றி *
துணையிலா பெரு நிலையென *
தனிமையின் இனிமை போற்றி
மூலத்திலும் முடியோன் முன்னிலும் *
முன் அமர்ந்த முழு முதல்வா * உன்
சீலமென்ன! சிறியேன் எம்மை *
அடைக்கலமாய் ஆக்கி அருளினாயே

அரண் இலா	= வேறு உபாயம் ஒன்றும் இல்லாத (சேதனனுக்கு)
யாம்	= நானே
அடையெனக்	= சரணாகதி அடையத் தக்கவன்
காட்டிய	= என்பதை நிரூபித்துக் காட்டிய
அடிகளை	= உம்முடைய இரண்டு திருவடிகளையும்
உம்மறிவாலே பற்றி	= நீர் தந்த ஞானத்தினாலேயே
துணையிலா	= வேறு எந்த விதமான உதவியும் அன்றி
பெரு நிலையென	= அடையப்படும் உயர்ந்த புருஷார்த்தமாகவும்
தனிமையின்	= அதை அளிக்கும் சரணாகதி என்னும் தனித்த உபாயமாகவும் (பற்றி)
இனிமை போற்றி	= அந்த சுகத்தில் மூழ்கினேன் (நான்)
மூலத்திலும்	= ஓம் என்னும் ப்ரணவத்திலும்
முடியோன் முன்னிலும்	= அருச்சுனன் முன்னே
முன்னமர்ந்த	= தேர் ஓட்டியாய் அமர்ந்த
முழு முதல்வா	= தன்னிகரில்லா ஒருவனான முதல்வனே
உன் சீலமென்ன	= உன்னுடைய எளிமை என்னும் குணம் என்ன!
சிறியேன்	= மகா அல்பனான
எம்மை	= என்னையும்
அடைக்கலமாய்	= உன்னிடம் ப்ரபத்தி
ஆக்கி	= செய்வித்து
அருளினாயே	= உன் அருளுக்கு பாத்திரமாக்கினாயே!

7.1 முன்னுரை

த்வா என்பது உன்னை என்று பொருள் தரும்.
எப்படிப்பட்ட உன்னை?

> **த்வா என்றது உன்னாலும் பிறராலும், உன்னை முக்தராக்க ஒண்ணாதபடியைத் தெளிந்து ஸர்வஜ்ஞனாய், ஸர்வ சக்தியாய், பரம காருணிகனான என் பக்கலிலே பரந்யாஸம் பண்ணின உன்னை என்றபடி.**
>
> ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யத்ரய சுளகம்

- என்னைத் தவிர, மீதி யாராலும் உனக்கு மோக்ஷம் கொடுக்க முடியாது.
- உன்னாலும் உனக்கே மோக்ஷத்தை கொடுத்துக் கொள்ள முடியாது.
- நானோ எல்லாம் அறியும் சக்தி படைத்தவன்.
- எனக்கு எதையும் செய்ய வல்லமையோ, அதிகாரமோ, சுதந்திரமோ உண்டு.
- இதை இப்போது நன்கு புரிந்து கொண்டு என்னிடம் ப்ரபத்தி செய்து உன்னை காக்கும் பொறுப்பை என்னிடம் ஸமர்பித்து விட்டாய்.
- அப்படிப்பட்ட உன்னை.

7.2 சுருக்கமான கருத்து

பகவான் தந்த அறிவாலே

- தத்துவ ஞானம் பெற்று
- அல்பம், அழிவு போன்ற தோஷங்களை வெறுத்து,
- இதற்காக மற்ற உபாயங்களை செய்த சக்தி இல்லாதலால் அவற்றை நாடாமல்
- ப்ரபத்தி என்ற ஒரு தனி உபாயம் போதும் என்று அந்த உபாயத்தால் மகிழ்ந்து
- வேறு உபாயம் தேவையில்லை என்று

- பகவானே நீ காட்டிய உன் திருவடியை அடைந்து,
- உன்னிடமே என்னை ரக்ஷிக்கும் பொறுப்பை ஸமர்பித்து,
- க்ருத க்ருத்யனாய், செய்ய வேண்டிய காரியத்தை செய்து முடித்தவனாய்,
- வேறு ஒரு உபாயத்தை தேடாதபடி நிற்கும் நிலையை காட்டுகிறது.

7.3 ரஹஸ்ய மாத்ருகையில் ஸ்வாமி தேசிகன் அருளியது

த்வா என்ற பதத்திலே "நின் அருளே புரிந்து இருந்தேன்" என்றிருக்கிற க்ருத க்ருத்யனை (ப்ரபத்தி செய்து முடித்தவனை) **"ஆரால் குறைவுடையம்" என்னும்படி சாதக வ்ருத்தியாக்கினபடியும்** (சாதக பறவை போல் பலனை எதிர் பார்த்து இருப்பவன்)

- செய்ய வேண்டிய காரியமான ப்ரபத்தியை செய்து முடித்து விட்டாய்.
- ப்ரபத்திக்கு பின் என் அருளையே நீ நினைத்து இருக்கிறாய்
- இனி எனக்கு குறை யாரால் எதுதான் செய்ய முடியும் என்ற துணிவுடன் இருக்கிறாய்
- சாதக பறவை மழைக்காக மேலே வானத்தை பார்த்து இருப்பது போலே நீ மோக்ஷத்தை எதிர்பார்த்து இருக்கும்படி நான் உன்னை ஆக்கி விட்டேன்
- அப்படிப்பட்ட உன்னை

சென்னியோங்கு தண் திருவேங்கடம் உடையாய் * உலகு
தன்னை வாழ் நின்ற நம்பீ தாமோதரா சதிரா * என்னையும்
என் உடைமையும் உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு*
நின்னருளே புரிந்து இருந்தேன் **இனி என் திருக்குறிப்பே**
பெரியாழ்வார் திருமொழி 5-4-1

எம்பெருமானே நீ உலகத்தை வாழ வைக்க வந்திருக்கிறாய். நானும் என் பொருள்களும் உன் திருவாழி, திருச்சங்கு சின்னத்தை பொறித்துக் கொண்டு உன் அருளையே விரும்பி, உன் திருவடிகளிலே ப்ரபத்தி செய்கிறேன். இதைவிட மேலான பலன் ஏதேனும் உண்டா?

ஆள்கின்றான் ஆழியான் ஆரால் குறையுடையம்
மீள்கின்றது இல்லை பிறவித்துயர் கடிந்தோம்
வாள்கொண்டை ஓண்கண் மடப்பின்னைதன் கேள்வன்
தாள் கண்டுகொண்டு என் தலைமேல் புணர்ந்தனனே
நம்மாழ்வார், திருவாய்மொழி 10-4-3

எம்பெருமான் சக்கரமும் சங்கும் ஏந்தி நம்மை எல்லாம் காக்கிறான். நமக்கு வேறு ஒருவரால் ஆக வேண்டியது என்ன? இனிமேல் இந்த ஸம்ஸாரத்திற்கு திரும்பாதவாது பிறவித்துயர் எல்லாம் ஒழிந்தது. அவன் திருவடிகளைக் கண்ணால் கண்டு கொண்டு என் தலைமேல் அணியப் பெற்றேன்.

7.4 பிள்ளைலோகாசாரியார் விளக்கம்

த்வா அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய் என்னையே உபாயமாக பற்றி இருக்கிற நீ
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 248

அதாவது, உன் கார்யங்கள் அறிகைக்குத் தக்க ஜ்ஞாநமில்லாதவனாய், அறிந்தாலும் செய்து தலை கட்டிக் கொள்கைக்கு சக்தியில்லாதவனாய், அதுதான் உண்டானதாலும் உன்னுடைய ரக்ஷணத்தில் உனக்கு ப்ராப்த்தி இல்லாதவனய், இப்படி இருக்கையாலே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னையே நிரபேக்ஷ உபாயமாக பரிக்ரஹித்திருக்கிற உன்னை - என்கை.
மணவாள மாமுனிகள் வியாக்யானம்.

- உன்னை காத்துக் கொள்ள தேவையான அறிவு எதுவோ அது இல்லாதவனான நீ
- அப்படி அந்த அறிவு உண்டானாலும் அதன்படி செய்ய வலிமை அற்றவனாய்
- அப்படி வலிமை உண்டானாலும் நீயே உன்னை காப்பாற்றிக் கொள்வாய் என்கிற தகுதி அற்றவனாய்

- இப்படி இருக்கும் நீ எல்லா உபாயங்களையும் அறவே விட்டு ஒழித்து , வேறு எதையும் நாடாது என்னையே உபாயமாக பற்றி இருக்கும் நீ

7.5 ஸார ஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் அருளியது

த்வா என்கிறது

த்வா - உன்னை

உபாயந்தரங்களினுடைய (மற்ற உபாயங்கள்) **துஷ்க்ரத்வாதிகளைக்** (செய்ய முடியாமை) **கண்டு, அவற்றில் துவக்கற்று, நிரதிஶய ஶோகாவிஷ்டனாகையாலே** (எல்லையற்ற சோகத்தை உடைய),

[பக்தியோகம் போன்றவைகளை செய்ய இயலாது என்று விட்டு ஒழித்தாய். இப்போது உன்னுடைய கதி என்னாவது என்ற எல்லையில்லாத சோகம் உன்னை சூழ்ந்து கொண்டது.]

நிருபாதிக ஸேஷியாய், நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனாய், ஸர்வ ரக்ஷண தீக்ஷிதனான

[உனக்கு நல்ல காலம் பிறந்து என் பெருமையை உணர்ந்தாய். நான் எல்லோருக்கும் ஸேஷி என்பது இயற்கை. வேறு ஒருவனையும் எதிர் பாராது முழு சுதந்திரம் உடையவன், எல்லாரையும் ரக்ஷிக்கும் விரதம் பூண்டவன்]

என் பக்கல் ந்யஸ்தபரனாய் (பொறுப்பை ஸமர்பித்தவனாய்), **கோலி(ரி)ன பலத்தைப் பற்றக் கர்த்தவ்யாந்தரத்தில்** (மேலும் செய்ய வேண்டிய இன்னொன்று) **ப்ராப்தியற்று** (ஸம்பந்தம் இல்லாது)

[இந்த தெளிவு அடைந்து என்னிடம் ப்ரபத்தி செய்து முழு பொறுப்பையும் என்னிடம் வைத்தாய். உன் பலனுக்காக வேறு ஒன்றையும் செய்ய வேண்டாம் என்று அறிந்து, துணிந்து மற்றவற்றை கை விட்டாய்.]

சாதக வ்ருத்தியான உன்னை என்கிறபடி.

[மழையை எதிர்பார்த்து ஆகயாத்தை நோக்கி இருக்கும் சாதக பறவைபோல் மோக்ஷத்தை எதிர்பார்த்திருக்கிறாய். இப்படிப்பட்ட உன்னை என்று பொருள்.]

7.6 உபனிஷத்துக்கள் கூறுவது ப்ரபத்தியே சிறந்த தர்மம் - ஸார ஸாரம்

ஸத்யம் என்றும் தபஸ் என்றும், தமம் என்றும் ஶமம் என்றும் தாநம் என்றும் தர்மம் என்றும் ப்ரஜநநம் என்றும், அக்நிகள் என்றும், அக்நிஹோத்ரம் என்றும், யஜ்ஞம் என்றும் மாநஸம் என்றும் (சி)பல தர்மங்களை உதாஹரித்து, "இத்தபஸ்ஸுக்கள் எல்லாம் அவரங்கள் (தாழ்ந்தவை),

[உபனிஷத்துக்கள் பல தர்மங்களை சொல்ல ஆரம்பித்து, அவை ஸத்யம், தபஸ், தமம் என்று அடுக்கிக் கொண்டே போகிறது. கடைசியில் இவை எல்லாம் தாழ்ந்தவை என்றது]

ந்யாஸ ஶப்தத்தாலே சொல்லப்பட்ட ஆத்ம நிக்ஷேபமே (ஆத்மாவை ஸமர்பித்தல்) இவை எல்லாவற்றிலும் அதிகம் என்று பூர்வ அநுவாகம் (உபனிஷத்தின் முன் பகுதி) சொல்லுகையாலும்,

[ஆத்ம ஸமர்ப்பணம் என்னும் ப்ரபத்தியே மேலான தர்மம் என்று முடிவு கூறியது.]

இந்த யாகத்தினுடைய நைரபேக்ஷயத்தை (மற்ற ஒன்றையும் எதிர்பாராத தன்மை) உத்தராநுவாகம் (உபனிஷத்தின் பின் பகுதி) ப்ரபஞ்சிக்கையாலும், (விஸ்தாரமாய் விளக்குவது)

[அடுத்த அநுவாகத்தில், இந்த ப்ரபத்தி என்னும் வேள்வி, வேறு ஒன்றையும் எதிர்பாராதது என்று ப்ரபத்தியின் பெருமையை பேசியது.]

“மற்றுமுள்ள அதிகாரிகள் எல்லாம் இவ்வதிகாரினுடைய கோடிதமையான (கோடியில் ஒரு பங்கு) களைக்கும் பற்றார்கள் என்றும்,

[இதைக் கொண்டு பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்திரங்கள் மற்ற தர்மங்களை செய்பவர்கள் ப்ரபத்தி செய்பவனின் பெருமையில் கோடியில் ஒரு பங்குகூட பெற மாட்டார்கள் என்று ப்ரபத்தியை புகழ்ந்தது.]

இவன் ஸ்வத்ரன் (சிறந்த யாகங்கள் உடையவன்) அநுஷ்டித க்ரதுஶதன் (நூறு யாகங்கள் செய்தவன்), க்ருத க்ருத்யன் (செய்ய வேண்டிய கடமையைச் செய்தவன்) என்றும் பகவத் சாஸ்த்ரம் (பாஞ்சராத்ர சாஸ்திரம்) உபபரும்ஹித்தது (வேதத்தின் கருத்தை காட்டியது).

[ப்ரபத்தி செய்தவன் சிறந்த வேள்வி செய்தவன் என்றும், நூறு யாகங்கள் எய்தவன் என்றும், செய்ய வேண்டியவற்றை செய்து முடித்தவன் என்றும், பாஞ்சராத்ர சாஸ்திரம் புகழ்ந்து பேசி, வேதங்களின் கருத்தை தெளிவு படுத்தியது.]

7.7 பாசுரத்தின் கருத்து

திருமந்தரத்தில் முதலில் உள்ள மூல எழுத்திலும், அருச்சுனன் தேரிலும் முன் அமர்ந்து பிரபஞ்சம் எல்லாவற்றிக்கும் முதல்வனாய் இருக்கும் இறைவா, நீ மிகச் சிறியவனாய், கீழ்த்தரமாய் உள்ள என்னை உனக்கு உரியவனாக செய்து கொண்டாயே, உன்னுடைய சீலம் என்னும் குணத்தை எப்படி புகழ்வது?

ப்ரபத்தி செய்து பகவானிடத்தில் பொறுப்பை ஸமர்ப்பித்த பிறகு அதே பலனுக்காக மறுபடியும் அதே உபாயத்தை செய்ய வேண்டாம். இப்படி நிற்கும் பிரபன்னை **த்வா** என்ற பதம் சொல்லுகிறது.

7.8 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

**தன்னிலை காட்டித் * தனிமை உகந்து தனித்தகவால் *
அல் நிலை தீர அடைக்கலம் கொண்டு * அடி சேர்த்திடவே /
பன்னிலை மூல எழுத்திலும் * பாண்டவன் தேர்தனிலும் *
முன்னிலை கொண்ட பிரான் * எமை முன்னிலை கொண்டனனே**
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 8

- **(தன்னிலை காட்டித் தனிமை உகந்து தனித்தகவால்)** = பகவான் பகவத் கீதை மூலம் தான் சேதனன், அசேதனம் இவற்றை விட வேறு என்று தன் ஸ்வரூபத்தை காட்டி வேறு உபாயங்களை செய்ய முடியாத நம் சக்தி அற்று நிற்கிற நிலையைக் கருதி ஒப்பிலாத கருணையால்
- **(அல் நிலை தீர அடைக்கலம் கொண்டு அடி சேர்த்திடவே)** நம் அஞ்ஞானம் நீங்க நம் சரணாகதியை ஏற்றுக் கொண்டு தன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள
- **(பன்னிலை மூல எழுத்திலும் பாண்டவன் தேர்தனிலும் முன்னிலை கொண்ட பிரான்)** பல வகையாய் விளக்கப்படும் ப்ரணவத்திலும் { ப்ரணவம் தனித்து நிற்கும்போது அங்கி, அஷ்டாக்ஷரத்தில் அங்கம் எனவும்} அர்ஜீனனுடைய தேரிலும் முன்பாக உள்ள பெருமான்
- **(எமை முன்னிலை கொண்டனனே)** = எனக்கு உபதேசித்து அருளினான்.

7.9 முடிவுரை

த்வா என்றால் சேதனனை குறிக்கும். எந்த சேதனன் என்றால்

- எம்பெருமானின் உபதேசத்தால் தத்துவ விவேகம் தோன்றி
- உலக விஷயங்கள் அற்பமானவை எனத் தெளிந்து
- தன்னுடைய இழிந்த நிலை உணர்ந்து,
- கார்ப்பண்யத்துடன் எம்பெருமானிடம் பர ஸமர்ப்பணம் பண்ணி
- எம்பெருமானே உபாயம் உபேயம் என்று அறிந்து
- தன் ஆத்மாவை ஸமர்பித்து

- மற்ற உபாயங்களை நாடாமல் இருக்கும் சேதனன் என்ற பொருள் தரும்.

8 - ஸர்வ பாபேப்ய:

காணா இருளோ கவராப் பொருளோ *
தீராக் காடோ தணியா சூடோ *
தாரா நெஞ்சோ தாங்கா நஞ்சோ *
தாளா நரகோ மீளாப் பிறப்போ *
விளங்காது வினையனைத்தும் விலக்கி *
வீட்டைக் காட்டி விடுவிக்கும் *
தயங்காது நின்தாளில் அடையும்
சுகமே * என்றும் எமக்கு நிலைக்கும்

காணா இருளோ	= என் அஞ்ஞானம் கண்ணுக்கு புலப்படாதது
கவரா பொருளோ	= நான் அடைய விரும்பாத பொருள் இல்லை
தீரா காடோ	= அதனால் ஸம்ஸாரம் என்றும் தொடர்கிறது
தணியா சூடோ	= அந்த காட்டில் வெப்பம் தாங்க முடிய வில்லை
தாரா நெஞ்சோ	= என் மனதோ தானம் என்பதையே அறியாதது
தாங்கா நஞ்சோ	= மற்றவர்களின் நல்வாழ்க்கையை பொறுக்காது
தாளா நரகோ	= பாபத்தால் வரும் நரகத்தை நினைக்கவே பயம்
மீளா பிறப்போ	= மீண்டும் செய்யும் பாபங்களால் பல பிறவிகள்
விளங்காது	= தாமதமின்றி
வினையனைத்தும்	= என் பாபங்கள் அனைத்தும்
விலக்கி	= எரித்து, பொசுக்கி
வீட்டைக்காட்டி	= மோஷ ஸாம்ராஜ்யத்தை காட்டி
விடுவிக்கும்	= ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்க
தயங்காது	= துளிக்கூட யோசிக்காது அருளும்
நின்தாளில்	= உம்முடைய திருவடிகளைப் பற்றி
அடையும் சுகமே	= அதனால் பெறும் இன்பமே
எமக்கு	= எனக்கு
என்றும் நிலைக்கும்	= என்றும் ஸ்திரமாக இருக்கும்

8.1 முன்னுரை

மற்ற உபாயங்களை செய்ய சக்தி இல்லாமல் ப்ரபத்தியை பின்பற்றும் சேதனனுக்கு எம்பெருமானிடம் தன்னை ரக்ஷிக்கும் பொறுப்பை ஸமர்பித்து, மோஷ பலனை வேண்டி நிற்கிறான். க்ருதக்ருத்யனாய் வேறு ஒரு உபாயத்தையும் தேடாமல் சாஸ்திர விஹிதமாக வாழ்கிறான்.

அந்த பிரபன்னனின் ஸம்ஸாரத்தை தரக்கூடியதான எல்லா பாபங்களையும் **ஸர்வ பாபேப்யோ** என்ற பதம் காட்டுகிறது.

8.2 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய மாத்ருகையில் அருளியது

ஸர்வ பாபேப்யோ என்ற பதத்திலே

[ஸர்வ பாபேப்யோ என்றால் எல்லா பாபங்களிலிருந்தும்.]

நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் **என்றும்,**

*(மானேய் கண் மடவார் மயக்கில் பட்டு * மாநிலத்து*
*நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் **
*தேனேய் பூம்பொழில் சூழ் திருவேங்கட மாமலை * என்*
ஆனாய்! வந்து அடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி 1-9-2

எம்பெருமானே, மான் போன்ற விழிகளை உடைய பெண்களில் மயங்கி, நரகம் செல்லும்படியான எல்லாவிதமான பாவங்களையும் செய்தேன். இப்போது வேங்கடவா, உன் திருவடி வந்து அடைந்தேன். எனக்கு அருள் செய்வாய் என்றார், ஆழ்வார்.

பலவிதமான நரகங்களில் தள்ளி, யமனைப்போல் உன்னை சித்திரவதை பண்ணும்படி கணக்கற்ற பாபங்களை நான் செய்துள்ளேன்.]

நம்மன் (யமன்) போல் வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவம் எல்லாம், என்றும் சொல்லுகிறபடியே

[*எம் மனா என் குல தெய்வமே என்னுடைய நாயகனே*
நின் உளேனாய்ப் பெற்ற நன்மை இவ்வுலகினில் யார் பெறுவார்
நம்மன் போல் வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவம் எல்லாம்
சும் எனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே
பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி 5-4-3

என் மன்னனே! உனக்கு அடியவன் என்று நான் ஆன பிறகு, நான் பெற்ற நன்மைகளைப் போல் யார் இந்த உலகில் பெற முடியும்? யமனைப்போல் வந்து என்னைத் தள்ளி அமுக்குகின்ற பாவக்கள் எல்லாம் நிச்சப்தமாய், ஓடிப் போய்ப் பழிப்பவரிடம் போய்ச் சேர்ந்தன.]

எண்ணாராத் துயர் விளைவிக்கும் வல்வினை மாளாதே என்னும்படி எண்ணிறந்து கிடக்கிறபடியும்

[நான் செய்த பாவங்களை நினைத்தால்கூட துன்பத்தை தரக்கூடியவை. இவை அழியவே அழியாதோ என்ற நடுக்கத்தை தரக் கூடியவை. அவை கணக்கில்லாதவை. இவை எல்லாவற்றிலிருந்தும் என்று பொருள்]

8.3 பாசுரத்தின் சுருக்கமான அர்த்தம்

ஸர்வ என்பது முன் செய்த பாபங்களும், பின்னால் செய்யப்போகும் பாபங்களும் சேர்த்து என்று பொருள். **பாபேப்ய:** என்று பன்மையில் (plural) சொன்னது பாபங்கள் பலவிதம் என்று ஆகிறது.

பாபக்குவியல்களை சொல்லும்போது உதாரணத்திற்கு ஒன்றிரண்டு சொல்லி (sample) விளக்கியது.

- **காணா இருளோ** - இதுவரை பார்க்காத இருள். அஞ்ஞானம் என்று காண முடியாத இருட்டு

- **கவரா பொருளோ** - நான் ஆசைப்படாத பொருள் இல்லை
- **தீராத காடோ** - வாழ்க்கை பயணம் பெருங்காட்டில் செல்வதுபோல். துன்பம் தொடர்கிறது
- **தணியா சூடோ** - காம க்ரோதங்களால் என் உடலில் ஏற்பட்ட வெப்பம் தணிக்க முடியாதது
- **தாரா நெஞ்சோ** - இன்னொருத்தனுக்கு தானம் சிறிதும் செய்ய மனமில்லாமல்
- **தாங்கா நஞ்சோ** மற்றவன் ஒரு நல்ல ஸ்திதி அடைந்தான் என்பதைக் கேட்கக் கூட பொறுக்கமுடியாத தன்மை
- **தாளா நரகோ** - செய்த பாபங்களால் நரகத்தில் தள்ளப் பட்டு அந்த கொடூரத்தை தாங்காமல்
- **மீளாப் பிறப்போ** - பிறப்பு இறப்பிலிருந்து மீளா முடியாமல்

செய்த பாபங்களை விளக்க முடியாதவை. அவை அனைத்தும் வேரோடு அழித்து மோக்ஷம் என்கிற வீட்டைக் காட்டி, இந்த உலக பந்தங்களிலிருந்தும், என்னை காக்க வேண்டிய சுமையிலிருந்தும் என்னை விடுவிக்கிறாய்.

எப்பொழுது? துளிக்கூட சஞ்சலம் இல்லாமல் உன்னுடைய திருவடிகளை பற்றி அதுவே சுகம், அதுவே நிலையானது என்று எப்பொழுது ப்ரபத்தி செய்கிறேனோ அன்று.

8.4 ரஹஸ்யத்ரய சுளகத்தில் ஸ்வாமி தேசிகன் அருளியது

ஸர்வ பாபேப்ய: என்றது எல்லாப் பாபங்களின்றும் என்றபடி. பாபமாவது சாஸ்த்ரமே கொண்டு அறியவேண்டிய அநிஷ்ட ஸாதநம் (தீங்கை தருபவை). இத்தால் பாப வர்க்கம் அநாதி கால ஸஞ்சிதமாய் அநேக ப்ராகாரமாக நிற்கிற நிலையைக் காட்டுகிறான். பாபங்களில் ஒன்றும் ஒழியாமைக்காக ஸர்வ ஶப்தம்.

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

ஸர்வ பாபேப்ய: என்றால் எல்லாப் பாபங்களிலிருந்தும். முதலில் பாபம் என்றால் என்ன? நமக்கு தீங்கு தரும் சாதனங்களே பாபங்கள்.

பாபத்தால் வரும் தீங்கை கண்ணால் பார்க்க முடியாது. சாஸ்திரத்தைக் கொண்டே தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு **பாபேப்ய:** என்று பன்மையில் (plural) கூறியது பாபங்கள் *பல காலமாய், பல வகைகளாய்* உள்ளது. இப்படி பன்மையில் காட்டிய பிறகும் **ஸர்வ** என்ற பதம் எதற்கு என்றால் அந்த பாபங்கள் ஒன்று கூட விடாமல், அனைத்தையும் சேர்த்து கழித்து ஒழிப்பதை காட்டுகிறது.

8.5 பாபம் என்ற பதத்தில் புண்யங்களும் அடக்கம்

> **இங்கு பாப ஶப்தத்தாலே முமுக்ஷுவுக்கு** (மோக்ஷத்தை விரும்புவன்) **அநிஷ்ட பல ஹேதுவான** (தீய பலனைத் தரவல்ல) **புண்யமும் ஸங்க்ருஹீதம்** (உள்ளடக்கம் included). **அவித்யாதிகளும் இங்கே ஸங்க்ருஹீதங்கள்.**
> ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

இங்கே பாபங்கள் என்றால் புண்யங்களும் அதனில் அடக்கம். பாபம் என்றால் தீங்கைத் தருபவை என்று பார்த்தோம். சில புண்யங்களும் தீங்கைத் தருபவைகளாக இருந்தால் அவைகளும் பாபங்களில் சேர வேண்டியவையே. உதாரணமாக, ஒருவன் புண்யங்கள் பல செய்து சேர்த்து வைத்திருக்கிறான். பிறகு ஒரு நாள் ப்ரபத்தி செய்கிறான். ப்ரபத்திக்கு பின் அவன் வேண்டுவது மோக்ஷ பலனையே. முன்னே செய்த புண்யங்களால் வரும் பலன்கள் இப்போது விரும்பாதவைதானே. அவையும் மோக்ஷம் அடைவதற்கு தடை செய்பவை.

அவித்தை (அஞ்ஞானம்) - கர்மா - வாஸனை - ருசி - தேஹ ஸம்பந்தம் என்பது ஒரு சக்கரம் மாதிரி மாறி மாறி வந்து கொண்டே இருக்கும்.

1. **அவித்தை** என்பது மூன்று வகை
    a. **ஞான அநுதயம்** (ஞானம் பிறவாமை),

b. **அந்யதா ஞானம்** (ஒன்றின் தன்மையை மாறி அறிதல்),
c. **விபரீத ஞானம்** (ஒரு பொருளையே மாற்றி அறிதல்)

2. **கர்மம்** - புண்யமும் பாவமும்

3. **வாஸனை** - மூன்று வகை
   a. **அஜ்ஞான** வாஸனை (விஷயம் தெரியாது ஆசை)
   b. **கர்ம** வாஸனை (பழக்கத்தால் ஏற்பட்ட ஆசை)
   c. **ப்ரகிருதி** வாஸனை (சிற்றின்பங்களில் ஆசை)

4. **ருசி** - உலக விஷயங்களில் ஆசை ஏற்பட்டு அத்தால் பலவிதமாய் இருக்கும்

5. **ப்ரகிருதி (தேஹ) ஸம்பந்தம்** - ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் உள்ள அசித் பொருள்களின் தொடர்பு

இவை எல்லாவற்றிலிருந்தும் விடுவிப்பதாக எம்பெருமான் சொல்கிறான்.

8.6 கழிகின்ற பாபங்கள்

இத்தால்

- **ப்ராரப்த வ்யதிரிக்தமான** (பலன் கொடுக்க அரம்பிக்காத) **பூர்வாகத்திலும்** (ப்ரபத்திக்கு முன் செய்த பாபங்கள்) **புத்தி பூர்வ** (அறிந்தே செய்தவை) **அபுத்தி பூர்வங்கள்** (அறியாமல் செய்தவை) **இரண்டு வகையாகவும்,**
- **ப்ராரப்தத்தில்** (பலன் கொடுக்கத் தோடங்கிய) **இவனுக்கு அநிஷ்டமாய் ஶோக ஹேதுவான அம்சமும்,**
- **உத்தராகத்தில்** (ப்ரபத்திக்கு பின் செய்த பாபங்கள்) **ப்ரமாதிகாம்ஶமும்,** (அறியாமல் செய்யும்படி நேர்ந்த பாபத்தின் பகுதியும்) **ஸங்ரஹிக்கப்படுகின்றன.**

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

பாபங்கள்

1. **ஸஞ்சிதம்** (பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை. மூட்டை மூட்டையாக குவிந்துள்ள பாபங்கள்)
   a. தெரியாமல் செய்தவை
   b. தெரிந்து செய்தவை

2. **ப்ராரப்தம்** (பலன் கொடுக்க அரம்பித்தவை)
   a. ப்ரபன்னன் ஒத்து கொள்ளாதவை
   b. ப்ரபன்னன் ஒத்து கொண்டவை

3. **ஆகாமி** (ப்ரபத்திக்கு பின் செய்கிற பாபங்கள்)
   a. தெரிந்து செய்பவை
   b. தெரியாமல் செய்பவை

இவற்றில்

- 1 முழுவதும் (a and b) , எம்பெருமான் ஒழித்து விடுகிறான்.
- 2 இல் a என்பது, ப்ரபன்னனுக்கு இஷ்டமில்லாத துன்பத்தை தருவதாய் உள்ளவை. அதாவது சில மறுபிறவியைத் தரக் கூடியவை. அவற்றை எல்லாம் ஒழித்து விடுகிறான்.
- 3 இல் b தெரியாமல் நேர்ந்ததால் அவற்றையும் மன்னித்து விடுகிறான்.

8.7 கழியாத பாபங்கள்

ஆக, த்ருப்த ப்ரபன்னனுக்கு, ப்ராரப்த கர்மாவில், இந்த ஜன்மத்தில் அநுபவிப்பதாய் ஏற்கனவே எம்பெருமான் தீர்மானித்தவை அவன் கணக்கில் சேரும். **(அப்யூகத ப்ராரப்த கர்மா)** அவற்றை அனுபவித்தே தீர வேண்டும் (2b). மேலும் ஆகாமி என்று ப்ரபத்திக்கு பின் செய்யும் பாபங்களில் தெரிந்தே செய்பவையும் அவன் கணக்கில் சேரும். (3a).

புத்தி பூர்வமான (அறிந்தே செய்த) உத்தராகத்திற்கு (ப்ரபத்திக்கு பின்) புந:ப்ரபத்தியை ப்ராயஶ்சித்தமாக சாஸ்த்ரம் சொல்லிற்று.
ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

[ப்ரபத்திக்கு பின் தெரிந்தே செய்யும் பாபங்களின் கணக்கு என்ன என்று கேள்வி வரும். அதற்கு ப்ராயச்சித்தமாக ஒரு ப்ரபத்தியை மறுபடி செய்து விட்டால் அந்த பாபங்களும் தொலைந்து போகும் என்று சாஸ்திரம் சொல்லியுள்ளது.]

இதுவும் கூட இங்கே ஸர்வ சப்தத்தாலே விவக்ஷிதமானால் (சொல்ல வேண்டும் என்று கருதினால்), ப்ராய ஶ்சித்தத்திலே மூட்டியதால் ஶேஷா விஶேஷங்களேயாதல் அவற்றையும் கழிக்கும்.

[ஸர்வ பாபேப்யோ என்றால் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் என்று பொருள். அப்படியானால், ப்ரபத்திக்கு பின் அறிந்தே செய்யும் பாபங்களையும் எம்பெருமான் கழிப்பதாக கூறி உள்ளானே என்று தோன்றினால், அதற்கு சாஸ்திர அநுகூலமாக பதில் சொல்ல வேண்டும். ப்ரபத்திக்குபின் அறிந்தே செய்யும் பாபங்களுக்கு ப்ராயச்சித்தத்தை செய்யுமாறு தூண்டி, அதை செய்ய வைத்து, அதன் மூலமாக எம்பெருமான் அந்த பாபங்களையும் ஒழிக்கிறான்.

அப்படி ப்ராயச்சித்தம் செய்யாத முரடனாய் இருந்தால் அவனுக்கு இந்த பிறவியிலேயே தண்டனை கொடுத்து அந்த பாபங்களை போக்குகிறான்.]

8.8 காம்ய கர்மாக்களும் பாபங்களே

பக்தி தத்வ ஜ்ஞாந அபிவிருத்திகளுக்காகவாதல் பகவத் பாகவதார்த்தமாகவாதல் வரும் காம்யங்களொழிய (மற்ற பலனுக்காக செய்யும் கர்மாக்கள்) மற்றும் வரும் காம்யங்களும் பாப கோடியில் அந்வயிக்கும் (சேரும்). இதுக்கு புந:ப்ரபத்தி பண்ணாதொழியில் பலவதநுபவ விச்சேதாதி (தடை போன்ற தீங்கு) ப்ரத்யவாயம் வரும்.
ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

மேலும் அற்பமான உலக சுகங்களுக்காக செய்யும் கர்மாக்களும் இந்த பாபத் தொகுதியில் சேரும். இவற்றில் சேராதவை

- பகவத் பக்தி வளர வேண்டும்
- தத்துவங்களை பற்றிய ஞானம் அதிகரிக்க வேண்டும்
- பகவானுடைய கோயில்கள் செழிக்க வேண்டும்
- பாகவதர்கள் நன்கு வாழ வேண்டும்.

இவற்றிற்கு காம்ய கர்மா செய்தால் அவை கழிய வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால் **அவை ஸ்வரூபத்திற்கு தகுந்தவைகளே.** அவை ஸம்ஸாரத்தை தராது.

இவை தவிர, வேறு காம்யார்த்தமாக, வீடு, செல்வம், மனைவி, குழந்தைகள், தன் உடல் சுகம் இவற்றிற்காக செய்யும் கர்மாக்கள் கழிய வேண்டும். இவை **ஸர்வ பாபேப்யோ** என்று சொன்னவற்றுள் அடக்கம்.

இவைகள் கழிய பிராயச்சித்தமாக ப்ரபத்தி செய்ய வேண்டும். அப்படி செய்யாவிடில், பகவத் அநுபவத்திற்கு தடை வரும். மேலும் பழிப்பு, வெறுப்பு போன்ற துன்பங்கள் ஏற்படும்.

8.9 ப்ரபத்தி வகைகள்

ஆர்த்த ப்ரபத்தி - ஸம்ஸாரம் இந்த க்ஷணம் முதல் வேண்டாம், உடனே மோக்ஷம் வேண்டும் என்று ப்ரபத்தி செய்ப்வர்கள். இதைச் செய்தால் பகவான் உடனேயே பாபங்களை கழித்து மோக்ஷம் அளிக்கிறான்.

சிலர் இந்த பிறவி முடியும் தருவாயில் மோக்ஷம் வேண்டும் என பிராத்திப்பர். இது **த்ருப்த ப்ரபத்தி** எனப்ப்டும்.

8.10 பகவான் எப்போது மோக்ஷம் தருகிறார்?

த்ருப்த ப்ரபன்னனுக்கு எப்போது மோக்ஷம் என்று கேள்வி. முதலில், பாபங்களே செய்யாத த்ருப்தன். அது எப்படி பாபமே செய்யாத பிரபன்னன்? அது எப்படி முடியும் என்றால், ப்ரபத்தி செய்யும் காலத்தில் அபராதம் இல்லாத கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று பிராத்திருக்கலாம். இல்லை எஞ்சிய ப்ராரப்த கர்மா நல்லதாக இருக்கலாம். இப்படி இருப்பவர்கள் பாபங்களே செய்யாமல், எஞ்சிய வாழ்நாட்களை நல்லவிதமாக கழித்து மோக்ஷம் அடைகின்றனர்.

ஆனால் த்ருப்த ப்ரபத்தி செய்தவர்களில் பலருக்கு இந்த உலகத்தில் இருக்கும் வரை தெரிந்தே பாபம் செய்ய நேருவது இயற்கையே. அதனால் இவர்களுக்கு **மோக்ஷம் கிடைக்காதோ என்று பயப்பட வேண்டாம்.**

தன் செயலுக்கு வருந்தி பிராயசித்தம் செய்வதால் அவை கழிகின்றன. பிராயசித்தம் செய்யாத முரடர்களுக்கும் மோக்ஷம் உண்டு. ஆனால் பகவான் அவர்களுக்கு சின்ன தண்டனை கொடுத்து தன் இருப்பிடத்திற்கு அழைத்து கொள்கிறான். அப்பா, பிள்ளையை தண்டிப்பது நல்லதிற்குதானே.

8.11 பகவான் தடைகளை நீக்குவது

பரம காருணிகனாய் அவசர ப்ரதீக்ஷனான (ரக்ஷிக்க சமயத்தை எதிர் பார்த்து இருப்பவன்) **ஶ்ரீய:பதி**
ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சாரம்

பகவான் இயற்கையிலேயே கருணை உடையவன். பிராட்டி ஸம்பந்தத்தால் சேதனன் எவ்வளவு அபராதம் செய்து இருந்தாலும், அவளுடைய பரிவுரையால் எம்பெருமானை எப்போது வேண்டுமானாலும் அணுகலாம். எல்லா சேதனர்களுக்கும் நல்வாழ்வு அளிக்கும் தந்தை அவன். ஆனால் ஒவ்வொருவருக்கும் உரிய சமயத்தை, அல்ப ஸாதனத்தை எதிர் பார்த்து இருக்கிறான்.

அஜ்ஞாத ஸுக்ருதாதிகளை (தெரியாமல் செய்த புண்யம்) முன்னிட்டுக் கொண்டு ஸத்த்வாதி விரோதிகளையும்,

ஸத்வ குணத்திற்கான தடைகளை நீக்குதல் - ஸத்வ குணங்கள் இருந்தால்தான் நல்ல கர்மங்களை செய்ய முடியும். சேதனர்கள் தங்களை அறியாமலே ஏதாவது புண்யங்கள் பண்ணி இருப்பார்களா? என்று பகவான் தேடுகிறான். அந்த புண்யங்கள் மூலம் ஸத்வ குணத்திற்கு ஏற்படும் தடைகளை நீக்குகிறான். தை நீங்கி ஸத்வ குண ம்தலை எடுத்தால் சேதனன் நல்ல காரியங்கள் செய்ய முற்படுகிறான்.

ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டு தத்வ ஜ்ஞாநாதி விரோதிகளையும்

சித், அசித், ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்களையும், நன்கு அறிய வேண்டும், முதலில். தத்வம், ஹிதம், புருஷார்த்தம், ரஹஸ்யங்கள் என்று ஞானம் தெளிய வேண்டும். அதற்கு ஆசார்ய ஸம்பந்தம் ஏற்படுத்துகிறான் தத்வ ஞானம் பெற ஆசாரியர்கள் அவசியம் வேண்டும்.

புருஷகாரத்வத்தை முன்னிட்டுக் கொண்டு உபாய விரோதிகளையும்

சேதனர்கள் பக்தி அல்லது ப்ரபத்தி மூலமாகத்தான் மோக்ஷம் அடைய முடியும். அந்த மோக்ஷத்திற்கு தடையாக உள்லவை இவனுடைய பாவங்கள். அவற்றைக் கண்டு எம்பெருமான் மிகவும் சீற்றத்துடன் இருக்கிறான். அந்த கோவம் தணிய, பிராட்டி மூலமய் அவனை அணுகுகிறோம். பிராட்டியைக் கொண்டு புருஷகாரத்வத்தை அளிக்கிறான்.

பக்தி ப்ரபத்தியை முன்னிட்டுக் கொண்டு ப்ராப்தி விரோதிகளையும் கழிக்கும்.

சேதனர்கள் மோக்ஷத்தை அடைந்து நித்யமான, ஆனந்தமன கைங்கர்யம் செய்வதற்கு தடை அவனுடைய பாவக்களே. அந்த பாபங்க்ளை கழிக்க, ஆசாரியன் மூலமாய், பிராட்டி மூலமாய், பக்தி, ப்ரபத்தி செய்யத் தூண்டி அதன் மூலம் தனக்கு உள்ள சீற்றத்தை தணித்து கொள்கிறான்.

இவ்விடத்தில் அத்யந்த அகிஞ்சன்யனாய் (கைம்முதல் இல்லாதவன்) **சோகித்தவனுக்கு பரந்யாஸத்தை விதித்து "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கையால் இது ப்ராப்தி விரோதி** (மோக்ஷம் பெற தடையான) **விஷயம்.**

இந்த சரம ஸ்லோகத்தில், முன் பாதி அகிஞ்சன, அநந்யகதியனான, சோகித்து கிடந்த சேதனனுக்கு ப்ரந்யாஸத்தை செய்யுமாறு விதித்தது. பின் பாதி, அப்படி ப்ரபத்தி செய்தவனை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் என்று கண்ணன் கூறியதாக உள்ளது.

ப்ரபத்தி செய்ய சொன்ன சேதனனை நோக்கி எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் என்றால் ப்ரபத்தி செய்யத் தடையான பாபங்கள் என்று அர்த்தம் இல்லை. அவன்தான் ப்ரபத்தி செய்து முடித்து விட்டானே. மோக்ஷத்தை அனுபவிக்க இருக்கும் தடை என்று **ப்ராப்தி விரோதியைச் சொல்லும் இங்கே.**

இப்படி ப்ரஸாதங்களாலே (பகவானை சந்தோஷிக்கச் செய்யும் பக்தி, ப்ரபத்தி) **நிக்ரஹ நிவ்ருத்தி** (கோவம் தணிதல்). **நிவ்ருத்த நிக்ரஹனான** (கோவம் தணிந்தவனான) **ஈச்வரனாலே ஜ்ஞாந ஸங்கோச நிவ்ருத்தி** (அறிவின் சுருக்கம் நீங்கல்). **இதுதானே ஜ்ஞாந விகாஸ ரூபையான** (அறிவின் முழு மலர்ச்சி) **ப்ராப்தி** (எம்பெருமானை அடைவதான மோக்ஷம்)
ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகம்

- இப்படி எம்பெருமானின் மனது குளிரச் செய்யும் பக்தி அல்லது ப்ரபத்தி போன்ற காரியங்கள் அவனுடைய கோவத்தை தணிக்கின்றன.
- கோவம் கழிந்த எம்பெருமான் மோக்ஷம் தருகிறான்.
- பகவான் சேதனனின் அறிவின் சுருக்கத்தை போக்குகிறான்.
- ஞானத்தின் விரிவால், அறிவு மலர்ச்சி அடைகிறது.
- மலர்ந்த ஞானத்தின் இலக்கு (target) பகவான்தானே.

8.12 முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியார் அருளியது

ஸர்வ பாபேப்ய:-மத் ப்ராப்தி ப்ரதிபந்தகங்கள் என்று யாவையாவை. சில பாபங்களைக் குறித்து அஞ்சுகிறாய். அவ்வோபாபங்கள் எல்லாவற்றில் நின்றும்.

பாபம் என்பது விரும்பிய பொருளை அடைவதற்கு தடையாக உள்ளது. இங்கே அந்த இஷ்ட விரோதிகள் என்பவை மோக்ஷ தடையானவை. பகவானை அடைவதற்கான தடை, அவனை அடைய வேண்டும் என்கிற ஆசைக்கு தடை, உபாய தடை இவை எல்லாம் எம்பெருமான் கிருஷ்ணனை உபாயம் என்று பற்றியவுடனே நீங்கி விட்டது. ஆக மீதி உள்ளது ப்ராப்தி விரோதி. ஆக பகவான் சொல்கிறார். "என்னை அடைவதற்கான தடையாக உள்ள எந்த பாபங்களைக் கண்டு நீ பயப்படுகின்றாயோ, அவற்றிலிருந்து என்று பொருள்.

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும் என்கிறபடியே அவித்யா கர்மா வாஸநா ருசி ப்ரகிருதி ஸம்பந்தங்களைச் சொல்லுகிறது.

த்ருணேச்சேதகண்டூயநாதிகளைப் போலே ப்ரகிருதி வாஸனையாலே அநுவர்த்திக்குமவையென்ன, லோக அபவாதபீதியாலும், கருணையாலும், கலக்கத்தாலும், செய்யுமவையன்ன எல்லாவற்றையும் நினைக்கிறது.

புல் பிடுங்கி எறிதல், அரித்த இடத்தில் சொறிதல் போன்ற தன்னை அறியாமல் செய்யும் செயல்கள் போலே (involuntraily, subconciuos action), ப்ரகிருதி சம்பந்தமாய் ஜீவன் அறியாமல் செய்யும் பாவங்கள், இவற்றை செய்யாவிட்டால் மற்றவர் பழிப்பர், என்று உலகுக்கு பயந்து எம்பெருமானே உபாயம் என்ரு கொண்ட பிறகு, ரஜோ தமோ குணங்களால் கலங்கி, மயங்கி கைவிட்ட உபாயங்களில் ஈடுபடுதல்

8.13 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

**காடுகளோ நரகோ * கடிதாம் கரளத் திரளோ *
சூடு விடா அனலோ * தொலையா நிலை நள்ளிருளோ /**

**சாடு படச் சரணால் * அன்று சாடிய சாரதியார் *
வீடு செய்வித்து நம்மை * விடுவிக்கின்ற பாவங்களே**
ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோகச்சுருக்கு 9

- **(அன்று சாடு படச் சரணால் சாடிய சாரதியார்)** குழந்தையான கிருஷ்ணன், கம்ஸன் ஏவிய சகடாஸுரனை தொட்டிலில் படுத்துக் கொண்டே அவன் இறக்கும்படி திருவடியால் உதைத்தவனும், அர்ஜீனனுடைய தேர்ப் பாகனுனான கண்ணன்
- **(நம்மை வீடு செய்வித்து)** = நம் பொறுப்பு நீங்க பரந்யாஸத்தை நாம் செய்யும்படி செய்து
- **(விடுவிக்கின்ற பாவங்களே)** = நம்மை விட்டு விலகுகின்ற பாபங்கள்
- **(காடுகளோ நரகோ கடிதாம் கரளத் திரளோ)** = நாம் எண்ண முடியாதபடி, வெளியே வர முடியாதபடி கலக்குகின்ற காடு, இல்லை துன்பமே தருகின்ற நரகங்களோ இல்லை மனதிலே வளர்ந்து நம் அத்மாவையே கெடுக்கும் விஷமோ
- **(சூடு விடா அனலோ தொலையா நிலை நள்ளிருளோ)** = ஸம்ஸார தாபத்தை தருகின்ற அக்னியோ, சேதனனின் உண்மை ஸ்வரூபத்தை மறைக்கின்ற நடு ராத்ரியோ
- எப்படி நம்முடைய பாபங்களை எண்ணலாம்?

8.14 முடிவுரை

எம்பெருமானிடம் ப்ரபத்தி செய்து, க்ருதக்ருத்யனாய் இருக்கும் முமுக்ஷுவின் அநிஷ்ட வர்க்கமான ஸகல புண்ய பாபங்களிலிருந்தும் விடுவிப்பதை **ஸர்வ பாபேப்யோ** என்கிற பதம் காட்டும்.

9 - மோக்ஷயிஷ்யாமி

தருவாய் வினை விடுத்து *
வீடு நான் விரும்பும்போது *
விரைவாய் இன்றே இல்லை *
நாளை என்று அப்போது *
அளித்து அழைப்பாய் உயரே *
உமக்கே குற்றேவல் செய்ய *
களித்து இருப்பார் வந்தார் *
அவரோடு ஒன்றாய் யானுய்ய

தருவாய்	= அளிப்பாய்
வினை விடுத்து	= பாபங்களை விலக்கி
வான்வீடு	= மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை
நான் விரும்பும்போது	= என் ஆசையின்படி
விரைவாய்	= சீக்கிரமாக
இன்றே இல்லை	= உடனேவோ இல்லை
நாளை	= இன்னொரு நாளோ
என்று அப்போது	= என்று வேண்டும்போது
அளித்து	= அருளி
உயரே	= உயர்ந்த பரமபதத்திற்கு
அழைப்பாய்	= அழைத்துகொள்வாய்
உமக்கே குற்றேவல் செய்ய	= உமக்கு நித்ய கைங்கர்யம் செய்யவே
களித்து	= அந்த கைங்கர்ய ருசியில்
இருப்பார்	= என்றும் அங்கேயே இருக்கும் நித்ய ஸூரிகள்
வந்தார்	= இங்கிருந்து மோக்ஷம் அடைந்த முக்தர்கள்
அவரோடு	= அவர்களோடு
ஒன்றாய் யானும்	= நானும் ஒன்றாய் சேர்ந்து
உய்ய	= உஜ்ஜீவிப்பதற்காகவே

9.1 முன்னுரை

மோக்ஷயிஷ்யாமி என்றால் விடுவிப்பேன் என்ற பொருள். மோக்ஷம் என்றாலே விடுதலை என்ற பொருள். ஏற்கனவே ஸகல பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் என்பதால், ஐச்வர்ய கைவல்யாதிகளில் உன்னைச் சேர்க்காமல் ப்ரிபூர்ண ப்ரம்மானுபவம் என்கிறதாகிய மோக்ஷாநந்தத்தை அடைவிக்கிறேன். தவிர, சேதனன் விரும்பியபோதே அவனை முக்தன் ஆக்குகிறான்.

பாபம் என்பது எம்பெருமானுக்கும் நம்மேல் உள்ள நிக்ரஹ ஸங்கல்பம், கோவம் என்று சொல்லலாம். **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்றால் பகவானுக்கு நம்மேல் தண்டிக்க வேண்டாம் என்ற எண்ணம் தோன்றுவது. இதனால் சேதனனின் அஞ்ஞானம் எல்லாம் போய் ஞான விகாஸம் ஏற்படும்.

9.2 பாசுரத்தின் சுருக்கமான கருத்து

ப்ரபன்னன் விரும்பும் நேரத்தில் அவனுக்கு மோக்ஷத்தை அளிப்பேன் என்பதே **மோக்ஷயிஷ்யாமி** என்பதன் பொருள்.

பகவானை நாம் சரணாகதி என்று அடைந்து வேண்டுகிறோம். நம்முடைய கர்ம வினைகளிலிருந்து விடுவிக்கிறான். மோக்ஷ ப்ராப்தியை இன்றே வேண்டும் என்றால் விரைந்து இன்றைக்கே **(ஆர்த்த ப்ரபத்தி)** இல்லை நிதானமாக நாளைக்கோ பின்னொரு காலத்திலோ **(த்ருப்த ப்ரபத்தி)** என்று நாம் எப்பொழுது வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்பொழுது அளிக்கிறான்.

பிராட்டியுடன் கூடிய தமக்கு கைங்கர்யம் செய்ய., அர்ச்சிராதி மார்க்கமாக நம்மை உயரே அழைத்து செல்கிறான். அப்படிப்பட்ட மோக்ஷ சாம்ராஜ்யத்தில் நாம் சென்று அங்கேயே இருக்கும் நித்யர், இங்கிருந்து அங்கே சென்ற முக்தர் இவர்களுடன் ஒன்று சேர்ந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் பிராட்டியுடன் கூடிய பகவானுக்கு கைங்கர்யம் செய்கிறோம்.

9.3 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யமாத்ருகையில் அருளியது

மோக்ஷயிஷ்யாமி என்ற பதத்திலே

[மோக்ஷயிஷ்யாமி - விடுவிப்பேன்.]

இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி கழிந்து

[அஞ்ஞானத்தையே தரக்கூடிய இந்த உலகத்தில், ப்ரபந்நர்களுக்கு மறுபிறப்பு இல்லாதவாறு விடுதலை அளிக்கிறான்.]

மருள் ஒழிந்த மட நெஞ்சமுடையார்க்கு வேண்டிற்றெல்லாம் தரும்
மணி வண்ணன் விண்ணுலகம் தர விரைந்து

[அஞ்ஞானம் நீங்கி மிருதுவான உள்ளம் உடைய பிரபன்னர்களுக்கு அவர்கள் வேண்டுகின்ற எல்லாப் பலனையும் தருகின்ற கொடை வள்ளலாய் விளங்குகிறான்]

சார்ந்த இரு வல்வினைகளும் (புண்ய பாபங்கள்) சரிந்து (ஒழித்து)

[அந்த பிரபன்னர்களுக்கு வைகுண்ட ப்ராப்தியை அளிக்க வேகமாக வருகிறான்.]

மாயப்பற்று அறுத்துத் (ப்ரகிருதி ஸம்பந்தம்),

[மோக்ஷ ப்ராப்தி அடைவதற்கு இத்தனை காலம் தடையாய் இருந்த புண்ய பாவங்களாகிய இரு வினைப் பயன்களையும் ஒழிக்கிறான்]

தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி (ப்ரபத்தியில் இச்சை உண்டாக்கி)

[உலக விஷயங்களில் உள்ள பற்றுதலை நீக்குகிறான். எல்லாம் பகவானே என்கிற மனப்பாங்கை தந்தருள்கிறான்.]

வீடு திருத்துகிறபடியும் (பரமபத்தை அலங்கரித்து)

[இவர்கள் வந்து சேருவதற்கு பரமபதத்தை அலங்கரித்து வைத்திருக்கிறான். இந்த காரியங்கள் எல்லாம் "விடுவிப்பேன்" என்ற சொல்லால் புலனாகிறது.]

9.4 ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகத்தில் அருளியது

மோக்ஷயிஷ்யாமி என்றது விடுவிக்கக் கடவேன் என்றபடி. இத்தால் ஸம்ஸ்ரிக்க பண்ணி வைத்த ஸங்கல்பத்தை விடக் கடவன் என்றதாயிற்று.

[உன்னை ஸம்ஸாரத்தில் இந்நாள் வரை அழுத்தி வைத்த ஸங்கல்பத்தை இன்று விட்டுவிடுவேன் என்பது பொருள்]

மோக்ஷத்துக்கு பவிஷ்யத் காலத்துக்கு (எதிர் காலத்து) **ப்ரபன்னன் கோலினது எல்லை.**

[என்றைக்கு பாவங்களிலிருந்து, பிரபன்னனை விடுவிக்கப் போவதாக எம்பெருமான் கூறுகிறான் என்றால், ப்ரபத்தி செய்பவன் எந்த காலத்தை வேண்டி கேட்டானோ அந்த காலத்தில் அவனுக்கு மோக்ஷம் கிடைக்கும். அதுவே அவன் எதிர்காலத்தின் எல்லை.]

ஆர்த்தி அதிசயமுடையவனுக்கு (உடனேயே பெற வேண்டும் எனத் துடிப்பு) **அப்போதே பல ஸித்தி.**

[ஸம்ஸார துக்கம் தாளாமல், உடனேயே மோஷ ப்ராப்தி வேண்டும் என துடிக்கும் ஆர்த்த பிரபன்னனுக்கு உடனே மோக்ஷம் கிடைக்கும்].

ஆறுதல் உடையவனுக்குத் (காலம் கழித்து பெறுகைக்கு பொறுமை)
தன் குறையால் வந்த நாள் இழவொழியப் பொருள் இழவில்லை.

[காலம் பொறுக்க முடிந்தவனுக்கு அவன் கேட்ட காலத்தில் மோஷம் கிடக்கும். இவன் மோக்ஷம் போய்ச் சேர்ந்து அனுபவிக்கும் நாளில் குறைவே தவிர அனுபவத்தில் எந்த வித குறைவுமில்லை.]

தருவாய் வினை விடுத்து, வீடு நான் விரும்பும்போது
விரைவாய் இன்றே இல்லை நாளை என்று அப்போது *
அளித்து அழைப்பாய் உயரே உமக்கே குற்றேவல் செய்ய *
களித்து இருப்பார் வந்தார் அவரோடு ஒன்றாய் யானுய்ய

என்று பாசுரத்தில் இதையே காட்டினோம். இங்கே இருப்பார் என்பது நித்யர். வந்தார் என்பவர் ஏற்கனே மோஷம் சென்று அடைந்த முக்தர்கள். அவரோடு நானும் எனறால் இப்போது மோக்ஷம் செல்லும் பிரபன்னன். அவர்களுடன் ஒரே விதமான களிப்புடன் இந்த பிரபன்னன் இருப்பதை காட்டியது.

9.5 பிள்ளைலோகாசாரியார் அருளியது

மோக்ஷயிஷ்யாமி - முக்தனாம்படி பண்ணக்கடவேன்.
பிள்ளைலோகாசாரியார், முமுக்ஷுப்படி 254

[இந்த பாவங்கள் எல்லாவற்றிலும் இருந்து உன்னை விடுவிப்பேன்.]

ணிச்சாலே - நானும் வேண்டா, நீயும் வேண்டா, அவை தன்னயே விட்டுப் போங்காணென்கிறான்.

(யிஷ்யாமி என்ற பதம் மூலம் "விடுவிப்பேன் என்பதை விளக்குகிறார். இங்கே விடுதலை அளிப்பேன் என்று சொல்லவில்லை. விடுவிப்பேன் என்பதால் உன்னைப் பாவங்களிலிருந்து மீட்க என்னிடம் நீ பண்ணிய

சரணாகதியே போதும். அந்த பாவங்கள் தாமாகவே இருந்த இடம் தெரியாமல் விலகும்.]

என்னுடைய நிக்ரஹ பலமாய் வந்தவை நான் இரங்கினால் கிடக்குமோ? என்கை.

[பாவங்களை சேதனன் மறந்தாலும் எம்பெருமான் மறக்காமல் கணக்கு வைத்துக் கொண்டு இருக்கிறான். அவற்றை சரியான காலத்தில் ஒன்று விடாமல் அனுபவிக்கச் செய்கிறான். இவை பகவானின் தண்டனை (நிக்ரஹம்). இதற்கு மாறாக நான் அனுக்ரஹம் செய்தால், அந்த பாவங்கள் உன்னைத் தொடருமோ?]

அநாதி காலம் பாபங்களைக் கண்டு நீ பட்ட பாட்டை அவைதாம் படும்படி பண்ணுகிறேன்.

[அநேக காலமாய் பாவக்கள் உன்னை பயமுறுத்தின. நீ அப்படி பட்ட பாட்டை அந்த பாவங்களை நான் பட வைக்கிறேன்.]

இனி உன் கையிலும் உன்னைக் காட்டித் தாரேன். என்னுடம்பில் அழுக்கை நானே போக்கிக் கொள்வேனோ?

[இதுநாள் வரை நீ உன்னாலேயே காரியங்களை செய்து முடித்துவிட முடியும் என்று இறுமாந்திருந்தாய். நானும் நீ எண்ணியபடியே விட்டு விட்டேன். ஆனால் நீ இப்போது சரணாகதி செய்து எனக்கு சரீரம் என்பதை அறிந்து கொண்டாய். நான் இப்போது உன் பாவங்களை நீயே நீக்கிக் கொள் என்று சொல்ல மாட்டேன். நீ என் சரீரம். என் உடலில் உள்ள அழுக்கை நானே போக்கிக் கொள்ள மாட்டேனோ?]

9.6 சரமசுலோகச்சுருக்கில் ஸ்வாமி தேசிகன் அருளியது

**சென்று உயர் வான் அமர்ந்து * அவ்வடியாருடன் சேர்ந்திடவே *
இன்று எனில் இன்று * நாளை எனில் நாளை இனிச் செறிந்து /
நின்ற நிலை நின்னனைத்து வினையும் * நின் விட்டகலக் ***

கன்றி விடுப்பன் என்றான் * கருத்தால் நமைக் காத்திடுமே
ஸ்வாமி தேசிகன் சரமசுலோகச்சுருக்கு 11

- **(இன்று எனில் இன்று நாளை எனில் நாளை செறிந்து நின்ற நிலை)=** இன்று வேண்டும் என விரும்பினால் இன்றே நாளை, வேண்டும் என்றால் நாளை என்று நீ வேண்டி நின்ற நிலைக்கு தக்கவாறு
- **(சென்று உயர் வான் அமர்ந்து அவ்வடியாருடன் சேர்ந்திடவே)=** அர்ச்சிராதி மார்க்கமாய் சென்று உயர்ந்த மோக்ஷத்தில் பொருந்தி நித்ய முக்தர்களோடு சேர
- **(நின் அனைத்து வினையும் இனி நின் விட்டு அகலக் கன்றி விடுப்பன்)=** உன் ஸகல கர்மங்களையும் இனிமேல் உன்னை விட்டு விலகிப் போக கோவத்துடன் ஒழித்து விடுவேன்
- **(என்றான் கருத்தால் நமைக் காத்திடுமே) =** என்று சொன்ன பகவான் தன்டைய ஸங்கல்பத்தால் நம்மை காத்தருள்வான்

9.7 பாபங்களிலிருந்து விடுவிக்கும் முறை

கண்ணன் பாபங்களிலிருந்து உன்னை விடுவிக்கிறேன் என்கிறான். அது ஒரு பலன். அந்த பலனுக்கு வேண்டிய உபாயத்தைச் செய்தால்தான் வரும். எனவே நீ ப்ரபத்தி என்னிடம் செய்து விட்டால், அதற்கு அடுத்த க்ஷணம் முதல் நீ எப்பொழுது மோஷம் விரும்புகிறாயோ அந்த ஸமயத்திலேயே உனக்குத் தடையாக இருந்த புண்ய பாபங்களிலிருந்தும் முழுவதுமாய், சிறிதும் விட்டு வைக்காமல் விடுவிக்கக் கடவேன் என்றான்.

கர்மங்கள் மூன்று வகை

1. **ஸஞ்சிதம்** - பின் ஒரு காலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனியாய் குவித்து வைத்த சுமையாய் இருப்பது.
2. **ப்ராரப்தம்** - பயன் கொடுக்கத் தொடங்கி விட்ட கர்மா
3. **ஆகாமி** - எதிர்காலத்தில் செய்யப் போகும் கர்மா

பிரபத்தி செய்த உடனேயே ஸஞ்சிதம் என்னும் பாவக் குவியல் எல்லாம் கழிந்து விடும். பிராரப்தம் என்பதில், இந்த உடலுடன் அனுபவிக்க

வேண்டியவை என்று இசைந்த கர்மா **(அப்யுகத ப்ராரப்த கர்மா)** தவிர, மற்ற ஒத்துக் கொள்ளாதவை **(அநப்யுகத ப்ராரப்த கர்மா)** எல்லாம் கழியும். எதிர் காலத்தில் அறியாமல் செய்த பாபங்களும் கழியும்.

9.8 புண்ய பாபங்களின் பங்கீடு

ஸர்வ பாப நிவ்ருத்தி ப்ரகாரம் (விடுவிக்கும் க்ரமம்)

உபாய ஆரம்ப தசையில்

- **பூர்வாகத்தில்** (முன்னமே செய்த பாபம்) **ப்ராப்தம் அல்லாதவற்றையும்,**
- **ப்ராரப்தத்தில்** (பலன் கொடுக்க ஆரம்பித்த) **இருக்க இசைந்த காலத்திற்கு மேல் உள்ள அம்ஶத்தையும்,**
- **உத்தராகத்திலே** (ப்ரபத்திக்கு பின் செய்த பாபம்) **ப்ரமாதிகாம்ஶத்தையும்** (அறியாமல் இழைத்த பாபங்களும்) **இவனோடு துவக்கறுக்கக் கடவன் என்று ஸங்கல்பித்து,**
- **புத்தி பூர்வ உத்தராகத்திற்கும்** (பிரபத்திக்கு பின் அறிந்தே செய்யும் பாவம்) **ப்ராயஶ்சித்தாதிகளாலே செலவு செய்து,**
- **அஶ்லேஷ விநாச விஷயங்களான பாபங்களை எல்லாம்** (ஒட்டாமை, கழிதல் இவற்றிற்கு இலக்கு) **தேஹ வியோக காலத்திலே** (இறக்கும்போது) **இவனோடு துவக்கறுத்து,**
- **இவை எல்லாம் அநுகூலர், ப்ரதிகூலர் பக்கலிலே ஸங்க்ரமிக்கின்றன** (சேருகின்றன) **என்னும்படியாய்**
- **அவர்களுடைய ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களுக்குப் பலமாக இவனுக்குக் கழிகிறதோடு துல்யமான பல ப்ரதாநத்திலே ஸங்கல்பத்தைப் பண்ணி**

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

பிரபன்னன் உயிர் போகும் தருவாயில் அவனது புண்ய பாபக் குவியல்களை எம்பெருமான் ஒழிக்கிறான். அதாவது அந்த ஆத்மாவிற்கு தொடர்பில்லாமல் செய்கிறான் **(The link between the merits/sins and the soul is**

broken only at the time of death). பாவங்களைப் போல் புண்யமும் மோக்ஷத்திற்கு தடையாக இருப்பதால் இரண்டையும் கழிக்கிறான்.

இங்கே கழிதல் என்றால் என்ன? பலனைக் கொடுக்காமல் கிடப்பது.
அப்படி என்றால் அந்த குவியல்கள் எங்கே போய்ச் சேரும்? என்றால், பிரபன்னன் துவக்கு அறுக்கும் புண்யங்கள் அவன் நண்பர்களிடமும், பாவங்கள் அவன் எதிரிகளிடமும் போய்ச் சேரும். இப்படி இரு தரத்தாரும் பங்கீட்டு கொள்வது பிரபன்னின் நண்பனாகவும், விரோதியாகவும் இருப்பதன் விளைவே.

கவனிக்க வேண்டிய முக்யமான கருத்து. உதாரணமாய் ஒருவன் பிரபத்திக்கு முன் சொர்க்கம் போக வேண்டும் என்று புண்யம் செய்து சேர்த்து வைத்திருக்கிறான். அவன் இறக்கும் தருவாயில், அந்த புண்யம் அவனுடைய நண்பன், இன்னொரு பிரபன்னாய் இருந்தால், அவனிடம் போய்ச் சேராது. ஏன் என்றால் அந்த புண்யங்கள் மோக்ஷத்திற்கு தடைதானே.

9.9 உடல் – உயிர் பிரிகை

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரத்தில் அருளியது

உத்க்ராந்தி பாதத்திலும் (ஸ்ரீபாஷ்யத்தில் 4ம் அத்யாயம் 2ம் பாதம், ஜீவன் உடலிருந்து வெளியே போகும் முறை)

[ஸ்தூலமான உடல் இங்கேயே விழுகிறது. அக்நி முதலான தேவர்கள் தரும் பூஜைகளை பெறுவதற்கு பிரபன்னனுக்கு, எம்பெருமான் ஸூக்ஷ்ம சரீரம் தருகிறான்.]

அர்ச்சிராதி பாதத்திலும் (அக்நி, ஆதிவாஹிகர் மூலமாய் வைகுண்டம் செல்லும் வழி 4ம் அத்யாயம் 3ம் பாதம்) **சொன்ன கட்டளையிலே**

[இந்த ஸூக்ஷ்ம சரீரம் ஆதிவாஹிகர்களுடன் அக்நி நடத்தி செல்லும் அர்ச்சிராதி மார்க்கம் வழியாய் விரஜா நதியை அடைகிறான்.]

ஸ்த்தூல ஸூக்ஷ்ம ப்ரக்ருதி விஶ்லேஷத்தைப் பண்ணி (ஸ்த்தூல உடல், ஸூக்ஷ்ம உடல் இவற்றிலிருந்து பிரித்தல்)

[விரஜா நதிக்கு அருகே இந்த ஸூக்ஷ்ம சரீரத்தையும் விட்டு, விடுகிறான்.]

ஸர்வ திரோதாந நிவ்ருத்தியை (ப்ரகிருதியால் மறைக்கப் பட்ட அனைத்தும் ஒழிவது) **உண்டாக்கும்.**

[இப்படி எல்லாத் தடைகளையும் நீக்கி, மறைக்கின்ற எல்லாத் திரைகளையும் விலக்குகிறான், பகவான்.] பின் பிரபன்னன் ஸங்கல்ப ஞானத்தாலே விரஜா நதியை கடக்கிறான்.

9.10 கர்மங்கள் போனால் ஆனந்தம் தானே

இப்படி ப்ரதிபந்த நிவ்ருத்தியைச் (உடல், கர்மா போன்ற தடைகள்) **சொல்லவே** மாமேவவைஷ்யஸி (பகவத் கீதை 18-65) **என்று கீழ்ச் சொன்ன ஸ்வரூப ப்ராப்தாநுபவமும்** (தனக்கே உரிமையான அநுபவம்) **இங்கே பலிக்கிறது.**

[இப்படி மோக்ஷானந்ததிற்கு தடையான வினைகளை எல்லாம் பகவான் ஒழிப்பதால், சேதனனின் இயற்கை ஸ்வரூபமான பரிபூர்ண பகவத் அநுபவம் என்பது, தானே வந்து விடுகிறது]

இவ் ஈஶ்வர அபிப்ராயத்தை ஶ்லோக த்வயத்திலும் (வராக சர ஶ்லோகத்திலும்) **கண்டு கொள்வது.**

[இப்படிப் பட்ட பரமானந்தத்தை பகவான் கொடுப்பதாக வராக சரம ஸ்லோகத்திலும் சொல்லி உள்ளார்.]

> **இத்தை அறிந்தவன்** வீடு பெற்ற (திருவாய்மொழி 10-10-11)
> **இத்யாதிகளிற்படியே யதா மநோரதம்** (தன் ஆசைப்படி) **பல**
> **ஸித்தியில் நிஸ்ஸம்ஶயனாய்** (சந்தேகம் எதுவும் இல்லாதவன்)
> **இருக்கும்.**
>
> ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

[இவற்றை அறிந்த பிரபன்னன் தன் இஷ்டப்படி மோக்ஷம் பெறுவதிலும் துளிக்கூட சந்தேகம் இன்றி கவலையற்று வாழ்வான்.]

9.11 வராக சரம ஶ்லோகம்

> ஸ்தி$_2$தே மநஸி ஸுஸ்வஸ்தே$_2$ ஶரீரே ஸதி யோ நர: ।
> த$_4$துஸாம்யே ஸ்தி$_2$தே ஸ்மர்த்தா விச்வரூபம் ச மாமஜம் ।।
> ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட$_2$ பாஷாண ஸந்நிப$_4$ம் ।
> அஹம் ஸ்மராமி மத்$_3$ப$_4$க்தம் நயாமி பரமாம் க$_3$திம் ।।
>
> வராஹ சரம ஶ்லோகம்

- (யோ நர: மநஸி ஸ்தி$_2$தே ஶரீரே ஸுஸ்வஸ்தே$_2$) = எந்த மனிதன், மனக் கலக்கம் இல்லாது நிலையாய், உடல் நோய் இல்லாமல் சுகமாக
- (த$_4$துஸாம்யே ஸ்தி$_2$தே ஸதி) கபம், வாதம், பித்த தாதுக்களும் சரிவர இருக்கையில்
- (விச்வரூபம் ச அஜம் மாம் ஸ்மர்த்தா) உலகத்தை உடலாகவும், மாறுதல் இல்லாத என்னை நினைக்கிறானோ
- (தத: காஷ்ட$_2$ பாஷாண ஸந்நிப$_4$ம் ம்ரியமாணம்) = பின் ஒரு காலத்தில், கட்டை, கல் போன்று சாகாமல் கிடக்கும்போது
- (தம் மத்$_3$ப$_4$க்தம் அஹம் ஸ்மராமி) = அந்த என் பக்தனை நான் நினைக்கிறேன்
- (பரமாம் க$_3$திம் நயாமி) = உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கிறேன்

9.12 முடிவுரை

இப்படி சேதனன் எம்பெருமானை இதுகாலமும் அடைய முடியாதபடித் தடை செய்து வந்த புண்ய பாவங்களைக் காட்டிப் பின் தான் அவற்றைப் போக்கும் வழியைக் கண்ணன் அருளுகிறான்.

பாபம் செய்தவர்களைத் தண்டிப்பேன் என்ற எம்பெருமானது சீற்றம், சேதனன் செய்த பிரபத்தியால் தணிந்தது. அவன் நிக்ரஹ ஸங்கல்பத்தை விடுகிறான். அவனால் விட முடியாத ஸங்கல்பம் ஒன்று உண்டு. அது தன்னை சரண் என்று அடைந்தவர்களை காப்பதுதான். சரணம் அடைந்தவர்களை காப்பதை தன் விரதமாக கொண்டுள்ளான்.

10 - மாஶுச:

அமிழ்ந்து ஆழ்கடலில் அறிவில்லா
அடிமை * இணையடிகள் அடைய *
நெகிழ்ந்து பிறவி வேண்டாவென *
பொருந்தி பிரியா உறவுகாட்டி *
வினைதிருத்தி தகவால் காத்து *
திண்மதியுடன் துய்யநிலை ஏற்றி *
எமை வருத்தி வாடும் சோகம்
தவிர்த்து * வாழ்விப்பாய் வள்ளலே

ஆழ்கடலில்	= ஸம்ஸாரம் என்னும் ஆழமான கடலில்
அமிழ்ந்து	= அமிழ்ந்து தத்தளிக்கும்
அறிவில்லா	= ஞானமில்லாத
அடிமை	= சேதனன் நான்
இணையடிகள் அடைய	= உம்முடைய இரண்டு திருவடிகளையும்
நெகிழ்ந்து	= சந்தோஷத்துடன்
பிறவி வேண்டாவென	= மறு பிறவி வேண்டாம் என்று அடைவதற்கு
பொருந்தி	= அழகாக அறிவுறுத்தி
பிரியா உறவுகாட்டி	= நமக்கு உள்ள உறவைக் காட்டி
வினைதிருத்தி	= என் பாபங்களை நீக்கி
தகவால் காத்து	= கருணையால் என்னைக் காத்து
திண்மதியுடன்	= மஹா விசுவாசத்துடன் இருக்கும் எனக்கு
துய்யநிலை ஏற்றி	= உயர்ந்த கதியைக் கொடுத்து
எமை வருத்தி	= என்னை வாட்டி
வாடும் சோகம்	= வதைக்கும் துக்கங்கள்
தவிர்த்து	= எல்லாவற்றையும் போக்கி
வாழ்விப்பாய்	= உயர்ந்த வாழ்க்கையை அளிக்கிறாயே
வள்ளலே	= வாரி வழங்கும் வள்ளலே!
	உன்னை எப்படி புகழ்வேன்?

10.1 முன்னுரை

மாஶுச: என்றால் சோகிக்காதே, துக்கப்படாதே என்று பொருள்.

உனக்கு இத்தனை காலமாக ஏற்பட்ட அநிஷ்டங்களை (துக்கங்களை) எல்லாம் நான் கழிக்கிறேன் என்று கீழே சொன்னதால், அவற்றைப் பற்றி உனக்கு கவலை வேண்டாம் என்பதை உறுதி படுத்துவது இந்த பதம்.

10.2 பாசுரத்தின் சுருக்கமான அர்த்தம்

சரம ஶ்லோகத்தில் மிகவும் உயர்ந்த பதம் **மாஶுச:**. இது பல அர்த்தங்களை கொண்டு ஸாரமாக (essence) இருப்பது. நம் ஆசாரியர்கள் இதை தங்களுடைய கடைசி காலத்தில், தகுந்த சிஷ்யர்களுக்கு ரகசியமாக உபதேசிப்பார்கள். சேதனன் பலவகையால் துக்கம் அடைகிறான். அவை அனத்தும் விட்டுவிடு என்பதே **மாஶுச:** பொருள்.

ஸம்ஸாரம் என்னும் துக்கக் கடலில், ஞானம் இல்லாத நான் அகப்பட்டு அமிழ்ந்து தத்தளிக்கும்போது உம்முடைய திருவடியை பற்றினேன். நான் செய்த ப்ரபத்தியால் நீ மகிழ்ந்து உள்ளம் நெகிழ்ந்து நமக்கு இடையே உள்ள உறவை காட்டி இது அநாதியானது. யாராலும் பிரிக்கமுடியாது என்று உணர்த்தி மறு பிறவி உனக்கு இல்லை என்று எம்மை மீட்டாய்.

என்னுடைய கர்ம வினைகளிலிருந்து விடுவித்து, என்னை காத்து எனக்கு ஸ்திரமான புத்தி கொடுத்து உறுதியுடன் நான் உன்னைப் பற்ற, நீ என்னை உயர்ந்த நிலையில் ஏற்றி வைத்து, என்னை வருத்தி வாட்டும் சோகங்கள் எல்லாம் நீக்கி நல்வாழ்க்கையை காட்டுகிறாய், வள்ளலே!

10.3 ரஹஸ்ய மத்ருகையில் ஸ்வாமி தேசிகன் விளக்கம்

மாஶுச: என்கிற வாக்யத்திலே

[மாஶுச: வருந்தாமல் இரு.]

உழலை என்பில் பேய்ச்சி முலையூடு அவளை உயிர் உண்டான் கழல்கள் அவையே சரணாகக் கொண்டு செய்த வேள்விய(ர்)ன்

[எம்பெருமான் திருவடிகளையே உபாயமாகவும், பலனாகவும் பற்றி ப்ரபத்தி செய்த சேதனன், எல்லா யாகங்களையும் செய்த பலனைப் பெறுகிறான்.]

"திருமால் தலைக் கொண்ட (சரணமாகக் கொண்ட) **நங்கட்கு எங்கே வரும் தீவினையே",**

[பகவானை அனுபவிப்பதிலே கருத்தாய் உள்ள பிரபன்னன், இனிமேல் என்ன தீமை வரும் என்ற உறுதியுடன் இருப்பான்.]

கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே" என்று தெளிவுற்ற சிந்தையாலே தேறி,

[எம்பெருமான் அவனுடைய திருவடிகளை தன் தலையில் வைத்ததைக் கண்டு, நினைத்து, மகிழ்ந்து, தெளிவான ஞானத்துடன் இருப்பான்.]

யாவச்சரீரபாதம் அஜ்ஞாநுபாலநத்தாலே

இந்த ஆயுள் முடியும் வரை பகவான் ஆணையான சாஸ்திரத்தை தழுவிய வாழ்க்கை நடத்துவான்.

அக்நி இந்திராதி ஶப்தங்களை ப்ரயோகிக்கும் ஆளவிலும் அந்ய தேவதா பிஸந்தியற்ற

கர்மங்களை செய்யும்போது இந்திரன், அக்நி போன்ற தேவதைகள் பெயர் சொல்ல வந்தாலும், ஒருப் பொழுதும் அது அவர்கள் உத்தேச்யர் என்று

நினைக்க மாட்டான். அந்த மந்திரங்கள் எல்லாம் பகவானனை நேராகவோ, இல்லை அந்தர்யாமியாகவோ கூறுகிறது என்ற உண்மையை அறிந்தவன்

ஸ்வயம் ப்ரயோஜந கைங்கர்ய ரஸத்தாலே க்ருதார்த்தனாய் (இங்கேயே பலன் அடைந்தவனாய்) **இருக்கும்படியும் ப்ரதாநமாக அநுஸந்தேயம்.**

தன் செயல்கள் எல்லாம் எம்பெருமானை மகிழ்விக்கும் கைங்கர்யமே என்று உணர்ந்து அவற்றையே பலனாக எண்ணி கவலையற்று, மகிழ்ச்சியுடன் வாழ்வான்.

இந்த நிலை பெறுவதையே "வருந்தாமல் இரு" என்ற சொல் விளக்கும்.

10.4 ரஹஸ்யத்ரய சுளகத்தில் ஸ்வாமி தேசிகன் விளக்கம்

ஆகையால் மாஶுச: என்கிற வாக்யத்தாலே
இனி உனக்கு ஶோகிக்க ப்ராப்தி (தேவை) **இல்லை என்கிறான்.**

[வருந்தாதே. உனக்கு பரிபூர்ண ப்ரம்மாநுபவம் கிடைக்கப் போகிறது. அப்படியிருக்க நீ வருத்தப்படுவதற்கு காரணமே இல்லை]

முன்பு ஶோகித்த இடம் அதிகாரத்தோடே கூடி குணம் ஆயிற்று.

[ப்ரபத்திக்கு முன் என்னிடம் கைம்முதல் ஒன்றும் இல்லையே என்று பயந்து, வருந்தினாய். அதுவே உனக்கு தகுதியானது]

மேல் ஹர்ஷ ஸ்தாநத்தில் (ஆனந்தமான இடத்தில்) **ஶோகிக்கில் அநபிஜ்ஞ க்ருத்யமாம்** (அறிவில்லாதவன் செயல்).

[ப்ரபத்திக்கு பின் ஆனந்தமாய் இருப்பதை தவிர்த்து சோகித்தால் அது முட்டாள்தனம்.]

10.5 ஸார ஸாரத்தில் ஸ்வாமி தேசிகன் விளக்கம்

இப்படி ப்ரபந்நனுக்கு ஸர்வ பாபங்களும் கழிகையாலே

1. **பாபத்திற்கு அஞ்சித் தபிக்க வேண்டா" என்கிற ஶ்ருதியின்படியாலும்**
   [பிரபன்னன் பாவத்தின் பலனுக்கு பயந்து வருந்த வேண்டாம் என்கிறது வேதம்]

2. **துஷ்கர** (அனுஷ்டிக்க கஷ்டமான) **உபாயங்களில் அலைய வேண்டாமையாலும்,**
   [பக்தி யோகம் போன்ற கடினமான உபாயங்களில் ஈடு பட வேண்டாம்]

3. **விலக்ஷண உபாய விஶேஷம் ஸித்திக்கையாலும்**
   [சுலபமாய், வேறு துணை நாடாது, விரும்பிய பலன் எல்லாம் தர வல்ல உயர்ந்த பிரபத்தி உனக்கு நிறைவேறி விட்டது]

4. **ந்யஸ்த பரனுக்கு** (பரந்யாஸம் செய்தவன்) **இவ்விஷயத்தில் கர்த்தவ்யஶேஷம்** (செய்ய வேண்டிய மீதி காரியம்) **இல்லாமையாலும்**
   [என்னிடம் பர ஸமர்ப்பணம் செய்த பிரபன்னான நீ, மோக்ஷத்திற்காக மீதி செய்ய வேண்டிய காரியம் எதுவும் இல்லை]

5. **பின்பு விவேகிக்குப் புத்தி பூர்வ அபராதம்** (தெரிந்தே செய்யும் பாபம்) **வராமையாலும்**
   [தெளிந்த அறிவு பெற்று ப்ரபத்தி செய்த நீ, இனித் தெரிந்து பாபம் செய்ய மாட்டாய்]

6. **வந்தவற்றுக்கு உசித ப்ரயாஶ்சித்தாதிகளாலே கடுக உபஶாந்தி** (நீங்குதல்) **உண்டாகையாலும்,**
   [அப்படி தெரிந்தே பாபம் செய்யும்படி நேர்ந்தாலும், தகுந்த

ப்ராயச்சித்தங்களால் விரைவில் அவை ஒழியும்]

7. **உன்னை ரக்ஷியாதபோது ஶிஷ்டகர்ஹையும்** (பெரியவர்களின் நிந்தை) **அகீர்த்தியும் குணஹாநியும் வ்ரதபங்கமும் எனக்கு வரும்படியாய் இருக்கையாலும்** [ப்ரபத்தி செய்த உன்னை காக்கவிட்டால் எனக்கு பெரியவர்களின் திட்டும், உலகத்தார் பழிப்பும், என்னுடைய நற்குணங்களின் அழிவும் வரும். காப்பேன் என்று நான் பூண்ட விரதமும் முறியும்]

8. **ஸ்வீக்ருதபரனான** (பொறுப்பை ஏற்றுக் கொண்ட) **நான் தநாதி ரக்ஷணந்யாயத்தாலே** (ஐச்வர்யம் இவற்றை காத்தல்) **ஸ்வார்த்தமாக** (தன் பலனுக்காவே) **ரக்ஷிக்க நிற்கையாலும்,**
[உன் பரத்தை ஏற்றுக் கொண்ட நான், உலகில் மற்றவர்கள் தங்கள் வீடு, வாசல், பணம் இவற்றை காப்பது போல் என் பயனுக்காகவே உன்னை காத்து நிற்கிறேன்]

9. **[இனி உனக்கு ஹர்ஷஸ்தாநமாய்** (ஆனந்தம் அடையும் இடமாய்) **இருக்க ஶோகிக்கை ப்ராப்தி இல்லை என்கிறான்.**
[இத்தனையாலும் மகிழ வேண்டி இருக்க, பிரபன்னனான நீ வருத்தம் கொள்ள இடமே இல்லை]

10.6 ப்ரபத்திக்கு முன் சோகம் ப்ரபத்திக்கு பின் சோகியாமை

பரந்யாஸம் பண்ணினனாக நினைத்த விஷயத்தில் ஶோகிக்கை அநாதி காலமாய் ஶோகியாது இருந்ததோடு ஒக்கும்.

[ப்ரபன்னன், ப்ரபத்திக்கு முன் அநாதி காலமாய் தன் நிலையை எண்ணி சோகிக்காவிட்டால் அது தவறு. ஏன் என்றால் அந்த சோகமே அவனது கார்பண்யத்தை காட்டுக் குணம். ப்ரபத்திக்கு பின் வருத்தப்படக் கூடாது. அப்படி வருத்தப்பட்டால், ப்ரபத்திக்கு முன் சோகிக்காதது எப்படி தவறோ அது மாதிரி இதுவும்.]

முன்பு ஶோகித்தாயில்லையாகில் இவ்வுபாயத்தின் ப்ரபாவத்தையும் உன்னுடயை விச்வாஸாதிகளையும் என்னுடைய குணாதிகளையும் அழித்தாயாமத்தனை.

[இங்கே வருத்தப்பட்டால், ப்ரபத்தியின் பெருமையும், அதில் பிரபன்னனுக்கு உள்ள நம்பிக்கை முதலியவையும், என் திருக்கல்யாண குணங்களையும் அழித்தவனாவாய் என்கிறான் கண்ணன்].

10.7 சரம சுருக்கில் ஸ்வாமி தேசிகன் விளக்கம்

**அறிவும் அனைத்தும் இலா அடியோமை * அடைக்கலம் கொண்டு *
உறவென நின்ற எல்லாம் * உறவே நின்ற தான் எமக்காய் /
மறு பிறவித் துயர் வாரா வகை * மனம் கொண்டு அகலா *
இறையவன் இன்னருளால் * எங்கள் சோகம் தவிர்ந்தனனே**
ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோகச்சுருக்கு 11

- **(மனம் கொண்டு அகலா இறையவன்)** = எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமான எம்பெருமான், நம் மனதை இருப்பிடமாகக் கொண்டு அதை விட்டு நீங்காது
- **(அறிவும் அனைத்தும் இலா அடியோமை அடைக்கலம் கொண்டு)** = ஜ்நாநமும் வேறு உபாயம் இல்லாத அடியவர்களாகிய எங்களை காக்க வேண்டிய வஸ்துவாய்
- **(உறவென நின்ற எல்லாம் உறவே நின்ற தான்)** = எல்லா உறவும் உடையனாய் தன்னிடத்தில் பொருந்தி இருக்கும் பகவான்
- **(எமக்காய் இன்னருளால்)** = எங்களை உஜ்ஜீவிக்க வேண்டி தன் இனிமையான க்ருபையால்
- **(மறு பிறவித் துயர் வாரா வகை எங்கள் சோகம் தவிர்ந்தனனே)** = ஸம்ஸார பந்தம் வராதபடி எங்கள் சோகத்தை போக்கினான்.

10.8 சோகங்கள்

சரம ஶ்லோகத்தில் கடைசி பதம் மாஶுச:. இதில் கண்ணன் சோகிக்காதே என்கிறான். சோகங்கள் எதனால் வரும்? அது வருவதற்கு உள்ள காரணங்கள் எல்லாம் சொல்லி, அனைத்திற்கும் தகுந்த மறுப்புகளை சொல்லி மோக்ஷம் நிச்சயம் என உறுதிப் படுத்துகிறார்.

(1). பக்தி யோகம் அனுஷ்டிக்க முடியாமை கண்டு சோகம்.

பக்தி யோகம் கடினமானது. தடைகள் பல. அது செய்து முடிக்க நமக்கு சக்தி இல்லை. பலனோ காலம் கடந்து வரும். அதைக்கண்டு சோகிக்க வேண்டாம்.

எல்லோர்க்கும் எளிதான ஏற்றத்தாலும் என்று தேசிகன் பாசுரத்தின்படி எல்லோரும் ப்ரபத்தியை செய்யலாம் ஒரே முறை, க்ஷண காலத்தில், எளிதாய். கஷ்டமான அங்கங்கள் இல்லாமல் செய்யக் கூடியது ப்ரபத்தி. இது விரும்பிய காலத்தில் பலனை கொடுக்கக் கூடியது. அதனால் சோகிக்காதே.

Remember prapatti is as simple as **AEIOU**

- **A** - All the rewards
  - எல்லா பலன்களையும் தரக் கூடியது.
- **E** - Easy to implement
  - ஆனால் ப்ரபத்தியோ மிகவும் சுலபமானது.
  - ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒன்றையும் வேண்டாது
- **I** - Immediate results
  - ஆசாரியன் அருளால் ஒரு க்ஷணத்தில் நிறைவேறக் கூடியது.
- **O** - Only once needs to be done
  - ஒரு தடவை செய்தாலே போதும்.
- **U** எ Universal application
  - ஜாதி வரம்பு கிடையாது

சோம்பேறிகளும் ப்ரபத்தி செய்து பலனை பெற முடியும்.

(2) ப்ரபத்தி செய்ய நமக்கு தகுதி உண்டா? என சந்தேகம்

ப்ரபத்தி செய்ய நாம் அருகதையானவனா? என சோகிக்க வேண்டாம்.

இதில் எல்லோருக்கும் அதிகாரம். மற்ற யோகங்களில் தகுதி இல்லாமையே இதற்கு தகுதி. மோக்ஷத்தில் இச்சை, பகவானிடத்தில் நம்பிக்கை, ஆகிஞ்சன்யம், அநந்யகதிவம் இவையே தகுதிகள். இவை இருந்தால் போதும். ஜாதி, ஆண்/பெண் பால், ஆஸ்ரம வரை முறை போன்றவை கிடையாது.

TICE

Time (patience)

Intelligence (gnaanam)

Caste (gender and caste restrictions)

Energy (sakthi)

(If someone has qualified in all four, they need to go to Bhakthi yoga. Lack in any one of these four (rest of the fiteen combinations) is necessary and sufficient eligibility criterion for prapatti).

(3) பகவான் ஸ்வாதந்த்ர்யம் கண்டு பயம்

ஸித்தோபாயமான பகவான் நம் ப்ரபத்தியை ஏற்றுக் கொண்டு பலன் தருவானா? அல்லது கொடுக்க மாட்டானா? என சோகிக்க வேண்டாம்.

அல்பமான காரியம் ப்ரபத்தி. அதற்கு வசப்பட்டு பலன் கொடுக்கும் பகவான் ஸர்வ ஸ்வாமி, ஆனால் எளியவன். நம்பக்கூடியவன். கருணையானவன். தடையில்லாமல் சுதந்திரமாய் நிற்கும் அவன் ஸித்தோபாயமாக உள்ளான். அவனை நம்ப வேண்டும். அவன் பலன் அளிப்பது நிச்சயம்.

பகவானின் ஸ்வாதந்த்ர்யம் கண்டு பயப்படாதே. ப்ரபத்தி செய்தாகி விட்டது. காக்கும் பொறுப்பு பகவானுடையது. ஸர்வ ஸ்வதந்திரானன பகவான் கை விட்டால் அவனுக்கே தீங்கு வரும் என நினைப்பவன். தவிர, சேதனர்களை ரக்ஷிப்பது என்பது தன்னுடைய பொறுப்பாக நினைப்பவன். அதில் குறை வந்தால் தன் குறையாக நினைப்பவன்.

இப்படி ரக்ஷித்து மோக்ஷம் ஏற்றுவதை தன் பலனாக எண்ணுபவன். இதில் சந்தேகமே வேண்டாம். பகவான் தர மாட்டானோ என சோகிக்காதே! எனவே பகவான் ஒரு போதும் கை விட மாட்டான்.

(4) ப்ரபத்திக்கு பின் நித்ய நைமித்ய கர்மாக்களில் குறை ஏற்பட்டால் ப்ரபத்தியின் பலன் போய்விடுமோ என்ற சோகம்.

பிரபன்னன் உயிர் நாள் வரை செய்ய வேண்டிய நித்ய நைமித்ய கர்மாக்களில் கால தேசஸாதிகளால் ஏதேனும் குறை ஏற்பட்டால் அதனால் ப்ரபத்தியின் அங்கங்களில் குறை வருமோ ? என்ற சோகம்.

ப்ரபத்திக்கு பின் செய்பவை எல்லாம் பகவத் ப்ரீதிக்காக செய்வது. அவை எல்லாம் பலன். மோக்ஷ உபாயம் இல்லை. ஆனால் பக்தி யோகத்தில் நித்யானுஷ்டானம் போன்றவை அங்கங்கள் ஆகும். இங்கே ப்ரபத்திக்கு அங்கங்கள் இல்லை ஆனதால் சோகிக்க வேண்டாம்.

Remember prapatti is a process (angi) done with five limbs (anga). Nothing else is required.

HELP ME

H - Make Bhagavan **H**appy

E - **E**normous Faith

L - **L**ament about inability

P - **P**rotection prayer

M - Don't make bhagavan **M**ad

E - **E**goless surrender

(5) ப்ரபத்திக்கு பின் தெரிந்தே செய்யும் பாவங்களால் மோக்ஷ பலன் போய்விடுமோ என்ற சோகம்

ப்ரபன்னன், இந்த உலகில் பாவமே செய்யாமல் வாழ்வது என்பது கடினமானது. ஏதோ சில பாவங்கள் தெரிந்தே செய்து விட்டால், அதனால் மோக்ஷ பலன் போய் விடுமோ என்ற சோகம்.

ப்ரபன்னன் புத்திபூர்வமாய் மஹா பாவங்கள், பாகவத அபசாரங்கள் செய்ய நேராமால் ப்ரபத்தி செய்யும் காலத்தில் "**நித்யம் நிரபராதே4ஷு கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வ மாம்**" அபராதம் இல்லாத கைங்கர்யம் செய்ய அருள் வேண்டும்" என பிராத்தனை செய்யலாம். அப்படி செய்திருந்தால் இந்த பாவங்களை இவன் செய்ய மாட்டான்.

அப்படி வேண்டாவிடில், பகவான் நல்ல எண்ணம் கொடுத்து திருத்தி, பிராயஸ்சித்த ப்ரபத்தி செய்ய வைக்கிறான். மோக்ஷ பலன் நிச்சயம்.

(6) ப்ரபத்திக்கு பின் தெரிந்தே செய்யும் பாவங்களால் நரகம் வந்து விடுமோ என்ற பயம்

ப்ரபன்னன், ப்ரபத்திக்கு பின் தெரிந்தே பாவக்கள் செய்யும்படி நேர்ந்தால், அதற்கு தண்டனையாக நரகம் வந்து விடுமோ என்ற பயம்.

இவர்களுக்கு பகவான் நல்ல எண்ணம் கொடுத்து திருத்தி, பிராயஸ்சித்த ப்ரபத்தி செய்ய வைக்கிறான்.

அதுவும் செய்யாதாருக்கு ராஜ குமாரனுக்கு கொடுத்த லகு தண்டனை போல கொடுத்தும் அவர்களை சுத்தமாக்கி ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கிறான். மோக்ஷ பலன் நிச்சயம். நரகாதிகள் கிடையாது.

(7) ஆர்த்த பிரபன்னன் தன் சரீரம் மோக்ஷத்திற்கு தடையோ என்ற பயம் - ஆர்த்த பிரபன்னன், துளிக்கூட ஸம்ஸார வாழ்க்கை வேண்டாம் என்று உடனே மோக்ஷ பலன் வேண்டிச் செய்வது. அவன் தன் உடலைக் கண்டு, பாபங்களால் மோக்ஷ பலன் வராதோ என சோகப்பட வேண்டாம்.

உடனே மோக்ஷம் வேண்டும் என்று கேட்கிற ஆர்த்தனுக்கு இந்த சரீரம் பலனுக்கு தடை ஆகாது. உயிர் போய், உடனே மோக்ஷம் ஸித்திக்கும்.

(8) ப்ரபத்திக்கு பின் செய்த தீய செயல்கள் ப்ரபத்தியின் பலனை நசிக்குமா?
சில காரியங்கள் முன் செய்த புண்யங்களையும் நாசமாக்கி விடும். தர்ம காரியங்கள் செய்தபின், அதை விளம்பரம் படுத்துவது (advertisement) தானம் செய்த புண்யத்தை நசித்து விடும் என சாஸ்திரம் சொல்கிறது. அதுபோல் ப்ரபத்தி என்ற காரியம் செய்த பிறகு, ஏதாவது ஒரு தீய காரியம் செய்ய நேர்ந்தால் அத்தால் ப்ரபத்தியின் பலன் நசித்து விடுமா?

நிவ்ருத்தி தர்மங்கள் என்றும் வீணாகாது. அதன் பலனைக் கொடுத்தே தீரும். பகவான் ப்ரபன்னைக் குறித்து விசேஷமாக **"ந த்யஜேயம் கதஞ்சன"** உன்னை ஒரு நாளும் கைவிட மாட்டேன் என்று சொன்ன சொல் பொய்க்காது. மோக்ஷ பலன் நிச்சயம் உண்டு.

புண்ய பாபங்களால் ப்ரபத்தி ஸித்திக்காதோ என்ற பயம் வேண்டாம். த்ருப்த பிரபன்னன் சரீரம் கழியும் வரை பூலோகத்தில் இருக்கும் நாள் பாவங்கள் செய்ய நேரிடும். அவை மோக்ஷத்தை ரத்து செய்யாது. மோஷ பலன் நிச்சயம்.

(9) செய்த பாவங்களால் மறுபிறவி வந்து விடுமோ என்ற பயம்
மறு பிறவி கொடுக்ககூடிய ப்ராரப்த கர்மாக்களால் மறு பிறவி வந்து விடுமோ என்ற சோகம் வரக் கூடும்.

த்ருப்த பிரபன்னன், **"ஏதத்3 தே3ஹாவஸாநே மாம் த்வத்பாத3ம் ப்ராபய ஸ்வயம்"** என்று இந்த சரீரம் கழியும் அளவில் மோக்ஷம் என காலத்தை உத்தேசித்து வேண்டினான். ஆக, எந்த பாவம் ஆயினும் அதைக் கழித்து இன்னொரு பிறவி எடுக்கா வண்ணம், இந்த சரீரம் கழியும் அளவில் பகவான் மோக்ஷத்தை அருளுகிறான். அநப்யுகத ப்ராரப்த கர்மா என ஒத்துக் கொள்ளப்படாத கர்மாக்கள் எல்லாவர்றையும் கழிப்பதால் மறு பிறவியே கிடையாது.

(10) கைவல்யம் பிரபன்னனின் மோக்ஷ ப்ராப்த்தியை தடை செய்யுமா?

இந்த சரீரம் போன பிறகு கைவல்யம் போன்றவைகள் வந்து மோக்ஷ ப்ராப்தியை தடை செய்யுமா என்ற சோகம்.

மோக்ஷ பலனை உத்தேசித்து, மற்ற பலன்களை நாடாத பிரபன்னனுக்கு எல்லாவிதமான தடைகளும் நீங்கும். கைவல்யம் என்று தன்னுடைய ஆத்மாவையே எண்ணி மகிழ்ந்து இருத்தலும் இதில் அடக்கம். அதுவும் பகவத் அனுபவத்திற்கு தடைதானே. ஆகவே தடைகளான ஸகல விதமான பாபங்களலிருந்தும் எம்பெருமான் கழித்து மோக்ஷ ப்ராப்த்தியை அளிக்கிறான்.

ஸர்வ பாவங்களும் கழிந்த பின்னே பர்பூர்ண ப்ரம்மானுபவம் வரும். ஜீவனுக்கு இயற்கையானது ஸ்வத:ப்ராப்தமானது பகவத் அனுபவமே. அது வினைப்பயனால் இங்கே தடை பட்டு இருக்கும். செல்வம் போன்ற அல்பஸுகங்களால் மறைக்கப்பட்டு இருக்கும். அதுபோல கைவல்யமும் பகவத் அனுபவத்திற்கு தடையானது. கைவல்யமும் நித்யம் அல்ல.

[இது அவசியமில்லாத கதை என்பதால் விவரிக்கவில்லை]

10.9 முடிவுரை

சரம ஶ்லோகத்தில் கடைசி பதம் மாஶுச:. பகவான் கண்ணன் ஏற்கனவே இரண்டு பகுதியில், எல்லா உபாயங்களையும் விட்டு என்னை ஒருவனையே

சரணாக பற்று என்றும், உன்னை ஸகல பாவங்களிலிருந்தும் மீட்டி மோக்ஷத்தை அளிப்பதாக கூறினான். அதன் பிறகு, கடைசியாக, பிரபன்னனை ஆநந்தமாக இருக்கும்படியும், வருத்தப்படுவதற்கு ஒரு காரணமும் இல்லை என்று உறுதிப்படுத்துகிறான்.

11- பலன்

பக்திக்கு உறுப்பாம் கருமமும்
ஞானமும் * முதலிலவை சொல்லி *
சக்தியிலா மாந்தருக்கு உயர்த்தி
ப்ரபத்தியென * மற்ற களை தள்ளி *
**தீயினில் தூசாய் மாசு நீக்கி *
வேண்டும் அன்றே வான் அளிக்கும் ***
மறை ஈந்த சீ மாதவன் தாளே
சரண் * என்றே மனம் களிக்கும்.

பக்திக்கு உறுப்பாம்	= பக்தியோகத்திற்கு அங்கம் எனப்படும்
கருமமும் ஞானமும்	= கர்ம யோகத்தையும் ஞான யோகத்தையும்
முதலில் சொல்லி	= முதலில் விவரித்து
சக்தியிலா மாந்தருக்கு	= அகிஞ்சனான சேதனர்களுக்கு
உயர்த்தி ப்ரபத்தி என	= உயர்ந்த யோகம் ப்ரபத்தி ஒன்றே என்று சொல்லி
மற்ற களை தள்ளி	= மற்றைய உபாயங்கள் என்ற களைகளை பிடுங்கி
தீயில் தூசாய்	= நெருப்பில் விழுந்த தூசுகளைப் போல்
மாசு நீக்கி	= பாபங்களை எல்லாம் விலக்கி
வேண்டும் அன்றே	= என்றைக்கு விருப்பமோ அன்றைக்கே
வான் அளிக்கும்	= மோக்ஷத்தை அளிக்கிறேன் என்று கூறி
மறை ஈந்த	= பகவத் கீதை, வேதங்களை எல்லாம் தந்தருளிய
சீ மாதவன்தாளே	= ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளே
சரண்	= சரணாகதி
என்றே களிக்கும்	= என்றே மனம் மகிழும்

11.1 முன்னுரை

ப்ரபத்தி என்னும் சரணாகதியைப் பற்றி திருமந்திரமும், த்வயமும் சொல்கின்றன. இங்கே சரம ஸ்லோகமும் அதைத்தான் விரிவாக சொல்லுகிறது. ப்ரபத்தி செய்வதற்கு வேண்டிய தகுதியுடன், **"இப்படிச் செய்"** என்று கட்டளை இடுகிறது சரம ஸ்லோகம்.

அர்ஜீனக்கு உபதேசம் செய்வதை ஓர் வியாஜமாகக் கொண்டு, மற்ற உபாயங்களை செய்ய சக்தி இல்லாமல் தவிக்கும் சேதனர்களுக்கு ப்ரபத்தியை போதிக்கிறான் கண்ணன்.

சுருக்கமாக, எல்லாத் தர்மங்களையும் அடியோடு விட்டு ஒழித்து, என்னை ஒருவனையே சரணமாக அடை. நான் உன்னை எல்லாப் பாவக்களிலிருந்தும் விடுவிக்கப் போகிறேன். நீ வருந்தாதே என்பதே இந்த சரம ஸ்லோகத்தின் கருத்து.

11.2 ப்ரபத்தியே எல்லோருக்கும் எளிதானது

பக்தி, ப்ரபத்தி என்கிற இரண்டும்தான் மோக்ஷத்திற்கு உபாயம் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. அவற்றில் பக்தி யோகத்தின் அங்கங்கள் அனுஷ்டிக்க மிகவும் கஷ்டமானது. அதற்கு விசேஷமான ஞானம் அவசியம். நெடுங்காலம் செய்து ஆக வேண்டும். ஆக ஞானம், சக்தி, பொறுமை இல்லாதவர்கள் கதி என்ன? என்றால் ப்ரபத்தி ஒன்றே ஸாத்யமானது.

கண்ணன் அர்ஜீனனுக்கு உபதேசம் செய்யும்போது கடைசியாக ப்ரபத்தியை உபதேசிக்கிறான். இதன் அங்கங்களையும், அங்கியான ப்ரபத்தியையும் அனுஷ்டிப்பது மிகவும் சுலபம். ஒரு முறை செய்தாலே போதுமானது.

முக்யமாக மீதி உபாயங்களை அனுஷ்டிக்க தனக்கு தகுதி இல்லை என்ற வருத்தம், **ஆகிஞ்சன்யத்தால்** வருகின்ற **கார்ப்பண்யமே** ப்ரபத்திக்கு முதல் காரணமாகிறது.

அடுத்ததாக, **அநந்யகதித்வம்** என்பது எம்பெருமான் ஸ்ரீமந் நாரயணனைத் தவிர வேறு புகல் இல்லை. அவனே உபாயம், அவனே பலன் என்று கிடக்கை.

பக்தி யோகம் போன்றவை செய்ய தகுதியில்லாமை, மற்றைய உபாயங்களின் பலனுக்காக காலம் பொறுக்க முடியாமை இவற்றால் தன் உண்மையான நிலையை சேதனன் உணருகிறான். ப்ரபத்தி ஒன்றால்தான் எம்பெருமானை வசீகரிக்க முடியும் என்பதை அறிந்து எம்பெருமானைத் தவிர வேறு கதியில்லை என்பதே அநந்ய கதித்வம்.

11.3 பாசுரத்தின் சுருக்கமான கருத்து

கீதாசாரியன் முத்திக்கு வழி மூன்று என முதலில் கர்ம ஞான பக்தி யோகங்களை விளக்காமாக சொன்னான். இந்த யோகங்களை பின்பற்றுவது (அனுஷ்டிப்பது) மிகவும் கடினம். அதை செய்ய இயலாதவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இவருக்கு உயர்ந்த உபாயம் ப்ரபத்தி. மற்றதைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

ப்ரபத்தி செய்தவர் பாபங்கள், தீயில் விழுந்த தூசிபோல், ஒரு இமைப்பொழுதில் (க்ஷணத்தில்) இருந்த இடம் தெரியாமல் மறைந்து பொசுங்கி விடுகிறது, ப்ரபத்தி செய்யும்போது பகவானிடம் எப்பொழுது மோக்ஷம் வேண்டும் என்பதை விண்ணப்பிக்க அவரும் அப்படியே அருள் செய்கிறார்.

இப்படி இந்த தத்துங்களை உபதேசித்து ப்ரபத்தியை எமக்கு காட்டிக் கொடுத்த பார்த்தனுக்கு சாரதியாய் உலகிற்கே குருவாய் விளங்கும் கிருஷ்ணனே, நீயே சரண் என்று சொல்லி உன் திருவடிகளை அடைந்து மகிழ்ச்சியடைகிறேன்.

11.4 சரம ஸ்லோகத்தின் முழுப் பொருள்

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய சுளகத்தில் சரம ஸ்லோகத்தின் முழுப் பொருளையும் விளக்கி உள்ளார்.

> **உன் அதிகாரத்துக்குப்** (தகுதிக்கு) **பொருந்தாத உபாயாந்தரத்தில்** (பக்தியோகத்தில்) **அலையாதே**

[சேதனனே மோக்ஷம் அடைய, பக்தி போன்ற உபாயங்கள் எல்லாம் செய்ய நீ அருகதை அற்றவன். அதற்கு வேண்டிய காலம், ஞானம், ஜாதி வரையறை, சக்தி (TICE - Time, Intelligence, Caste, Energy) போன்றவை எல்லாம் உன்னிடத்தில் இல்லை. ஆகையால் அவற்றில் அலைந்து ஏன் துன்பப்படுகிறாய்.]

> **அநாலோசித** (வேற்றுமை காணாமல் அனைவரையும் காப்பவன்) **விஶேஷ அஶேஷ லோக ஶரண்யனான என்னையே உபாயமாக அத்யவஸித்து** (மன உறுதியுடன்) **அடைக்கலம் புகுந்த உன்னை**

[நானோ சரணாகதி செய்யும் சேதனனின் ஜாதி, குணம் போன்றவற்றை கவனிப்பது கூட கிடையாது. எல்லோருக்கும் ரக்ஷகன் நான். என்னையே உபாயம் என்று உறுதியாகப் பற்றி, என்னிடம் அடைக்கலம் அடைந்து ப்ரபத்தி செய்து விட்டாய்.]

> **அர்த்தி கல்பனாய்** (விரும்பிய பலனைத்தரும் கல்பக வ்ருக்ஷமாய்) **அப்ரதிஹத** (தடையில்லாத) **ஸங்கல்பனான நான்**

[கேட்டவர்க்கு எது வேண்டுமானாலும் தரும் கற்பக மரம் போல் உள்ளேன் நான். நான் ஸங்கல்பித்ததை யாராலும் தடுக்க முடியாது. ஏன் பிறரை

சொல்லுவானேன், என்னாலேயே அதை தடுக்க முடியாது.]

ஸத்தாநுபந்திகளாய்ப் (ஸ்வரூபத்துடனே தொடர்ந்த) **போந்த ஸர்வ விரோதி வர்க்கத்தினின்றும் விடுவித்து ஸ்வ ஸ்வரூப ஆவிர்பாவத்தை** (மறைந்திருந்த உண்மையான இயற்கை ஸ்வரூபம் வெளிப்படுத்தி) **உண்டாக்கி,**

[உன்னோடு அநாதி காலமாய் ஒட்டிக் கொண்டிருக்கும் பாவக் குவியல் எல்லாவற்றையும் பொசுக்கி, வைகுண்டத்தில் பெறக்கூடிய உன் இயற்கையான ஸ்வரூபத்தை வெளிப்படுத்துவேன்]

மேலாத் தேவருடனே (நித்யர்களுடன்) **கூட்டி, பிரியாது ஆள் செய்ய என்றும் மீளா அடிமை கொள்ளக் கடவேன்.**

[உயர்ந்த நித்யஸூரிகளுடன் உன்னைக் கொண்டு போய் சேர்த்து அவர்களுடன், என்றும் பிரியாமல் எனக்கு பணி செய்ய நியமிப்பேன். இனி ஸம்ஸாரத்தையே தலை எடுத்து பார்க்காத கைங்கர்யத்தை உன்னிடம் பெற்று மகிழ்வேன்.]

நீ இனி ஒன்றுக்கும் சோகியாதே

[நீ எதற்கும் வருந்தாதே!]

11.5 ரஹஸ்ய மாத்ருகையில் தொகுத்த பொருள்

இம்மந்த்ரங்கள் இரண்டிலும் தோற்றுகிற அநுஷ்டாநத்திற்கு விதாயகமான சரம ஸ்லோகத்தில்

ஸர்வ தர்மாந் என்ற பதத்திலே குறிக்கோள் (மிக்க கவனத்துடன்) **ஜ்ஞாநங்களாலே பண்ணும் அருந் தவங்களினுடைய நாநாவித்த்வமும்**

பரித்யஜ்ய என்கிற பதத்திலே போக்கற்றவன் (வேறு கதி இல்லாதவன்) ப்ரஹ்மாஸ்திர துல்யையான ப்ரபத்தியை பண்ணும்போது அநபேஷிதங்களிலும் தனக்கு ஶக்யம் இல்லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக முன்னிடும்படியும்

மாம் என்கிற பதத்திலே மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள் பத்துடை அடியவர்க்கு எளியவனாய் அருள் புரிந்த சிந்தை அடியார் மேல் வைத்து அடைக்கலம் கொள்ள ஒருப்பட்டு நின்ற நிலையும்

ஏகம் என்ற பதத்திலே தாமரையாள் கேள்வன் ஒருவனே பற்றிலார் பற்ற நிற்கிறபடியும்

ஶரணம் என்ற பதத்திலே அசரண்ய சரண்யன் விபரீதா பிஸந்தியற்ற தேவ ப்ரக்ருதிகளுக்கு வன் சரணாய்த் தன் சரண் நிழல்கீழ் வைக்க வகுத்தமையும்

வ்ரஜ என்ற பதத்திலே நெறி எல்லாம் எடுத்து உரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி தந்த ஜ்ஞாநக் கையாலே நின்னிலங்கு பாதம் அன்றி மற்றோர் பதாம் பற்றிலேன் என்று நாம் அவனைப் பற்றலாம் படி தன் பாதமே ஶரணாகத் தந்து ஒழிந்தமையும்

அஹம் என்ற பதத்திலே வல்லைக்காண் என்னும்படியான ஸர்வ சக்தி கொழுஞ்சோதி உயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டி அடிமை கொள்ள ஒருப்பட்டபடியும்

த்வா என்ற பதத்திலே நின்னருளே புரிந்து இருந்தேன் என்று இருக்கிற கருதக்குத்யனை ஆரால் குறைவிடையம் என்னும்படி சாதக வ்ருத்தியாக்கினபடியையும்

ஸர்வ பாபேப்யோ என்ற பதத்திலே நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன் என்றும், நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவம் எல்லாம் என்றும் சொல்லுகிறபடியே

எண்ணாராத் துயர் வினைக்கும் வல்வினை மாளாதோ என்னும்படி எண்ணிறந்து கிடக்கிறபடியும்

மோக்ஷயிஷ்யாமி என்ற பதத்திலே இருள் தருமா ஞாலத்துள் இனிப்பிறவி கழிந்து மருள் ஒழிந்த மட நெஞ்சமுடையார்க்கு வேண்டிற்றெல்லாம் தரும் மணி வண்ணன் விண்ணுலகம் தர விரைந்து, சார்ந்த இரு வல்வினைகளும் சரித்து, மாயப்பற்று அற்று, திர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துகிறபடியும்

மாஶுச: என்ற வாக்யத்திலே உழலை என்பின் பேய்ச்சி முலையூடு அவளை உயிருண்டான் கழல்களவையே சரணாகக் கொண்டு செய்த வேள்விய(ர்)ன், திருமால் தலைக் கொண்ட நங்கட்கு எங்கே வரும் தீவினையே, கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே என்று தெளிந்து சிந்தையாலே தேறி, யாவச்சரீரபாதம் ஆஜ்ஞாநுபலநத்தாலே அக்நி இந்திராதி ஶப்தங்களை ப்ரயோகிக்கும் அளவிலும் அந்யதேவதாபிஸந்தி அற்ற ஸவ்யம்ப்ரயோஜந கைகைங்கர்ய ரஸத்தாலே க்ருதார்த்தனாய் இருக்கும்படியும்

ப்ரதாந அநுஸந்தேயம்.

ஸ்வாமி தேசிகன், ரஹஸ்யமாத்ருகை

11.6 பிள்ளைலோகாசாரியரின் தொகுத்த பொருள்

11.7 சரம ஸ்லோகத்தின் திரண்ட பொருள்

இச்ஶ்லோகத்தின் திரண்ட பொருள் -
மோக்ஷோபாயாந்தரங்களில் அந்வயமற்ற நீ ஶரணாகத வத்ஸலத்வாதி குணவிஶிஷ்டனான என்பக்கலிலே பரந்யாஸத்தைப் பண்ணு, ஸர்வ ஶக்தித்வாதி குணவிஶிஷ்டனான நான் ந்யஸ்தப்ரனான உன்னை ஸமஸ்த ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வக மத்

ப்ராப்தியாலே க்ருதார்த்தனாக்குகிறேன். நீ ஶோகிக்க வேண்டா - என்கை.

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

எம்பெருமான் கிருஷ்ணன், சேதனர்களை பார்த்து சொல்கிறான்.

- சேதனனே உன் ஞானம், சக்தி, எல்லாம் அல்பமானது.
- உன்னுடைய ஆயுளோ மிகவும் சிறியது.
- மோக்ஷத்தை பெற பொறுமை இல்லாது இருக்கிறாய்.
- மற்ற உபாயங்களோ உன்னால் அனுஷ்டிக்க முடியாது.
- அப்படி அனுஷ்டித்தாலும் காலம் கடந்து பலனைத் தருபவை.
- ஆகையால் நிறைவேற்ற முடியாத அந்த உபாயங்களை முற்றும் கைவிடு.
- நான் எல்லோருக்கும் எளிதானவன்.
- நானே ஜகத் காரணகன். ஆக்கல், காத்தல், அழித்தல் எல்லாவற்றையும் நான் ஒருவனே தனித்து செய்கிறேன்.
- நான் ஸகல விதமான கல்யாண குணங்களை உடையவன்.
- உன்னை காப்பதற்கு வேண்டிய சக்தி உடையவன் நான் ஒருவனே
- என்னிடம் நீ ஆறு அங்கங்களை உடைய பரந்யாஸத்தை செய்
- அதன் பிறகு நீ க்ருத க்ருத்யனாவாய்
- நான் உன்னை காப்பேன். எனக்கு பிரியமானவாய் நீ இருப்பாய்.
- உன்மேல் என் கருணை அபாரமானது.
- உனக்கு அருள் செய்ய நான் முற்படுகிறேன்.
- நான் ஒருவனே ஸ்வதந்திரன்.
- என் ஸங்கல்பத்தை யாராலும் தடுக்க முடியாது.
- மோக்ஷத்தை அளிக்கும் தகுதி என் ஒருவனிடமே உள்ளது.
- உன்னுடைய பாபங்கள் எல்லாம் விலக்கி நேரத்தில் மோக்ஷத்தை அளிப்பேன்.
- ப்ரபத்தி செய்த நீ இனிமேல் மோக்ஷத்திற்காக எந்த உபாயமும் அனுஷ்டிக்க வேண்டியது இல்லை.
- பிரபன்னான நீ ப்ரபத்திக்குபின் பாவங்கள் செய்ய நேர்ந்தாலும், அவை மோக்ஷத்திற்கு தடையாகாது.

- உனக்கு மோக்ஷ ப்ராப்தி நிச்சயம்.
- என்னிடமும் நான் அளிக்கும் மோக்ஷத்திலும் ஆசையுடனும், மஹாவிச்வாசத்துடனும் இரு.
- இனிமேல் சோகிக்காதே.

11.8 ஶ்ரீமத் கீதாபாஷ்யமும் கத்யம்

இதில் சொன்ன உபாயம் ஸர்வ அநிஷ்டங்களையும் (எல்லா விரோதிகளையும்) **கழிக்கவற்றாகையாலே உபாய விரோதியை கழிக்கும்படியை** (பக்தியாகிய உபாயத்திற்கு தடை) **ஶ்ரீமத் கீதாபாஷ்யத்திலும், ப்ராப்தி விரோதியைக் கழிக்கும்படியை** (எம்பெருமானை அடையும் பலனில் தடை) **கத்யத்திலும் உதாஹரித்து அருளினார். ஆகையால் இரண்டுக்கும் விரோதம் இல்லை.**

ஸ்வாமி தேசிகன், ஸார ஸாரம்

இங்கே ஒரு சந்தேகம் வரக் கூடும்.

எம்பெருமானார் ஶ்ரீமத் கீதாபாஷ்யத்தில் சரம ஶ்லோகத்திற்கு வியாக்யானம் செய்துள்ளார். ப்ரபத்தியை அங்கே பக்தி யோகத்தின் அங்கமாக சொல்லி உள்ளார். ஆனால், இங்கே (ஸ்வாமி தேசிகன்) விளக்கும்போது ப்ரபத்தியை மோக்ஷத்திற்கு நேர் சாதனமாக சொல்லப்பட்டது எம்பெருமானாரின் திருவுள்ளத்திலிருந்து வேறுபடுவதாக தோன்றுகிறதே?

ஸமாதானம் - பக்தி யோகம் மிகவும் கடினமானது. அதில் எந்த அங்கங்களை செய்ய முடியவில்லையோ, அங்கே ப்ரபத்தியை அங்கமாக செய்யலாம். அப்பொழுது, ப்ரபத்தி அந்த அங்கங்களின் ஸ்தானத்தில் இருந்து, பக்தி யோகத்தை பூர்ணமாக தலை கட்டித் தரும். அந்த ப்ரபத்தி, பக்தி யோகத்தினுள் அங்கமாக செய்யும் **அங்க ப்ரபத்தி** எனப்படும்.

கத்யத்தில், ப்ரபத்தியை நேர் உபாயமாக ப்ரபத்தியை ஸாதித்து உள்ளார். இது மோக்ஷத்திற்கு தடையான கர்மாக்களை ஒழித்து எம்பெருமானை வசீகரித்து, மோஷத்தை தரக்கூடிய நேர் ஸாதனம். இது **ஸ்வதந்த்ர ப்ரபத்தி.**

இரண்டிலும் முரண்பாடு இல்லை.

11.9 எம்பெருமானின் கருணை

பகவான் கண்ணன், அர்ஜீனனை சாக்காக கொண்டு அவன் கேள்விக்கு விடை அளிப்பதன் மூலம் உலகத்திற்கு எல்லாம் உபதேசிக்கிறான்.

ஶரணம் ச ப்ரபந்நாநாம் இத்யாதி ஸாமாந்ய வாக்யத்தாலும்

[சரணமாக இருப்பேன் ப்ரபத்தி செய்பவர்களுக்கு என்றது விஷ்ணு தர்மம் 106-53. பொதுவாக, பக்தி யோகம் செய்ய தகுதி இல்லாதவர்கள் எம்பெருமானையே சரணமாக பற்றி ஸம்ஸாரத்தை துறந்து, நித்ய விபூதி அடைவர் என்று ப்ரமாணங்கள் கூறுகின்றன]

கச்சத்வம் ஏநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா: இத்யாதி விஶேஷ வாக்யத்தாலும்

[பாரதம் ஆரண் 161-55, ஶ்ரியபதியான எம்பெருமான் எல்லா உலகுக்கும் தந்தை, தாயாய் இருக்கிறான். புருஷ உத்தமர்களான பாண்டவர்களே, ரக்ஷகனான அவனை உபாயமாக பற்றி, சரணம் அடையுங்கள்", என்று மார்க்கண்டேயர், பாண்டவர்களுக்கு வனவாஸத்தில் உபதேசிக்கிறார். இந்த இரண்டு ஆதாரங்களையும் மனத்தில் கொண்டு]

ஸமர்த்த காருணிக புருஷ விஶேஷ விஷய ஶரணாகதி பலாவிநாபூதை (பலனை நிச்சயம் தந்தே தீருவது) என்று அறுதியிட்ட அர்ஜீனன்

[சக்தியும், கருணையும் உடைய சிறந்த புருஷனிடத்தில் சரணாகதி செய்தால்

அது நிச்சயமாய் பலனைத் தந்தே தீரும் என்று தீர்மனித்தான் அர்ஜீனன். எதிரே இருக்கும் கண்ணனிடம் சரண் அடைந்தான்.]

ஶிஷ்யஸ்தேஹ்ருசம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் என்று ஞான லாபார்த்தமாகப் பற்றின உபாயம் தன்னையே

[பகவத் கீதை 2-7, நான் உமக்கு சிஷ்யன். உம்மை சரணமாக அடைந்த எனக்கு ஆணையிடுங்கள்/அறிவுரை கூறுங்கள் என்று கலங்கி பிராத்தித்தான். அர்ஜீனன் ப்ரபத்தி செய்தது ஞானத்தை பெறவே.]

மாமேவ யே ப்ரபத்யந்தே இத்யாதிகளாலே ஸாதநாந்தரத்திற்கு (வேறு ஒரு உபாயமாகிய பக்தி யோகத்திற்கு) **அங்கம் என்றும்,**

[கீதை 7-14இல் என்னையே எவர்கள் சரணம் என்று அடைகிறார்களோ அவர்கள் இந்த ப்ரகிருதியை தாண்டுகிறார்கள். கண்ணனிடம் கருணை பொங்கியது. அவன் ஞானத்தை பெருவதற்காக செய்த ப்ரபத்தியே பக்தி யோகத்தை பூர்ணமாக நடத்திக் கொடுக்கும் அங்கம் என்றும் முதலில் சொன்னான்]

இங்கே மோக்ஷத்திற்கும் இதுதானே ஸ்வதந்த்ர ஸாதநம் என்றும் உபதேஶித்து

[மேலும் இங்கே சரம ஸ்லோகத்தில், அந்த ப்ரபத்தியே மோக்ஷம் அடைவதற்கும் ஸ்வதந்த்ரமான உபாயம் என்றும் உபதேசிக்கும்படி]

யச் ஶ்ரேய: ஸ்யாத் நிஶ்சிதம் ப்ருஹி தந்மே என்று ஸாமாந்யமான ப்ரவ்ருத்தமான (ஏற்பட்டது) **ப்ரஶ்ந வாக்யத்தை ஶரண்யன் தன் பரம க்ருபையாலே**

[கீதை 2-7, எனக்கு எது நன்மை என்று உன்னால் நிச்சயிக்கப் பட்டதோ, அதை உனக்கு சிஷ்யனாய், உன்னை சரணம் அடைந்த எனக்கு கூற/கட்டளையிட வேண்டும். பொதுவாக அர்ஜீனன் வேண்டினான். அந்த கேள்விக்கு கண்ணன் தன்னுடைய அளவில்லா கருணையாலே

இப்படி விஶேஷித்து ஸர்வாதிகார (அனைவரும் செய்வதற்கு தகுதியாய்) **ஸக்ருத் கர்த்தவ்ய** (ஒரு தடவையே செய்ய வேண்டிய) **பரம ஹிதோபதேஶ பர்யந்தமாக்கித்** (உயர்ந்த உபாயத்தை உபதேசிக்கும் அளவுக்கு ஆக்கித்) **தலைக்கட்டி அறுதியிட்டு அருளினான்.**

[அனைவரும் பற்றும்படி ஒரே தடவையே செய்யும்படியாய் இருக்கும் மிக உயர்ந்த ப்ரபத்தி என்னும் உபாயத்தை உபதேசிக்கும் அளவுக்கு கொண்டு விட்டு பூர்ணமாய் முடித்துக் கொடுத்தான்.]

11.10 மூன்று ரஹஸ்யங்களிலும் தெளிவு தேவை

இப்படி ரஹஸ்யார்த்த விஶேஷங்களெல்லாம் தெளிந்தவன் பின்பு கற்குமெதல்லாம் கைங்கர்யம். இது தெளியாதவன் கற்குமவது தெளிகைக்கு உறுப்பாம்.

[இப்படி மூல மந்திரம், த்வயம் , சரம ஶ்லோகம் என்று மூன்று ரஹஸ்யங்களில் உள்ள சிறப்பான அர்த்தங்களை எல்லாம் ஆசார்யன் மூலமாய் கேட்டு தெளிவான ஞானம் பெற வேண்டும். அப்படி தெளிவு அடைந்த பிறகும் அவற்றின் தொடர்ச்சியாய், பல விஷயங்களை மேலும் கற்று உணர வேண்டும். இவை எல்லாம் எம்பெருமானுக்கு செய்யும் கைங்கர்யம். இதில் தெளிவு பெறாதவன் மேலும் கற்பது தெளிவு பெறுவதற்கு வழியாகும்.]

இவற்றோடு துவக்கற்ற வித்யை ஶில்ப நைபுணம்.

[இந்த ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயங்களை கற்பது எல்லாம் உலக வாழ்க்கைக்கு சாதனம் ஆவதால், அது அறிவை வெளிப்படுத்திக் கொள்ள மட்டும் உதவும் செயலே.]

11.11 முடிவுரை

ஸ்வாமி தேசிகன், முக்தி பெறத் துடித்தலை கீழ் கண்டவாறு ஸாதித்துள்ளார்.

அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம் *
அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த *
குறை யாதும் இல்லாத கோவிந்தா! * நின்
குரை கழற்கீழ் அடைக்கலமாம் குறிப்பு தந்தாய் *
வெறியாரு மலர் மகளும் நீயும் விண்ணில் *
விண்ணவர்கள் அடிசூட இருக்கும் மேன்மை *
குறையாத வினை அகற்றி அடிமை கொள்ள *
குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே
ஸ்வாமி தேசிகன், அமிருத ஸ்வாதினி 12

- **(அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்)** விசேஷ ஞானம் இல்லாத இடைப் பெண்களும் பகவானை அறிந்து அனுபவிக்கும்படி
- **(அம்புயத்தாளுடன் அந்நாள் அவதரித்த குறை யாதும் இல்லாத கோவிந்தா)** தாமரையில் வசிக்கும் பிராட்டியுடன் ஒரு நாள் இந்த உலகில் அவதரித்த குறை ஒன்றுமில்லாத பூர்ணனான எம்பெருமானே
- **(நின் குரை கழற்கீழ் அடைக்கலமாம் குறிப்பு தந்தாய்)** உன்னுடைய ஒலிக்கும் திருவடிகள் கீழ் காக்கப் பட வேண்டிய பொருள் என அறிவு தந்தாய்
- **(வெறியாரு மலர் மகளும் நீயும்)** வாசனை மிகுந்த தாமரையில் உள்ள பிராட்டியும் நீயும்
- **(விண்ணவர்கள் அடிசூட விண்ணில் இருக்கும் மேன்மை)** நித்யர்களும், முக்தர்களும் உன் திருவடியைத் தம் தலையில் தாங்கி பரம பதத்தில் உயர்ந்ததாய் உள்ளாய்
- **(குறையாத வினை அகற்றி அடிமை கொள்ள)** அளவில்லாத குறைகளை நீக்கி எங்கள் பணியை ஏற்க
- **(குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே)** விரைவாக ஒரு நல்ல காலத்தை நீ குறித்துத் தர வேண்டும்